கண்ணகியார் அடிச்சுவட்டில்

புகார் முதல் வஞ்சி வரையில்

சி. கோவிந்தராசனார்

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

கண்ணகியார் அடிச்சுவட்டில்

புகார் முதல் வஞ்சி வரையில்

(ஆய்வுப் பயண நூல்)

சி. கோவிந்தராசனார்

பதிப்புத் துறை

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

பதிப்புரிமை:

© பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 625 021.

© Publications Division
Madurai Kamaraj University
Madurai - 625 021.

பதிப்பு எண்: 113

விலை ரூ. 25/-

பதிப்பு விவரங்கள்:

1) ஆசிரியர் .... திரு. சி. கோவிந்தராசனார்
முன்னாள் ஆய்வாளர்
தமிழியற் புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-21.

2) தலைப்பு .... கண்ணகியார் அடிச்சுவட்டில்
புகார் முதல் வஞ்சி வரையில்
(ஆய்வுப் பயண நூல்)

3) பதிப்பு

அ) இடம் .... மதுரை காமராசர்
பல்கலைக்கழகம்
(Madurai Kamaraj University)

ஆ) பதிப்பித்தோர் .... பதிப்புத்துறை,
மதுரை காமராசர் பல்கலைக்
கழகம், மதுரை - 625 021.
(Publications Division,
Madurai Kamaraj University,
Madurai - 625 021)

இ) ஆண்டு .... முதற்பதிப்பு - 1991

4) மொத்த பக்கங்கள் ... 163

5) பொருள் .... புவியியல் - இலக்கிய ஆய்வு. -
கள ஆய்வு

6) அச்சும் அமைப்பும் .... கஜேந்திரா பிரிண்டர்ஸ், சிதம்பரம்.

முன்னுரை

சிலப்பதிகாரம் மக்கள் காப்பியமாகும். ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகத்தின் நிலவியல் முதலாக அரசியல், சமூக சமுதாய வளர்ச்சிநிலை, வாணிபச்செழிப்பு, மக்கள் வளர்த்திருந்த நுண்கலைகளின் வளர்ச்சி, சமயங்களின் ஆக்கம், பொருளாதார மலர்ச்சி, மொழிநிலை ஆகியவற்றைத் தெளிவாக அறிவதற்கு இக்காப்பியமே முழுமை தரும் பாங்கில் உள்ளது.

ஆசிரியர் இளங்கோவடிகள் அரசமரபினராதலின், சேர சோழ பாண்டிய நாடுகளின் இயல்பினையும், மக்களின் வாழ்வியல் திறத்தினையும் உள்ளவாறு உணர்த்தியுள்ளார்.

காப்பியத்தின் கருவும் உருவும் கோவலன் கண்ணகி என்னும் வணிக மக்களின் வாழ்க்கையினையே அமைத்துக் கொண்டு, இலக்கியப் பாங்கில், உரையும் பாட்டும் விரவ, முத்தமிழ்க் காப்பியமாக ஆசிரியர் எழுதியுள்ளமை தனிச் சிறப்பாகும்.

சிலப்பதிகாரம் தரும் செய்திகளைக்கொண்டு, கண்ணகியார் வாழ்க்கையின் பிற்பகுதி அவலநிலை பெற்றதோடு, நிறைவு பத்தினித்தெய்வமாக உருப்பெற்றிருந்ததை அறிய முடிகின்றது அதற்குரிய சான்றாக, கண்ணகியாரைப் பத்தினித்தெய்வமாகக் கண்டு, ஈழநாட்டில் எண்ணிலடங்காத கண்ணகிஅம்மன் கோயில்களும், பாடல்களும் தோன்றியுள்ளன. தமிழகத்தில் கண்ணகி கோயில் எங்குளது என்று ஆராயும் அளவில் இருந்த நிலையில், கி.பி. 1943-ல் கண்ணகி கோவலன் ஆகிய இருவரும் பிறந்து வளர்ந்து இல்லறமேற்று வாழ்ந்திருந்ததும், சோழவரசுடன் மற்றெல்லா நலங்களும் நிரம்பி அன்று செழித்திருந்தது மாகிய காவிரிப்பூம்பட்டினம் என்னும் புகார் நகரை, இக்கால நிலையிற்காணும் விருப்பம் தோன்றியது,

பலமுறைச் சென்று முயன்று ஓரளவிட்டுக் கண்டபோது, பண்டைய புகார்நகரம் இருந்த பகுதி, 'பட்டனம்' என்ற பெயரளவில் கடற்கரையில் மீனவர்களின் ஒருசில ஓலை

வேய்ந்த குடியிருப்புகளுடன் தோற்றங்கொண்டிருந்ததோடு, மணற்பரப்பும், மணல் மேடுகளும், கள்ளியுடன் காரை சூரைச் செடிகளும் செறிந்த புதர்களும், சவுக்குத் தோப்புகளும் பனங்காடுகளும் பரவலாக அப்பகுதியைச் சூழ்ந்திருந்ததனையே காணமுடிந்தது.

கடலோடிகளாகிய பரதவர் பட்டனவர் என்று கூறப் பெற்றனர். அவர்களிடம் பலகாலங்களில் உரையாடியபோது, மணற்பரப்பிடங்களில் நிலத்தடியில் செங்கற்சுவர்களும், கட்டடங் களும், தாழிகளும் சிதைந்த நிலையில் புதைந்துள்ளதனை அறியமுடிந்தது. பழமையான பல நாணயங்களும் கிடைத்தன. படகுகளைப் பிணைத்து நிறுத்தும் பழமையான கட்டிடத்துறை யொன்றும் சிதைவுடன் காணப்பட்டது.

மேலையூரிற்குத் தென்புறம் பனங்காட்டிடையே பழமை யான சம்பாபதி அம்மன் கோயில் பெயர் மாறாமல் இருப்பதும், சாலைக்கு வடபுறம் மிகப்பழமையான செங்கற்கட்டடமொன்று சிதைந்து புதையுண்ட நிலையில் திரு. தியாகராசன் என்பவரது வீட்டிற்குப் பின்புறத்தில் கிடைத்ததும் ஆராய்ச்சி மேற் கொள்ளுதற்கு ஆர்வந்தருவனவாக அமைந்தன.

இத்தகைய தடயங்களால் பழைய காவிரிப்பூம்பட்டினம் அழிந்து புதைந்துபோன நிலை ஒருவாறு புலப்பட்டதாயினும் இலக்கியச் செய்திகளால் கடற்கோளால் அழிந்தது என்பது கிளர்ச்சியாக இருந்ததால், மேலும் பட்டினவரிடம் விசாரித் தறிந்த போது,

கடலில் ஒரு கல் தொலைவு அளவில் கடல் ஆழமின்றி இருப்பதும், அடியில் கட்டடச் சிதைவுகள் காணப்படுவதும் முயற்சிக்கு இலக்காயின. எனவே, 1945-ஆம் ஆண்டு கட்டு மரத்தினை அமைத்துக்கொண்டு, பட்டினவர் செலுத்த அதில் ஏறிச் சென்று கடலில் மூழ்கிச் செயலாற்றும் 'முழுக்காளிகள்' என்னும் பயிற்சியுடைய பட்டினவரைக் கொண்டு மூழ்கச் செய்து கடலடி ஆய்வு செய்த போது, அவர்கள் மேலே

எடுத்து வந்த பொருள்களில் பழமையான செங்கற்பகுதிகள், சுண்ணக்காரைகள், பாசி படிந்த பழங்காலப் பானையோடுகள் ஆகியவை கிடைத்தன. (செய்தி நாளிதழ்களில் வெளிவந்துள்ளன.)

இவ்வாறமைந்த கடலடி ஆராய்ச்சியினால் பழைய பூம்புகாரின் முற்பகுதி கடற்கோளினால் அழிந்து கடலடியில் மறைந்து நிற்க, அதே காலத்திலும் தொடர்ந்தும் நிகழ்ந்த புயலோடு கூடிய பெருமழையின் இயற்கைச் சீற்றத்தினால், காவிரியில் பெருகிவந்த வெள்ளப் பெருக்கில் மற்றைய பகுதியும் நிலை குலைந்து அழிந்து தரையில் படிந்து மண்மூடி மறைந்துள்ளது புலனாயிற்று.

கண்ணகியார் பிறந்த காவிரிப்பூம்பட்டினம் இருந்த தடம் கிடைக்கவே, கண்ணகியார் கோவலனுடன் மதுரைக்குச் சென்ற இடங்களையும் தடங்களையும் ஆய்வு செய்து, பண்டைய தமிழ் இலக்கியம் வரலாறு தரும் தகுதியினைக் கள ஆய்வின் வழிக்காணும் ஆர்வம் மிகுந்தது.

முதன் முயற்சி கி. பி. 1945-ஆம் ஆண்டிலிருந்தே முறையாகத் தோன்றித் தொடர்ந்தது. புகார் முதல் கண்ணகியார் நடந்து தொடர்ந்த பகுதிகள் ஆய்விற்கு இலக்காக அமைந்தன.

புகார் முதல் அரங்கம், உறையூர் முதற்பகுதியாகவும் உறையூர் முதல் கொடும்பாளூர், காட்டு நெறிகள், அழகர் மலை, வையைக்கரை, மதுரை ஆகிய பகுதிகள் இரண்டாம் பகுதியாகவும், மதுரை மாநகர்-சூழல், வையை தென்கரை, கம்பம் பள்ளத்தாக்கு, சுருளிமலை, மேலை மலைத்தொடரின் கூடல், ஆகியவை மூன்றாம் பகுதியாகவும் கணிப்பிடப்பட்ட நிலையில், ஆராய்ச்சி கால் நடையாகவே தொடர்ந்தது. விட்ட இடம் அளவிலும் வாகனங்களில் சென்று ஆராய்ச்சியினை ஆங்காங்கு கல்வெட்டு, தொல்பொருள் ஆய்வு ஆகிய நெறிகளில் தொடர்ந்து புறச் சூழல்களையும் ஆராய்ச்சி செய்த நிலையில் கம்பம் பள்ளத் தாக்கில் எனது ஆய்வு நிகழ்ந்த காலம் கி. பி 1963 என்பதால் இடையே பதினேழு ஆண்டுகள் கழிந்திருந்தன

கம்பம் பள்ளத்தாக்கின் மேலக்கோடியிலமைந்த மேலக் கூடலூரின் கிழக்கேயுள்ள பெருமாள் கோயிலுள்ள குத்துக்கல் கல்வெட்டுச் செய்தியால், ஊரிற்குத் தெற்கே தொடர்ந்து உயர்ந்த அடுக்குமலையின் மேல்தடமொன்றில், மங்கலாதேவி அம்மன் கோயில் வேங்கைக் கானலில் இருப்பது அறிய முடிந்தது.

ஊரிற் கிடைத்த செய்திகளால், கோயிலுள்ள கானலும், சூழ்ந்த பகுதிகளும் கரடி, யானை, சிறுத்தை ஆகிய விலங்குகள் வாழும் காடடர்ந்த மலைப்பகுதி என்பதும், கோயில் சிதைந்து புதரடைந்து கிடப்பதும் அறிய முடிந்தது.

ஆய்வு மேற்கொள்ளுதற்கு இயலாத சூழல்கள் பொருந்திய பகுதியாயினும், ஆர்வத்தால் ஊக்கமும் துணிவும் பிறக்க 1963-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் பதினேழாம் நாள் மலை மேல் சென்று சிதைந்த கோயில்களையும், கல்வெட்டுகளையும், சூழலையும் தெளிவாக ஆய்வு செய்து வந்த பின்னர், கணிப் பிட்டதன் முடிவாக, "கண்ணகியார் சென்று தெய்வமான, வேங்கைகானல் கண்ணகிக்கோட்டம் இதுதான்" என்பதனைச் சான்றுகளால் உறுதி செய்து வெளியிட்டேன். கண்ணகியார் மங்கலமுடன் காணப்பட்டதால் வேட்டுவர் அன்று குறித்த மங்கலதேவி என்னும் பெயரே வழக்காகி கல்வெட்டிலும் இடம் பெற்றுள்ளது.

ஆய்வுக்கமைந்த பதினேழாண்டுகளில், யான் கண்ட அனு பவங்களையும் இன்னல்களையும் விடுத்து, கண்ணகியார் நடந்து சென்ற இடங்களில் உள்ள இயற்கைத் தடங்களையும் பிற நல்லிடங்களையும் வரலாற்று ஆய்வுக்கண்ணோட்டத்துடன் கண்டறிந்த வரலாற்றுச் செய்திகளில்,

புகார் முதல் மதுரை—கண்ணகிக்கோட்டம்—வஞ்சி ஆகிய தொடர்நிலை இடங்களுக்குரிய வரலாற்று ஆய்வுச் செய்திகளே சான்றுகளுடன் நூலில் எழுதப்பெற்றுள்ளன. கண்ணகியாரைப் பற்றிக் காப்பியம் தரும் செய்திகள், இயல்பு நிலையில் சிலம்புடன் ஏற்புடைய இடங்களில் தொடர்நிலைக்குக்

கொள்ளப்பட்டுள்ளன. பண்டைய தமிழ் இலக்கியம் தமிழக வரலாறு தரும் உண்மை இதனால் புலப்படுத்தப் பெறுவது அறியத்தக்கதாகும்.

கள ஆய்வுகள் தொடர்ந்து பல ஆண்டுகளில் நிகழ்ந்ததி னால், செய்தித் தொடர்புக்குரிய நினைவாகவும், மேல் தொடரும் ஆய்வுச் செய்திகட்கு இணைப்பாகவும், ஒருசில பகுதிகளில் குறிப்புகள் மீண்டும் இடம் பெற்றுள்ளன, காப்பியப் பகுதிகளும் அவற்றிற்குக் கள ஆய்வினாற் கண்ட விளக்கங் களும் தரப்பட்டுள்ளன.

கண்ணகிக் கோட்டக் கண்டுபிடிப்பு, 17—11—63 ல் அமைந்தது. அதன்பின், அரசியல் வழியும், வெளியீடுகளிலும், சொற்பொழிவுகளாகவும், சிறு நூலாகவும் நான் வெளியிட்டுள்ள செய்திகள் நூலின் பிற்பகுதியில் இடம் பெற்றுள்ளன.

1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழக வரலாற்றினைக் கணிப்பதற்குச் சிலப்பதிகாரம் என்னும் மக்கள் காப்பியம் தமிழக வரலற்றுக் காப்பியமாக உருக்காட்சி பெறுவதற்கு எனது, ''கண்ணகியார் அடிச்சுவட்டில், புகார் முதல் வஞ்சிவரை'' என்ற பெயராலமைந்த கள ஆய்வுப் பயணநூல் பயன் தந்துள்ள தனை நூலிற் காணலாகும்.

ஆய்வுக் காலங்களில், உற்ற துணையாக உடனிருந்து தவியவர், எனது மாணவரும் எம்.ஏ; எம்.எட்; பட்டங்களைப் பெற்று உயர் நிலையில் உள்ளவருமான, சேலம் வேலம் பாளையம் புலவர். முத்துகந்தசாமியேயாவர். மற்றும் பலர் அவ்வப்போது இணைந்து உதவியுள்ளனர். அவர்கட்கு முதற்கண் எனது நன்றியுரித்தாகும்.

மதுரை காமராசர்
பல்கலைக்கழகம்
5—10—1990.

பேராசிரியர். சி. கோவிந்தராசனார்,
ஆராய்ச்சியாளர் தமிழயற்புலம்

நன்றியுரை

இந்நூல் அச்சாவதற்கு அன்புடன் ஆவண செய்தருளிய. மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பெருந்தகை மாண்புமிகு டாக்டர் எம். லெட்சுமணன் அவர் கட்கு எனது பணிவார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கருத்தமைந்த முகப்புப்படத்துடனும், உள் விளக்கப்படங் களுடனும் நூல் அமைவதற்கு ஆவன செய்ததோடு, சிறந்த தொரு ஆங்கில அணிந்துரையும் அளித்துள்ள, பேராசிரியர் டாக்டர். திருவாளர் கதிர் மகாதேவன் அவர்கட்கு எனது நன்றி உரித்தாகும். இந்நூல் உருவாதற்கு அனைத்து உதவி களையும் அன்புடன் செய்தருளிய தமிழ்த்துறைத் தலைவர். திருவாளர், பேராசிரியர் டாக்டர் T. முருகரெத்தினம் அவர் கட்கு எனது அன்பார்ந்த நன்றி உரித்தாகும். நூல் அச்சகத்தில் நிறைவு பெற்று வெளிவருவதற்குரிய முயற்சிகளை அன்புடன் செய்தருளிய பதிப்பாளர். டாக்டர் வி. சரசுவதி அம்மையார் அவர்கட்கு அன்புடன் நன்றியினைத் தெரிவிக்கின்றேன்.

நன்முறையில் அச்சிட்டு அழகியவடிவில் நூலை உருவாக் கியுள்ள சிதம்பரம் கஜேந்திரா அச்சகந்தார்க்கும், அச்சுப் பிரதி களைப் பிழை பார்த்தளித்துள்ள பேராசிரியர் V. செயராமன் அவர்களுக்கும் எனது நன்றியுரித்தாகும்.

ஆசிரியர்

INTRODUCTION

MAJOR Dr. KATHIR MAHADEVAN, M.A.,M.Litt.,Ph.D.,

Professor of Tamil

Department of Tamil Studies
Madurai Kamaraj University
MADURAI - 625 021

Tracing the route taken by Kannagi, the author of this book, Thiru. Govindarajanar, identified Kannagis path and takes us to the hoary past of Tamil Nadu.

Persuing a dissertation entitled, "The Epic of the Anklet", submitted to the New York University, by a student from the United States, I came across the same theme He made an attempt to trace the route taken by Kannagi from Pugar to Madurai, depending upon a copy of the translation of Silappathikaram or the Epic of the Anklet, translated into English by one Alain Danielon. Of course, he had all appreciation for the epic story of Silappathikaram because he assumed that a story written 1700 years ago would be concerned solely with divine figures But to his great amazement he found, the story is primarily concerned about humane. Even the kinds of those days were kept in the background in order to glorify the story of Kannagi. Mr. Eric Miller, the author of the dissertation, who undertook a road-walk journey from Pompugar to Madurai in connection with the preparation of his dissertation, agrees, that he did not attempt to trace the exact route supposedly taken by the main characters of the epic. He passed through Kodumballur, which is one of the towns mentioned in the text of Silappathigaram enroute to Madurai.

Besides his efforts to find the impact of the ancient story of Kannagi, on modern Tamil society carried no meaning and value. However, he was please to note that Kannagis story continues to be alive in the culture of modern Tamils. But his comparison of the situations in Silappathigaram with the episodes of political personalities in contemporary Tamil Nadu are not only irrelevent but also do not prove the impact of the epic story. However, we do not want to discredit a Western scholar for his occidental outlook.

Let us see how our native scholar Thiru. Govindarajanar, retraced the route mentioned by Ilango Adigal from Pugar to Madurai. According to the author, he undertook this venture as early as 1945 and continued his investigation for many many years. His aim was not a cross country walk. There fore he made up his mind to peruse literature, inscription and archaeology, with reference to his investigation in order to substantiate his findings.

At the outset, the author tried to Kaviripumpattinam which is said to have been engulfed by the enraged sea. The author probed deep into literature to establish the fate of Kavirippumpattinam. He could see that Ilango Adigal and Urithirangannanar, vividly describe Kavirippumpattinam prior to inundation. Sattanar, the author of the epif Manimekalai, declares metaphorically that the entire city of Kavirippumpattinam was swallowed by the sea into its stomach. Probabiy, in order to perpetuate the memory of the lost city of Kavirippumpattinam in the 12th century A.D., the then King Kulothunga, called a territory adjacent to to Kavirippumpattinam as Alavantha Solapuram. It is also surprising to note that later Cholas, Pandias, besides Nayakars and Marathas in their inscriptions refer to Kavirippumpattinam.

During 13th Century A.D. Sundara Pandia Devar's Thirukalai temple inscriptions refers to Pugar as one among seventy nine fertile land ("எழுபத்தொன்பது வளநாட்டுப் பூமிப் புகார்" ..). Therefore it can be inferred that the name of Pugar was retained to cherish the memory of the lost city.

Though many are sceptical about the remains of Pugar, the author of this work asserts, that the traced city places in Pugar which submerged in the Bay of Bengal, with the help of divers.

Further, the author proves with evidences that lands were measured for cultivation and for the purpose of taxation right from Sangam Age. It is no wonder that metropolitan cities like Pugar and Madurai were connected with pathways along the banks of the rivers or through mountains.

In this book, the author retraces three main routes:

1. The route along the Northern Bank of Kaveri leading to Uraiyur from Pugar.

2. The route from Uraiyur to Madurai chosen by Kauvunthi Adigal among the other two short cuts. The less hazardous but a longer route was preferred by her.

3. The route taken by the desparate and dismayed Kannagi, after the execution of Kovalan to reach the Western Ghats which took fourteen days and nights.

At the outset, the author makes several attempts to identify Kavirippumpattinam. He is quite confident that even now if an under-sea exploration is made, several artefacts could be traced.

Kannagi, Kovalan and 'Kauvunthi Adigal', appear to have taken a route along the Northern Bank of river Kaveri and reached Uraiyur. If one proceeds towards North west across Kudumiyanmalai it ends up at Kodumbalur. Another route from Uraiyur towords South was through forests and arid regions and through Kodumpalur. Further South of Kodumbalur, the path touched Pari Malai alias Kodunkunram Passing through Kodunkundram, one could reach Madurai[1] either on the highway or on a by-way.

The by-way route is simple. Because after crossing the land mark i. e., Pari Malai (popularly known as Piran Malai) make straight dash towards another hill resort of Lord Muruga, hitherto known as Thirumalirum Cholai alias Thiru Mohur and reach Thirumaruthandurai of Vaigai enroute to Madurai.

The river Kaveri has obviously changed its course because of floods as evident from inscriptions of Vikrama Pandia Devar (13th Century A.D.) (p.36). If one proceeds along the banks of Caveri he would ultimately land up at Sri Rangam Though the delta region was mentioned by Ilango Adigal, there was no direct reference to the presiding deity i.e. Thirumal. It is because the three major characters viz., Kannagi, Kovalan and Kauvunthi Adigal followed the cult of Jainism, met Saranars at this point of journey. Hence there was no mention of Thirumal, the Vaishnavite god. However, Ilango Adigal pays a rich tribute to the presiding deity of Thiruvarengam, when Mangaattu Maraiyon met the three main character, elsewhere in the epic.

How did Kannagi and other cross Kaveri from the Northern Bank to the Southern has also been explained by Ilango Adigal. He says that they crossed the river at the juncture, where the floating bridge known as Neerani Madam is situated.

The author of this work rediscovers the greatness of Uraiyur dwindled down because o the aggression of Pandias in 13th Century A.D. Currently we can locate Uraiyur as a part of Tiruchirappalli. The author identified Kodumpalur with the help of inscriptions. Madurai could be reached enroute Thuvarankuruchi and Natham of modern times.

It is quite evident that Ilango Adigal must have travelled through the length and breadth of Tamil Nadu as he described the route taken by Kannagi in minute details. The details given by the author of this book are quite interesting regarding the change in the flow of river Vaigai and about Kovalan Pottal. It is quite revealing to note that the route taken by Kannagi, all alone, through the western gate of the fort of Madurai after the tragic death of Kovalan, as stated, retraces the steps of Kannagi till she reached the pinnacle of a hill at Western Ghats.

It should be specially mentioned here that the author of this book is the first researcher, who identified the temple of Kannagi, located in the political boundary of Kerala State. Historians like P.T. Srinivasa Iyengar are sceptical regarding the authenticity of the topographical description made by Ilango Adigal. But one who reads this book will understand that Ilango Adigal composed Silappadigaram with first hand information all round.

Thiru. Govindara janar deserves special appreciation of the mental review he carried out, while reading Silappathigaram based on all available information such as inscription geology, topography and histriocity, culminating into a plan of field research, to locate the temple of Kannagi at Netuve undram.

I am sure that this book will be interesting even to a common reader and will be more useful to researchers.

KATHIR MAHADEVAN

பொருளடக்கம்

தலைப்பு	பக்கம்
முன்னுரை	
அணிந்துரை	
நன்றியுரை	
காப்பியக் கணிப்பு ...	1 — 7
ஆய்வுக்கு வாயில்கள் ...	8 — 29
காவிரிக்கரையில்	30 — 52
கான நாட்டில்	53 — 70
கூடல் மாநகரில்	71 — 99
வையைக் கரையில் ...	100 — 109
நெடுவேள் குன்றத்தில் கண்ணகிக்கோட்டம்	110 — 134
மலைநாட்டு வஞ்சியில் ...	135 — 140
தெய்வ வழிபாட்டில் ...	141 — 145
கோயில் உரிமை வழக்கில்	146 — 147
ஆய்வு நெறியில்	148 — 163

காப்பியக் கணிப்பு

வளமும் மணமும்

உலகில் மொழியைத் தாயாகவும் தெய்வமாகவும் வழிபட்டவர் தமிழ் மக்களேயாவர். மண்ணின் வளம் அதில் தோன்றும் மரம் செடி கொடிகளால் அறியப்பெறும். அம் மண்ணின் மணம் அதில் பிறந்து வளர்ந்த மாந்தரின் மொழியாலும் வாழ்வியலாலும் அறியப்பெறும்

சென்ற காலத்தில் வாழ்ந்திருந்த தமிழன், எப்படி வாழ்ந்தான், அவன் வளர்த்திருந்த மொழித்திறம் யாது என்பதனை, வருங்காலத் தமிழன் வகைபெற அறியும் உயர்நோக்குடன் எழுதி வைத்தனர். மொழியை மக்கள் வாழ்வியலோடு இணைத்து, அனுபவத்திறனுடன் பிணைத்து உண்மைப் புலனெறி வழக்காக உருவாக்கி வைத்தனர்.

பழந்தமிழ்ச் சான்றோர்கள் இயம்பிய எழுத்தியல் நுணுக்கங்கள் அகம் புறம் என்ற பாகுபாட்டில் செய்தித் துணுக்கங்களாக விளங்கினதன்றி, அவை சுட்டிய மொழியாக்கத்தினையும், வாழ்வியல் முழுமையினையும் அறிவதென்பது அருமையாகவே அமையலாயிற்று.

எனவே, தொடர்ந்த காலங்களில் வாழ்ந்த பழந்தமிழ்ப் பேரறிஞர்கள் தமிழரின் வளர்ச்சியடைந்த தாய்மொழிக்கும் வாழ்வியலுக்கும் வரம்பிட்டுக் காட்ட முற்பட்டனர். அவருள் எத்திறத்தானும் உயர்ந்து நின்றவர் தொல்காப்பியர் ஆவார்.

தமிழர் வாழ்வில் வளர்த்திருந்த அறநெறி, அரசியல், அறிவியல், பண்பியல், கலையியல், கொள்கை ஆகிய உயராக்கங்களை உலகறியச் செய்யும் உயர் நோக்குடன்,

வரையறையாக வகுத்தும் பகுத்தும் மொழித்திறனோடு காப்பமைதி செய்தவர் திருவள்ளுவர்; இதனால் பொய்யா மொழியார் என்றும் புகழப்பெற்றார்.

அந்நெறியில், திட்டமாகச் செயற்பட்டு முழுமையான வடிவில் அன்றைய தமிழகத்தினைத் தமது எழுத்தாற்றலால் அமைத்துக்காட்டிய சான்றோர் இளங்கோ வடிகளாவர். அவரது குறிக்கோள் நிறைவேறிய காலம் கி.பி இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி என்று வரலாற்றறிஞர் கணித் துள்ளனர்.

காப்பியத்தோற்றம்:

முன்னைய புலவர்கள் மூதறிவினாலும் அனுபவத்தினாலும் கண்டறிந்த நிகழ்ச்சிகளையும் கருத்துக்களையும் இலக்காகக் கொண்டு இயம்பிய உரைகள் இலக்கியம் என்னும் பெயரினைப் பெறுவதாயின. அடிகளின் காலத்திற்கு ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தமிழரின் மொழிநிலை, வாழ்வியல் ஆகியவற்றை இலக்கண வரம்பினால் அளவிட்டுரைத்தவர் தொல்காப்பிய ராவர் அந்நெறிமுறைச் சார்பில் தமிழக மன்னர்கள் முதலான மக்களின் வாழ்வியலை மக்கள் காப்பியமாக எழுதிப் படைத்தவர் இளங்கோவடிகள்.

முன்னர் நாட்டில் நிலவிய இலக்கிய வடிவின் வளர்நிலை உருவாக்க முழுமையாகவும், அக்கால மக்களின் வாழ்வியல் திட்டக் காப்புரையாகவும் செய்யுள் வடிவமைப்பில் அடிகள் இயம்பிய எழுத்தோவியமாகச் சிலப்பதிகாரம் அமைந்ததால் அது காப்பியம் (காப்பு-இயம்) என்னும் கருத்தமைந்த பெயரினைப்பெறுவதாயிற்று.

தமிழகத்திற்கே உரிய வாழ்வியல் தனிநிலைப் பண்பாட்டி னையும் கலைத்துறைகளையும் சமயவளர்ச்சியினையும் வரை யறையுடன் விளக்கமாக வகுத்துக் காட்டி நிறுவிய காப்ப மைதியுடன், நூல் அடிகளால் உரைக்கப்பெற்ற திறத்தினைப் பெற்றிருப்பதனால், காப்பியம் என்ற பெயர் அதற்குப்பொருந் திற்று என்று கூறலாகும். இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டு கள்ளவில் தமிழகத்தினை முப்பெரும் பிரிவுகளாக ஆட்சிசெய்த சோழர், பாண்டியர், சேரர் ஆகிய மூவேந்தர் ஆட்சியினையும், அக்கால அளவில் வளர்ச்சி பெற்றிருந்த தமிழக நாகரிக

வாழ்வியல் வரலாற்றினையும், கண்ணகி கோவலன் மாதவி ஆகிய மக்களின் தனிநிலை வாழ்க்கையின் அடிப்படையில் விரிவாக வகுத்துரைத்து முத்தமிழ்க்காப்பியமாக உருவாக்கி அடிகள் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் தந்துள்ள சிறப்பினால், பெருங்காப்பிய வகையுள் இந்நூல் இடம் பெறுவதாயிற்று எனலாம்.

காப்பு என்ற சொல் பழந்தமிழர் பயின்றுவந்த சொல் லாகும். இயம்புதல் என்ற சொல்லின் கரு இயம் என்பதாம். இதன் பொருளமைதி, நூலாசிரியர், தாம் கருதிய பொருள் நிலையில் தமது குறிக்கோளினையும் இயைத்து ஏற்புடைய நிகழ்ச்சிகளையும் திறங்களையும் அழகுடன் எடுத்தியம்புதல் என்பதேயாம்.

காப்பியக் கணிப்பு

ஒரு நாட்டின் செல்வமென்பது தொழில்வளம் வேளாண்மைவளம் வணிகவளம் என்று குறிப்பது இன்றைய கணிப்பாகும். பழந்தமிழகத்தின் செல்வங்களாகத் திகழ்ந் தவை, மானம், வீரம், கற்பு, ஒழுக்கம் உண்மை, அன்பு, அறம் என்னும் பண்பின் மேம்பாடுகளாகும். அக்காலப் புலவர்கள் உருவாக்கிய நூல்களில் இவைகளே இடம்பெற்றுள்ளன. பண்டைத் தமிழரின் வாழ்வியல் வரலாற்றின் இலச்சினை களாகக் கொண்டு இலக்கியங்கள் இருப்பதனைப் பிற சான்று களுடன் ஆராய்ந்து அறிவதற்குரிய முயற்சிகள் அமையாத தினால், அண்மைக்காலம் வரையில் பழந்தமிழ் நூல்கள் தரும் செய்திகள் கற்பனைகளாகவும் கதைகளாகவும் கருதப் பெற்றன

கி.பி. 1940-ல் சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காப்பியத்தினைப் பொறுப்புடன் கற்கும் நிலை எனக்கு அமைந்தது. அக்காலத்தில், "யாழ் நூல்" என்னும் பெயரால் தமிழரின் பண்டைய இசைக்கலை வளர்ச்சியினையும் நேர்ச்சி யினையும் சிலப்பதிகார உரையாசிரியர்கள் வழிநின்று ஆய்ந்து நூலை உருவாக்கி வந்த பேரறிஞர் சுவாமி விபுலானந்தர் அவர் களின் அருள்கொடையாக அவ்வப்போது அவர்களிடம் சிலப் பதிகாரத்தினைப் பாடங்கேட்கும் வாய்ப்பும் எனக்கு அமைந் தது. தொடர்ந்து, பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி, பதிற்றுப்

பத்து, அகநானூறு, புறநானூறு ஆகிய சிறந்த பழந்தமிழ் இலக்கியங்களையும் கற்றறியும் திறனும் அமைந்தது

அக்கால உயர்நிலைப் பள்ளிகளில் மூன்றாம் படிவம் முதலாகச் சிறப்புப் பாடமாக அமைந்த இந்துதேச சரித்திரத்தில் இடம் பெறாத பண்டைய தமிழகத்தினைப் பற்றிய செய்திகள் பலவற்றினைச் சிலப்பதிகாரத்திலும் பிற இலக்கியங்களிலும் காண முடிந்தது. இலக்கியக் கூறுபாடுகள் பண்டைத் தமிழன் என்னென்ன செய்தான், எப்படியெப்படி வாழ்ந்திருந்தான் என்பன போன்ற வரலாறு காணும் வினாக்களுக்கு விளக்கவிடை தருவனவாகவே தமிழ் இலக்கியங்கள் அமைந்திருக்கும் உண்மையை உணரலானேன். உண்மை மனதில் ஊற்றெடுத்து நினைவில் மாறாது நின்றது. இலக்கியங்கள் சுட்டிய மக்கள் வாழ்வியல் காலவெள்ளத்தால் கரைந்து மறைந்து திரிந்து நிற்பதனால் அதைப்பற்றிய ஆய்வு முயற்சி அமையவில்லை. நிலை திரியினும் தடம் திரியாதது நிலவமைப்பு ஒன்றேயாதலின் சிலப்பதிகாரத்தின் முதற் பகுதியாம் புகார்க்காண்டம் விளக்கும் சோழநாட்டின் கிழக்குக் கடற்கரைப் பட்டினமாகும் பூம்புகாரை நேரில் சென்று காணும் ஆர்வம் கி.பி. 1943-ல் பிறந்தது.

முயற்சி ஆய்வின் அரும்பு

புகார்நகரைக் காணப் புறப்பட்டேன். அக்காலத்தில் தமிழ்ப்புலமையுடன் ஓவியத்தேர்ச்சியும் பெற்றிருந்தேன். எனவே, நகரின் பழமையான பகுதிகளைப் படம்பிடிக்கும் திட்டமுடன் ‘கேமிரா’வுடன் சென்றேன்.

புகார் நகரம் சோழநாட்டின் கிழக்கு எல்லையாகும் வங்கக் கடற்கரையில் அமைந்திருப்பதனை நாட்டுவரை படத்தில் கண்டுகொண்டேன். சீர்காழி வட்டத்தின் கிழக்கு எல்லைப் பகுதியாகும் கடற்கரையி லமைந்திருந்த அப் பட்டினத்தினைக் காணும் ஆர்வமுடன் பயணமானேன்.

இக்காலத்தில் சாலைகளில் இடைவிடாது ஓடும் அளவற்ற பேருந்துகள் அக்காலத்தில் இல்லை. புகைவண்டிகள் மட்டும் கால அட்டவணைப்படி ஓடின. சீர்காழிக்குச் சென்று, அங்கு விசாரித்தறிந்தபோது எனக்கு மனமாற்றமே ஏற்படும் நிலை ஏற்பட்டது. எனினும் விடாப்பிடியாக மேலும் விசாரித்தறியும் முயற்சியில் ஈடுபட்டேன்.

காவிரிப்பூம்பட்டினம், பூம்புகார் எங்குளது, எவ்வழியே செல்ல வேண்டும் என்று யான் கேட்டபோது அம்மக்கட்கு அன்று இப்பெயர்கள் புதிராகவும் புகாராகவும் இருந்ததனை அவர்களின் மலைப்பினால் அறியலானேன். வியாபாரிகள் மட்டும் திருவெண்காட்டுக்குப் பக்கமா 'காவேரிபட்டினம் என்று கிராமம் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். நாட்டு வரை படத்தினைத் துருவிக் காணும்போது, கடற்கரையைச் சார்ந்து காவிரியாறு கடலில் சேரும் பகுதியில் திருவெண்காடு, பல்லவனீச்சுரம், சாய்க்காடு ஆகிய தேவாரப் பாடல்பெற்ற தலங்கள் இருப்பதையும் அதனிடையே காவிரிப்பூம்பட்டினம் குறிக்கப்பட்டிருப்பதையும் அறிந்து, வரைபடப்படியொன்றும் வரைந்து கொண்டு புறப்பட்டேன். சீர்காழியிலிருந்து ஈருருளி வண்டியில் ஆய்வுப்பயணம் தொடர்ந்தது. தரங்கம்பாடிக்குச் செல்லும் நெடுஞ்சாலைக்கு இடையே கிழக்கே பிரியும் பொதி மணற்சாலைவழியே மேலும் பயணம். கதிரவனின் கடுமை, பொதிமணலில் ஈருருளி இயங்கிற்றில்லை. வண்டிகள் சென்ற தடத்தில் உருட்டிய நிலையில் ஒருவாறு திருச்சாய்க்காடு சேர்ந்தேன் அங்கிருந்து கிழக்கே இரண்டுகல் அளவில் கடற் கரைப் பகுதியில் காவிரியாற்றின் சங்கமமுகப்பில் இருக்கும் சிற்றூரே காவிரிப்பூம்பட்டினமாக இருக்கலாமென்று பெரிய வர்கள் சொல்லுவார்களென்ற அளவில் செய்தி கிடைத் தது மேலும் கிழக்கே பயணம் தொடர்ந்தது பரந்த பொதிமணற்சாலையின் இருபுறமும் பனைமரச் சோலை கள், வல்லார் வளைத்துப் பயிரிட்ட சவுக்குமரத் தோப்புக் கள். முள்ளியும், நெருஞ்சியும், சப்பாத்திக் கள்ளியும் மூடிக் கிடக்கும் தரைப்பரப்பு, இடையே நெளிந்தும் குறுகியும் சென்று கடற்கரைக்கு முன்னால் கரைந்து மறைந்து மணற் பரப்பில் கலந்துபோன வழித்தடம். ஆங்காங்கே மணல் குன்று கள். இடையிடையே பனைமரங்கள், அவற்றிடையே எழுந் துள்ள ஈச்ச மரங்கள், கீழேபடர்ந்து செறிந்துள்ள முள்ளிச் செடிகளோடு இணங்கி நிற்கும் குந்தீச்சக்குவியல்கள். தொடர்ந்த இடமெல்லாம் சவுக்குத் தோப்புக்கள் கண்டேன், மனக்களைப்பு கொண்டேன். காவிரிப்பூம்பட்டினத்தைக் காணேன். கரையிலொரு மணற்குன்றகத்தில் பனை ஓலைக் கூரைகளாலான ஒரு சில குடிசைகள் தொலைக்காட்சிகளாகத் தெரிந்தன. அவை கரையார், பட்டினவர் என்றெலாம் காரணப்பெயர் கொண்டவரும், கடலையும் கட்டுமரத்தையும்

நம்பி வாழ்க்கை நடத்துபவருமாகிய செம்படவர் எனும் மீனவர் வாழ்விடம் என்பதனை அறிந்தேன். அப்பொழுது நான் கண்ட பூம்புகார் ஒரு புதிராகவே இருந்தது.

வளரும் கலை

வரலாறு ஒரு கலை. வரலாற்றுக் கலைக்கும் மற்றக் கலைகளுக்கும் வேறுபாடுண்டு. வரலாறு எதனையும் புனைந்துரை செய்வதில்லை. அதன் இயல்பு, சென்றகால மனிதன் வாழ்ந்த நிலவியற்கைச் சுவட்டுடன், அவன்விட்டும் இட்டும் வைத்த பழம்பொருள்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், நாணயங்கள், இலக்கியங்கள், சுவடிகள், நாட்டுப்பாடல்கள், செவிவழிச் செய்திகள், புதைபொருள்களாக அவ்வப்போது கிடைக்கும் பொருள்கள் ஆகியவற்றைக் கொண்டு நுண்ணறிவால் ஆராய்ந்து, சிந்தித்துத் தெளிவு செய்து, காலவரையறையுடன் கணித்துப் புலப்படுத்துவதாகும்.

கிடைத்துள்ள சான்றுகளைக் கொண்டு உருவாக்கப் பெறும் வரலாறு, அவ்வப்போது கிடைக்கும் சான்றுகளால் பெருகியும் மாறியும் தொடர்ந்தும் வளரும் இயல்புடையது. எனவே சென்றகால மனிதனின் வாழ்வியலைக் கணிக்கும் உண்மையின் நேர்மைச் சான்றாகும் வரலாறு, ஒரு வளரும் கலையாகவே அமைகின்றது.

புதைந்த புகாரும், கடலில் புகாத ஆறும்

உருத்திரங்கண்ணனாரும் இளங்கோவடிகளும் காட்டிய பெருவளங் கொழித்த துறைமுகப்பட்டினமாம் காவிரிப்பூம் பட்டினம், காவிரி நகரிடையே புகுந்து சென்று கடலில் கலந்த இடமாகும் புகுமுகப்பாக்கம் இன்றில்லை. மணல்மேடுகளும் மணல்வெளிகளும், சவுக்குமரக்காடுகளும், முள்ளிப் புதர்களும்காட்சிக்கு இலக்காக இருந்தன.

புலம் பெயர் பரதவர், மணல் மேடுகளில் இட்ட பனையோலை வேய்ந்த குடிசைகளைத் தவிர, பதியெழுவறியாப் பழங்குடிகெழீஇய பொதுவறு சிறப்பின் புகார்ப் பெருந்துறைப்பட்டினமோ, மருவூர்ப் பாக்கமோ இருந்ததற்கறி குறியாக ஏதும் புலனாகவில்லை.

குடக்கு மலைத்தலைய கடற்காவிரி புனல் பரந்து பொன் கொழித்த நிலைமாறிக் கடலில் புகுவதற்கும் வலியின்றி, வள

மெல்லாம் வழியிடையே வறியோர் கவர வாரி வழங்கி வாழ்வு தளர்ந்து ஒய்ந்த பெருமகள்போல, குழித்துக் குட்டையாகி நின்றநிலை என் உள்ளத்தைத் தொட்டது. கடற்கரையில் நின்று, குட்டையிட்டுக் கோரைப்புற்கள் மண்டிக்கிடந்த காவிரியின் நிலையைக் கண்டு கலக்கமுற்றேன். விளைவறியாது வெற்றாடல் செய்து செல்வ நகரைச் சீரழித்துவிட்டதோடு, மணலிட்டுக் காவிரியை மடக்கிவைத்த அவலத்தைக் கடல்நினைந்து நினைந்து புலம்புவதைப் போன்று அலையோசைஅலம்பிக்கொண்டேயிருந்தது.

தோலா நாவின் மேலோர், சொல்லால் குறித்து வைத்த பூம்புகாரைக் கண்ணால் காணவியலவில்லை. ஆராய்ச்சிவழி அறிய முற்பட்டேன்.

ஆய்வு அரும்பியது

சிலப்பதிகாரமும் பட்டினப்பாலையும் விளக்கமாக வருணனை செய்யும் பூம்புகாரின் ஒருசிறு பகுதியேனும் காணவியலாததற்குரிய காரணம் சிலம்பு குறிக்கும் கடற்கோளென்பதாயினும், ஏதோ ஒரு சில எச்சமாகிலும் இருக்கவேண்டாமா? ஆய்வு எதிர்நீச்சலிட்டது.

சிலப்பதிகாரம், பட்டினப்பாலை போன்ற பண்டைய தமிழகத்தின் பாங்கினை அறிமுகம் செய்யும் நூல்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் கடைசி வரையில் தமிழர் அறியாத நிலையில் எங்கெங்கோ ஓலைச் சுவடிகளாக ஒடுங்கிக் கிடந்திருக்கும் போது, நான் காண முயன்ற பூம்புகார் மறைந்து கிடப்பதும் இயல்புதான் என்ற அமைதியுடன் மேன்மேலும் புகார் ஆராய்ச்சி தொடர்ந்தது.

திட்டப்படிச் சிலம்பு விளக்கும் செய்திகளைக் கொண்டு புகார் நகரின் ஒருபுறம் ஓடிக்கடலில் கூடிய காவிரியை உறையூரளவில் கணித்துக் கொண்டு, அதன் வடகரைப்பகுதியிலமைந்த பழைய ஊர்களைக் குறித்துக்கொண்டு, காவிரிப்பூம் பட்டினமாகிய பூம்புகார் முதலாகக் கால்நடையாகவும் ஈருருளி வண்டியின் துணையாலும் ஆராய்ச்சி செய்யத் திட்டப்படுத்தினேன். 1943 - 1945 அளவிற்குள் கல்வெட்டுக்களைப் படித்தறியவும், புதைபொருள்கள் பழைய சின்னங்கள் ஆகியவற்றைக் காலவரையறையுடன் கனித்தறியவும், அகழாய்வு பற்றிய நூல்களைக் கற்றும், நேரிற்கண்டும் அனுபவம் பெற்றேன். எனவே என்னுடைய சிலப்பதிகார வரலாற்று ஆய்வுப்பயணம் தெம்புடன் தொடங்கிற்று.

ஆய்வுக்கு வாயில்கள்

கதைக் குறிப்பு

காவிரிப்பூம்பட்டினத்தில் இருபெரும் வணிகர் வாழ்ந் திருந்தனர். ஒருவர் கடல்வழி வணிகத்தலைமையாளர்; பெயர் மாநாய்கன். அவரது மகளே கண்ணகியாவர். மற்றவர் தரை வழி வணிகத்தின் பெருவணிகர்; பெயர் மாசாத்துவான். அவர் மகனே கோவலன்.

பெற்றோர்கள் மனம் ஒருமைப்பட்டு, கண்ணகி கோவலன் இருவர்க்கும் திருமணம் நிகழ்வித்துத் தனிக்குடித்தனம் அமைத்துத் தந்தனர். கண்ணகியோடு இனிதாக இல்லறம் நடத்திய கோவலன் தனது ஆடற்கலைத்திறனை அரங்கேற் றிய அழகி, கணிகைமகள் மாதவியினிடத்து மையலுற்று, அவளைச் சார்ந்து, கண்ணகியைப் பிரிந்து மாதவியை விடு தல் அறியா விருப்பினனாக ஒன்றி இன்புற்று வந்தான். "வர வின்றிச் செலவிட்டால், குன்றத்தனைச் செல்வமும் குறைந்து மறைந்துபோகும்" என்பது பழமொழி. பெற்றோர் அளித்த செல்வத்தையும், கண்ணகியாரின் அணிகலன்களையும் மாதவியின் இன்பத்துறைவழிச் செலவிட்டான் கோவலன். சோழன் நடத்திய இந்திரவிழாவில் மாதவி யாழை இசைத்துப்பாடிய பாடற்கருத்து, கோவலன் கைப்பொருள் குன்றிய மன ஒடுக்கத்திற்கு ஊதுகனலானது. மாதவியை ஆடற் கணிகையாகக் கண்ட கோவலனது மனக்கண், பரத்தையாக உருக்காட்சி கண்டது.

மாதவியைப் பிரிந்தான் கோவலன். தனது இல்லத்திற்கு வந்து கண்ணகியின் எதிரே நின்றான். மாதவிக்குக் கொடுக் கப் பொருளின்றி வந்து வருந்தி நிற்பதாகக் கருதிய கண்ணகி ஒரு மகிழ்ச்சியை முகத்தில் தோற்றுவித்து, சிலம்புகள் உள்ளன ஏற்றுக்கொள்ளுங்கள் என மெல்லெனக் கூறினள்.

சலம்புணர் கொள்கைச் சலதியோடு ஆடிவந்த கோவலன், கற்பின் கொழுந்தே, கண்ணகியே கேள்! நீ தரும் அச்சிலம்


காவிரிப்பூம்பட்டினம் முதல்
கள ஆய்வு தொடர்ந்த நெறிகள்
1. காவிரிப்பூம் பட்டினம்.
2. உறையூர்.
3. கொடும்பாளூர்.
4. மருதந்துறை.
5. மதுரை.
6. நெடுவேள்குன்றம்.
7. கண்ணகி கோட்டம்.
வ
கி
WAYANAD
Calicut
Kozhikode
MALAPPURAM
COIMBATORE
Coimbatore
PALGHAT
Palghat
Trichur
TRICHUR
ERNAKULAM
Ernakulam
IDUKKI
KOTTAYAM
Kottayam
Alleppey
Quilon
TRIVANDRUM
Nagercoil
Cape Comorin
Salem
TIRUCHCHIRAPPALLI
Tiruchchirappalli
Thanjavur
Kumbakonam
Karikal
Nagappattinam
THANJAVUR
Pudukkottai
PUDUKKOTTAI
Dindigul
Madurai
RAMANATHAPURAM
Ramanathapuram
TIRUNELVELI
Tirunelveli
Palayankottai
Tuticorin
PALK BAY
Cuddalore
YANAM (Py)
Scale 1:2,000,000
Kakinada
BAY OF BENGAL

பினையே யான் வணிக முதலாகக் கொண்டு, நாளும் காமப் பொய்மைக்குக் கரைத்த பெரும்பொருளை மீண்டும் ஈட்டும் திட்டமுடையேன்; மானம் உந்துதலால் உற்றவர்களாகிய வணிகர் முகத்தில் விழிக்க வருந்துகின்றேன்; மதுரைக்குச் சென்று வளர்பொருள் தேடி மகிழ்வுடன் மனையறம் நிகழ்த்த விரும்புகின்றேன்; நீயும் என்னுடன் எழுந்து வருவாயாக என்று மனைவிக்குத் தனது வாழ்வுத் திட்டத்தினை வகை பெறக் காட்டி அழைத்தான்.

எழுகெனக் கணவன் இயம்ப, இல்லறம் நடத்தும் பேற்றினை எதிர் பார்த்து இரங்கி நின்ற கண்ணகியார் எழுந்தார்; வினை திட்டமிட்டு வழிகாட்ட விடிவதற்கு முன்னே சூழ்ந்த வைகுறு யாமத்தில் கோவலனுடன் மதுரைக்கு வழி நடந்தார்.

இது கண்ணகியாருக்கமைந்த வாழ்க்கை, வரலாறாவதின் தொடக்கம்.

பிறந்து வளர்ந்து செல்வவளத்திற் றிளைத்துக் கோவலனை மணந்து, மனையறம் ஒரு சில ஆண்டுகள் நிகழ்த்திய அளவில், கணவன் நாடகக்கணிகையை நயந்து பிரிய, உளம் வருந்தி உடல் திரங்கி, கவலையை உள்ளத்தில் தேக்கி ஒளிமுகத்தில் மறைத்து, கணவன் வந்த போதெல்லாம் இல்லத்தில் குரவோர் இட்ட செல்வங்களையும், தனக்குப் பெற்றோர் இட்ட அணிகலன்களையும் கொடுத்துக் கொடுத்து,

''அஞ்செஞ் சீறடி அணிசிலம் பொழிய
மென்துகில் அல்குல், மேகலை நீங்கக் -
மங்கல வணியிற் பிறிதணி மகிழாள்
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்''
''தவள வாணகை கோவலன் இழப்ப
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி''

என்றெலாம் அடிகள் கற்பனை ஓவியத்தால் காட்டி வருந்தும் அளவில், அழகு சுமந்திளைத்த ஆகம், துன்பத்தால் துவண்டு திரங்கித் திரிந்து நின்ற நிலையில், நம்பிக்கை என்ற பண்பியல் உந்தக் கோவலனுடன் பிறந்த அகம் வருந்தி நிற்கக் காவிரிப் பூம்பட்டினத்தினின்றும், பிறரறியாது மயக்கும் பொழுதாகிய காரிருள் நின்ற கடைநாள் கங்குலில், கோவலனுடன் கண்ணகி

யார் நடக்கலாயினர். செல்வச் செழிப்பில் மாநாய்கன் வளர்த்த செல்வியின் வண்ணச் சீறடிகளை இதுவரையில் மன்மகள் அறிந்திலள். இதுபோது வினையின் விளைவால் அவர் கணவனுடன் மண்ணில் அடியிட்டு நடந்தார்.

அன்று கணவனுடன் மதுரைக்குக் கண்ணகியார் தொடர்ந்து சென்ற காலடிச் சுவடுகள் காலத்தால் மறைந்த தெனினும் அடிகள் காப்பியத்தால் காட்டியுள்ள வழித்தடக் கணிப்பின் சிறப்பினை உணர்ந்தேன். அவ்வழியே எனது ஆய்வுப் பயணம் கால்நடையாகவே தொடர்ந்தது. இக்காலம், கி. பி. 1945 ஆகும்.

சிலப்பதிகாரம் புகார்க் காண்டம் (காவிரிநாடு) மதுரைக் காண்டம் (வையைநாடு) வஞ்சிக்காண்டம் (மலைநாடு) என்னும் முப்பெரும் பிரிவுடன் ஆக்கப் பெற்ற நூலாகும்.

அம்முறையிலேயே கண்ணகியார் அடிச்சுவட்டில், எனது கால்நடை ஆராய்ச்சி, புகார் முதல் வஞ்சிவரையில் தொடர லாயிற்று.

காலச்சூழலும் கைப்பொருளும் ஒன்றி உதவிய காலத்தி லெல்லாம், ஆய்வுசெய்து விட்ட இடத்திலிருந்து கால்நடை யாகத் தொடர்ந்த எனது ஆராய்ச்சி நிறைவுபெறப் பதினேழு ஆண்டு இடையே கழிந்திருந்ததென்பதனை நினைவுக்குறிப் பாக அறிமுகம் செய்கிறேன்.

சிலம்பில் புதிய பார்வை:

1. வணிகர் என்ன குலம்?

கண்ணகி கோவலன் ஆகியோர் வணிக மரபினர் என்ப தனைக் காப்பியம் காட்டுகின்றது. செய்தொழிலான் சுட்டிய பொதுப்பெயரே வணிகரென்பது.

பூம்புகாரில் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் சுட்டப் பெற்ற இவ்வணிகர், தொடர்ந்த கால வட்டத்தில் எச்சாதி யின்ராகக் குறிக்கப்பெற்றனர் என்பதுதான் புதிய பார்வை. இதற்குச் சாதிவரலாறும், ஏட்டுச் சுவடியும், கல்வெட்டுக்களும், வாழ்வியல் வழக்கங்களுக்கும் சான்றுகளாக உள்ளன.

வணிகர் பொருள் சேர்க்கும் செயற்பாடும் பொறுமையுடன் நற்குணமும் உடையவர்கள். பொருள் செட்டிமையாலேயே சேர்க்கப்பெறுவதாகும். செட்டு சிக்கனம் என்னும் பொருண்மை தருவதாகும். ஆனமுதலில் அதிகம் செலவிடாது இலாபமதை அடக்கிப் பெட்டகத்தில் ஒடுக்குத் திறனே ஈட்டல் என்பதாகும். இத்திறன் பெற்ற வணிகர் செட்டிமைத்திறத்தால் செட்டிகள் எனக் கூறப்பெற்றனர். தனம் சேர்க்கும் பழக்கத்தாலும், வணிகத்தொழிலை முதலீட்டுடன் வளர்க்கும் திறத்தாலும் தனவைசியர் என்றும் செட்டிகள் கூறப்பட்டனர். இப்பெயர்கள் காலவழக்கில் ஒரு சாதிக்கமைந்த பெயர்களாக ஆகியுள்ளன.

தமிழக வணிகம், கடல்வணிகம் தரைவணிகம் என இரு வகையில் நிகழ்ந்துள்ளது. நாவாய்வழி வணிகத்தால் உயர்ந்தவன் மா நாய்கன் என்று குறிப்பிடப்பட்டான்.

மக்களின் தேவைக்கும் விருப்பத்திற்கும் ஆகும் பல்வேறு பண்டங்களை வண்டிகளிலும் பொதிமாடுகளிலும் ஏற்றிச் சென்று, ஊர்கள்தோறும் பொருள்நிலையும் விலையும் சாற்றி விற்ற குழுவில் பெருங்குழுவை உடையவனாகவும், பெரும் பொருள் ஈட்டுபவனாகவும் இருந்த வணிகன், மாசாத்துவான் என்று கூறப்பெற்றான்.

கடல் வணிகத்திலும் தரைவணிகத்திலும் செட்டிகள் எனப்பட்ட தனவணிகர் சோழநாட்டில் மிகுதியாக இருந்துள்ளனரென்பதனைக் கல்வெட்டுச் செய்திகள் காட்டுகின்றன. இவர்கள் நகரத்தார்கள், நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் என்று பெயர் கூறப் பெறுவாராயினும் இவர்களது பழைமை காவிரிப்பூம்பட்டினத்தில் சோழர் ஆட்சியில் 8000 குடும்பமாக இருந்துள்ளதனை இவர்களது பழைய வரலாறு கணிக்கின்றது.

இவர்களது தொழில் வணிகம். வயதுவந்த தனது பிள்ளைக்குத் தலைப்பாகை அணிவித்து, முதல்கொடுத்து வணிகத்தில் ஈடுபடச் செய்வதும், திருமணம் செய்து வைப்பதோடு தனிக் குடுத்தனமாகவும் பிரித்து வைத்து வாழவிடுவதும் இவர் குடும்ப வழக்கம்.

ஆண் பெண் இருபாலரும், வடிந்து தோளில் விழும் தொளைக்காதினை இளமையில் அமைத்துக்கொண்டு அவற்றில் அணிகலன் இட்டு வைப்பது மாறாத மரபுச் செயலாகும். வணிகத்தில் அடியிட்ட ஆண்பாலர் வலது மேற்காதில் தொளையிட்டுக் கொட்பூ என்னும் பச்சை மரகதம் பொதித்த பொன்னணியினையும் அணிவது செல்வமுதன்மைக்கு அமைந்த இலச்சினை யாகும்.

சோழ மன்னர்கட்கு முடிசூட்டும் உரிமை உடையவர் களாக நகரத்தார்கள் இருந்துள்ளதால், 'இரத்தின தன மகுட வைசியர்' என்ற பட்டமும் அவர்கள் பெற்றிருந்ததனை வரலாறு குறிப்பிடுகின்றது.

அரசனை முதற்குடியாக வைத்து எண்ணுதற்கமைந்த நிலையில் நியாயத்துடன் வணிகத்தால் ஈட்டிய செல்வ முடையாராகவும் அரச சுற்றமாகும் ஐம்பெருங் குழுவில் இடம் பெற்றாராகவும் அவர்கள் இருந்துள்ளனர்.

இவ்வகைத் தனிச்சிறப்பியல்புகளைப் பெற்றிருந்த வணி கரின் வரலாற்றினைச் சங்ககால இலக்கியங்களும் குறிக்கின்றன.

இவற்றையெல்லாம் கொண்டு, வரலாற்றுக் கண்ணோட்டத் தில் புதிய பார்வையிட்டு நோக்குவோமாயின், சங்ககால வணிகரே நகரத்தார்கள் என்ற பொதுப்பெயராலும் செட்டி கள் என்ற சிறப்புப் பெயராலும் காலவழக்கில் சுட்டப் பட்டுள்ளனர் என்பது புலனாகின்றது.

எனவே, கண்ணகி கோவலன் ஆகியோர் குடிவழிமர பினைக் குறித்தறியும் முயற்சிக்கு இலக்காக நகரத்தார்கள் எனும் தனவணிகரே பொருத்தமாக இருப்பது அறியத்தக்க தாகும்.

2. சிலம்பு சென்றது எப்படி?

சிலம்பு காரணமாக நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் தாக்கநோக்கு, கதைக்குக் கருவாகவும் நூலிற்குத் தலைப்பாகவும் அமைந் துள்ளது.

ஒரு காப்பியம் தோன்றக் காரணமாகவிருந்த சிலம்புகள், கண்ணகியார் கால்களில் அணிந்திருந்த பொற்சிலம்புகள். இரத்தினக்கற்கள் பரல்களாக இடப்பெற்றவை; விலைமதிப் பற்ற உயர்வுடையவை.

கண்ணகியார் கோவலனுடன் இல்லறம் நிகழ்த்திய ஒரு சில ஆண்டுகளளவில் அவரின் கால்களில் ஒலித்திருந்த சிலம்புகள் கோவலன் மாதவியின் தொடர்பினால் மனையகம் மறந்து கணிகையை விடுதலறியாது பரத்தமையிற் படிந்து கிடந்த காலத்தில், கணவனது காமப்பிரிவினையால் தனித்திருந்து இல்லத்தில் கலங்கியிருந்த கண்ணகியார், ஒப்பனை நீக்கிய அணிகலன்களுள் ஒன்றாகவும் இருந்தமையை

"அஞ்செஞ் சீறடி அணிசிலம் பொழிய"

என்று அடிகள் காட்டுகின்றார். எனவே, சிலம்புகள் கண்ணகி யரால் காலினின்றும் நீக்கப்பட்ட நிலையில் இல்லத்தில் ஓரிடத்தில் வைக்கப்பட்டிருந்த செயல் அறியப்பெறுகின்றது.

பெண்மைத்தன்மை:

கோவலன் கண்ணகி இருவரும் புகாரினின்றும் புறப் படும்போது சிலம்புகள் எவ்வாறு எடுத்துச்செல்லப்பட்டிருக்க வேண்டுமென்பது குறிப்பு. இதனை, மக்களின் இயல்பான பழக்க வழக்கங்களைக் கொண்டு ஊகித்தறிதலே புதிய பார்வை.

செல்வச் செழிப்பில் வளர்ந்தவர் கண்ணகியார், கோவல னின் பரத்தமைப்பிரிவால் சிறப்பிழந்தவர் ஆயினும் பெண்மை, பேதமை, மானம் போன்ற நற்குணங்கட்கு இடனானவராக விளங்கியுள்ளார்.

கணவன் என்னுடன் மதுரைக்கு வா, என்றழைத்த அளவில் ஆர்வமுடன் கட்டிய துகிலளவில் பொட்டெனப் புறப்பட்டார் என்பது பொருந்திய குடும்பப் பெண்மைக்குரிய செயலாக அமையுமா? இயல்பினைச் சிந்திப்போம், கற்பித்துக் காண்போம்.

வேற்றூர் செல்லும் கால அளவிற்கும், சென்று தங்கி வாழ்வதற்கும் மாற்றுத் துணிகள் இருவருக்கும் வேண்டு மென்பதைப் பெண்மையொன்றே பிறழாதறியும் இவ்வியல் பில், கண்ணகியார் ஓரளவாவது இருவருக்கும் ஏற்புடைய ஆடைகளை எடுத்து வைக்கும் நோக்குடன்,

"இதோ புறப்பட்டு விட்டேன் என்ற இசைவுச் சொல் லிடும் அளவைக் காலத்தில் ஒரு சிறிய துணியில் ஆடைகளைப் பொதித்துக்கட்டி சிறு மூட்டையாக்கிக் கொள்வது இயல் பூக்கமாகும். வணிக முதலுக்கென்று கணவன் குறித்திட்ட சிலம்புகள் அவன் குறித்தபடிச் சிறு துணியில் பொதிக்கப்பட்டுத் துணிப் பொதியினுள் பதனம் செய்யப்பெற்றிருக்க வேண்டும். அத்துணிப் பொதியலை, சிறு மூட்டையினை இடுப்பிலிட்டு ஒரு கையால் அணைவுசெய்த நிலையிலேயே கணவனுடன் கண்ணகி யார் புகாரில் இருந்தகம் விட்டு எழுந்து நடந்தார் என்பதே, பெண்மைக்கும் அமைந்த சூழலுக்கும் பொருந்திய நிலைமை யாகும்; பெண்மைக்கே உரிய மாறாத நடைமுறை வாழ்வியல் இயல்புமாகும்.

1. விளைச்சிலம்பு விளம்பியது:

பூம்புகாரிலிருந்து கண்ணகியார் இடுப்பகத்தே இடுக்கி நடந்த துணிப்பொதியுள் பொற்சிலம்புகள் பொதிந்து மறைந் திருந்தனவாயினும், வாழ்வில் வரவிருக்கும் விளைவினை மணிப்பரலொலியால் கண்ணகியாரின் காலடி அதிர்வுக்கு ஏற்ப முறையீட்டு அறிவிப்பாக அறற்றி ஒலித்துக் காட்டியே, விளைச் சிலம்புகளாகி வழித்தொடர்ந்தன என்பது இயல் பியற் பார்வையாகும்.

கண்ணகியார் சிலம்புகளைச் சுமந்து செல்லலுற்றார். இந்நிகழ்ச்சி இன்றைக்கு 1800 ஆண்டுகட்கு முற்பட்ட நிகழ்ச்சி யாகும். எனது ஆராய்ச்சி சிலப்பதிகாரம் குறிக்கும் கண்ணகி கோவலன் ஆகியோரைப் பற்றியதாக இருபதாம் நூற்றாண் டின் இடைப்பகுதியில் தொடங்குகின்றது. அவர்கள் சென்ற வழியிடங்களில் அக்கால மக்கள் செய்தமைத்த நினைவுச் சின்னங்கள் ஏதாவது பழம்பொருளாக இருக்கக்கூடும் என்ற

நம்பிக்கையுடன், பழைய நல்லிடங்களையும் நேரிற்கண்டு, ஆங்காங்குள்ள கல்வெட்டுகளைத் தொல்பொருள் ஆய்வுடன் கணிப்பதற்கும் இலக்காகித் தொடர்ந்தது.

தணிப்பும் பிணிப்பும்:

கண்ணகியார் கோவலன் வாழ்ந்த காலம் தொலைவாகக் கடந்து விட்டது. அக்கால அரசுகளும் அழிந்து மறைந்து விட்டன. பழைய நகரங்கள் மருங்கற மறைந்து விட்டன. புதிய வடிவில் புதிய ஊர்களும் நகரங்களும் தோன்றி விட்டன. மக்கள் வாழ்க்கையும் மட்டற்ற மாறுதல்களைப் பெற்றுவிட்டன.

இந்நிலையில் பழைய தமிழ் இலக்கியம் கூறும் இடங்களை யும் சின்னங்களையும் வரலாற்றாராய்ச்சி என்னும் கண்ணாடி யின் வழிக்காண முயன்ற என்னிலையைக் கண்டு இரங்கிக் கூறியவரும் ஏளனம் செய்தவரும் உண்டு.

ஆயிரத்து முன்னூறு ஆண்டுகட்கு முற்பட்ட கோயில் களும், சிற்பங்களும், சின்னங்களும் தமிழகத்தில் இன்றும் இருக்கும்போது, அதற்கு முன்னர்த் தோன்றிய புகழ்பெற்ற நகரங்களும் பழைய சின்னங்களும் சிதைவு பெற்ற நிலையிலா யினும் இல்லாமல் போதற்கில்லை என்ற துணிவுடன், கண்ண கியார் பிறந்த காவிரிப்பூம்பட்டினத்தை வரலாற்று ஆய்வு வழிக் காணலுற்றேன்.

அடிச்சுவட்டில் - ஆய்வுத்திட்டம்:

இளங்கோவடிகள் காப்பியத்தினை முப்பெரும் பிரிவு களாகப் பகுத்துக் கூறியுள்ளார். இதனால் தமிழகத்தில் சோழர் பாண்டியர் சேரர் ஆகிய முடியுடை மூவேந்தரின் ஆட்சிவழிப் பிரிந்து நின்ற தமிழக நிலவளாகப் பாகு பாட்டினை அக்கால அளவிலிருந்த எல்லைகளுடன் அறிந்து கொள்ள முடிகின்றது.

கண்ணகியார் அடிச்சுவட்டில் கால்நடையாகவே சென்று ஆய்வு செய்ய வேண்டுமென்பது எனது திட்டம். சிலம்பில் அடிகள் விளக்கமாகக் காட்டும் வழிகளைத் தெளிவு செய்து

கொண்டேன். அவற்றை மூன்று பிரிவுடைய வரைபடங்களாகவும் வரைந்து கொண்டேன்.

முதற்படம் பூம்புகார் முதல் தொடங்கி காவிரியாற்றின் வடகரை வழியாக மேற்கு நோக்கிச் சென்ற அளவில், அரங்கம் சேர்ந்து தென்புறம் திருப்பம் கொண்டு காவிரியைக் கடந்து உறையூரளவில் விளக்கம் கொண்டதாகும். இதுவே புகார்க் காண்டம் தரும் கண்ணகியார் சென்ற நெறியின் முதற்பகுதியாகும்.

இரண்டாவது படம்: உறையூரின் தென்பக்கத்திலிருந்து தொடர்ந்து - கொடும்பாளூர் - அழகர்மலையைச் சூழ்ந்த மூன்று வழி - தொடர்ந்த காட்டுவழி - வையையாற்றின் வடகரை-தென்கரை மதுரை-என்ற அளவிலமைந்ததாகும்.

மூன்றாவது படம்: மதுரையின் மேற்கு வாயில் - கொற்றவைக் கோயில் - வையையின் தென்கரையே மேற்கு நோக்கிய நெடுவழி - தேனிக்கு முன்னர் வையை தென்புறத்திலிருந்து ஓடிவந்து திருப்பங்கொள்ளும் குன்னூர், (குன்றூர்) வையை தோன்றி அருவிகளாக ஓடிவரும் கம்பம், பள்ளத்தாக்கு; பள்ளத்தாக்கின் அரண்போல் சூழ்ந்துள்ள சுருளிமலைத்தொடர், மேகமலைத் தொகுதி, மேற்குமலையின் கிளைச்செறிவு ஆகியவைகளைக் குறிப்பதாகும்.

இரண்டு மூன்றாம் பிரிவுகள் நுட்ப ஆய்வுக்கமைந்த வரைபடங்களாகும். அவை, கண்ணகியார் நடந்த வழிகளைப் பற்றிச் சிலப்பதிகாரம் தரும் விளக்கக் கண்ணோட்டத்துடன் வரையப்பெற்றவைகளாகும்.

இவற்றுடன், வஞ்சிக்காண்டம் குறிக்கும் செய்திகளைக் கொண்டு நான்காவது படமும் வரைந்து கொள்ளலானேன்.

நான்காவது படம்: பாண்டிய நாட்டின் மேற்குக் கோடி எல்லையாகும் குமுளி முதலாகச் சேரநாட்டின் நடுவண் அமைந்த பேரியாற்றங்கரை-வஞ்சி நகரம் வரையிலமைந்த வரைபடமாகும்.

இவற்றால் எனது ஆராய்ச்சி திட்டக்கணிப்பு முறையில் அமைந்தது. பழைய இடங்களையும் தடங்களையும் பற்றிய வரலாற்றினைக் கல்வெட்டுக்கள் தொல்பொருள்கள் ஆகிய சான்றுகளுடன் இயன்ற அளவில் கண்டுபிடிக்கும் ஆர்வமும் இணைந்தது.

சிலம்பு தரும் இலக்கியநோக்கில் ஆராய்ந்து கண்ணகியாரைப் பற்றிய தடயங்கள் எங்காவது உள்ளனவா என்பதில் கூரியநோக்குப் பதிந்த நிலையில் ஆய்வு தொடர்ந்தது. இவ்வாறமைந்த எனது காப்பியத்தின் கருத்து வழியமைந்த வரலாற்றாராய்ச்சிப் பயணத்தில் நான் கண்ட தடயங்களையும் செய்திகளையும் வரலாற்றுச் சான்றுகளுடன் உருவாகும் புலப்பாட்டினையும் வெளிப்படுத்திச் செல்லும் முறைமை இந் நூற்கண் அமைந்தது. அதனையே கண்ணகியார் அடிச்சுவட்டிலும், சிலம்புகள் வழியின் இடையிடையே புலம்பிய கற்பனைக் காட்சியிலும் காட்டலானேன்.

பெயர்வளம்

சிலப்பதிகாரம், பட்டினப்பாலை ஆகிய இரண்டு நூல்களும் பூம்புகாரின் மக்கள் வளம், செல்வ வளம், வணிக வளம் ஆகியவற்றைப் பற்றி விரிவாகக் கூறும் நூல்களாகும்.

காவிரிப்பூம்பட்டினத்திற்குப் புகார், பூம்புகார், காவிரிபுகும் பட்டினம், சம்பா - பதி, என்ற பெயர்களும் கவேரன்பட்டினம் என்ற பெயரும் இருந்துள்ளன.

காவிரி வங்கக்கடலிற் கலக்கும் முகப்புவாயிலில் இவ்வூர் அமைந்திருக்கும் இயற்கையாலும்,

அக்காலத்தில் இவ்வூர் மக்கள் எப்பொருளை வேண்டியும் பிறவூர்களில் புகார் என்பதனாலும் இளங்கோவடிகளே,

> **''பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய**
> **பொதுவறு சிறப்பின் புகார்''**

என்று சிறப்பிப்பதனாலும், புகார் என்னும் பெயரையும், சோலைகள் சூழ்ந்திருந்த அழகுடன், மென்மையான தரைவளமும் பெற்றிருந்தமையின் புகார் - பூம்புகார் என்ற

பெயரினையும் பெற்றுள்ளது. பட்டினம் என்னும் பெயர் கடற் கரையோரமாக அமைந்திருந்த வணிகவளத்தால் சிறந்த நகரங் கட்குப் பண்டைத் தமிழர் இட்ட பெயராகும். கி. பி. 80-ஆம் ஆண்டு அளவில் எழுதப் பெற்ற 'பெரிப்ளஸ்' என்னும் கடற் பயண நூல், புகாரைக் கமாரா என்று குறிப்பிடுகின்றது.

கி. பி. 150-ல், தாலமி என்னும் யவன நாட்டுப் பயணி தம் நூலில், காவிரிப் பூம்பட்டினத்தைக் 'கபேரிஸ்' என்று அவரறி மொழிவழிக் குறித்துள்ளார்.

இவ்வாறு பிற மொழியாளர் தமிழ்மொழியிலமைந்த ஊர்ப் பெயர்களைக் கேட்டு, தமிழ்மொழிக்குரிய வல்லின மெல்லின எழுத்துக்களை உச்சரிக்க வியலாது, தங்கள் மொழிவழி இயன்ற அளவில் குறித்துக் காட்டிய தேய்ந்த திரிந்த பெயர் களாகவே அவை உள்ளன. ஆங்கிலேயர் தஞ்சாவூரை-டேஞ்சூர் என்று கூறியிருக்கும்போது இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற் பட்ட ரோமானியருக்குத் தமிழின் சொல்லொலிகள் இம்மட் டாவது வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

வளாக அமைப்பில்

இளங்கோவடிகளும், உருத்திரங்கண்ணனாரும் விளக்க மாகக் காட்டியுள்ள காவிரிப்பூம்பட்டினத்தின் கூடிய பரப்பி டத்தை எல்லையிட்டுக் காட்டலாகும். தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறை என்னும் ஊரிலிருந்து கிழக்கே தரங்கம்பாடி என்னும் கடற்கரை ஊரிற்குச் செல்லும் நெடுஞ்சாலையின் இடையே 'ஆக்கூர் முக்கூட்டு' என்ற பெயருடன் சாலைகள் கூடும் சந்திப்பொன்றுள்ளது. இப்பகுதியினின்றும் நேர் வடக் காகப் பிரிந்து சீர்காழிக்குச் செல்லும் சாலையினிடையே உள்ள தலைச்செங்காடு என்னும் ஊரினைக் காவிரிப்பூம்பட்டின வளாக மேற்கு எல்லையின் மையமாகக் கொண்டு மற்றைய எல்லைகளைக் காணவேண்டும். இங்கிருந்தே இப்பொழுது நேர்கிழக்காகக் காவிரிப்பூம்பட்டினத்திற்குச் செல்லும் பெருஞ் சாலை சீர்திருத்தப்பட்டுள்ளது. தலைச்செங்காட்டிற்குச் செம் பொனார்கோயில் என்னும் (திருச்செம்பொன்பள்ளி) ஊரிலி ருந்து செல்லும் குறுக்கு வழியும் இருக்கின்றது.

தலைச்செங்காட்டை மையமாகக் கொண்டு அதிலிருந்து வடகிழக்கோடிய கோணமாகச் சென்று கடற்கரையை அறுதி யிடும் செண்காடு, கடைக்காடு ஆகிய சிற்றூர்களை இணைத்த பக்கம் வடக்குச் சிறகாகவும்,

அதே முறையில் தென்கிழக்கோடிய கோணமாக முறையே திருக்கடவூர் மயானம், தில்லையாடி ஆகிய சிற்றூர்களை எல்லை யிட்டுக் கடற்கரையில் அறுதியிட்ட பக்கத்தினைத் தென் சிற காகவும்,

கிழக்கே தென்வடக்காகத் தொடரும் கடற்கரையைக் காவி ரியின் கடல் முகப்பு வாயில் இடைப்பட்ட அளவிலான கிழக்கு வரம்பாகவும்,

ஆக மூன்று பக்கங்களைக் கொண்ட முக்கோண வடிவமான நிலப்பரப்பினையே பழைய புதையுண்ட காவிரி புகும் பட்டின மாகக் கொள்ளலாகும். காவிரிப்பூம்பட்டினத்தினை ஆராய்ச்சி செய்வதற்கு அமைந்த நிலப்பரப்பும் இதுவேயாகும்.

இவ்வெல்லைகளுக்குட்பட்ட ஊர்களில், திருச்சாயாவனம், திருவெண்காடு, கடற்கரை - திருப்பல்லவனீச்சரம், திருவலம் புரம் ஆகிய பாடல்பெற்ற சிவத் தலங்கள் குறிப்பிடத்தக்கன வாகும்.

திருவெண்காட்டின் பகுதியாகிய மணிக்கிராமம், சங்க காலம் முதற்கொண்டு கடல்வணிகச் செல்வரின் வாழ்க்கைக் குரிய நகராகும்.

மேலப் பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம், மேலையூர், சம் பாபதி, அம்மன்கோயில் ஆகிய எல்லைகட்குட்பட்ட ஊர்கள் வரலாற்றுச் சுவடுடைய பழைய இடங்களாகும்.

மற்றும், உட்பகுதியிலுள்ள, காட்டுப்பள்ளி, கீழையூர், மேலையூர், செம்பறைப்பாளையம், ஏராம்பாளையம் ஆகிய இடங்களும் குறிப்பிடத்தக்கனவாகும்.

பழமைச் சான்றுகள்

காவிரிபுகும் பட்டினம் அக்கால மக்கள் வழக்கிலேயே 'புகும்' என்ற சொல்லொலி நீட்டொலியாகிப் 'பூம்' என்று திரிந்துள்ளமை அறியத்தகும்.

இந்நகரின் பழமையினை மிக விரிவாகச் சிலப்பதிகாரம், பட்டினப்பாலை, மணிமேகலை ஆகிய நூல்களின் வாயிலாக முறையே இளங்கோ அடிகளும், கடியலூர் உருத்திரங்கண்ணனாரும், சாத்தனாரும் காட்டியுள்ளார்கள். அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, முத்தொள்ளாயிரம், தேவாரங்கள், திருத்தொண்டர் புராணம், நந்திக்கலம்பகம் ஆகிய நூல்களும் இந்நகரைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன.

கிருத்து பிறப்பு ஆண்டினை ஒட்டிய நூற்றாண்டில் எழுந்த (1) பெரிப்ளஸ் கடற்பயணநூல், (2) தாலமி எழுதிய நிலநூல், (3) பிளினி எழுதிய வரலாற்றுக் குறிப்பு நூல் - ஆகியவைகள் வெளிநாட்டவரின் குறிப்புச் சான்றுகளாக உள்ளன.

சாயாவனம், திருவெண்காடு, திருப்பல்லவனீச்சரம், திருச்சாய்க்காடு, திருவாக்கூர், திருநாங்கூர் ஆகிய தலங்களிலுள்ள கற்கோயில்களில் பிற்காலச் சோழமன்னர்கள், சோழநாட்டை அவ்வப்போது கைப்பற்றிய பாண்டிய மன்னர்கள், பின்னர்த் தொடர்ந்த நாயக்க மராட்டிய மன்னர்கள் ஆகியோர் அறநிவந்தங்கள் செய்து பொறித்து வைத்த கல்வெட்டுக்களில் காவிரிப்பூம்பட்டினம் குறிப்பிடப்பட்டுள்ளது.

சைவ சமய குரவர்களான ஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருப்பல்லவனீச்சரம், திருச்சாய்க்காடு ஆகிய தலங்களைப் பாடும்போது புகார்நகரைப் பட்டினம் என்ற பெயரால் பொதுச்சிறப்புடனும் குறித்துள்ளார்கள்.

சம்பந்தர்:

''பழியிலார்கள் பயில் புகாரிற் பல்லவனீச்சரம்''

''பங்கமில்லார் பயில் புகாரிற் பல்லவனீச்சரம்''

''பட்டினத்துறைப் பல்லவனீச்சரம்''

''வாய்த்த மாளிகைசூழ் தருவண்புகார் மாடே
பூத்தவாவிகள் சூழ்ந்து பொலிந்த சாய்க்காடே''
''பூம்புகார்ச் சாய்க்காடே பதியாகவுடையான்''
''காவிரிப்பூம்பட்டினத்துச் சாய்க்காடார்''

அப்பர்:

''மத்த யானையின் கோடும்
வண்பீலியும் வாரித்
தத்துநீர் பொன்னி
சாகரமேவு சாய்க்காடு''

(காவிரி கடலில் கூடுமிடத்திலுள்ள சாய்க்காடு)

திருத்தொண்டர் புராணத்தில் கூறப்பெறும் இயற்பகை நாயனார் புகழ்பெற்ற புகார் நகர வணிகர்வழியினர் என்பதைச் சேக்கிழார்,

''நன்னெடும் பெருந்தீர்த்த முன்னுடைய
நலஞ்சிறந்தது வளம்புகார் நகரம்''

என்று பாடியுள்ளார்.

கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் இராசராசசன் ஆட்சியில், ''ராஜேந்திரசிங்க வளநாட்டு நாங்கூர் நாட்டு காவிரிப்பூம் பட்டினம்'' என்றும், வீரராசேந்திரன் ஆட்சியில், ''ராஜாதிராஜ வளநாட்டு நாங்கூர் நாட்டு காவிரிப்பூம்பட்டினம்'' என்றும், திருவெண்காடு, திருச்சாய்க்காடு ஆகிய பூம்புகாரைச் சார்ந்த ஊர்களிலுள்ள கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

நாங்கூர் பூம்புகாரின் வடக்கு எல்லையைச் சார்ந்துள்ள பழமையான வைணவத்தலமாகும்.

எம் மண்டலமும் கொண்டருளிய சுந்தரபாண்டியன் சோழ நாட்டுத் திருக்களர்கோயிலில் வெட்டுவித்த கல்வெட்டில்,

''எழுபத்தொன்பது வளநாட்டுப்
பதினெண்பூமிப் பூம்புகார்''

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சிறு கல்வெட்டுப்பகுதியால் கி.பி. 13 ஆம் நூற்றாண்டளவில் சோழவளநாடு 79-வளநாடு

களை உடையதாக இருந்ததோடு, பதினெண்பூமி என்று சிறப்புடன் கல்வெட்டுகள் சுட்டும் வணிகக் குழுவினுக் கமைந்த இருப்பிடங்களுள் முதன்மை பெற்றதாகவும் இருந்துள்ள மேன்மை புலனாகின்றது.

விசயநகர மன்னர்கள் தஞ்சை மாவட்டத்தை ஆட்சிசெய்த போது காவிரிப்பூம்பட்டினம் சாய்க்காட்டுச்சீமையுள் அடங்கிய சிறு பகுதியாகிவிட்டது. இக்காலம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டாகும்.

"சாய்க்காட்டுக்சீர்மை காவிரிப்பூம்பட்டினம்" என்பது - பல்லவனீச்சரத்திலுள்ள கல்வெட்டு.

தஞ்சை மராட்டியர் ஆட்சியில், திருச் "சாய்க்காட்டுச்சீமை, காவேரிப்பட்டணமாகாணத்து காவேரிப்பட்டணம்" என்ற பெயரால் பிழையுடன் குறிக்கப்பட்டுள்ளது.

பட்டினம் — கடற்கரைவளம் பெற்ற ஊர்.

பட்டணம் – உள்நாட்டில் ஆற்றங்கரைவளம் பெற்ற ஊர்.

திருக்கடவூர்ச் சிவன் கோயில் கல்வெட்டொன்றில், திருக்கடவூர்க் கோயிலிலுள்ள சுவாமிகட்கு அணிவிக்கப்பெறும் விலையுயர்ந்த அணிகலன்களையும், நிவேதனப்பாத்திரங்களையும் பாதுகாக்கக் காவிரிப்பூம்பட்டினத்து மக்களை அரசு அமைத்துள்ள செய்தி கூறப்பட்டுள்ளது. இக்காலம் கி.பி. 16 அல்லது 17 ஆம் நூற்றாண்டாகும்.

இவ்வாறான பிற்காலக் கல்வெட்டுச் செய்திகளால் காவிரிப்பூம்பட்டினம் கி.பி. 17ஆம் நூற்றாண்டளவிலும், அவ்வப்போது ஆட்சிசெய்த சோழர், பாண்டியர், நாயக்கர் மராட்டியர் ஆகிய மன்னர்களின் கவனத்திற்குரிய ஊராகவே இருந்து, பின்னர் நிலைகுலைந்துள்ளது என்பது புலனாகின்றது.

கல்விவட்டில் புகார்

பூம்புகார் நகரம் முழுவதும் "கடல்வயிறு புக்கது" என்று மணிமேகலை ஆசிரியர் சாத்தனார் கூறியுள்ளார்.[1]

---

1. காதை - 25, "பலர்தொழு பாத்திரம் கையில் ஏந்திய, மடவரல், நல்லாய், நின்தன் மாநகர் கடல்வயிறு புக்கது காரணம் கேளாய்"

மேலே கடல் ஆய்வுவழியும், தரை ஆய்வு வழியும் யான் நேரிற்கண்ட சான்றுகளினால் சாத்தனார் கூறியகருத்து ஆர்வத்தின் மிகுதிபற்றிய தென்பதனை இலக்கிய ஆய்வாள ரறிவர்.

எனவே, கடற்கோளிற்கு எஞ்சிய நகரம் எவ்வெக் காலங்களில் அரசுகள் வழி ஆட்சி பெற்றிருந்தது என்பதுடன், ஆற்றினால் அழிவு பெறுவதாயிற்று என்பதனையும் கல்வெட்டுகள் தரும் சான்றுகளைக் கொண்டு குறிப்பிடலாகும்.

ஆளவந்த சோழபுரம்

புகார் நகரின் கிழக்குப்பகுதி கடலுக்கு இரையாகி மறைந்த போது, மேற்குப்பகுதி பல காலங்களில் சூராவளிக் காற்றுடன் தொடர்ந்த காவிரியின் கொடிய வெள்ளப் பெருக்கிற்கு இலக்காகிச் சிதைந்து மணல்மேடிட்டும் அரித்துப் பள்ளமிட்டும் கிடந்த நிலையில், எஞ்சிய மக்கள் மீண்டும் ஆங்காங்கே இடங்கண்டு வாழ்ந்துள்ளனர்.

புகழ்பெற்ற சோழரின் துறைமுகப்பட்டினமாகவும், தலை நகராகவும் இருந்து அழிந்த பூம்புகார், மீண்டும் ஓரளவு உருவாக்கம் கொள்ள, கி.பி. 12 - ஆம் நூற்றாண்டில் குலோத்துங்கசோழன் ஆட்சியில், முயற்சி நிகழ்ந்துள்ள தென்பதனை 'ஆளவந்தசோழபுரம்' என்ற பெயர் மாற்றத் துடன் ஓர் ஊர் அங்கு ஏற்படுத்தப்பட்டிருந்த செய்தியால் அறியமுடிகின்றது. இப்பகுதி இன்றுள்ள மேலையூரைச் சார்ந்திருந்ததாகக் கருத முடிகின்றது.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டில் வல்லரசை நிறுவிய, எம்மண்டலமும் கொண்டருளிய சுந்தரபாண்டிய தேவரின் ஆட்சியில் சோழநாடும் இருந்தபோது, திருக்களர் என்னும் ஊரிலுள்ள கோயிலில் வெட்டுவித்த கல்வெட்டொன்று பூம்புகாரைப் பற்றிக் கூறுகின்றது. அப்பொழுது உருவாகி இருந்த பூம்புகார்,

"எழுபத்தொன்பது வளநாட்டுப்
பதினெண்பூமிப் பூம்புகார்"

என்று கூறப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுக் குறிப்பால், பூம்புகார் என்னும் ஊர்ப்பரப்பு வாழவந்தசோழபுரம் உள்ளிட்ட பலவுட் பிரிவுகளாகும் ஊர்களுடன் அமைந்த வளநாடாகவும், வணிகரின் சிறப்பிடங்களில் ஒன்றாகவும் அமைந்திருந்தது புலனாகின்றது.

தமிழகத்தில் நிலவிய மாபெரும் வணிகக்கூட்டத்தினர் அமைந்திருந்த பதினெட்டுத் தடங்களில், பூம்புகார் மணிக்கிராமம் ஒன்றாக இருந்ததினாலேயே, கல்வெட்டில் பதினெண்பூமி குறிக்கப்பட்டுள்ளது.

அகழாய்வுச் சான்றுகள்

சாயாவனக் கோயிலுக்கு முன்னர்த் தெருவின் வடபுறத்தில் இருந்த ஓட்டுக்கூரைக்கட்டிட வீடுகளில் ஒன்றின் உரிமையாளர் தியாகராசன் என்பவராவர். நான் 1946ல் சம்பாபதி அம்மன் கோயிலைப் புதர்களுக்கு இடையே கண்டு நிழற்படம் எடுத்த போது என் செயலை வேடிக்கை பார்த்ததைத் தொடர்ந்து நண்பரான அவ்விளைஞர், அவர் வீட்டின் கொல்லையில் மாட்டுக்கொட்டகைக்கு அமைத்துக் கொண்ட ஒரு சுவர், பெரிய அளவிலான செங்கற்களால் கட்டப்பட்ட பழமையுடன் இருக்கின்றது என்று தெவிரிக்க, அவருடன் சென்று கண்டு ஆய்வு செய்து அதன் தொன்மையினை அறிந்தேன். புதையுண்ட அக்கற்சுவரிடப்பரப்பினை மத்தியத்தொல்பொருள் ஆய்வுத் துறையினர் மிக்க செலவில் 1960-ல் மேற்கொண்டு அகழாய்வு செய்தனர். அடிமட்ட அளவில் காணப்பெற்ற கட்டிடம் பழைய புத்த விகாரத்தின் அடிப்பகுதியாகும் என்று அவர் அறிவித்தனர். இடத்தின் உரிமையாளராக இருந்த தியாகராசன் மாதவி மன்றம் என்ற ஒரு நிறுவனத்தினை மேலையூரில் தோற்றுவித்து இன்றும் வளர்த்து வருகின்றார்.

தொடர்ந்து, காவிரிப்பூம் பட்டினத்தை, டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தமிழகமுதல்வராக இருந்த போது, கி.பி, 1973-ல் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பொறுப்

புடன் மேற்கொண்ட ஆய்வின் போது, சம்பாபதி அம்மன் கோயில் சுவரின் அடிப்படையினை அகழ்ந்தும் பார்த்தனர்.

அடிகளும் - நூலும்

வரலாற்றை, கண்ணகி கோவலன் வாழ்வியலில் கண்டு, நிகழ்ச்சிக்குரிய இடங்களையும் மக்களையும் ஏற்புற அமைத்துக்காட்டி, பண்டைத்தமிழக நாகரிக வளத்தினையும், சமயவுணர்வினையும் நடுநிலையோடு சீர்தூக்கி அளவிட்டுக் காப்பியமாக உருவாக்கித்தந்த அறவோர் இளங்கோவடிகளாவர்.

அடிகள் சேரர் குலத்தோன்றல்களுள் ஒருவரோ, அன்றித் தமிழகச் சான்றோர்களுள் ஒருவரோ, அதுபற்றிய ஆய்வு இன்றியமையாததொன்றன்று.

ஆனால், அடிகள் தமிழுக்கென, தமிழ் மக்களுக்கென, தமிழகக் கலைகளுக்கென, சிறப்பாக வருங்காலத்தமிழகத்திற் கென்றே ஆக்கித் தந்த அழியாப் புகழ்பெறு அற்புதக் காவியப் பூங்காவாம் சிலப்பதிகாரம், நின்று பண்டைத் தமிழக மக்கள் வாழ்வியலை அளவிட்டு அறுதியிட்டு விளக்கமாக அறிவிக்கும் அளப்பறும் வளம்பெறு வரலாற்றுக் கலைக்களஞ்சியமாகும்.

கள ஆய்வு

காவிரிப்பூம்பட்டினத்தைக் கடற்கரை முதலாக நான் ஆராய்ச்சி செய்தபோது, நெடிய கடற்கரையின் அலைவாய் விளிம்புகளில் களிமண் செறிவுப் பகுதிகள் ஆங்காங்கே காணப்பட்டன அவைகளில் சுவர்போன்று நெடிதாக இருந்த களிமண் அடைவுகளை அகழ்ந்து ஆராய்ந்தபோது, அவற்றில் நல்ல நீரில்வாழும் நத்தைக் கூடுகளும், சிறு சங்குகளும் இருந்ததுடன், பழம்பொருள் ஆராய்ச்சியாளர் பகுத்துக்காட்டியுள்ள மிகப்பழைய காலத்குரிய பானை ஓடுகளும் கூடி இருந்தன.

தொடர்ந்து அப்பகுதியில் வாழ்திருந்த மீனவருடன் நல்லுரையாடிய போது, கரைப்பரப்பில் அவர்கள் மீனுணக்கலைப் பெருஞ் சால்களில் வைத்துப்பதன் செய்வதற்குப் புதைக்கும் போது, ஒருசில இடங்களில் நிலத்தடியில் செங்கற்சுவர்ப்

பகுதிகளும், உறைக்கேணிகளும் இருந்ததமையைக் காட்டினர். செங்கற்கள் அரிக்கன் மேட்டில் கிடைக்கும் கற்களைவிட அளவில் சிறிது தடிப்பாக இருந்தன.

பேரீச்சம் பழக்காரனிடம் செல்லாத செப்புக்காசுகளைக் கொடுத்துச் சிறிதளவு பழங்களைப் பெற்று மகிழ்ந்த பரதவச் சிறார்களிடமும் சிறுமியரிடமும் கால் ரூபா, அரைரூபா கொடுத்து நான்பெற்ற களிம்பேறிய செப்பு நாணயங்கள், சோழர்காலத்தனவாகவும் சங்ககாலத்தில் பூம்புகாரில் புழக்கத் திலிருந்த ரோமானிய நாணயங்களாகவும் இருந்ததமையை யான் அறிந்தபோது பெருமகிழ்ச்சியடைந்தேன்.

மற்றும், எனது ஆய்வுச் செயலுக்கு அவ்வப்போது நான் கொடுத்த சிறு ஊதியத்தினைப் பெற்று நண்பரான அப்பகுதி யினர், பூம்புகார் கடற்கரை நெடுகிலும், உள்புறத்திலும், ஆற்றுக் கரைத்தடத்திலும், ஆற்றில் நீர்பெருகிவரும் காலத் திலும், பெருமழைபெய்யும் காலத்திலும். தரையை அரித்து நீர் அறுத்தோடும் தடங்களில் பழைய கட்டடச் சிதைவுகள் காணப்பட்டிருந்தமையை அகழ்ந்து காட்டினர். எனது. ஆராய்ச்சிக்குக் கிடைத்த இவ்வருமைச் சான்றுகளால் பூம்புகார் கடற்கோளினால் சிதைக்கப்பட்டுள்ளதனையும் அறிய முடிந்தது.

மேலையூரிற்கும் தெற்கே, இப்பொழுது உள்ள காவிரி யாற்றின் கரைத்தடத்தில், கடலிலிருந்துவரும் சிறு அம்பி களையும், வத்தல் என்னும் ஓடங்களையும் பிணைத்து நிறுத்தும் செங்கற்கட்டிடத்துறையொன்று பழமையானதாகவுள்ளதைப் பரதவர் காட்டியதனால் அறிந்தேன். அச்செங்கல்துறையின் அமைப்பு காட்சிக்குப் புதுமையும் வரலாற்றிற்குப் பழமையும் பொருந்தியதாக இருந்தது. காவிரியின் புகார்த் துறை வழியே உள்ளகத்தில் இறக்குமதிக்கமைந்த கழார்த் துறையின் ஒரு பகுதியாகவே இக்கட்டிடம் இருந்திருக்கலா மென்று நான் கருதலானேன்.

புதைந்த வரலாற்றில் பூம்புகார்

கரையில் நிலவகட்டில் அகழ்வாராய்ச்சியினாற் கண்ட அழிவுச் சின்னங்களுடன் கடலினடியிலிருந்து எடுக்கப்பட்ட

செங்கற்கள், சிறு பானைஓடுகள் ஆகியவற்றை ஒருங்கே வைத்துச் சிந்தித்தேன். புகார் நகரின் அழிவுத் தோற்றம் ஒருவாறு புலனாகியது.

கடற்கோளினாலேயே புகார் அழிந்ததென்பது இலக்கியச் சான்றாகும். அங்ஙனமாயின் கரையில் சில கல் தொலைவு அளவிலும் பழைய நகரப்பகுதிகள் சிதைந்து புதையுண்டிருப்பது ஏன் என்ற வினா எழுந்தது.

விடாது பெய்யும் பெருமழையினால் ஆற்றில் வெள்ளமும், வலிய புயற் காற்றின் அழுத்தத்தினால் கடலில் கொந்தளிப்பும் ஒரே காலத்தில் ஏற்படுவது இயற்கையின் அழிவுச் சீற்றங்கள் என்பர் சூழலநிலைக் கணிப்பாளர்.

இத்தகையதான அழிவுச் செயல்கள் ஒரே காலத்தில் நிகழ்ந்ததினாலோ, காலம் மாறி மாறி ஏற்பட்டதினாலோ, பூம்புகார் சிதைந்து தரையிற் புதைந்தும் கடலுள் மறைந்தும் போயிற்று என்னும் விடை மனத்தகத்தில் விளைந்தது.

சிந்து நதியின் வெள்ளத்தால் மொகஞ்சதாரோ, ஆரப்ப நகரங்களும் காவிரியின் வெள்ளத்தால் சோழரின் பழையாறைப்பெருநகரும், தாமிரபரணி ஆற்றின் குறையாத பெரு வெள்ளத்தால் ஆதிச்ச நல்லூரும் புதைந்து மண்ணுள் மறைந்து மண்மேடிட்டுப்போன வரலாற்றில் காவிரிப் பூம்பட்டினமும் இணைந்து நின்ற உண்மை புலனாகிறது.

கடற்கரையிலுள்ள காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து அப் பெருநகரின் பழமையான நிலவளாக எல்லையினை முன்னர்க் காட்டியுள்ளேன்.

அவ்வெல்லைக்குட்பட்டதாகவுள்ள ஊர்களிலும், மேற்குப் புறமுள்ள திருஆக்கூரிலும் ஆங்காங்கே பனையளவு செயற்கையாக உயர்ந்து பரந்துள்ள தூயமணல்மேடுகள் அழகுடன் நிற்கின்றன.

இயற்கையான வண்டல் மண்ணிட்ட தரையின் மேல் காவிரிப்பூம்பட்டினத்தைச் சூழ்ந்தும், தொடர்ந்தும் உள்ளகத்தும் பத்துக்கல் பரப்பளவில் மணல்மேடுகள் உண்டானமை எப்படி?

அவை மாபெரும் ஆற்றுவெள்ளப்பெருக்கினால் அமைக்கப் பட்ட இலச்சினைகள் அல்லவா? இவற்றாலும் காவிரிப்பூம் பட்டினமும் காவிரியின் கழார்த்துறையும் அழிந்து புதைந்து போன உண்மைச் சான்றினை வெளிப்படையாக இன்றும் நேரிற்கண்டு உணரலாமன்றோ! மற்றும், காவிரிப்பூம்பட்டின எல்லைக்குள் தென் பகுதியிலுள்ள மேலப்பெரும்பள்ளம், கீழப் பெரும்பள்ளம் ஆகிய இடங்கள், ஆற்று வெள்ளப்பெருக் காலிட்ட மடுக்களாகும். இப்பள்ளத்தாக்கிடங்கட்கு மக்கள் சுட்டிய பழைய பெயர்களே மேலே குறிக்கப்பட்டுள்ளன. வெள்ளப் பெருக்குகள் எவ்வெக் காலங்களில் ஏற்பட்டுள்ளன என்பதைக் காவிரியாற்றின் தடங்காணும் ஆய்வுப் பகுதியில் குறிப்பதற்காகும்.

தில்லையாடி, ஆக்கூர் ஆகிய ஊர்களின் நடுவிலும் புறத் தும் குன்றன்ன மணல்மேடுகள் இன்றும் உள்ளன. மயிலாடு துறைக்குத் தெற்கே அன்று காவிரி வெள்ளம் இட்ட மணல் மேட்டில் மீண்டும் தோன்றிய ஊர் 'மணல்மேடு' என்ற பெய ரால் இன்றும் அறியப்படுகின்றது.

பனையளவு: 40—60 அடிவரையில் உள்ள உயரம்.

மற்றும், கடலில் அலைப்பகுதிக்கு அப்பால், கரையில் நிலவ கட்டில் காணப்படுவதைப் போன்ற செங்கற்சுவர்கள் காணப் படுவதையும், கரையிலிருந்து ஐந்து கல்தொலைவு வரையில் கடல் ஆட்டமின்றி இருப்பதையும் பரதவர்களின் அனுபவத்தின் மூலமாக அறிய முடிந்தது.

கடலில் மீன்பிடிக்கும் முறைகளில் ஒன்றாகிய பெருவலை யிடுங்கால், கடலிலிருந்து கரையை நோக்கிப் படிந்தநிலையில் இழுத்துவரும் வலையின் அப்பகுதியாகும் பொறிவலைப் பகுதியை, நீருள் மூழ்கி இறுக்கும் 'முழுக்காளி' என்னும் சிறப் புப் பெயருடைய முதியவர், தமது அனுபவத்தில் கடலுள் கண்ட பொருள்களைப்பற்றிக் கதையாகவே கூறினார். பொறு மையுடன் கேட்ட அக்கதையினுள் புகார் நகரின் கட்டிடச் சின்னங்கள் பொதிந்து நின்றன. அவற்றை நேரிற்காணும் ஆர்வம் எழுந்தது.

ஏழு மரங்கள் பிணைத்த கட்டுமரத்தில் ஒருநாள் அவர்களுடன் கடலில் பணம் செய்தேன். ஓரொருகால் கரை தெரிந்தும் மறைந்நும் காட்சிதரும் தொலைவில் கட்டுமரம் நின்றது. முழுக்காளி ஒரு கயிற்றின் வழியே கடலில் குதித்து மூழ்கிச் சிறிது நேரத்தில் பெரிய செங்கல் ஒன்றையும் ஒரு சில பானைச் சிதிலங்களையும் மேலே கொண்டுவந்தார். அவற்றை நேரிற் பார்த்த அளவில், வியப்பு விளைந்தது; கடல்கொண்ட பூம்புகாரின் சிறுபகுதியினைக் கண்ட மகிழ்ச்சியும் உண்டாயிற்று. மேல் காப்பியங்கண்ட இடங்களையும் ஆராய்ச்சி வழியே காணும் ஆர்வமும் தொடர்ந்தது.

காவிரிக் கரையில்

மதுரைக்கு வழிகள்

கடல் வணிகத்தால் சிறந்திருந்த சோழரின் காவிரிப்பூம் பட்டினத்திற்கும், வணிகவளத்தால் விளங்கிநின்ற மாட மதுரைக்கும் வணிகத்துறைக்கமைந்த தரைவழிகள் இணைந் திருப்பது இயல்பேயாகும்.

அவ்வழிகள் பெரும்பான்மையும் ஆறுகளைத் தாண்டிச் செல்லும் தொல்லையின்றி, இயன்ற அளவில் கரைவழி யாகவே தொடர்ந்து, வேண்டிய இடத்தில் ஆறுகளைக் கடந்து செல்லவும் ஏற்புடையனவாக இருந்திருக்கின்றன.

இதனை, சைவசமய குரவர்கள் தலங்கள் தோறும் சென்று திருமுறை ஓதிய முறையினை விளக்கமாகக் கூறும் பெரியபுராணச் செய்திகளைக் கொண்டும் நன்கு அறிய முடி கின்றது.

தொன்மத்தில் வரலாற்று வழிகள்

தொன்மம் பழமையினைப் பல்வேறுபட்ட நிலைகளில் தொகுத்துக் காட்டும்நூலாகும். பெரிய புராண ஆசிரிய ராகிய சேக்கிழார், பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குரிய சோழராட்சியில் விளங்கிய அமைச்சராவர். அமைச்சர் பதவி பெற்ற அப்பெரியார், தமது நாட்டின் அமைப்பியல்புடன் அண்டை நாடுகளின் அமைப்பினையும் நாடுவிட்டு நாடு செல்லும் வணிகச் சாத்தின் வழிகளையும் நன்கு உணர்ந்தே இருக்கவேண்டும்.

அவர் தமது அனுபவத்திற்கண்ட நாட்டுப் பெருவழி களுடன், வரலாற்றுண்மைகள், கல்வெட்டு, செப்பேடுகளின்

செய்திகள் ஆகியவற்றையும் அடிப்படையாகக் கொண்டு, நூல் செய்துள்ளாரென்பதனை ஆராய்ச்சியாளர்கள் உணர்த்து வதைக் கொண்டு உறுதிசெய்ய இயலுகின்றது.

சேக்கிழார் தமது காலத்திற்கு ஐந்நூறு ஆண்டுகட்கு முன் னர் வாழ்ந்த ஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் ஆகிய அடியார் களின் நிகழ்ச்சிக்குரிய நாட்டுவழிகளை அளவிட்டுக் கூறி யுள்ளமைக்கு, அவர் காலத்திலும் அவ்வழிகள் புழக்கத்தில் இருந்திருக்கவேண்டுமென்னும் குறிப்புப் புலனாகின்றது.

சேக்கிழார் கூறியுள்ள நாட்டுப்பெருவழிகளில் சில இன்றும் இருப்பதைக் கள ஆய்வின் வழிக் காணும்போது, இளங்கோ வடிகள் குறித்த நாட்டுப் பெருவழிகளுள் ஓரளவாவது சேக் கிழார் காலத்தில் இல்லாமல் இருப்பதற்கில்லை என்ற ஆராய்ச்சித் துணிவும் பிறக்கின்றது.

இம்முறையிலும், பிற வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டும் பண்டைத் தமிழகப் பெருவழிகளைத் திட்டமுடன் குறிபபோமாயின், சோழநாட்டின் கிழக்கு எல்லையாகும் கடற்கரைப் பட்டினங்களிலிருந்து மேற்கே தொடர்ந்து நெடி தாகச் செல்லும் வழிகளுள் தலைமையானதொன்று, காவிரி யின் வடகரை வழியாகச் சென்று, சோழரின் முதிய தலை நகராகிய உறையூரில் எல்லையிட்டு, அங்கிருந்தும் இரண்டாகப் பிரிந்திருக்கின்றமைபுலனாகும். ஒன்று நேர் மேற்கிட்டுச்சென்று, பின்னர் வடமேற்காகத் தொடர்ந்து கருவூர் வழியாகச் சென்று குட மலையைக் கடந்து மலைநாட்டின் தலைநகரங்களுள் ஒன்றான கொடுங்கோளூரை அடைந்து நின்றது.

மற்றொரு பிரிவுச்சாலை உறையூருக்குத் தெற்கே காடும் கரம்பும் தரிசுமாகப் படர்ந்து நின்ற அகலிடத்திடையே அருகிச் சென்று, கொடும்பாளூரில் கூடியநிலையில், அவ்வூரி னின்றும் தெற்குநோக்கியதாகப் பல பிரிவுகளாகக் கிளைத்துத் தொடர்ந்து, மதுரையை நோக்கிய குறியாகவே சென்று, இடையில் கொடுங்குன்றமென்னும் பிரான்மலையைச் சூழ்ந்த நிலையில் மதுரைக்குச் செல்லும் பெருவழியிற் கூடியும், குறுக் கிட்டுப் பிரிந்தும் மதுரைமாநகரை அடைந்துள்ளது.

கோவலன் குறித்த நெறி

கண்ணகியும் கோவலனும் கவுந்தியடிகளுடன் மேற்கொண்ட காவிரிக் கரைவழியைப்பற்றி ஆராய்வோமானால், மேலே குறித்த கரைவழி ஊரும் நாடும் நிலவளமும் இடையிட்டுச் செல்லும் மருதநிலப் பாங்கினை ஓரளவு பெற்றதாகவும் மக்கட் புழக்கம் உடையதாகவும் இருந்திருப்பது அமைகின்றது.

இக்காரணம் கொண்டே செல்வவளத்தில் திளைத்தும் தன்னால் சீரழிந்தும் நின்ற கண்ணகியாருடன் தனித்துப் புறப்பட்ட கோவலன், காவிரிக்கரைவழி மதுரைக்குச் செல்லுதற்குச் சுற்றுவழியாக இருப்பினும், துன்பம் இல்லாத நெறி என்பதை உணர்ந்தே வழிக்கொண்டுள்ளானென்பதனை, சிலப்பதிகாரச் செய்திகளைச் கொண்டு நாம் அறிந்துகொள்ளலாம்,

சோழநாட்டிலின்றும் மதுரைக்குச் செல்லும் மற்றொரு வழி, தென்மேற்கே நோக்கிச் சென்று, காடு கரம்பும் பாலையும் கடந்து, பிரான் மலையை அடைந்து, பின்னர்த் திருமாலிருஞ்சோலை என்னும் திருமோகூர் வழியே வையையாற்றின் திருமருதத்தண்துறைக்குச் சென்று மதுரையை அடைந்திருந்தது.

இனிக் காப்பியம் குறிக்கும் காவிரிக்கரை வழியினை இன்றுள்ள இயற்கைச் சூழலுடன் காண்போம்.

கோவலன் மதுரையைக் குறித்தது ஏன்?

காவிரிப்பூம்பட்டினத்தின் மேற்குப்புறத்தே காதவழியளவில், பொழிற் பள்ளியகத்திருந்த சமணப் பெண் துறவியார் கவுந்தியடிகளைக் கண்டு இருவரும் வணங்குகின்றனர். இரவு கழிவதற்கு முன்னர் இருவரும் நகர்நீங்கி வந்ததென்? என்ற வினாவிற்கு, ‘மதுரை மூதூர் வரைபொருள் வேட்கையேன்’ என்று விடை மொழி பகருகின்றான் கோவலன். இழந்த பொருளை ஈட்டுதற்கு மதுரையைக் கோவலன் இலக்காக்கிக் கொண்டதேன்? என்னும் வினாவிற்குப் புதிய பார்வையிட்டுப் பொருத்தம் கூறலாகும்.

காவிரிப்பூம்பட்டினம் மக்கள் வாழ்க்கைக்குரிய எல்லா வளங்களும் மிகுதியாகப் பெற்றிருந்ததோடு வணிகத்துறையிலும் சிறந்திருந்ததைப் போன்றே, அதே காலத்தில் பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரை மாநகர் எல்லா வளங்களும் நிறைந்த வணிகப் பெருநகராகவும் இருந்திருக்கின்றது.

பூம்புகாருக்குத் தெற்கே உள்ள காரைக்காலில் மனை வாழ்க்கை மேவிய புனிதவதியாரின் கணவன் தனதத்தன், தன் மனைவியைத் தெய்வமெனக் கருதியபின்னர்ப் பிரிந்து சென்று, வாணிகத் துறையில் வாழ்க்கை நிறுவிய இடம் மதுரை மாநகர் என்பதே பெரியபுராணம் தரும் குறிப்பாகும். இச்செய்தி காலத்தால் பிற்பட்டதெனினும் கோவலன் கருதிய குறிப்பிற்கு இலக்காக வணிகத்துறையில் வளம்பெற்றிருந்த பெருநகர் மதுரை என்பதனை இதனால் அறிய முடிகின்றது.

இளங்கோவடிகளும், மாங்குடி மருதனாரும் மதுரையின் வணிகத்துறைகளைச் சிறப்பிக்குங்கால், பொன்னும் மணியும் விலைபகரப்பட்ட நிலையினையே மிகுதியாகவும் விளக்கமாகவும் எடுத்துரைக்கின்றனர்.

இதனால், மதிப்புள்ள பொன்னணி வகைகளும் இரத்தினங்களும் விலை போகுமிடம் மதுரையென்பது, பொதுவான வணிகச் செய்தியாக அன்று தமிழக வணிகத்துறையில் நிலவியுள்ளதென்பது அமையும்.

இவ்வியல்பினை, வணிகத்தில் வழிவழி சிறந்து வந்த மாசாத்துவானின் மகனாகிய கோவலனும் நன்கு அறிந்திருந்தமையினாலேயே, பொன்னும் மணியும் புனைந்திழைத்ததும் இரத்தினப்பரல் உடையதும் மிகுந்த மதிப்புடையதுமாகிய கண்ணகியாரின் காற்சிலம்புகளை விற்பதற்கு ஏற்ற இடம் மதுரையே என்பதனை அறுதியிட்ட அளவில், அப்பொருளையே வாணிபம் செய்ய முதற்பொருளாக்கவும் திட்டமிட்டானென்பதனை,

"சிலம்பு முதலாகச் சென்ற கலனோ
டுலந்த பொருளீட்டுத லுற்றேன்"

என்று, கண்ணகியாரிடம் கவலையோடுரைத்தானென்று அடிகள் சித்தரிக்கின்றார். இஃது, மக்கள் மனப்பாங்கின் இயல்பொடு தெளிவுறுத்துவதோர் கருத்தாகவும், மானவுணர்வு பெற்ற கோவலன் தனது பெருஞ்சுற்றத்தினின்றும் நீங்கி, மறைந்து வாழ்வதற்கும் நெடுந்தொலைவிலுள்ள மதுரை ஏற்புடைய தாகவும் அமைந்தது.

பேதமைக் காட்சி

ஏடலர் கோதாய் எழுகென்ற அளவில், பெண்மைக்குரிய முன்னேற்பாட்டுடன் உடன்புறப்பட்ட கண்ணகியுடன் வைகறைப் பொழுதில் புகார் நகரைவிட்டு மதுரைக்குப் புறப்பட்ட கோவலன், காவலர் அறியாது இடைகழி வாயிலைக் கடந்தான். பின்னர், இருவரும் அங்கிருந்த திருமால்கோயிலை வலஞ்செய்து, புத்தவிகாரங்கள் ஏழின் இடைநெறியே சென்று, அப்பாலிருந்த அருகதேவன் சிலாதலங்களை வலஞ்செய்து வணங்கி, நகரின் பெருவாயிலைக் கடந்து, இலவந்திகை மதிலுக்குப் புறத்தில் சென்று, காவிரியின் வடகரைச் சோலை வழியே ஒரு காத தூரம் நடந்து, ஓர் இளமரக்காவை அடைந்தனர்.

அவ்வளவில் வழி நடந்த களைப்பால் கண்ணகியார் குறுகு உயிர்த்து

“முதிராக் கிளவியின் முள்ளெயி றிலங்க
மதுரை மூதூர் யாதென வினவ”க்

கேட்ட கோவலன் நெஞ்சம் நெகிழ்ந்தான். மனைவியின் மாண்பமைபேதமையினையும், மண்மகளறியா மலரடி நோவ நடந்துவந்ததால் வந்த தளர்ச்சியையும் உணர்ந்தான்; வருந்தினான். ஆயினும் மறைத்து நகைமுகம் காட்டி,

“ஆறைங் காதநம் மகனாட் டும்பர்
நாறைங் கூந்த நணித்து”

என்று. மிக்க தொலைவினை மென்மையாக மறைத்துச் சொல்லுகின்றான். இத்தகையதோர் காட்சியினைத் தொடக்க நிகழ்ச்சி கட்கோர் ஆட்சியாக அடிகள் அமைத்துக்காட்டும் மாட்சிமையினாலேயே, நெஞ்சை அள்ளும் காப்பியமாகச் சிலப்பதிகாரம் சிறந்திருப்பது அறியத்தக்கதாகும்.

காவிரிப்பூம்பட்டினத்திற்கு மேற்கே, ஒரு காதத்தொலைவில் காவிரியின் வடகரையிலிருந்த சோலையில், சமணரின் தவச்சாலை ஒன்று இருந்தது. அங்குக் கவுந்தியடிகள் என்னும் சமணப் பெண்துறவி யொருவர் இருந்தார். கண்ணகியார் கோவலன் ஆகிய இருவரும் அப் பெண்துறவியாரைக் கண்டு வணங்கினர். அத்துறவியார் கோவலனின் மதுரைப் பயணத்தினை அறிந்ததோடு உடன்செல்லும் கண்ணகியாரின் மென்மையினையும் உணர்ந்தார்; காடிடையிட்ட நாடுகள் வழியே நெடுந் தொலைவிலுள்ள மதுரையை அடைவதற்கு அரிதிவள் செவ்வி என்பதுணர்ந்து அருள்பெருகும் உள்ளத்தோடு

"தென்றமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரைக்கு
ஒன்றிய உள்ளம் உடையேன் ஆதலின்
போதுவல் யானும், போதுமின் -"

என்று கூறி, கண்ணகிக்கு உற்ற துணையாகி நடக்கலுற்றார் மூவரும் காவிரியின் வடகரையாக அரங்கம் சென்று உறையூரை அடையும் வழியாகச் சென்றனர். காவிரியின் வளத்தை மேலெழுந்து காட்டுவனபோன்று செழித்துநின்ற மருதநிலத்தின் மாண்பினை ஆங்காங்கே கண்டநிலையில், ஒருநாளளவில் ஒரு காத தூரம் நடந்து கடப்பது என்ற திட்டத்துடன்,

"ஊரிடை யிட்ட நாடுடன் கண்டு
காவதம் அல்லது கடவா ராகி"

மூவரும் நடந்தனர் என்ற அளவில் காப்பியம் காட்டியது காட்டி, மேல் கரை வழியில் கண்ட வரலாற்றிடங்களைப் பற்றிக் கூறுதற்காகும்.

காவிரி தடம் புறண்டான்

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து காவிரியாற்றின் பழைய சுவட்டினை, இன்றுள்ள நிலவியற்கையுடன் வரலாற்றுச் சான்றுகளையும் கொண்டு ஆராய்வோமானால், ஆறு கடலில் புகும் கழார்த்துறையுடன் கூடிய புகுமுகப்பகுதி காலப்போக்கில் இடம் மாறித் தடம்புறண்டு அழிந்து மறைந்துவிட்டதென்பதை **நன்கு அறிய முடிகின்றது.**

இத்தகைய மாறுபாட்டிற்குக் காரணம், ஆற்றின் போக்கிற் கமைந்த திண்மையற்ற கழிமுக வண்டல்மண் தரையியற்கை ஒருபுறச் சான்றாக நிற்பினும், மாரிக்காலத்தில் மிகுமழையால் உண்டாகும் வெள்ளப்பெருக்கே சிறப்புடையதாக இருந்துள்ளது.

கண்ணகியார் அடிச்சுவட்டில் காவிரிக்கரை வழியைக் குறிப் பிட்டு மேற்கு நோக்கித் தொடருவோமானால், ஆற்றின் இயல்பு இன்றுள்ள போக்கில் இருந்திருக்க வியலா தென்பது நன்கு புலனாகின்றது.

இதற்குச் சான்றாக இப்பகுதியில் பூம்புகாரை அடுத்து மேற்புறத்திலுள்ள திருவெண்காடு என்னும் பழமையான ஊரிலுள்ள சிவன்கோயில் கல்வெட்டில், கி.பி. 13-ஆம் நூற்றாண்டில், விக்கிரமபாண்டியத்தேவரால் ஏற்படுத்தப் பெற்ற நிவந்தச் செய்திகளுள்

> "இந்நாயனார் திருநாமத்துக்காணி திருச்
> சிற்றம்பலமுடையான் குறையில், காவேரி
> ஆறு உடைந்து மடுவாய் நீர்நிலை
> ஆன நிலம்" - என்றும்,

அதேகாலத்தில் தோன்றிய மற்றொரு கல்வெட்டில்,

> "சோழமண்டலத்து ராசாதிராசவள
> நாட்டு இரண்டு காவேரி ஆற்றுக்கு
> நடுவுபட்ட ஊர்களில் நகரம் ஆள
> வந்த சோழபுரம்"

என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இச்செய்திகளைக் கொண்டும் காட்சிக்குரிய ஆற்றுப் போக்கின் அமைப்பினைக் கண்டும் சிந்திப்பின், கி.பி. 13 ஆம் நூற்றாண்டிற்கு முன்னர்க் காவிரியாறு கொடிய வெள்ளப்பெருக்கால் தடம்மாறியுள்ளது என்றவுண்மை புலனாகின்றது.

மேலே காவிரியின் வடகரைவழியே தொடருகின்றோம். இருகரையிலுமுள்ள பல சிற்றூர்களையும் சமய குரவர்களாலும் ஆழ்வார்களாலும் பாடப்பெற்ற சைவ வைணவத் தலங் களையும் கண்டு செல்லுகின்றோம். இடையே இன்று குற்றாலம்

என்று பெயர் கூறப்படும் திருத்துருத்தியை அடைகின்றோம். இப்பொழுது இவ்வூர் காவிரியின் தென்கரையில் உள்ளது.

இங்குள்ள சொன்னவாறறிவார் திருக்கோயிலைக் கி. பி. ஏழாவது நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த அப்பரடிகள் பாடும்போது,

> "பொன்னியின் நடுவுதன்னுள்
> பூம்புனல் பொலிந்து தோன்றும் துருத்தி"
> "தூ மணற் றுருத்தி"
> "துண்டத்துத் துருத்தி"

என்றெலாம் குறிப்பிடுகின்றார். கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரரும், இத்தலத்தைக், "காவிரித் துருத்தி" என்று கூறியிருப்பதுடன், துருத்திப் பெருமானையும் வேள்விக்குடியா னையும் ஆற்றிடைக் குறையில் ஒருங்கே கண்டதாகவே பாடி யுள்ளார்.

இரு மருங்கும் ஆறு பிரிந்து செல்ல, இடையே திட்டிட்டு நிற்கும் ஆற்றிடைக்குறையாகும் நிலவொடுக்க நீட்சி 'துருத்தி' என்று குறிப்பிடப் பெற்றுள்ளது.

இவ்வாறு. காவிரியாற்றின் கிளைபிரிவிட முகப்பிலிருந்து உள்ளே துருத்தித் தொடர்ந்த நிலத்தகத்தே, இரண்டு ஆறு களுக்கு நடுவே இருந்த குற்றாலம் என்னும் ஊரும் கோயிலும் இன்று காவிரியின் தென்கரையில் உள்ளன.

இத்தலத்திலுள்ள விக்கிரமசோழன் கல்வெட்டில்,

> "தென்கரை ராஜநாராயண வள
> நாட்டு வீங்கு நீர்த்துருத்தி"

என்று கூறப்பட்டுள்ளது. கி.பி. 12 ஆம் நூற்றாண்டுக்குரிய இக் கல்வெட்டுச் செய்தியால், காவிரியாறு குற்றாலத்திற்கு வட புறம் ஓடியதென்பதுடன், பருவ காலப்புதுநீர் அளவிற்கு மேல் பெருகும்போது - தலைமையாற்றில் பிரிந்திருந்த ஆற்றுக்காலில் நீர்பெருகியோடி, துருத்தி நிலையினை உருவாக்கியும் காட்டி யுளது என்பதனை அறியமுடிகிறது.

இவ்வாறு துருத்தியமைப்பிற்கான கிளைக்காலினை மேற்கு நோக்கியுள்ள இவ்வூர்ச் சிவன் கோயிலுக்கு முன்னர்ப்படிந்துள்ள மணற்பரப்பில் அகழ்ந்து பார்த்தபோது புதையுண்டிருந்த கல் படித்துறையைக் காணமுடிந்தது.

இதனால் கி.பி. 12 ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே காவிரி பிரிந்துள்ள நிலையினை அறியலாகும்.

அடுத்துக் காவிரியின் கரைவழியிலுள்ள திருவிடைமருதூர்ச் சிவன் கோயில் கல்வெட்டொன்று முதல் பராந்தகன் காலத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி. 942 ஆகும். கோயிலுக்கு இறையிலி நிவந்தம் செய்யப்பெற்ற நிலத்திற்கு எல்லை கூறுமிடத்தில்,

"மேல்பாற்கெல்லை பழங்காவேரிக்கும் கிழக்கும்
வடபாற்கெல்லை பழங்காவேரிக்குத் தெற்கும்"

என்று குறிக்கப்பட்டுள்ளது. இச்செய்தியிற் காணும் நிலவெல்லை இரண்டினுக்குக் காவிரியாற்றின் போக்கொன்றே குறிப்பிடப் பட்டுள்ளதால், காவிரியாறு எந்த அளவிற்கு வளைந்து நெளிந்து பாசனக் காய்வாய் போல நிலைமாறியுள்ளதென்பது சிந்திக்கத் தக்கதாகும். மற்றும், காவிரியாறு பிரிந்து கால்கொண்டோடிய தனாலேயே தலைமையான பழைய தடத்துடன் கூடிய காவிரி, பழைய காவிரி என்று சுட்டப் பெற்றுள்ளது.

இவ்வாறாகச் சோழநாட்டகத்தில் புகுந்த காவிரியாறு, பல்வேறு பட்ட காலங்களில் பருவகால வெள்ளப் பெருக்கினால் தடம்மாறியுள்ளது. மற்றும் சோழநாட்டின் பழைய தலைநகராகும் உறையூருக்கு மேற்கே காவிரியின் தென்கரையிலுள்ள அல்லூர் என்னுமிடத்திலுள்ள கல்வெட்டுச் செய்தியும், காவிரி கி.பி. பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உடைப்பெடுத்து ஊர்களையும் நிலங்களையும் பாழ்படுத்திய நிகழ்ச்சியினை நன்கு புலப்படுத்துகின்றது. கல்வெட்டுச் செய்தி:

"மதுரையும் ஈழமும்கொண்ட கோப்பர
கேசரிவர்மர்க்கு யாண்டு 37-வது,
இவ்வாண்டு உறையூர் கூற்றத்து
அல்லூர் தலைவாச் சான்றோம்
பதினொருவோம்

இவ்வூர் எங்கள் நிலம் வெட்டிப்
பேறு அல்லூர் ஊரின் வடகிழக்கின்
நிலம் காவேரி பெருகி குலை உடைந்து
மணலிட்டுப் புன்செய்யாகக் கிடக்க'' —

(அல்லூர்கல்வெட்டு கி.பி. 943).

இச்செய்தியால், சோழநாட்டின் தலைப்புப் பகுதியாகும் மேலிடத்திலேயே காவிரிபுகும் நஞ்சைப் பகுதியில் கி.பி. பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் உடைப்பெடுத்து நஞ்சை நிலங்கள் மணலெக்கரால் தூர்ந்து புஞ்சை மேடாகியுள்ளதை அறிய முடிகின்றது.

இவ்வெள்ளப்பெருக்கினைப் போன்றே தொடர்ந்த காலங் களிலும், முன்னரும் வெள்ள நிலைகள் ஏற்பட்டுக் காவிரியின் பழைய தடம் மாற்றம் பெற்றிருக்கவேண்டுமென்பதற்குரிய கருத்து அரண்பெறுகின்றது.

திரும்புறம்பயத்திற்கு வடக்கே பழைய காவேரியாறு இன்றும் ஓடுகின்றது. அதனை நோக்க இப்பொழுதுள்ள காவிரி புதிய காவிரி என்பது புலனாகும். மற்றும், வடகுரங்காடு துறைக்குக் கிழக்கே புதிய காவிரியினின்றும் வடபால் பிரிந்து கிழக்கு நோக்கிச் சென்று சீர்காழி வட்டத்தில் கடலில் கலக்கும் ஆறு 'பழவாறு' என்ற பெயருடன் வழக்கில் கூறப்படுகின்றது

மேலே கல்வெட்டுச்சான்றுகளுடன் காவிரியின் வெள்ளப் பெருக்கின் விளைவுகளைக் காட்டியது என்னையெனின், இளங்கோவடிகள் காலத்தில் சோழநாட்டளவில் புகுந்தோடிக் கடலில் கலந்த காவிரிநங்கை, பலநிலைகளில் தடம் புரண்டு நிலைமாறியுள்ளாளென்னும் உண்மையினை நினைவு செய்தற் கேயாகும்.

எனவே, கண்ணகியார் நடந்த காவிரியின் வடகரை வழியைச் சிலம்பு கூறும் விளக்கத்தினைக்கொண்டு திட்டப்படுத்தியறிய மிக்க முயற்சி வேண்டுமென்பதனைக் கூறவேண்டியுள்ளது.

இதனால், காவிரியின் பழைய சுவடு முழுவதும் மாறியுள்ளது என்பதல்ல, சோழநாட்டெல்லைக்குள் ஆங்காங்கே மாறியும் மாற்றப்பட்டும் இருக்கின்றதென்பதை உணர்த்துவதேயாகும்.

வளநாடு

சோழநாடு வளநாடு என்று பெயர் பெறுவதற்குக் காவிரியாறே காரணமாகும். நீர்வளம் நல்கிய குடகு மலையிலிருந்து பாறையிடுக்குத் தடங்களிலும் குழிப்புத்தடங் களிலும் வழிநடைகொள்ளும் காவிரியம்மை தான் அள்ளிக் கொழித்துவந்த மண்வளத்தையும் பொன்வளத்தையும் மணல் வளத்தோடு இருகரைகளிலும் கொழித்துப் படியவைத்த நீள் பக்கப்பகுதிகள் வண்டல் படுகைகளாயின நிலையில் (படுகை) மணற் செறிப்பை வழித்தடத்தே படிவமாக்கிப் பரந்து சென்று பல்வளம் நிரப்பியதால் காவிரி பொன்னி என்ற புதுப்பெயரோடு விளங்குவதாயிற்று. நாடும் பொன்னிநாடாயிற்று, சோழனும் பொன்னிவளவனாயினான்.

குடகுநாட்டில் கொழித்து மடியில் சேர்த்தவளத்தைச் சோழ நாட்டின் மேற்கு எல்லையாம் கருவூர் அளவிலும் பாறைத் தடத்தில் ஆங்காங்கே நெடிய குழிப்பிடங்களிலும் மணற்செறி வாகப் படியக்காட்டி ஓடிவந்த காவிரியன்னை, அமைதி கொண்டு அமர்நடையிட்டு அகன்ற தடமாக நடங்காட்டி வளங்காட்டி நளிர்புனலூட்டிச் செல்லுங்கால், பலமக்களைப் பெற்ற மாண்ப மைதாய்போல் கிளையாறுகள் பலவற்றால் நிலவளம் மிகுத்து, நல்வினை செய்த உயிர்களனைத்தும் நாயகனாம் இறைவனை அடைதல் போன்று கடலில் கூடிக்கலப்பதாயிற்று. வளநிலமும் சோறுடைய சோழ நாடாயிற்று.

நீர்நாடு

'நீரின்றி அமையாது உலகம்' என்பது குறட்குறிப்பு. தமிழகத்தில் நீரில்லாத இடங்களே இல்லை. ஆயின் சோழநாடு மட்டும் நீர்நாடு என்று பெரும் பெயர் பெற்றதேன்?

விடை அமைவுடையது, "கோள்நிலை திரிந்து கோடை நீடினும் தான் நிலை திரியாத் தண்டமிழ்ப்பாவை - காவிரி" என்பது சங்க காலத்திலேயே கண்டவுண்மை.

சோழநாடு புகுந்த காவிரித்தாய் மணலிட்டு நீரை மறைத்து அகட்டில் வைத்துள்ளாள், மழையில்லாமல், வெப்பம் கொதிக்கும்

கோடைக்காலத்தில் தம்மக்கட்கு, மணலிட்டு மறைத்துக் காத்த நீரைச் சுரந்திட்டுக் காக்கும் பேராற்றலினால் நாடு நீர்வளம் என்றும் பொருந்திய நீர் நாடாயிற்று. இத்தகைய வளத்தினை நிலையாக நிறைவாகப்பிறநாட்டு ஆறுகளில் காண்பது அரிதாகும்

இவ்வளத்தினை, சோழநாட்டில் பெற்றுச்சிறந்துள்ள. காவிரியும் அதன் மக்களால் ஆறுகளும், பெற்றிருக்கும் தனிப் பண்பைக் கண்ணுற்றார் அன்றொரு புலவர். பாடலெழுத்தது.

''ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும்....

ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்''

என்ற உவமானப் பாடற்பகுதிக்கு ஆற்றின் ஊற்று வளம் இலக்காயிற்று. ஆற்றின் ஊற்றுவளத்தினை அனுபவித்துப் பாடியவரும் காவிரிநாட்டுப் புலவராகவே இருந்திருக்க வேண்டும்.

இன்றும் சோழநாட்டு ஆறுகளில் கோடைக் காலத்தில் மணலில் ஊற்றிட்டுச் சுரக்கும் நீரை முகந்து செல்லும் மக்களைக் காணலாகும்.

ஏரகமும் அரங்கமும்

கண்ணகியாரின் மதுரைப் பயணத்தொடக்கத்திலேயே இலங்கோவடிகள் தமது சமயப்பொதுமையினைத் திருமால் கோயிலை முதன்மையாகக் காட்டிய முறைமையினால் அறிமுகம் செய்து வைக்கின்றார். ஆயினும் அடிகள் தாம் மேற்கொண்ட அருக சமயத்தை, கோவலன் கண்ணகியிடத்தும், கவுந்தியடிகள் வாயிலாகவும் பிறவாறும் சமயக் குறிப்புடன் கண்ணோட்ட மிட்டுச் செல்லும் புலமை சான்றநுட்பம் காப்பியம் முழுவதும் இயைந்து மெருகிட்டு நிற்பதை அறியலாகும்.

இந்நிலையில் காவிரியின் வடகரைவழியே மேலே செல்லும் அளவில், சங்ககாலத்தில் விளங்கிய குடந்தைமாநகர் தென்கரையில் இருப்பதை அறியாமலிருக்கவியலாது. எனினும் வடகரையே நோக்கென்னும் குறிப்புடன் மேலே செல்லின் இன்று முருகனுக்குரிய ஆறுபடை வீடுகளிலொன்றாகக் கருதப் பெறும் சுவாமிமலை ஏரகமென்ற பெயரால் விளங்கிவருகின்ற

மையை அறியலாம். செய்குன்றின் மேல்நிலையில் திருக்கோயில் அமையவிளங்கும் இக்கோயிலைப்பற்றிய பெருமை சமயநெறியில் உயர்ந்திருப்பதை அறிகின்றோம்.

கண்ணகியார் நடந்த கரைவழியில் உள்ள இச்செய்குன்றக் கோட்டமாகும் தண்டாயுதபாணிக்கோயிலைத் தொலைவிற் கண்டதாகவோ, கடந்ததாகவோ அடிகள் குறிக்கவில்லை. குன்றக் குரவையுள் குறிப்பிடும் வெண்குன்றிற்குரிய உரைகளுள் ஒன்றைக் கொண்டல்லவா சுவாமிமலையைப் புரிந்து கொள்ளு கிறோம்.

கருங்கல் செங்கல் ஆகியவற்றால் அமைக்கப்பட்டுள்ள செய் குன்றாகும். இம்முருகன் (தண்டாயுதபாணி) கோயிலை, தொல்பொருள் ஆய்வுக்கணிப்புடன் காணும்போது, அசோகனது ஆட்சிக்காலத்தில் தமிழகத்தில் நிறுவப்பட்ட பௌத்த சமய விகாரைகளுள் ஒன்றாக இருந்த உயர்நிலைக்கட்டிடம், காலத்தால் சிதைந்திருந்ததனைப் பிற்காலத்தில் திருத்தித் தண்டாயுதபாணி கோயிலாக ஆக்கியுள்ளமையினைக் காண முடிகின்றது.

மேல் கண்ணகியார் அடிச்சுவட்டில் அரங்கத்தை அடைகின் றோம். அரங்கம் என்பது ஆற்றிடைக்குறைத்தடத்திற்குப் பண்டைத் தமிழன் இட்ட பெயர். திருமால் அரவணைப்பள்ளிய மர்ந்ததால் இடம் தலப்பெருமையுடன் திருவரங்கமாயிற்று. பழம்பெருமையுடன், ஆழ்வார்களால் பெரிதும் பாடப்பெற்ற சிறப்புடைய அரவணைப் பெருமாளையோ, திருவரங்கத்தையோ அடிகள் குறிக்கவில்லை. சமண சமயச் சாரணர்கள் விண்வழி வந்து, சிலாதலமாகும் கருங்கற்பீடத்திலிருந்து, கண்ணகியார் கோவலன் ஆகியோர் வினைவழிப்பட்டுச் செல்லும் அவலத் தினை ஞானத்தாலுணர்ந்து அன்புப்பாசத்தால் பிணிப்புற்றுப் பின்தொடர்ந்து வந்துள்ள துறவியார் கவுந்தியடிகளின் செயலினை அறிவுறுத்தும் முயற்சியாக,

"பவந்தரும் பாசம் கவுந்தி கெடுகென்று"[1]

அறிவிப்புக் குறிப்புடன் கூறிச்சென்ற நிகழ்ச்சியை அருக சமயக் கோட்பாட்டுடன் அறிமுகப்படுத்துகின்றார்.

இளங்கோவடிகள் அறவழியில் ஏற்றுக்கூறும் சமயப்பொது நோக்கினை ஈண்டு ஆராயுங்கால், அரங்கப் பகுதியுள் வந்துற்ற சாரணர்வழி அருக சமயம் பற்றிய செய்தியைக் கோவலன் கண்ணகி வரலாற்றோடு இணைத்து உரைத்தவர், ஓரளவாவது திருவரங்கத்தைப் பற்றிய குறிப்பினை அங்கு வந்தடைந்த கோவலன் கண்ணகி கண்டதாகவோ, பொதுவாகவோ, பிறவாறோ கூறியிருக்கவேண்டுமென்பதோர் நுட்பம் தோன்றுவது இயல்பேயாகும்.

குறிப்பிடவேண்டிய இடத்தில் விடப்பட்ட திருவரங்கம், பிறவைணவத் தலங்களுடன், உறையூருக்குத் தென்புறத்தே வந்துற்ற மாங்காட்டு மறையவன் வாயிலாக வெளிப்படுத்தப் பெறுகின்றது,

சமயத்துறையில் இளங்கோவடிகள் வகுக்கும் பொது நோக்கின் பல்வேறு பட்ட நிலைகளை இதனால் நன்கறிய லாகும்.

நீரணிமாடத்து நெடுந்துறை

கண்ணகியார் அடிச்சுவட்டில் அரங்கத்தினின்றும் தெற்கே உள்ள சோழரின் தலைநகராகும் உறையூர்க்குச் செல்லலானேன். இடையே காவிரியாறு குறுக்கிட்டு ஓடுகின்றது. இன்று ஆற்றைக் கடப்பதற்கு வலிய பெரிய பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

இளங்கோவடிகள், கண்ணகியார் கோவலன் கவுந்தியடிகள் ஆகிய மூவரும் காவிரியாற்றில் நீரணிமாடத்து நெடுந்துறை வழியே சென்று நியமத் தென்கரை எய்தி, உறையூரை அடைந்தார்கள் என்று குறிக்கின்றார்.

அடிகள் கூறும் 'நீரணிமாடம்' என்பது என்ன? நெடுந்துறை போகும் செயல் யாது? இவற்றை உரையாசிரியர்களின் கருத்துடன் சிந்தித்தறிவது சிறப்புடைய தாகும்.

சங்ககாலச் சோழர் ஆட்சியில் உறையூர் எல்லாவளத்திற்கும் உறைவிட மாகவும் தலைமைப் பேரூராகவும் இருந்துள்ளது. அரண்வகைகளால் பாதுகாக்கப் பெற்ற மாடமாளிகைகளும் அங்காடி வீதிகளும் பிற அரச செல்வங்களும் நகரின் அங்கங் களாக இருந்துள்ளன.

சோழரின் செல்வப் பெருக்கிற்கமைந்த வாணிபச் செழிப்பிற்குக் கடற்றுறைப் பட்டினமாகப் பூம்புகார் இருந்துள்ளது. எனவே தலைநகருக்கும் துறை நகருக்கும் தொடர்ந்திருந்த வழிகளுள், சிலப்பதிகாரம் கண்டுள்ள காவிரியின் வடகரைவழி காவிரிப்பூம்பட்டினமாகும். புகார் நகரிலிருந்து மேற்கே நெடிதாகச் சென்று அரங்கப் பரப்பில் அறுதியிட்டு நின்றுளது ஆங்கே காவிரிக்குத் தென்கரையில் இருப்பது உறையூர். வடகரையிலிருப்பதே அரங்கம், இந்நிலையில் ஆற்றில் நீர் நிறைந்த காலத்தில் வழித்தொடர்பில்லாமல் இருந்த குறையைச் சோழ மன்னருள் ஒருவன் நீரணிமாடத்தோடு கூடிய நெடுந்துறையாக்கி, மக்கள் போக்குவரத்திற்கு எளிதாக்கியதுடன் நெடுஞ்சாலையின் தொடர்பினையும் இணைத்திருக்கின்றான்.

நீரணி மாடம், பள்ளி ஓடம்

ஆற்றின் குறுக்கே உட்புரையிட்ட மிதவை மரங்களைக் கொண்டு, இரு கரைகட்கும் இணைப்பாக நிலைபெறவமைத்த மரக்கட்டுக்கோப்பினையே அடிகள் அக்கால வழக்குப் பெயரால், 'நீரணி மாடம்' என்று குறிப்பிட்டுள்ளார். இதனைப் பள்ளியோடம் என்றும், மாடப்புணை என்றும் உரையாசிரியர்கள் குறித்துள்ளனர்.

(பள்ளியோடம் என்பது என்ன? ஆற்றின் குறுக்கே நிலைப்பாக நிறுவப்பட்ட மிதவைப் பாலம் என்பதுதானே பொருளறி விளக்கம்).

இதைப்போலவே வையையாற்றில் தேவைக்கேற்ப நீர் மாடமும் நிரை மாடமும் ஆக்கப்பட்டிருந்தது ஈண்டு நினைவு கொள்ளத்தகும்.

கி. மு. நான்காம் நூற்றாண்டில் வட இந்தியாவின் மீது படையெடுத்து வந்த அலக்சாந்தர் என்னும் கிரேக்க நாட்டு மன்னர், அகன்று ஆழ்ந்து பெருகி யோடிய சீலம் நதியைத் தம்வீரர்கள் கடக்க, படகுகளை இணைத்திட்ட மிதவை வழியும், ஆப்பிரிக்கா நாட்டின் நடுவிடத்தில் காங்கோ ஆற்றைச் சார்ந்த செறிந்த காடுகளில் வாழ்ந்த நாகரிகமற்ற மக்கள், எத்தகைய அறிவியல் முன்னேற்றமும் அறியாத நிலையில், வேட்டைவாழ்க்கைத் தேவைக்கேற்ப, உலர்ந்த மரக்கட்டைகளை நிலையாக

இருகரைக்கும் பொருந்த இணைத்துக்கட்டி அவ்வழியே ஆறுகளைக் கடந்துசென்ற வரலாற்றுக்குறிப்பும் நினைவு செய்யத் தக்கனவாகும்.

எனவே, யவன வணிகர் புழக்கத்துடன் யவனத் தொழிலாளர் பலரின் வாழ்விடமாகவும் அமைந்து, புதியன புனைந்து நின்ற தமிழகத்தில் மரங்கொல் தச்சரும், கருங்கைக் கொல்லரும் வாழ்ந்திருந்த தமிழகத்தில் ஆற்றைக் கடக்க நிலையானதொரு அமைப்பினை அரசுகள் செய்யாமல் இருந்திருக்கவியலுமா என்பது சிந்தித்தறிதற்காகும். உரையாசிரியர்களும் ஆற்றிடை அமைத்த நீரணிமாடத்தினைப் பள்ளியோடம், நீர்மாடப்புரை என்ற பெயர்களால் குறித்துக்கூறியுள்ள சிறப்பு கருதற்காகும்.

நீர் அணி மாடம் என்ற காரணப் பெயர்க்கு விளக்கம் காணும் போது, ஆற்றுநீர் குறுக்கே அடைவுபெறாமல் இடையிடையே வகிர்ந்து வழிக் கொள்ளும் புரைகளுள்ள அமைப்பில் அமைக்கப்பட்ட நெடுந்துறையாக இருந்தமையாலும், புரைகள் மாடங்களைப்போன்ற வடிவில் பொருத்தி நின்றதாலும், ஆற்றிடையே அமைத்த மிதவை வழி "நீரணிமாடம்" என்ற பெயரை அன்று பெறுவதாயிற்று எனலாம். இக்குறிப்புகளோடு நோக்கின், அரங்கத்திற்கும் உறையூர்க்கும் இணைப்புப்பாதையாக ஆற்றிடையே அன்று அமைக்கப்பட்ட நீரணி மாடமொன்று இருந்ததென்பது புலனாகும்.

இத்தகைய மாடப்புணையினால் இணைப்புற்ற நெடுந்துறை பயனற்ற போதும், அரசியல் குழப்பக் காலங்களிலும் எளிதில் பிரித்து வழித்தொடர்பில்லாமல் ஆக்குதற்குரியதாகவும் இருந்ததோடு மற்றைய காலங்களில், நீரணி மாடத்து நெடுந்துறை மக்கள் பயின்று வருதற்கு உரியதாக இருந்தது என்பது போதரும்.

இக்காலத்தில் ஆறுகளைக் கடப்பதற்குச் செங்கல், சுண்ணக் கலவை ஆகியவற்றால் குறுக்கே கண்மாய்களுடன் கட்டப்பட்டிருக்கும் கட்டிடச்சாலை - 'பாலம்' என்று கூறப்பெறுகின்றது. (Bridge) அன்று, திண்மையான மூங்கில்களால் ஆற்றின் குறுக்கே மக்கள் நடை வழித்துறையாக அமைக்கப்பட்டிருந்த திண்ணிய மரப்புணை, மாடப்புரை, ஆகிய கட்டுப்பாதையே நீரணிமாடம் என்று கூறப்பட்டுள்ளது.

பீடரர் உறந்தை

கண்ணகியார் கோவலன் கவுந்தியடிகள் ஆகிய மூவரும் அரங்கத்தினின்றும் தெற்கே குறுக்கிடும் காவிரியாற்றை நீரணி மாடத்து நெடுந்துறை வழியாகச் சென்று கடந்து ஆங்குத் தென் கரையிலிருந்து நியமம் என்ற தெய்வநெறியிடத்தை அடைந்து உறையூரினுட் புகுந்தனர் என்பது சிலப்பதிகாரச் செய்தி.

சங்ககாலச் செய்யுட்களினால் அறியப்பெறுகின்ற சோழப் பெருநகரங்கள், உறையூர், காவிரிப்பூம்பட்டினம் என்னும் இரண்டுமேயாகும். உறையூர் நாட்டின் தலைநகராகவும், காவி ரிப்பூம்பட்டினம் துறைமுகப்பட்டினமாகவும் இருந்துள்ளன. உறையூர் உறந்தை எனவும் கோழியூர் (வாரணம்) எனவும் வழங்கப்பட்டுள்ளது. இதனை,

> ''முறஞ்செவி வாரணம் முன்சம முருக்கிய
> புறஞ்சிறை வாரணம் புக்கனர்''

(முறஞ்செவிவாரணம் - யானை. புறஞ்சிறை வாரணம் - சேவற் கோழி) என இளங்கோவடிகள். வாரணம் என்ற பெயர்ச் சொல் லின் பொருளாக்கம் புலப்படுமாறு எடுத்துரைத்துள்ளார்.

ஓர் கோழியானது யானையொன்றைத் தாக்கித் தொலைத்த இடத்தில் அமைக்கப்பட்ட தலைநகராதலின் கோழியூர் என்று பெயர் பெற்றது எனவும்,

யானையை வெற்றிகண்ட கோழி தோன்றின இடம் சோழ ரின் வெற்றிக்குரிய வலியுடையது என்பது கருதி, அவ்விடத்தில் அதன் பெயராலேயே சோழன் ஊர் அமைத்த பொழுது, கோழி இருசிறகையும் விரித்து நின்ற பாங்கில் உருவாக்கியதனால், 'புறம்பே சிறகுகளை உடையகோழி' என்றாயிற்று என்றும், உரையாசிரியர் உரைப்பர்.

கோழியூரை ஆண்டசோழன் 'கோழியான்' எனப்பட்டான். அக்காலத்தில் சோழநாட்டுத்துறைமுகப்பட்டினமாக இருந்த காவிரிப்பூம்பட்டினம், எக்காலத்தில் எதனால் தலைமைத் தலை நகராயிற்று என்பதைக் கண்டறியத் தக்க சான்றுகள் கிடைக்க வில்லை. சிலப்பதிகார காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் தலை நகராக இருந்துள்ளது.

பெயர்க்காரணம்

நீர்வளம் நிலவளம் நிலைபெற்றது; செல்வத்திற்கு உறைவிடமாக இருந்தது; சான்றோர்கள் பலர் உறைந்திருந்தனர்; எல்லா வளமும் உறையும் ஊர், என்றெல்லாம் பொருள் கொண்டு உறையூர் என்று பெயரிட்டுள்ளனர்.

''மலர்புகழ்வண் தமிழ்ச்சோழர் வளநாட்டு மாமூதூர்
உலகில்வளர் அணிக்கெல்லாம் உள்ளுறையூராம்
உறையூர்''

என்று சேக்கிழாரும் பெயர்க்காரணம் தந்துள்ளார்.

புகழ் உறை ஊர்

சங்ககாலத்தில் விளங்கிய உறையூர், இலக்கியங்களில் 'உறந்தை' என்ற மரூஉப்பெயராலேயே குறிக்கப்பட்டுள்ளது.

'மறங்கெழு சோழர் உறந்தை', 'அறந்துஞ்சு உறந்தை', 'செல்லா நல்லிசை உறந்தை', 'பல நல்ல புலனணியும் உறந்தை', 'கறங்கு இசை விழவின் உறந்தை', 'அறங்கெழு நல் அவை உறந்தை' என்றெல்லாம் அது புலவர் பலர் புகழ்ந்துரைப்பதற்கு ஏற்புடையதாகி இருந்தது. அது புகழ்ச்சோழர், கோப்பெருஞ்சோழர் ஆகியோர் பிறந்த இடமாகக் குறிக்கப் பெறும் புகழுடனும் விளங்கியது.

கரிகால்சோழன், கோப்பெருஞ்சோழன், நலங்கிள்ளி, கிள்ளி வளவன் ஆகிய சங்ககாலச் சோழருடன், சரித்திரகாலக் குலோத்துங்க சோழனும் ஆட்சி செய்த புகழமைந்த ஊர் அது.

அது புலவர்களில் இளம்பொன் வாணிகனார், முதுகண்ணன் சாத்தனார், ஏனிச்சேரி முடமோசியார், மருத்துவன் தாமோதரனார், முதுகூத்தனார் முதலிய புலவர்கள் பிறந்தும் வாழ்ந்ததுமாகிய நகர். முத்துவீரியம் என்னும் இலக்கண நூலை இயற்றிய முத்துவீர உபாத்தியாயருக்குரிய ஊர். இவைகளெல்லாம் உறையூருக்கமைந்த புகழுரைகளாகும். இப்புகழுரைகள் யாவும் ஊரின் ஆக்கத்தினைக் கொண்டும், மக்கள் வளத்தினைக் கொண்டும் கூறப்பட்டனவெனலாம்.

கரை உறை ஊர்

காவிரிக்கரையில் உறையும் பெருநகராக அக்காலத்தில் இவ்வூர் இருந்துள்ளதனைப் பண்டைய இலக்கியங்கள் குறிக்கின்றன. அவற்றுள்,

'புனல்பொரு புதவின் உறந்தை'

'காவிரிப் படப்பை உறந்தை'

என்னும் அகநானூற்றடிகளால் அறியத்தக்கதாகும். மற்றும் காவிரியின் படப்பை யாகும் படுகைப்பகுதியிலேயே உறையூராண்ட கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தானென்பதனை,

''உள்ளாற்றுக் கவலை புள்ளி நீழல்''

என்னும் புறநானூற்றடி புலப்படுத்துகின்றது. இவற்றால் பண்டைய சோழர்கள் ஆற்றங்கரைப் பகுதியிலேயே தங்களது நிலையான நகரை அமைத்துக்கொண்டிருந்தார்கள் என்பது அறியப் பெறுகின்றது. பழைய ஆற்றின் கரையூர் சோழரின் பழையாறை நகராகப் பல்வளத்துடன் விளங்கியதும் ஈண்டு அறியத்தக்கதாகும். எனவே, காவிரி ஆற்றங்கரை ஊராகவும் உறைந்திருந்த ஊர் உறையூரென்பது பெறப்படும்.

மிகத்தொன்மைக்காலத்தே ஆற்றங்கரைத் தலைநகராக அமைக்கப்பட்டது பழையாறை எனக் குறிக்கப்பெற்றது. அதனையடுத்து ஆற்றங்கரையில் நிலைபெற்ற ஊர் உறையூராயிற்று. இப்பெயர்கள் இயற்கையின் சார்பில் சுட்டிய நற்பெயர்களாகும்.

அடிகள் சிறப்பித்த நகர்

இளங்கோவடிகள் சிறப்பித்த அரசு தலைநகரங்கள் நான்காம். அவை,

''மாட மதுரையும் பீடார் உறந்தையும்
கலிகெழு வஞ்சியும் ஒலிபுனல் புகாரும்''

என்று சிலம்பில் குறிக்கப்பெறும், மதுரை, உறையூர், வஞ்சி, புகார் ஆகிய நான்கு நகரங்களேயாம். அவற்றுள் உறந்தையும்

புகாரும் சோழர்க்குரியவை. மதுரை பழையர் பாண்டியருக் குரியது. வஞ்சி சேரருக்கு உரியது.

இவ்வாறு மூவேந்தருக்கும் உரியதலைநகரங்கள் கூறப்பட்ட தாயினும், சோழருக்குரிய உறந்தையும் புகாரும் தனிச்சிறப்புடன் காப்பியத்தில் கூறப்பட்டுள்ளமை அறியத்தக்கதாகும்.

"பொதுவறு சிறப்பின் புகார்"
"பேராச் சிறப்பின் புகார்"

என்று வணிகவளம் தந்த பட்டினம் கூறப்பட்டது.

"பீடார் உறந்தை"

என்று பெருமையும் புகழும் பெற்ற ஊர் கூறப்பட்டது.

வரலாறு கொண்ட உறந்தை

தமிழக வரலாற்றுச் சான்றுகளுள் கல்வெட்டுச் செய்திகள் முதன்மையானவையாகும். உறையூரிலும் சார்ந்துள்ள ஊர்களி லேயும் கிடைத்துள்ள கல்வெட்டுக்கள் காட்டும் செய்திகளைக் கொண்டு இவ்வூர் சோழமண்டலத்தில், எவ்வளநாட்டில் எக்கூற் றத்தில் அமைந்திருந்ததென்பதனை அறிய முடிகின்றது.

இரண்டாம் பராந்தகனாகிய சுந்தர சோழனுடைய ஆட்சியில் (கி.பி. 957-970) "உறையூர்க் கூற்றத்து உறையூர்' என்றும், முதல் இராசராசன் காலத்தில் (கி. பி. 985-1014) "கேரளாந்தக வளநாட்டு உறையூர்க் கூற்றத்து உறையூர்" என்றும், வீரராசேந்திரன் ஆட்சியில் (கி. பி. 1063-1070) "இராசகெம்பீரவளநாட்டு உறையூர்க் கூற்றத்து உறையூர்" என்றும், குலோத்துங்கன் காலத்தில், (கி. பி. 1070-1120) "இராச மகேந்திரவளநாட்டு உறையூர்க் கூற்றத்து உறையூர்" என்றும், பின்னர், "திருச்சிராப்பள்ளி உசாவடி இராசகெம்பீர வளநாட்டு உறையூர்" என்றும், "சிவாபதசேகரபுரத்து உறையூர்" என்றும், கம்பண்ணவுடையார் காலத்தில் (கி. பி. 1374-75) "மழைநாட்டு உறையூர்". "தென்கரை உறையூர்" என்றும் கல்வெட்டுக்களில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

சங்ககாலத்தில் சோழநாட்டின் தலைநகராகவும், சரித்திர காலத்தில் ஒரு கூற்றத்தின் தலைமை ஊராகவும் இருந்த

உறையூர் முன்னர்ப் பெருஞ்சிறப்புடன் இருந்துள்ளது. சங்க காலத்தில் உறையூர்க்குக் கிழக்கே உயர்ந்து பெரியவடிவில் ஒரு குன்றம் இருந்தது என்பதனை,

> "கறங்கு இசை விழவின் உறந்தைக் குணாது
> நெடும் பெருங் குன்றம்" (அகம். 4)

என்னும் அகநானூற்றடிகள் விளக்குகின்றன. இதனால், அன்று உறையூர் பலவளமும் பொருந்தி விளங்கியபோது, ஊரிற்குக் கிழக்கே நெடிய பெரிய வலிய குன்று ஒன்று மட்டும் இருந்துள்ளது. அதுவே இப்பொழுது கோட்டையும் கோயிலும் குடைவரையும் சமணர் படுக்கையும் கொண்ட சிராப்பள்ளிக் குன்றாகும்.

சிராப்பள்ளி மலையின் மேல் சிவன்கோயில் அமைக்கப்பட்ட காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முன்னராகும். இதனைத் தேவாரப்பாடல்கள் உணர்த்துகின்றன. இக்காலத்திலேயே உறையூரிலும் பாடல்பெற்ற முக்கீச்சரம் பஞ்சவண்ணஈசர் கோயில் ஆகிய தலங்களும், கமலவல்லி நாச்சியார் கோயில் என்ற வைணவத் தலமும் இருந்துள்ளன.

கரைந்துபோன உறையூர்

வடக்கயிறு தேய்ந்து ஆட்டுத்தளைக்கயிறு ஆயினாற் போன்றும், பெருஞ்சாலை போக்கற்றுக் கொடிப்பாட்டை ஆயினதைப் போன்றும், காலப் போக்கில் வரவரக்குறுகிக் காவிரிக்கரை ஊர்களில் உறையூரும் ஓரூராக இருப்பதனைப் பிற்காலக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

உறையூர் கூற்றமாக இருந்த சோழர்காலத்தில் (கூற்று-வட்டம்) அக்கூற்றத்துள் அடங்கியிருந்த ஊர்கள்,

நாவலூர், தலைவாய்ப்பாடி, நாநலூர், கொடியாலத்தூர் கருப்பூர், பருத்திக்குடியான் தம்பிக்கினியான், நல்லூர், பராய்த்துறை, அமண்குடி, அல்லூர், சாதனூர், திருவடகுடி, மேக்குடி, கற்குடி, சகதேகவீரச் சதுர்வேதி மங்கலம், புலிவலம், உறையூர் - என்பவனாகும்.

இவற்றைக் கொண்டு எல்லை காணும்போது, வடக்கே காவிரியாறு, தேற்கே உய்யக்கொண்டான் ஆற்றுடன் கற்குடி மலை, கிழக்கே சிராப்பள்ளிக் குன்றம், மேற்கே குளிர்தண்டலை (குளித்தலை) ஆகிய எல்லைகட்குட்பட்டு உறையூர்க் கூற்றம் இருந்துள்ளது என்பது புலனாகின்றது.

பலவளங்களோடு காவிரியாற்றின் தென்கரையில் விளங்கிய உறையூர்க் கூற்றமும் உயையூரும் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து காவிரியின் மிகுவெள்ளத்தால் தாக்குண்டு சிதைந்து, கரைந்து சிற்றூர்களாக ஆங்காங்கே பிரிந்துள்ள தனைக் கள ஆய்வினால் நன்கு அறியலானேன்.

கி. பி. 10-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆற்றின் வெள்ளத்திற்கு உள்ளாகி இருப்பதை, உறையூர்க்கு மேற்கே உள்ள அல்லூர்க் கோயில் கல்வெட்டு அறிவிக்கின்றது.

''மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பர
கேசரிவர்மர்க்கு யாண்டு 37-வது,
இவ்வாண்டு, உறையூர் கூற்றத்து
அல்லூர் தலைவாச்சான்றோம் பதி
னொருவோம்

இவ்வூர், எங்கள் நிலம் வெட்டிப் பேறு அல்லூர் ஊரின் வடகிழக்கின் நிலம் காவேரி பெருகி குலை உடைத்து மணலிட்டுப் புன்செய்யாகக் கிடக்க, ஆறெழாட்டைக் கால் பயிர் ஏறாதே, பாழ்கிடக்க, இந்நிலத்தை விலைக்குக் கொள்வாரில்லையோ வென்று முறகூற, அல்லூர் சிறியான் புல்லன்''

''விலைக்குக் கொண்டு—நிவந்தம் செய்தான்''

(தொகுதி—8-கல். 689)

இக்கல்வெட்டுச் செய்தியினால் கி.பி. 935-36 அளவில் அல்லூர் உடைப்பு ஏற்பட்டு அல்லூரும் அதன் கீழ்ப்பக்கமுள்ள உறையூரும் வெள்ளத்திற்கு இலக்காகி அழிந்துள்ளன என்பது தெளிவாகும்.

பகையரால் அழிவு

கி.பி. 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சோழரைப் பழி வாங்கும் நோக்குடன், காலங் கருதிப் பெரும்படையுடன்,

உறையூர்மீது படையெடுத்து வந்து தாக்கினான் மாறவர்மன் சுந்தரபாண்டியன்.

பாண்டியனின் ஆணைப்படியே பாண்டியநாட்டுச் சேனை உறையூரைத் தீயிட்டுக் கொளுத்தியது. நீர்நிலைகளை அழித்தது. உயர்ந்த மாடமாளிகைகளை இடித்துத் தரைமட்டமாக்கியது. கழுதை கொண்டு ஊரை உழுது, கவடி என்னும் பூண்டினை விதைத்தது.

இச்செய்தியினைச் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி நன்கு உரைக்கின்றது.

எனவே செல்வத்தாலும் பிறவளத்தாலும் செழிப்புடன் இருந்த உறையூர் முறையே காவிரி வெள்ளத்தாலும், பகைவர் செய்த அழிவினாலும் சிதைந்து, மறைந்து, நாயக்கர் ஆட்சியில் ஒரு சிற்றூராகப் புதிய எளிய குடிமக்களின் வீடுகளைக் கொண்டதாக ஆகி நின்றது.

ஊர் -மாறியது

ஊர் என்று கூறுவதற்குரிய சிறப்பெல்லாம் பெற்றுவிளங்கியதனாலேயே அன்று "ஊரெனப்படுவது உறையூர்" என்று சிறப்பித்துக்கூறப்பட்டது உறையூர். பழைய காலத்தில் உறையூரைச் சுட்டியே சிராப்பள்ளிக்குன்றை அறிவித்துள்ளனர். இன்று சிராப்பள்ளி நகராக, அதற்கு மேற்கே உறையூர் உறைந்து குறுகிப்போன ஊராக இருக்கின்றது. இப்போது தமிழக அரசின் ஊக்கத்துடன் உயர்வு பெற்று வருகின்றது.

இதுவே காலத்தின் அற்புதமான இலச்சினைக் கோலங்களுள் ஒன்றாகும்.

கண்ணகியாரின் காலடிச்சுவடும், சிலம்பின் ஒலியும் ஒருநாள் நிகழ்ந்த உறையூரினை அடைந்து நான் கள ஆய்வு செய்து கல்வெட்டு, தொல்பொருள் வரலாற்றுச் சான்றுகளுடன் அவ்வூரைப்பற்றிய செய்திகளைச் சுருக்கமாக உரைத்துள்ளேன்.

உறையூரில் கண்ணகியாரின் அடிச்சுவடுகள் இட்ட அளவில் சோழநாட்டு எல்லை அளவு கொண்டதால், ஆசிரியர் முதற் பகுதியாகவுரைக்கும் புகார்க் காண்டத்தினை, நாம் காவிரி நாடு என்ற தலைப்பில் ஆய்வுசெய்து, மேல் வையை நாடாகும் மதுரைக் காண்டத்தினைக் காண்போம்.

கான நாட்டில்

உறைந்தைக்குத் தென்சிறை

வைகறைப் பொழுது, இரவு வளர்ந்து ஆட்சி நிகழ்த்திய யாமத்தின் தளர்ச்சியான சிறுபொழுது. இதனை இலக்கண வரைப்பில் வைகுறு விடியல் என்று வகுத்துக்காட்டுவர்.

வாரணம் என்று அடிகள் சுட்டும் உறையூரில் ஓரிரவு தங்கிய பின்னர், கதிரவனின் காய்விற்குக் கண்ணகியார் இலக்காகா வண்ணம் வைகறைப் பொழுதினைக் கணிப்பாக்கி, கண்ணகியார், கோவலன், கவுந்தியடிகள் ஆகிய மூவரும் மதுரையை நோக்கி வழிக்கொள்ளுகின்றனர். இளங்காலைப்பொழுது விலக, வெய்யவன் குணதிசையில் விளங்கித் தோன்றலாயினன். பொன்னிற வெயில் மூவரின் மேலும் பொலிவுடன் பட்டு நீண்ட மனித நிழல்களைக் காட்டியது.

ஊழ்வினையே சிலம்பாகித் துணிப்பொதியில் உள்ளுறுத்தப் பட்டும், வினை விடாது தொடரும் மானுட வாழ்வியலை உறுப்புச் சாயல்காட்டித் தொடரும் நிழல்கள் உணர்த்திக் காட்டின. அதுகண்டு கண்ணகியாரின் இடுப்பில் துணிப்பொதி யுள் இருந்த சிலம்புகள் அறிந்தன போன்று அறற்றின எனலாம். வழியிடையே சோலை சூழ்ந்த இடம். அதனிடையே ஒரு மண்டபம். வைகறையில் புறப்பட்டு விடியல் கழிந்து வெய்யோன் கதிர் வீசும் காலைப்பொழுது வரையில் நடந்ததில் சிறிது சோர்வு. சோலையும் மண்டபமும் சோர்வுக்கு விருந்தாயின. இருந்து இளைப்பாறினர்.

நாடகச் சிலம்பு

அப்பொழுது சோலையின் தென்பகுதிக்கொரு சரகிலிருந்து வாழ்த்தொலி ஒன்று கேட்கின்றது. அது,

"வாழ்க எங்கோ மன்னவர் பெருந்தகை
ஊழிதொ றூழிதொ றுலகம் காக்க" - என்பதாகும்

ஒலியெழுப்பிய உருவம் தெரியவில்லை. வாழ்த்தொலிகேட்டு மூவரும் வியப்புறுகின்றனர். யாருக்குரிய வாழ்த்து? பூவும்காயும் பொலிந்து விளங்கும் இளமரங்கள் நிறைந்த தோப்பிடையே வாழ்த்து நிழ்கவதென்ன? என்னும் ஐயம் எத்தகையாருக்கும் ஏற்படுவதியல்பு, கோவலனும் ஐயுற்றிருப்பான், அவ்வேளை,

"வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள"

என்ற செய்தி வாழ்த்தின் தொடர்நிலையில் தொடுத்து வந்தது. கடல் கொண்ட பழந்தமிழகத்தின் பழைய செய்தி, தமிழினம் கேட்குந்தொறும் தளர்ச்சி தரும் கொடிய செய்தி கோவலன் அம்மூவர் காதுகளிலும் விழுந்தன. மேலும்

"வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை யாண்ட தென்னவன் வாழி"

எனப் பாண்டிய மன்னனுக்குரிய வாழ்த்து வெளிப்படுகின்றது.

உறையூர் சோழநாட்டின் தலைநகரம். அதன் தெற்குப் புறவெல்லையைச் சார்ந்த சோலையில் பாண்டிய மன்னன் வாழ்த்தப் பெறுகின்றான். கோவலனுக்குத்தான் வந்துள்ள இடம் பாண்டிய நாட்டெல்லையோ என்ற ஐயம் எழுகின்றது.

கோவலன் காண அந்தணன் ஒருவன் வருகின்றான். அவன் இசைத்த பாண்டிய மன்னனுக்குரிய வாழ்த்தும், பழந்தமிழகத்தின் வரலாற்றினை உணர்த்தும் சொற்களும் முன்னர்ச் செவிவழிச் சென்று புல ஆய்வினைப் புகட்டச் செய்தன. வந்த மறையவன் மண்டபத்தின் ஒருபுறத்தைச் சார்கின்றான்.

இந்நிகழ்ச்சி, சிலம்பின் செய்திகட்குத் திருப்பு மையமாகவும், கோவலன் கண்ணகி வாழ்வுப் பாதையின் வழியிடைக் காட்சியாகவும், காப்பியங்கண்ட மதுரைக் காண்டத்தின் தொடக்கம்

இதுவாகுமென்று காட்டுந்திறனாகவும் நாடகத்திறத்துடன் நனி சிறந்த காப்பியம் இது என்பதற்குரிய சான்றாகவும் அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

வந்த மறையவன் பாண்டியனை வாழ்த்திக்கொண்டே வருகின்றான். சோழநாட்டைத் தொடர்ந்த எல்லையில் பாண்டியன் புகழ்பாடப்பெறுகின்றது. அழிந்த தமிழகத்தைப் புதிய மெருகுடன் வையை யாற்றங்கரையில் புனைந்துருவாக்கிய பாண்டியன் புகழைப் பாடி வருகின்றான் மறையவன்.

இத்திறம், நாடகக் காட்சியொன்றில், கற்பிக்கப்பெற்ற உறுப்பினன் வருகை தருதலாக அமையும். கதையில் தனக்குரிய பகுதியை விளக்குமுகத்தான், நிறைக்க வேண்டிய செய்திகளையும் அறிமுகப்படுத்தும் பாங்கில் உரைக்கும் உரைகளுடன் அமைக்கப் பெற்றிருப்பது நாடக இயலின் தன்மையாகும். இவையாவும் நன்றாகப் பொருந்தியமைந்த அருங்காப்பியம் சிலம்பே என்பதனை அறுதியிட்டறிதற்காம் சான்றுகளிலொன்றாகவும் இது அமையும்.

மண்டபத்தின் ஒருபுறம் வந்தடைந்த மறையவனை நோக்கிய கோவலன், யாது நும் ஊர்? ஈங்கு வரக் காரணமென்ன? என்று கேட்கின்றான். மறையவன்,

"விரிதிரைக் காவிரி வியல்பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும் -
(திருவரங்கம்)

வீங்குநீ ரருவி வேங்கட மென்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை -
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும் -
(திருவேங்கடம்)

என்கண் காட்டென்று என்னுளங் கவற்ற
வந்தேனிக் குடமலை மாங்காட்டு உள்ளேன் -
(காரணம்)

தென்னவன் நாட்டுச் சிறப்புஞ் செய்கையும்
கண்மணி குளிர்ப்பக் கண்டே னாதலின்
வாழ்த்திவந் திருந்தேன் இதுஎன் வரவு
என விடை தருகின்றான்." (ஆர்வம்)

இப்படைப்புப் பாத்திரமாகும் மாங்காட்டு மறையவன் வாயிலாக, மதுரைக் காண்டத்தின் முகவுரை போன்று, அடிகள் நாடகத்திறனை நாட்டியிருப்பதுடன், மாங்காட்டு மறையவன் வாயிலாகத் தமிழகத்தில் சிறந்திருக்கும் வைணவத் தலங்களாம் திருவரங்கமும், திருவேங்கடமும் அறிமுகம் செய்யப்பெறுகின்றன. கண்ணகியார் கோவலன் கவுந்தியடிகள் ஆகிய மூவரும் அரங்கத்தை அடைந்தவிடத்துச் சொல்ல வேண்டிய திருவரங்கம், மறையவன் வாயிலாகப் பின்னர்ப் பாண்டிய நாட்டெல்லையில் புலப்படுத்தப்பெறுகின்றது.

இவ்வாறு நாடகத்தின் இடையிடையே, தனி மனிதன் ஒட்டுரையாகக், கதைக்கமைந்த தொடர்நிலைச் செய்திகளை நிகழச் செய்து நாடகத்தின் திறனமைப்புக் குன்றாமல் தொடரும் நுண்திறன் காணத்தக்கதாகும்.

சேரநாட்டு மாங்காடு என்னும் ஊரிலிருந்து பாண்டிய நாட்டின்வழி வந்த வைணவ மறையவனைக் கோவலன் பார்த்து மதுரைக்குச் செல்லுதற்கு ஏற்புடைய வழி எது வென்று கேட்கின்றான்.

மதுரைக்கு வழிகள்

மறையவன், மதுரை செல்லும் வழிகளைப் பற்றி விளக்கம் தருகின்றான். முதுவேனிற் காலத்தில் வழிநடக்கத் தொடங்கியுள்ள கோவலன் கண்ணகியார் கவுந்தியடிகள் ஆகியோர் உறையூருக்குத் தெற்கே தங்கியிருந்த சோலைக்குத் தென்பால் கொடும்பாளூர் வரையில் தொடரும் நிலப்பகுதி வேனிற் காலத்தில் இயற்கையின் இயல்பு மாற்றமடைந்து பாலைநில மாகக் காட்சிதரும் தன்மையினைக் கூறுகின்றான்.

இங்கு அடிகளார், நிலமில்லாத பாலைத்திணைக்கு காலச் சூழலால் அமையும் நிலத்தின் தோற்றக்காரணத்தினை அறிவியல் பாங்கொடு அறிமுகப்படுத்துகின்றார். அதுவே,

'முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்''

என்பதாகும். மழைக்காலத்தில் மலையும் காடும் புதர்களுமாக மல்கிச் செழிந்திருந்த மலைவளமும் நிலவளமும், மாரிகுன்றிய வேனிற்பருவத்தில் வறண்ட பாறைநிலத் தோற்றமே மிகுதி யாகப் பெற்று, பாலை என்னும் நிலப்பெயருக்குரியதாகி, "அரசியல் இழந்த அகன்ற நிலத்தைப்போல்" - கிடந்தது என்று மறையவன் உவமையோடு ஒப்பிட்டுக் காட்டுவதாக ஆசிரியர் அமைத்துக் காட்டும் நுட்பம் பாலைக்கு அறிமுகப் படுத்தப்பெறுகின்றது.

உறையூருக்குத் தெற்கே பரவிக்கிடக்கும் பகுதி குன்றும், காடும், புதரும் பொருந்திய பகுதியாகவே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்துள்ள தென்பதனை,

நொச்சிவேலித் தித்தன் உறந்தைக்
கண்முதிர் புறங்கா டன்ன" (அகம்-பாடல், 122)

என்பதனாலும் அறியப்பெறுகின்றது. இப்பகுதி இன்றும் இயற்கையமைப்பில் மாறாமலும், மழை பெய்தால் சூழலுக் கேற்ற வளமும், வானம் பொய்த்தால் வறண்ட கரம்பு நாடா கவும் காட்சிதரும் பகுதியாக இருப்பதனைக் கள ஆய்வில் அறியலானேன். நிலையில்லா நிலவளம் பெறும் இப்பகுதியினை நிலநூலறிஞர் "மழைநிழற்பகுதி" (Rain Shadow Region) என்று குறிப்பிடுகின்றனர். இவ்வாறு காலமாறுபாட்டால் உருவாகி மாற்றம் பெறும் பாலைநிலமன்றித் தமிழகத்தில் நிலையான பாலைநிலம் இல்லை.

பருவகாலக் கருமேகம் பெய்து வறிதாகிவருவதாலும், வேனிற்கால வெம்மை, நிலத்தையும் உயிர்களையும் துன்புறுத் துதலோடு, பகலில் வெப்பம் மிகுத்து வறண்ட பகுதியில் இரவில் பனியடைவு மிகுத்தும் குளிர்பெற்றிருக்கும் பாலையின் இயல்பினைச் சங்ககாலச் சான்றோர் நன்குணர்ந்து உணர்த் தியுள்ளனரென்பதனை,

"பெய்து வறிதாகிய பொங்குசெலற் கொண்மூ
மைதோய் விசும்பின் மாதிரத்து உழிதர
பனிஅடுஉ நின்ற பால்நாள்"

(அகம். 126. பாலைத்திணை)

என்ற அடிகள் விளக்குகின்றன. இத்தகையதாகத் தோற்றம் கொண்ட பாலைக் சுரம்புப் பகுதியினைக் கோவலனுக்கு மாங்காட்டு மறையவன் தெரிவித்தான்

கொடும்பை

கற்பாறைகளும், குன்றுகளும், கள்ளி முள்ளிகளுமாக இன்றும் மாறாது பரந்துநிற்கும் இப்பகுதியில், பல்வேறுபட்ட வழித்தடங்கள் செல்லுகின்றன. அவற்றுள் தென்திசை நோக்கிச் செல்லும் தடத்தின் வழியே செல்லின், அவ்வழியின் முடிபான தலைப்பில், பிறவாறு சூழ்ந்து வரும் வழிகள் வந்து கூடுகின்றன. இவ்வாறாகப் பல வழிகள் வந்துகூடும் இடம் ஏரிக்கரையாகவும் அடைவான நிலச்சூழலாகவும் இருக்கிறது. இப்பகுதியின் தென்முகப்பிலிருந்தே வரலாற்றுச் சிறப்புடைய கொடும்பாளூர் தொடருகின்றது என்பதை மாடலன்,

''அறையும் பொறையும் ஆரிடை மயக்கமும்
நிறைநீர் வேலியும் முறைபடக் கிடந்தவிந்
நெடும்பேர் அத்தம் நீந்திச் சென்று
கொடும்பை நெடுங்குளக் கோட்டகம் புக்கால்''

என்று விளக்கமுறக் கூறுகின்றான். மறையவன் ''நெடும் பேரத்தம்'' என்று குறிப்பிடும் நிலப்பகுதியே வரலாற்றில் குறிக்கப்பெறும் கோனாட்டுப் பகுதியாகும்.

கோனாடு - (கோன் - நாடு)

புறநானூற்றுப் பாடற்புலவருள் ஒருவர் கோனாட்டு எரிச்சலூரில் வாழ்ந்திருந்தமையினால், இந்நாட்டுப் பெயர் சங்ககாலப் பழமையுடன் தொடர்ந்து பிற்காலக் கல்வெட்டுக் களிலும் பெயர் திரிபு பெறாமல் குறிக்கப்பெறும் சிறப்புடன் விளங்குகின்றது.

கோனாட்டுப் பகுதியினையே, சிலப்பதிகாரத்தில் வரும் மாங்காட்டு மறையவன் பாலை என்னும் படிவங்கொண்ட பகுதியெனக் கோவலனிடம் குறிப்பிடுகின்றான்.

வேளிர்நாடு

வேளிர் என்னும் பழந்தமிழ் இனத்தவர் வாழ்ந்திருந்ததும், அரசு செலுத்தியதும் கோனாடாதலின் இதனை வேளிர் நாடென்றும் விளம்புவர்.

கோமுறைச் சுற்றமான வேளிர், முத்தரையர், சோழர், பாண்டியர் ஆகிய மூவேந்தராட்சியிலும் கோன் என்ற விருதுப் பெயருடன் குறுநில மன்னராக ஆட்சி செய்த நாடாதலின் கோன் - நாடு - கோனாடு எனப் பெயர் பெறுவ தாயிற்று.

இந்நாட்டின் எல்லைகள்: எறும்பீசர் மலைக்கு மேற்கு, கருவூர் கோட்டைக்கரைக்குக் கிழக்குத் காவிரியாற்றுக்குத் தெற்கு, பிரான்மலை, நெடுங்குன்றம் ஆகிய மலைகட்கு வடக்கு ஆகிய எல்லைக்குட்பட்டிருந்ததனைக் கல்வெட்டுச் செய்திகளால் அறிய முடிகின்றது.

கோனாட்டிலுள்ள குன்றுகளில், இரண்டாயிரம் ஆண்டு கட்கு முன்னர்ச் சமயச் சார்பில் தமிழகத்திற்கு வந்திருந்த சமண முனிவர்கள் தங்கியிருந்து தவம் செய்த நல்லிடமாகும் கற்படுக்கைகளும். பிராமி கல்வெட்டுகளும் உள்ள பள்ளிகளும் பாழிகளும் நிறையவுள்ளன. அவற்றுள் காலத்தால் பழமை யுடையது சிற்றண்ணல்வாயில் சமணர் பாழியும், குடைவரைக் கோயிலும் ஆகும்.

கோனாட்டின் தலைநகர் நாட்டின் நடுவே அமைந்துள்ள கொடும்பாளூர். கொடும்பாளூரைத் தலைநகராகக் கொண்டு வேளிர் மன்னர்கள் ஆட்சி செய்துள்ளனர்.

கோனாடு இருபத்துநான்கு வட்டகை பரப்புடையது என்று கல்வெட்டொன்று கணிக்கின்றது. சோழநாடு இருபத்து நான்கு காதம் பரப்புடையதென்பதனோடு ஒத்த அளவை உடையது கோனாடு எனலாம்.

கோனாடு, தென்கோனாடு, வடகோனாடு கீழ்கோனாடு என்று முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சோழராட்சிக்காலங்களில் இக்கோனாடு,

'கேரளாந்தக வளநாடான கோனாடு'

என்றும், கோனாடான கடலடையாதிலங்கை கொண்ட சோழவள நாடென்றும் கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளது.

கோனாடு - சங்ககாலத்தில் அரும்பி, வேளிர், முத்தரையர் காலங்களில் முகிழ்ந்து. சோழர் காலத்தில் மலர்ந்து பரந்து, சோழநாட்டோடு இணைந்து நின்றது.

சிலம்பு புலம்பிய சிறுநெறி

கோனாட்டின் வடக்கு எல்லைப்புறமாம் சோழநாட்டின் தலைநகரமாகும் உறையூரிலிருந்து தெற்கு நோக்கி மதுரைக்கு வழிநடந்த கண்ணகியார் கோவலன் கவுந்தியடிகள் மூவருக்கும் மாங்காட்டு மறையவன் காட்டிய பாலை நிலப்பகுதி வட கோனாட்டகத்ததாகுமென்பதும் அவ்வழி கடந்தால் கொடும் பாளூர் நெடுங்குளக்கரையினை அடையலாகுமென்பதும் சிலம்பு குறித்த நெறியாகும்.

இவ்வருநெறியில், வழிநடந்த கண்ணகியாரின் கட்கத்தில் இடுக்கிய துணிப்பொதியில் பொதியப்பெற்ற மணியரிச்சிலம் புகள், வழிநடை அசைவுகட்கேற்ப ஒலித்திருப்பது சிலம்பமைப் பின் இயல்பாகும். வந்தவினைவழி மதுரையை நோக்கி வழிக் கொண்ட கண்ணகியார் கோவலன் ஆகிய இருவரின் கால நிலையைக் கண்டு, குமைந்து கனிந்துருகி அறற்றும் ஒலி யினையே காற்கிலம்புகளினின்றும் அவ்வப்போது தோன்றிய மெல்லொலிகள் அறிவிப்பனபோல் ஆகியிருக்கும். வினைவழிச் செல்லும் இருவர்க்கும் வினையாகி நின்ற சிலம்பொலிகள் கூறும் நிமித்தவொலி விளங்கியிருப்பதாயின் சிலம்பு பற்றிய காப்பியமொன்று, மக்கள் காப்பியமாகவும், முத்தமிழ்க் காப்பிய மாகவும் தோன்றியிருக்க முடியுமா?

நீந்தும் நெடுவழி

மாங்காட்டு மறையவன், கோவலனிடம் மேலேகாட்டிய "நெடும்பேர் அத்தம் நீந்திச் சென்று, கொடும்பை நெடுங் குளக் கோட்டகம் புக்கால் - அருநெறி கவர்க்கும்" என்று அறிமுகப்படுத்துகிறான்.

கோனாட்டில் கண்ணகியார் கோவலுடன் சென்ற பாலை நிலப்பாதை, நடக்கத் தொலையாத தூரத்ததாய் இருந்த இயல்பினையும் வலிந்த முயற்சியுடன் தொடர்ந்து செல்ல வேண்டியிருந்த அருமைப் பாட்டினையும், வேனிற்காலக் கொடுமை யினையும், அடிகள் அறுதியிட்டுத் தமக்கே உரிய சொற்களில் அளவிட்டுக் காட்டு முகத்தான்,

"நெடும்பேர் அத்தம் நீந்திச் சென்று
கொடும்பை நெடுங்குளக் கோட்டகம் புக்கால்"

என்னும் தொடர்களில் இட்ட "நீந்திச் சென்று" என்னும் சொற்களால் ஆழ் பொருள் அமைத்துக் காட்டுகின்றார்.

நிலவழியை நடந்து செல்லலாம், கடந்து செல்லலாம், நீந்திச் செல்வதென்பதன் குறிப்பென்ன? பாதுகாப்பான இடத்தை அடைய வேண்டும் என்ற குறிப்புடன் வலிந்து முயன்று மெய்வருத்தம் பாராது விரைந்து செல்லும் அருமுயற்சியின் சிறு குறிப்பாகவே நீந்திச் செல்லுதல் என்ற நீரினைக் கடக்கும் உடல் முயற்சி போன்று, நிலத்தினைக் கடக்கும் நடைமுயற்சி அமைந்திருக்கும் அருமையினை ஆசிரியர் சொற்களால் அறிவிக்கிறார் என்பதே ஈண்டு அறியத் தக்கதாகும்.

கொடும்பை - ஊர்ப்பெயர்

உறையூரிலிருந்து கண்ணகியாரின் கட்கத்திலிட்ட பொதியிலடங்கிய சிலம்புகள், அருநெறிகடந்து கொடும்பாளூர் நெடுங்குளக்கரைக்கு வந்துவிட்டன.

மறையவன் விளக்கிய மதுரைக்குச் செல்லும் மூன்று வழிகளும் அங்கிருந்து, நெடுங்குளத்தில் தென்கரைப் பகுதியிலிருந்து பிரிந்து செல்லுகின்றன.

கண்ணகியார் அடிச்சுவட்டில் சிலம்புகாட்டும் நெறிவழியே யான் சென்று கள ஆய்வு செய்த இடங்களில் கொடும்பையும் ஒன்றாகும்.

சுட்டும் - ஓட்டும்

கொடும்பை சங்ககாலத்திலிருந்து வாழ்ந்திருந்த வேளிர்குல மன்னர்களின் தலைநகரமாகும். இது அக்காலத்தில் குன்றூர்

என்று பெயர்பெற்றிருந்தது. குன்றுகள் பல சூழந்துள்ள கரம்புநில நாட்டகத்தின் தலைமையிடமாதலின் குன்றூர் என்று அதற்குப் பெயரிட்டுள்ளார். பாண்டியர் காலக் கல்வெட்டுக்களிலும் இப்பகுதி குன்றுசூழ் நாடென்றே குறிக்கப்படுகின்றது.

பாறைநிலப் பரப்பிடமாகத் தொடரும் இப்பகுதி நீர்வளம் குன்றிய கொடுமையுடைத்ததாதலினாலும், நிலப்பாறைகளை அகழ்ந்து சென்று அரிதாகவும் சிறிதாகவும் நீரைக்காணும் அரும்பாடுடைமையினாலும், கொடும்பை நாடென்றும், கொடும்பைஊரென்றும் இது பெயர் பெற்றுள்ளது. 'கொடும்பை' என்னும் பெயர் மரூஉப் பெயரெனக் கொள்வதற்கில்லை. இஃது நிலத்தியல்பாலும் நீரின்மையாலும் சுட்டிய இயற் பெயரேயாகும்.

கரம்பை, பறம்பை, குரம்பை, படப்பை, படாகை, நஞ்சை. புஞ்சை, வஞ்சி, காஞ்சி, தஞ்சை, மதுரை, உறந்தை என்ற ஊர்ப் பெயர்களின் அமைப்பினைப் போலவே கொடும்பை என்பதும் நிலவியற்கை சுட்டிய பெயராகும். இயற்கை சுட்டிய நிலப்பெயர்களும் ஊர்ப்பெயர்களும் இவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ளதைத் தமிழகமெங்கும் காணலாகும்.

நிலவியற்கையால் பெயர்பெற்ற இயற்கை சுட்டிய இடங்களின் கால வளர்ச்சியாகும் ஆக்கச் சிறப்பிற்கேற்ப, நகர், புரம், ஊர் என்ற பெயர்களையும் கூட்டிச் சுட்டிய பெயர்களாகவே மதுரைநகர், காஞ்சிபுரம், உறையூர் என்ற ஒட்டுடன் கூடிய வளர்நிலைப் பெயர்கள் பல வழக்கில் வளர்ந்துள்ளன.

வேளிர் மன்னர் ஆட்சி தொடங்கிய தலைமையிடக் காரணத்தினால், கொடும்பை - ஆள் - ஊர் - கொடும்பாளூர் என்றாயிற்று.

வேளிர் ஆட்சிசெய்த கோன் நாட்டின் தலமையிடமான கொடும்பாளூர் இரண்டு பெரும்பிரிவாக அமைக்கப்பட்டி ருந்ததனை, கி.பி.பத்தாம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

ஒன்று, வணிகமும் வணிகரும் பெருகியிருந்த மணிக் கிராமத்து நகரம். மற்றொன்று, அரசும் மக்களும் வாழ்ந்திருந்த விக்கிரம கேசரி சதுர்வேதி மங்கலம் என்னும் பகுதியாகும். ஒன்று வணிகப் பகுதி. மற்றொன்று மக்கள் வாழ்விடப்பகுதி.

இத்தகைய பாகுபாட்டுடன் விளங்கிய வேளிரின் தலை நகரமாகிய கொடும்பாளூர் மதிளரணும், அதன் புறத்தே தொடர்ந்த ஆழ் அகழரணும், அதனையொட்டிப் படர்ந்த காட்டரணும் சூழ்ந்திருந்ததனை எஞ்சியுள்ள பகுதிகளால் இன்றும் காணமுடிகின்றது.

ஊரின் இரண்டு பெரும் பிரிவுகட்கு இடையிடையே ஆழ்ந்தகழ்ந்த பெருங்குளங்களும் பெருந்தெருக்களும் இருந் துள்ளன. ஊரின் மேற்புறம் திருப்பூதீசுவரம், திருமுதுகுன்ற நாயனார் ஈசுவரம் என்ற சிவன்கோயில்களுடன், கொடும்பை ஆலக்கோயில் என்ற பெருங்கோயிலும் இருந்துள்ளன. தாண்டவ மூர்த்திக்கொரு தனிக்கோயில் இருந்ததனைக் கல்வெட்டொன்று காட்டுகின்றது.

ஊர்க்காவல் தெய்வமாகும் பிடாரியார் கோயில், கோட்டைத்தோப்புக் கோயிலென்ற பெயருடன் பழமை நலிந்த நிலையில் இன்றும் ஊரின் தென்புறம் உள்ளது. இதுவன்றி,

ஊரின் வடக்குப் பகுதியில் வரலாற்றுச் சிறப்பமைந்த, சிவன், திருமால், நான்முகன் ஆகிய முப்பெருந்தெய்வங்கட்கு வேளிர் அமைத்த கற்றளிகள் உள்ளன. திருச்சுற்று மாளிகை யுடன் பெரிய வாயில்களும் சூழ இருந்த மூவர்கோயில்களில் நான்முகனுக்கமைத்திருந்த கோயில் காலத்தால் சிதைந்தழிந்து தரைமட்டமாகக் கிடக்கின்றது. திருச்சுமாளிகைகளும் அழிந்துவிட்டன.

மூவர் கோயில் சூழலுக்கு நேர் கிழக்கே ஐந்து தெய்வங் கட்குரிய அகவறைகளுடனமைந்த பாங்கில் கற்றளியாக எழுப்பப்பட்டிருந்த 'ஐந்தளி' இன்று அடிப்படை அளவில் பழமையின் அளவிடம் காட்டிப் புதைந்துகிடக்கின்றது. ஐந்தளியின் அடிப்படைக் கற்களில்முதல் இராசராச சோழனின் பதினொன்காம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட (கி.பி. 999) கல்வெட்டுக்கள் இருபுறமும் உள்ளன. புதையுண்டிருந்த

இத்தளியினைக் (1952-ல்) கண்டுபிடித்துக் கல்வெட்டுக்களைப் படியெடுத்துள்ளேன்.

கொடும்பாளூரில் முன்னர் நன்னிலையிலிருந்த நெடுங்குளக் கோயில், ஊரின் மேற்குப்பகுதியாக உள்ளது. காலத்தாலும் பகையாலும் அழிக்கப்பட்ட இக்கோட்டகத்திலிருந்ததும் ஒரே கல்லால் ஆக்கப்பட்டதும், தஞ்சைப் பெரியகோயிலில் உள்ள நந்தியின் உருவப் பருமனில் சிறிது குறைந்த அளவில் மிக்க வனப்புடனும் கலைப்படைப்புடனும் உருவாக்கப்பட்டதுமான நந்தி மட்டும், ஆங்கிலேயர் ஆட்சியில் இடம் பெயர்த்துக் கொண்டுவரப்பட்டு, நெடுங்குளத்தின் கீழக்கரைப்புறத்தே நிறுத்தப்பட்டுள்ளது காணத்தக்கதாகும். மூவர் கோயில் முதலாக வேளிர் காலக் கலைத்திறன் நிறைந்த கற்றளிகளின் சிதைந்த பகுதிகளும், சின்னங்களும், வனப்பமைந்த சிற்பங்களும் இன்று தொல்பொருள் பாதுகாப்புத்துறையமைந்துள்ள சிறிய பாதுகாப்பிடத்தில் இடம் பெற்றுள்ளன.

கொடும்பையின் மேற்குப் பகுதியிலேயே நெடிதான குளம் இருந்துள்ளதனை எஞ்சியுள்ள பகுதிகளால் இன்றும் அறிய முடிகின்றது. இந்நெடுங்குளமாகும் ஏரியின் கிழக்குப் பகுதியிலேயே பெரியவடிவில் கோட்டமொன்றிருந்து அழிந்துள்ளது.

அன்று கொடும்பை நெடுங்குளக்கோட்டமாகத் திகழ்ந்த அத்தெய்வத் தடத்திற்கே உறையூரிலிருந்து தெற்கே மதுரை நோக்கித் தொடர்ந்த பாலைப் பறம்பு வழிப்பாதை வந்து கூடியதென்பதனை இன்றும் உள்ள பழைய வழித்தடங்களினால் அறிய முடிகின்றது.

வலதுபக்க வழி: வெண்கடம்பு, ஓடை (ஓமை) வாகை, மூங்கில் ஆகிய மரங்கள் வளர்ந்துள்ளதும், மரல் என்று சொல்லப்பெறும் நீண்ட மடலிலைப் பூண்டு அடர்ந்து கரிந்து கிடப்பதும், நீர் வற்றிய தடங்கள் உள்ள காடும், ஆறலைக் கள்வர் வாழும் குறும்பினை அடுத்துச் செல்லும் வழியுடைதாகவும் செல்லும். இப்பகுதியினைக் கடந்து செல்லின் ஆங்கே மருதநிலப்பாங்குடைய நிலங்களில் நெற்பயிர் கரும்பு, தினை, வரகு, ஆகிய நற்பயிர்கள் விளையும் நிலங்களும் வெள்ளுள்ளி, (பூடு) மஞ்சள் ஆகிய புன்செய்ப் பயிர்கள்,

விளைவித்துள்ள நிலங்களையும், காணலாகும். தொடர்ந்து வாழை, கமுகு, தெங்கு, பலா, மா ஆகிய பயன்மிகு மரங்கள் சூழ்ந்து வளந்தரும் நிலச்சூழலோடு ஒன்றிப் படர்ந்து ஓங்கி நிற்கும் சிறு மலை கண்ணுக்குத் தொலைக்காட்சியாகத் தோற்றங்கொள்ள, அங்கிருந்து வலப்புறமாகச் சூழ்ந்து செல்லும் வழி, மதுரைக்கு வடக்காகும் வையையின் திருமருத முன்துறையைச் சென்றடைவதாகும்.

சிலப்பதிகாரம் குறித்தபடியே, இவ்வழியினை நேரில் ஆய்ந்தபோது, கொடும்பாளூரிலிருந்து வலப்பக்கமாக, மதுரைக் குச்செல்லும் வழி துவரங்குறிச்சி, நத்தம் ஆகிய ஊர்கள் வழியே தொடரும் வழியேயாகுமென்பதனை அறிய முடிந்தது.

இடப்பக்க வழி: குன்றுகள் சூழ்ந்திருத்தலால் அவற்றின் இடைநிலைத் தாழ்ந்த தடங்களும், தாழ்ந்த வயல்களும், பள்ளத்தாக்காகும் இடங்களிலமைந்த பூங்காக்களும், ஆங்காங்கே இடைப்பட்டதாகப் பரற்கற்கள் மிகுந்த வறிய தரையாகவும் உள்ள பகுதிகளிலும் காட்டிடையே தொடரும் பாதையாகவும் செல்லும் அப்பாதையிற் சென்றால், அப்பால் திருமால்குன்றம் தோன்றும். அங்குச் செல்லும் வழி இரண்டு தொடர்மலைகட்கிடையே நீண்டுள்ள பள்ளத்தாக்காகும். இதனையே பிலவழி என்பர். பிலவழியில் மூன்று சுனைகள் (பொய்கைகள்) இடையிடையே இருக்கும். அச்சுனைகள் மூழ்குவார்க்குத் தக்கபயன்தரும் புண்ணிய தீர்த்தங்களாகும். பிலத்துவழி போகுங்கால் எதிரே தோன்றும் திருமலையிலுள்ள (இருங்குன்றம்) அழகரை மனத்தால் நினைந்து வாக்கால் துதிக்க வேண்டும். அம்மலையை மும்முறை வலஞ்செய்தல் வேண்டும். ஆங்கே சிலம்பாறென்னும் தெய்வத்தன்மை பொருந்திய ஆற்றின் கரையில், கோங்கமரத்தடியில் ஓர் இயக்கி தோன்றி மயக்குவாள். (ராக்காயி) அவளது வினாவிற்கு விடை யளிப்பின், பிலத்தின் தலைப்பிலுள்ள சிறு கதவினைத் திறந்து விடுவாள். அதன்வழியே செல்லின் இரட்டைக்கதவுகளுள்ள வாயிலொன்று உண்டு; அதன் வழி சென்று அப்பால் மலைமீது நிற்கும் திருமாலின் தாளினை நினைந்தபடியே போகும்போது கோயிலின் முன்னருள்ள கருடக்கொடியிடத்தைக் காணலாகும். பின்னர்த் திருமாலை வழிபட்ட நிலையில் மதுரைக்குச்

செல்லலாகும். இது மாங்காட்டு மறையவன் கூறிய விளக்க மாகும்.

இவ்விடப்புற வழியினை இன்றுள்ள, நாடு, ஊர்கள், காடுகள், மலைகள் இவற்றை அறுதியிட்டு நுண்ணிய கணிப்புடன் கள ஆய்வு மேற்கொண்டேன். அதன் பயனாக இந்நெறியினை நன்கு அறிய முடிந்தது. இவ்வழி கொடும் பாளூரினின்றும் தெற்கே தொடரும் காட்டுப் பாதைவழியே குன்றுகட்கிடைப்பட்ட வழியாக, பிரான்மலையைக் கிழக் கிட்டுச் சார்ந்ததாக, அழகர்மலையின் வடபுறம் அமைந்த பள்ளத் தாக்கின் ஊடே சென்று கூடும் வழியாகும்.

இங்கு மேற்கே சிறுமலையின் சரிந்த மலைக்கோடும், கிழக்கே அழகர்மலையின் சரிந்த நீட்சியும் இருபுறமாக, இடைப்பட்டுத் தாழ்ந்து நீண்டு இருக்கும் பள்ளத்தாக்கே சிலம்பு குறித்துள்ள பிலவழியாகும்.

பிலவழியின் மலைத்தலைப்பே சிலம்பாற்றின் தோற்றப் பகுதியென்பதை இன்றும் காணலாகும். சிலம்பாறு மலையின் தாள்வரையில் ஊடறுத்துச் செல்லும் ஆழ்ந்த பள்ளப்போக் காகும். தடம் முழுவதும் இருபுறமும் பழைமையான முது மரங்கள் சூழ்ந்த குறிஞ்சி நிலப்பாங்கின் நிறைவினைக்காட்டும் அடவியாகும். இப்பகுதியிலேயே கதவுகளுள்ள பாதை தொடர்ந்துள்ளது. இயக்கியிருந்ததாகக் குறிப்பிடும் இடமும் இதுவேயாகும். இயக்கியர் இன்றும் மலையின் மேல்தடத் திலுள்ள சிலம்பாற்றுக் கூடத்தில், ராக்கம்மை, ராக்காயி என்ற பெயர்களால் வணங்கப்பெறுகின்றனர். இப்பகுதியில் அடிகள் மறையவன் வாயிலாக உரைக்கும் வழி மலைச்சரிவுத்தடத்தில் அமைந்துள்ளதனைக் காணலாகும். இவ்வழியே வடதிசை யிலிருந்து அழகர்கோயிலுக்கு வரும் வழியாகவும் இருக்கின்றது. எனவே சிலம்பாற்று மலைச்சரிவில் தொடர்ந்து வரும் வழியே இடப்புறவழியாகும்.

நடுவழி: செந்நெறி, ஊர்களும் ஊர்களை இடையிட்ட பலகாடுகளும் பொருந்தியவழி. இவ்வழியில் தனித்த இடத்தில் கொடிய தெய்வமுண்டு. அது மந்திர கத்தியால் விலகச் செய்தற்காகும். இவ்வழியொன்றே இடையூறுகள் பல இல்லாத நிலையில் மதுரைக்குச் செல்லும் நல்ல வழியாகும் என்னும் விளக்கம் மறையவன் கூறியதாகும்.

இவ்வழியாதென்பதனை நேரில் ஆய்வுசெய்தபோது, அதனைத் திட்டமாக அறிய முடிந்தது. கொடும்பை நெடுங் குளக்கரையினின்றும், சற்றே தென் மேற்காகச் சாய்ந்து செல்லும் இப்பாதை. சமமான நிலப்பகுதியாகவே பெரும் பான்மையும் இருக்கின்றது.

அடுத்தடுத்துச் சிற்றூர்களும், காடுகளும் அன்று இருந் திருக்கும். இன்று ஊர்கள் பல உள்ளன. காடுகள் கழனிகளா கவும், ஏரிகளாகவும், ஏந்தல்களாகவும் திருத்தப்பட்டிருப்பதுடன் தென்னஞ்சோலைகள் தொடர்த்து வளமுடன் இருக்கின்றன.

இவ்வழி, கிழக்கே அழகர்மலை, மேற்கே சிறுமலை என்ற தொலைக் காட்சிகட்கிடையே அமைந்து தெற்கு நோக்கிய பாங்கில் மதுரைக்குச் செல்லுதற்குரிய பழைய நல்லவழியே யாகும். இதன் பழமையினை இப்பகுதியில் ஆங்காங்கே காண முடிகின்றது.

வழியிடையே அமர்ந்த நல்லிடம்

கொடும்பாளூர் நெடுங்குளக்கரையிலிருந்து தெற்கே செல்லும் வழிகளுள் கீழைப்புறமுள்ள வழி பல குன்றுகளுக்கு இடையே தாக்கிற்கேற்ப வளைந்தும் நெளிந்தும் செல்லுகின்றது. இவ்வழியிடை நிலப்பகுதி சோலைகளாகவும், சுனைகள் பலவுள்ள தாகவும் இருப்பதோடு, புன்செய் நிலமாகவும் உள்ளது. இவ்வழியே மேலும் தெற்கே செல்லின் பிரான்மலையை (கொடுங்குன்றம்) மேற்கிட்டவாறு பொன்னமராவதி என்னும் ஊரை அடையலாகும்.

பொன்னமராவதியினின்றும் தெற்கு நோக்கிய சாலை மேலூர் (மேலையூர்) என்னும் ஊரின் வழியே ஆனை மலைக்குக் கீழ்பால் திருமாலிருஞ்சோலை என்று திருமங்கை ஆழ்வார் குறித்துப்பாடிய திருமோகூர் வழியே மேலும் தெற்கே சென்று வையையாற்றின் கரையிடமாகும் திருமருத முன்றுறையை அடைந்ததாக அன்று இருந்திருக்கின்றது.

இவ்வழியிடையுள்ள பொன்னமராவதியில், கண்ணகியார் ஓய்வுகொண்டு ஒரு சிறிது நாழிகை தங்கிச் சென்ற இடத்தில் நினைவுச் சின்னமாக நகரத்தார்களெனும் நாட்டுக் கோட்டைச்

செட்டியார்கள், பொன்னழகியம்மன், அழகிய நாச்சியார் அம்மன் என்ற பெயர்களால் கண்ணகியாருக்குச் சிலையமைத்து வழிபட்டு வரும் கோயில், இன்றும் பொன்னமராவதியில் சிறப்புடன் இருந்து வருவது சிலப்பதிகாரச் செய்திகட்கமைந்த வரலாற்றுச் சான்றுகளுள் ஒன்றாகும்.

இளங்கோவடிகள் இங்கு, சோழநாட்டினின்றும் பாண்டிய நாட்டினுள் செல்லுதற்கமைந்த பழைய வழிகளை நன்கு புலப்படுத்தியுள்ளார். சமணத் துறவியாராகத் திகழ்ந்த இளங்கோவடிகள், சமண முனிவர்களும் சாரணர்களும் கி.மு. முதல் நூற்றாண்டளவிலிருந்து பாண்டியநாட்டில், சிறப்பாகக் கோனாட்டில் உள்ள குன்றுகளில் தங்கியிருந்து, சமயவளர்ச்சியினையும் தமிழ்மொழி வளர்ச்சியினையும் தொடர்ந்து செய்து வந்தனராதலின் இப்பகுதியைச் சமயவழிப் பயணங்களினால் நன்கு அறிந்திருந்ததனாலேயே நிலவியற்கையினையும் சூழல்களையும் தெளிவாக உணர்த்தியுள்ளா ரென்பதனை அறிய முடிந்தது.

கண்ணகியார், அடிச்சுவடு தொடர்ந்த நெறி மறையவன் குறித்த செந்நெறியாகும் இடைப்பட்ட வழியே யாகும். இவ்வழியே வினைவழிவழிக்கொண்ட கண்ணகியார், கோவலன், கவுந்தியடிகள் ஆகிய மூவரும் வழிநடந்தனர். இடையே பகற் பொழுதை ஒருரிடத்துத் தங்கிக் கழித்தபின்னர் நடை தொடர்ந்தனர்

அழகர்மலை, சிறுமலை ஆகிய தொடர்மலைகளின் தென் முகப்புக்கள் தொலைக்காட்சியாக முடியும் எல்லைக்கண் வந்துவிட்டனர். இனி இங்கிருந்து வையை யாற்றங் கரைக்கு வழிக்காணல் வேண்டும்.

பகற்பொழுதின் கடுங்கதிர் வெம்மைக்கு ஆற்றாத கண்ணகியாருடன் கோவலன் கவுந்தியடிகள், அங்கிருந்த வேட்டுவர் குறும்பின் ஒருபுறம் இருந்த ஐயைக் கோட்டத்தினை (கொற்றவைக்கோயில்) அடைந்தனர். வெயில் தணியுமளவும் அக்கோயிலின் ஒருபக்கம் இருந்தனர். உடன் வந்த கவுந்தியடிகள் சமணத்துறவிய ராதலின் அப்புறம் ஓரிடத்து அமர்ந்து இளைப் பாறினார்.

நிகண்டுகட்கு அடிகள் தந்த ஆதாரம்:

இல்லத்தின் திண்ணையினையே பள்ளியாக்கித் தமிழ்ப்பயிர் வளர்த்த ஆசிரியர்கள், தமிழ்ச் சொற்களைப் பொருள் திறமறிந்து வழங்குதற்கு ஏற்புடையதாக, ஒருசொல்லுக்குப் பொருந்திய பல சொற்களைத் தொகுத்து மாணாக்கர்கட்கு மனப்பாடம் செய்தற்கு ஆக்கித்தந்தனர். இம்மொழிநிலை முயற்சியே நிகண்டுகளாகப் பிற்காலத்தில் உருப்பெற்றன.

இந்நிகண்டுகள் உருவாக்கம் பெறுதற்குரிய அடிப்படைத் தோற்றமாகவும், ஒருசொல்-பன்மொழித் தொகுப்பின் தோற்ற மாகவும் இளங்கோவடிகள் நூலில் எழுதிக்காட்டியுள்ளார்.

நாடுகாண் காதையுள் கவுந்தியடிகள் அருகன் புகழ்கூறும் நிகழ்ச்சியில், அருகன் என்ற தெய்வப் பெயருக்குரியதாக நாற்பத்தொன்பது பெயர்களை அணி பெறக் காட்டியுள்ளார்.

வேட்டுவவரியில், கொற்றவைக்கமைந்த பதினாறு பெயர் களைத் தொகுத்துப் பராவல் காட்சியாகப் பதித்துள்ளார்.

இவ்வகை முறையிலேயே பெயர்வகையானும் பிறவாறும் நிகண்டுகள் தோன்றியுள்ளன என்பது தெளிதற்காம்.

தொல்காப்பியரே ஒருசொல் பன்மொழியாம் தொகுப் பினைச் சிறப்பாக உரிச்சொற்கண்ணும் பிறவாறும் நூற்பா வமைப்பில் நுதலிக்காட்டினராயினும், தெளிநிலைத் தொகுப் பாக விளக்கம் செய்தவர் இளங்கோவடிக ளென்பதனைக் குறிப்பிடலாம்.

ஐயைக் கோட்டத்து அமர்ந்த சிலம்பு

ஐயைக் கோட்டத்தில் ஒருபுறம் அமர்ந்திருந்த கண்ணகியின் எதிர்கால நிகழ்வினை, ஆவேசம் உற்ற பூசைமகள் சாலினி என்னும் வேட்டுவ முதுமகள் வாயிலாக ஆசிரியர் அறிமுகப் படுத்துகின்றார். கண்ணகியார் தெய்வநிலைபெற்ற பின்னர்க் கோட்டம் காண வந்துற்ற பன்னாட்டு மன்னரும், தங்கள் தங்கள் நாட்டகத்துக் கண்ணகிக்குக் கோட்டமும் விழாவும் குறித்துச் சென்றதனை நேரில் கண்டுவந்த அடிகள் நிமித்த

முன்னமாகச் சாலினி வாயிலாகத் தந்துரை செய்துள்ளா ரென்பது நுணுக்கமாக அறியப் பெறுவதாகும்.

ஐயைக் கோட்டத்திலொருபால், யாரும் காணாத இடத்தில் கோவலனோடு அமர்ந்திருந்த கண்ணகியாரின் இடுப்பகத் திலிருந்து இறக்கி வைக்கப்பட்ட துணிப்பொதியில், பரலொலி அடங்கிப் பதுங்கி இருந்த சிலம்புகள், தாம் அரற்றொலி குன்றி யடங்கிய நிலையில், வினைவழிப்பட்டு நிற்கும் கண்ணகி யாருக்கு நேரவிருக்கும் விளைவினைச் சாலினி வாயிலாக உரையொலி செய்ததோ என்னும் புதிய கருத்தும் உருக் காட்சியாக உணர்த்துதற்காகும்.

கூடல் மாநகரில்

மாரி மாறிய புலன்

மழை வளங்குன்றி கறடும் கரம்புமாகக்கிடந்த நிலப்பகுதியே கொடும்பாளூரிற்குத் தெற்கே தொடருவதாகும். இங்கு மாரி' வளம்பெறா வில்லேர் உழவராகிய வேட்டுவரின் வாழ்க்கையே அரிதாக அமையும்.

கண்ணகியாரின் சீரடிகள் வழியிடை இருந்த வேட்டுவச் சேரியின் புறத்திலே ஓரிடத்தில் பொருந்தி நின்றன. அக்காலம் வேனிற்காலம்; கதிரவன் கொடுமையுடன் காயும் காலம். எனவே உடன் செல்லும் கவுந்திடிகள் பயணநேரத்தினை மாற்றியமைக் கின்றார். அதற்குக் காரணம், கடுங்கதிர் வேனிலைக் கண்ணகியார் பொறுத்தற்கியலாது தளர்ந்ததேயாம். இதுவரையில் பகற் காலத்தில் நாளொன்றிற்கு ஒரு காதம் நடந்து வந்த திட்டத் தினின்றும் மாற்றிய திட்டமாக, நெடிய வழியினை இரவுக் காலத்தில் நடந்து கடப்பதென்று அமைத்தார். அத்திட்டத்திற் கேற்ப அக்கால இரவு வளர்பிறை நிலவொளி நாளாகவும் இருந்தது. கவுந்திடிகள் குறித்தபடியே இரவுக்கால நிலவொளியில் மதுரை செல்லும் வழியில் நடக்கின்றனர். மதுரை தொலைதூர மல்லவென்பதைக் கோவலன் கருதியிருப்பான். மனத்தில் சிறிது தெளிவு தோன்றியிருக்கும். அப்போது அவ்வழியே, கொற்ற வையின் போர்க் கோலத்தைச் செங்கோட்டு யாழிசையோடு பாடும் இசையொலி கேட்கின்றது.

கலையில் களைப்பு மயங்கியது

யாழிசையில் வல்லவன் கோவலன்; யாழ்க்கலைஞன். இதனைக் கானல் வரியில் அடிகள் நன்கு அறிவிக்கின்றார். கலைஞனின் உள்ளக் கவலைக்கு மருந்து கலைதான். யாழிசை

கோவலனின் உள்ளத்தில் ஓர் உணர்வு தந்தது. அவன் ஒன்றினான் அப்பாடற் கலைஞருடன். அவர்கள் சத்திவழிபாட்டினராகிய அம்பணவர் என்பவர்கள் யாழ்ப்பாணரில் ஒரு திறத்தார். கலையுணர்வு அவன் களைப்பை மாற்றியது; கவலையைத் தாழ்த்தியது. கோவலனும் அவர்களோடு கூடிக்கொண்டான். யாழொன்றை வாங்கி முறைபெற நரம்புகளைச் சரிசெய்து இசைத்தான். இசையுடன் பாடினான். அது அவன் வழி நடைக்குச் சத்தாக அமைந்தது. கண்ணகியாரும் கவுந்தியாரும் அந்த யாழினர் வழியே பின் தொடர்ந்தனர். கோவலன் யாழிசைத்துப் பாடிய பாடல்கள் இன்பத் தெளிவில் எழுந்தவையல்ல. துன்பத்தில்கலைக் கோலமிட்ட அழகிய தளிர்ப்பு. இதைக் கட்கத்திலிட்ட துணிப்பொதியினுள்ளிருந்த சிலம்புகள் கேட்டு வேதனைச் சிரிப்பொலியாகப் பரலொலி இட்டுக் சலித்தன என்றே கற்பனை செய்ய முடிகின்றது.

நாடகச் சிலம்பு — 2

மேலேகண்ட காட்சிகளை இளங்கோவடிகள் கொடும்பாளூரிலிருந்து செம்மையான பாதையில் சென்ற கண்ணகியார் கோவலன் கவுந்தியடிகள் ஆகிய மூவரையும் கொண்டு அமைத்துக்காட்டுகின்றார்.

வேட்டுவச் சேரி துர்க்கைக் கோயில் நிகழ்ச்சிகள், வேட்டுவ மூதாட்டி கண்ணகியைப் பார்த்துக்கூறும் நிமித்தங்கள்,

வழியிடையே கோவலன், யாழிசையாளருடன் கூடி யாழிசைபாடிச் செல்லும் நிகழ்ச்சி ஆகியவைகள்,

அடிகளாரின் காப்பியக் கட்டுக் கோப்புக்கு ஏற்புடைய நிகழ்ச்சிகளாகவும், கலைத்திறத்தில் நாடக இணைநிலை இழைப்பாகவும் அமைந்து நூலின் நெடிய செய்தித் திறத்திற்கு மெருகூட்டும் உருக் காட்சிகளாக அமைந்திருப்பது அறியத் தக்கதாகும்.

கொற்றவையின் கோலம் பாடும் பாணருடன் கூடி யாழிசைத்துச் சென்ற கோவலனுக்குக் கண்ணகியாரின் வழிநடைத் தளர்ச்சி உறுத்தாமலில்லை. எனவே பாணரிடம், இன்னும் எத்தனை காவதத் தொலைவில் மதுரை உள்ளது என்று

கோவலன் வினவுகின்றான். உளம் நெகிழ்ந்து வருத்திய ஆர்வத்தின் வழியெழுந்த வினாவாகும் இது.

வேனிற்காலத்து முன்னிரவு இளங்காற்று மெல்லென வீசுகின்றது. துன்பமே உருவாகி நடந்த கோவலனுக்குக் காற்றின் நலனை உணரும் தேற்றமில்லை. இதனைப் பாணர்கள் அறிவார்களா! எனவே,

"மதுரைத் தென்றல் வந்தது காணீர்"

மதுரை மூதூர் அருகிலுள்ளது, தொலைவினைக் கடந்து வந்து விட்டோம் என்று தென்றல் உணர்வைக்காட்டிக் கூறுவதாக அடிகள் அறிமுகம் செய்கின்றார்.

வைகறையில் வையைக்கரை

அரசுக்கமைந்த முரசொலியோடு மக்களின் பேச்சொலியும் கூடியெழுந்த வைகறைப் பொழுதில் கண்ணகியாரின் அடிச் சுவடுகள் வையையாற்றின் வடகரைப் பகுதியில் பதிந்து தொடர்ந்தன. கண்ணகியார் கோவலன் கவுந்தியடிகள் மூவரும் கரையிலமைந்த சோலைக்கு வந்துவிட்டனர்.

கற்புக்கடம்பூண்ட பொற்புடை நங்கை கண்ணகியாரின் காலடிச் சுவடுகளை, வையையெனும் பொய்யாக் குலக்கொடி, கண்டனள் போலத் தாய்மை யகத்தால் கரையெனும் கையி னால் தாங்கினாள். பேசவாயுண்டா? பிதற்றலாகுமா? இவை ஆற்றுக்கு அமைந்த ஆற்றலாகுமா? இல்லையே! ஆயினும் அடிகள் ஆற்றின் வழி அற்புதமாகக் கற்பித்துக் காட்டும் சோகத் திறன் காணத்தக்கதாகும்.

வையையெனும் தாய், கண்ணகிக்கு உற்றதை நினைந்து இனி வருவதை அறிந்து எடுத்துச் சொல்லித் தடைசெய்தற் காற்றாமையால் இயன்ற செயல்களால் மாற்றங்காட்டு கின்றாள், நிமித்தங்காட்டி நினைவுறுத்துகின்றாள்.

"தையற் குறுவது தானறிந் தனள்போல்
புண்ணிய நறுமல ராடை போர்த்துக்
கண்ணிறை நெடுநீர் கரந்தனள் அடக்கி"ப்

புலம்புகின்றாள். ஆற்றின் புலம்பலைக் கண்ணகியார் அறிய வில்லை. அவரது இடுப்பிடைத் துணிப்பொதியினுள் மறைந்து நின்ற சிலம்புகள் அறிந்தன. வினைவழிப்பட்டு வேதனையோடு தொடரும் சிலம்புகளாதலின் அவை கூடிப்புலம்பின என்பதன்றி வேறென்ன கூறவியலும்!

கண்ணகியார் கோவலனுடன் வையை யாற்றைக் கண்ணால் கண்டார். இருவரும் "புனல் யாறன்றிது பூம்புனல் யாறெனத் - தொழுதனர்".

வாழ்வுக்கு வளந்தரும் ஆற்றைப் போற்றித் தொழும் வழக்குத் தமிழ் வழக்கு. இதனைக் கண்ணகியார் கோவலன் வழியே நாட்டிக்காட்டிய அடிகளார், வையை ஆற்றை மூவரும் மரப்புணை வழியே கடந்து தென்கரையினை அடைந்தனர், என்று தெளிவு செய்கின்றார். இத்துறையே அருந்துறையாகும். திருமருத முன் துறை என்னும் மருதமரச்சோலைகள் சூழ்ந்த இடமாகும். (மரப்புணை — மூங்கில் போன்ற மரங்களைப் பிணைத்தமிதவைக் மரங்களை வலிய-கயிறுகளால் இணைத்துப் பிணைத்து ஆற்றினிடையே அமைக்கப் பெறும் குறும்பாதை)

வையை ஆறு

நிலையில் திரியாது வளந்தரும் காவிரியாறு பாய்ந்து நலம் பெருக்கும் நாடு, காவிரிநாடு என்று ஆற்றின் பெயராலேயே அமைந்தது. அதுபோன்று வையை ஆறு வளம்பெருக்கும் சிறப்பினால் பாண்டியநாடு பெயர்பெறுதற்கில்லை. காரணம் வையையாற்றின் தோற்றம், தொடர்நிலை, கிளைநிலை, சங்கமம் ஆகிய இயற்கையமைப்புடன், ஒடிவரும் நிலப்பரிப்பு ஆகியவை அனைத்தும் பருவகால மழைக்குரிய நீர்ப்பெருக்கன்றிப் பிறிதொன்றினால் வளம்சுரக்காத வானாறு எனும் கானாறாகவே அமைந்திருப்பதுவேயாகும்.

இதனை, நாட்டின் பெருமைக்குக் குறைவுவராமல் இலக்கிய நுணுக்கத்துடன் சொல்லாட்சி செய்து காட்டியவர் இளங்கோவடிகளாவர். உட்பொருள் நுட்பத்தினை வலிந்து பொருள் காணாமல், வழக்கியல்பால் நோக்கின் இது புலனாகும்.

"புனல்யா றன்றிது பூம்புனல் யாறு"

என்பதே அவ்வடியாகும். இதன்பொருள். நீர் நிறைந்து வரும் ஆறன்று இந்தயாறு. அற்பமான நீர்த்தடமுள்ளயாறாகும்'' என்ற அளவில் காணவுள்ளது.

வையை ஆற்றின் தோற்றம், பாண்டியநாட்டின் மேற்குப் பகுதியாகும் கம்பம் பள்ளத்தாக்கிலுள்ள வருஷநாட்டின் புறமாகச் சூழ்ந்து இணைந்துள்ள ஆண்டிப்பட்டி மலை மேகமலை ஆகியவற்றின் மேற்கு முகப்பிடச் சரிவில் அருவிகளாக உருப்பெற்றுளது.

இம் மலைத்தொடர்ப் பகுதியின் முகப்பாகச் சுருளி மலைத் தொடரும் மேலைமலைத்தொடரும் இணைந்து, வர்ஷநாடு என்ற பெயரமைப்பில் கம்பம் பள்ளத்தாக்கு அமைந்துள்ளது. இப்பரந்த நாட்டின் கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய திசைகளில் குதிரை லாட வளைவுடன் மலைத்தொடர்கள் செறிந்து தொடர்ந்து ஆங்காங்கே உயர்ந்து செங்குத்தான முகடுகளுடன் அழகிட்டு நிற்பதைக் காணலாகும். வர்ஷநாட்டில் மேகமலைச் செறிவிடையே சிற்றருவிகளாகத் தொடரும் வையையின் வழித்தடமாகும் கம்பம் பள்ளத்தாக்கில், பல சிற்றாறுகள் வந்து கூடுகின்றன. வையை அவற்றை ஏற்றுக்கொண்டு வடக்கு நோக்கி வருகின்றது. இங்கு வையையில் கூடும் சிற்றாறுகளில் வீரவனாறு, சுருளி ஆறு ஆகிய இரண்டும் பெயர் சுட்டிக்கூறப் பெறுவனவாகும். இச்சிற்றாறுகளில் பருவகால மழையினால் நீர்ப்பெருக்கு அமைதலன்றி மற்றைய காலங்களில் அருகிய நீரோட்டம் உடைதாகவே இருக்கின்றது. ஆறுகள் நிலவும் இத்தாக்குப் பகுதி பெரும்பான்மையும் களிமண் சேறுடன் கூடிய உளையும், கோரைப்புற்களின் செறிவும், புதர்களின் அமைவுமாகவே இயற்கைவளம் அமைந்திருப்பதால், எங்கும் சேற்று நீர்த்தடங்கள் பரவியதாகவே அமைந்துள்ளது. சூழ்ந்துள்ள அடிவாரப்பகுதிகளில் வானளாவிய மரங்களைக் கொண்ட காடுகள் தொடர்ந்துள்ளன. இப்பகுதியில் யானை, கரடி, சிறுத்தைப்புலி போன்ற கொடிய விலங்குகள் வாழ் கின்றன. இவற்றிடையே சிலப்பதிகாரம் குறிக்கும் வருடை என்னும் ஒருவகை ஆட்டினம் அருகி வாழ்கின்றது. இவற்றை யெல்லாம் கொண்டு பார்க்கும் போது, இங்கு வையை நிலை யான சுவடுபெறாமல் ஒரு காட்டாற்றின் தகுதியாகவே இருப்பது அறியத்தக்கதாகும்.

வையைக்கு நீர்வளம்

வீரவனாறு தோன்றும் இடத்திற்குத் தெற்கே சிலகல் தொலைவுக்கு அப்பால், மேற்குமலைத்தொடரில் அயிரிமலையில் பெரியாறு தோன்றுகிறது. வளமான ஊற்றருவிகளால் பெருக் கெடுத்து வரும் இவ்வாறு, மேற்கு நோக்கி மலையாள நாட்டில் புகுந்து வள்ஞ்செய்து அரபிக்கடலில் கூடுகின்றது.

கம்பம் பள்ளத்தாக்கு நீரில்லாக் குறையால் வளமற்றிருந்த தனைச் சீர்திருத்தும் முயற்சியினை அன்றைய ஆங்கிலேய அரசு மேற்கொண்டது. அது பெரியாற்று நீரை மலையினைக்குடைந்து கம்பம் பள்ளத்தாக்கில் பாயுமாறு செய்தது. குறுகிய மலையிடையே குடையப்பட்ட சுரங்கவழி 2500 அடி நீளமுள்ளது. அதன்வழியே வேகமுள்ளதாகப் புகுந்து வரும் பெரியாற்று நீர், வெளிமுகப்பில் மலைச்சரிவுத் தடப்பள்ளங்களின் வழியே பாய்ந்து அலைத்து ஓடி, கம்பம் பள்ளத்தாக்கில் மேலைக்கூடலூருக்குத் தெற்கே சகதிநிலக்காட்டிடையே ஓடுகின்றது. இவ்வாறமைந்த நீரோட்டத்தினை முல்லையாறு என்று குறித்தனர். சுரங்கக்கால் நீரோட்டமாக முல்லையாறு சென்று வீரவனாற்றில் கலந்து நிலையான நீரோட்டத்தினைத் தருகின்றது. நீரோட்டம் பெற்ற வீரவனாறு, அருவியாகத் தொடர்ந்து சிற்றாறாக உருவெடுக்கும் சுருளியாற்றில் கலக்கின்றது. நீர்வளம் பெற்ற கருவியாறு வையை ஆற்றிற்கூடி வையையை உருவாக்கியதோடு, வற்றாத நீரோட்டத்தினையும் தருவதாக இருக்கின்றது.

இவ்வாறான கூட்டுறவால் வையை ஆறு இன்று நீர்வளம் பெற்றதாய் வடகிழக்காகச் சென்று, தேனி என்னும் ஊருக்கு முன்னர்க் குன்னூர் (குன்றூர்) என்னுமிடத்தில் வடக்கே தொடர்ந்து எழுந்துநிற்கும் பழனிமலைத் தொடரடிவாரத் தாக்கத்தினால், கிழக்கு நோக்கித் திருப்பங்கொண்டு, பாறைத் தடங்களில் வளைந்து நெளிந்து பாய்ந்து ஓடுகின்றது. இங்கு பருவகாலத்தில் வையைக்கு நீர்மிகுக்கும் ஆறுகளாகப் பாம்பாறும், அய்யம்பாளையம் ஆறும் கூடுகின்றன. இவ்வாறான கூட்டுறவால் வையை அகன்ற பேரியாறாகக் காட்சியளிக்கின்றது. பெரியாற்றுச் சுரங்கக்கால் வழி நீரால் ஆண்டு முழுவதும் தொடர்ந்த சீரான நீரோட்டம் இருக்கின்றது.

பள்ளத்தாக்கினுக்கு அரண்போன்று சூழ்ந்து நிற்கும் மேற்குத் தொடர்ச்சி மலை, சுருளிமலை, மேகமலை, ஏழுமலை ஆகிய மலைகளில் பருவகாலங்களில் விடாமழைபெய்யின் வையை கொடுமையாகப் பெருகிப் பெருவெள்ளமிட்டு அலைத்து அழிவுகளைச் செய்யும் பேயாறாக மாறி நிற்கும். மேற்கே மழை நின்ற அளவில் ஆற்றில் வெள்ளம் சில நாளில் குறைந்து பழையநிலையில் நீரைக்குழித்தடங்களில் நிரப்பி நிற்கும். நீருடைத்தடங்களில் புல்லும் புதரும் ஆற்றின் நடுவே முளைத்து நிற்கும்.

இன்றும் இவ்வாறமைந்த நிலையிலுள்ள காட்டாற்றின் படிமை பொருந்திய வையையைச் சான்றோராகிய அடிகள் "புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி", "வையை யென்னும் பொய்யாக் குலக்கொடி" என்று செய்யா என்னும் வாய்பாட்டுச் சொல் நயத்தால் புலப்படுத்துதல் அறிந்து இன்புறத்தக்கதாகும்.

பாண்டியரின் தலைநகரைச் சார்ந்து ஓடும் ஆறாதலின் எதனையும் நிறைவாக வனைந்து புனைந்து பாடல்களில் உருவாக்கம் செய்துகாட்டும் புலவர் பெருமக்களின் புலமைக்கு வையை இலக்காகி இருப்பதை இலக்கியங்களால் அறியலாம். பருவகாலப் புதுநீர் வரவினைப் பரிபாடல் என்னும் இலக்கியம் நன்கு புலப்படுத்துகின்றது. பருவகாலப் புது நீர்வரவு இன்றும் தொடர்வதேயாம். அதுவன்றி வற்றா வளத்திற்கு வையைக்கு இயல்பில்லை. அதுஓடிவரும் தரைத்தடமும் மாற்றம் பெறுதற் கமையாத பாறைத் தடமாகும்.

மண், மலை, தடம், பருவகாலம் ஆகியவற்றில் மாற்றமில்லை. இயற்கையின் ஏற்றமே அதுதான். ஆனால், ஆங்காங்கே வாழ்ந்திருந்த மனிதர்கள், அவர்கள் செயல்கள் மாற்றம் பெற்றுள்ளன. மாறிவருகின்றன. இதுதான் காலத்தின் கோலமாகும்.

மருதந்துறை — (மருதை)

சிலப்பதிகாரத்தில், வையையாற்றினைக் கடந்து மதுரையை அடைவதற் கமைந்த ஆற்றுக் கரை முகப்புத்துறை,

"வருபுனல் வையை மருதோங்கு முன்துறை"

என்று குறிக்கப்பட்டுள்ளது. இத்துறைவழியே மதுரையின் கிழக்குப்பகுதியில் கண்ணகியார் அடிச்சுவடு நிலவியது என்பதனை,

"தேமலர் நறும்பொழில் தென்கரை யெய்தி",
"புறஞ்சிறை மூதூர் புக்கனர்"

என்ற அடிகளால் அடிகள் அறிவிக்கின்றார்.

மருதமரங்கள் செழிப்புடன் வளர்ந்தோங்கிச் செறிந்து அழகிட்டு நின்ற வையை ஆற்றங்கரை, இயற்கை அமைத்திட்ட எழிலுடன் தோற்றங்கொண்டிருந்ததால் மக்கள் வழக்கில் 'மருதந்துறை' என்று குறிப்பிடப் பெற்றிருக்கின்றது. இது செய்யுள் வழக்கில், 'மருதோங்கு' முன்துறை என்று கூறப்பட்டுள்ளது.

மருதை—மதுரை

தமிழகத்தில் ஆற்றங்கரைச் சிறப்பால் குறித்த பெயர் அதனைச் சார்ந்த ஊரிற்கும் பெயராகி வந்துள்ளதனைக் காண முடிகின்றது. மாணிக்கவாசகர் போற்றிய பெருந்துறையை இதற்குச் சான்றாகக் காணலாகும். மற்றும் ஆற்றின் பெயரே ஊரிற்கும் ஆகியுள்ள பழமையும் உள்ளன. காவிரி, வெட்டாறு. கொள்ளிடம் என்ற ஊர்ப்பெயர்கள் இதனைக்காட்டுகின்றன.

இவ்வாறமைந்த ஊர்ப்பெயர்களைப் போன்றே பண்டைய பாண்டிய நாட்டின் தலைநகர் மருதமரங்கள் வளர்ந்தோங்கிய சூழலுடன் அமைந்திருந்ததனால் மதுரையின் பழம்பெயர் மருதை என்று கூறப்பட்டிருக்கலாகுமென்று கருத இடனுளது. அன்றி, அன்று இரு கரைப்பகுதிகளிலும் மருதமரங்கள் செறிந்த புறநகர்ப்பகுதியிலமைந்த ஆற்றங்கரைகள் மருதந்துறை என்று குறிக்கப்பட்டு, பின்னர் மக்கள் வழக்கில் மருதை என்று (மருதந்துறை — மருதை) ஆகி இருக்கலாம்.

சோழநாட்டில் காவிரியின் தென்கரையிலுள்ளதும் முத்தரையர் காலப்பழமையுடன் விளங்குவதுமான 'சந்திரலேகைச் சதுர்வேதி மங்கலம்', மக்கள் வழக்கில் குறுகிச் செந்தலை என்று குறிப்பிடப்பெறுகின்றது. இதைப்போன்றே மருதந்துறை மருதை எனக் கூறப்பெற்றிருக்குமென்பது சித்திக்கத்தக்கதாகும்

இன்றும் மதுரை இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வாழும் மக்கள் மதுரையை, மருதை என்றே வழங்குவதைக் காணலாகும்.

எனது கருத்தின்படி, ஆற்றின் துறையுடன் அமைந்த கிழக்குப் புறநகர் ஆற்றங்கரைத்துறை மருதை என்றும், அகநகர் மதுரை என்றும் அன்று குறிக்கப்பட்டிருந்ததென்பதும், பின்னர் நகரின் பெருக்கத்தில் மருதை மறைந்து மதுரை, 'ஓங்குசீர் மதுரை', 'மாநகர் மதுரை',

''புத்தேள் உலகம் கவினிக் காண்வர

மிக்குப்புகழ் எய்திய பெரும்பெயர் மதுரை'' (மதுரைக் காஞ்சி) என்றெலாம் இலக்கியங்களில் புகழப்பட்டுள்ளது என்றும் கொள்ளமுடிகின்றது.

பழைய பெயர்

மதுரை என்ற பெயர்வழக்கிற்கு முன்னர் ஊரிற்கமைந் திருந்த பழைய பெயர் கூடல் என்பதேயாம். கடல்கொண்ட தமிழகப் பகுதியினின்றும் தப்பிப் பிழைத்தார் கூடிய வையைக் கரையிடம் 'கூடல்' எனக் குறிப்புப்பெயரால் குறிக்கப்பட்டு, காஞ்சி நூலிலும் வழங்கப்பட்டுள்ளது. மதுரைக்காஞ்சியில் மதுரையின் பழம்பெயர் கூடற் காஞ்சி என்பதேயாம். நூலாசிரியர் மதுரை என்ற பெயரை நூலில் குறிக்கவில்லை. கூடல் அரசுக்குரியதாக நாற்புற வாயில்களுடன் கோலப்பட்ட போது அது நான்மாடக்கூடல் எனச் சிறப்புப்பெயரால் வழங்கப் பட்டுள்ளது.

மதுரை

கி. பி. எட்டாம் நூற்றாண்டு முதலாகத் தோன்றிய பாண்டியர் காலக் கல்வெட்டுக்களில்

''மதுரோதய வளநாட்டு, மாடக்

குளக்கீழ் மதிரை''

என்று குறிக்கப்பட்டுள்ளது. முதற்பராந்தக சோழனது கல்வெட்டு களிலும், ''மதுரை கொண்ட கோப்பரகேசரி வர்மன்'' என்று

தொடங்கும் தொடரில் மதுரை, மதுரை என்றெ கூறப் பட்டுள்ளது.

இவ்வாறு பாண்டியர் கல்வெட்டுகளிலும், பராந்தகன் கல்வெட்டுக்களிலும் மதுரை குறிப்பிடப்படும் இடங்களில் ஒரு சிலவற்றில் 'மதுரை' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறுள்ள பெயர் நிலையினைத் திரிபு, மாற்றம், பிழை என்று கருதாமல், நுண்பொருள் காணல் அறிஞர் கடனாகும். இப்பெயர்ச்சொல், வழக்கில் தேய்ந்து குறைந்த நிலையில் மதிரை என்ற அளவில் நிலைத்துள்ளதா என்பது ஆராயத்தக்கதாகும்.

''மதிரை கொண்ட கொப்பரகேசரி''
(தெ. கல். தொ. 5 கல். 524-526)

மற்றும் மதுரை உள்ள வளநாடு ''மதுரை உதயவளநாடு'' என்று கல்வெட்டுக்களில் குறிப்பிடப் பெறுவதால், மதுரைதோன்றி யுள்ள வளநாடு என்ற விளக்கமும் பெறமுடிகின்றது. எனவே பழந்தமிழக வழக்கில் மதுரை என்ற இடப்பெயர் வேறொரு விரிவான வடிவில் குறிப்பிடப் பட்டிருக்க வேண்டுமென்ற அளவில் கூறி மேற்செல்லுகிறேன்.

மதுரை—வைகறை

இரவுக்காலத்தில் மதுரையை நெருங்கிய தொலைவில் அடைந்த கோவலன் கண்ணகியார் கவுந்தியடிகள் ஆகிய மூவரும் தொடர்ந்து வையையாற்றைக் கடந்து, வலிய மதிலால் சூழப்பட்ட மதுரை அகநகரை வலப்புறமிட்ட பாங்கில் நடந்தனர். காவற்காடு சூழ்ந்த அகழியின் பக்கமாகச் சென்று கோட்டையின் கீழ்த்திசை வாயிலுக்குப் பக்கமாக ஓரிடத்தில் தங்கினர்.

அதுபோது கீழ்வானில் உதயக்கொழுந்து முனை எழுந்து மண்ணுலகை மலரச் செய்யவும், அதுவரையில் உலகை மறைத்துக் கிடந்த இருள் வானவிளிம்பில் ஒட்டிக்கறையாகி நின்று கறையவுமாகிய வைகறைப் பொழுது வந்தது.

புறஞ்சிறைப் பொழில்

மூவரும் இரவு கழியுமளவும் தங்கியிருந்த இடம். மதுரை அகநகர் கீழை வாயிலுக்கு முன்னர்ப் பக்கவாட்டில் இருந்த மலர் நிறைந்த மரங்கள் சூழ்ந்த இடமாகும்.

தவத்தோராதலின் கவுந்தியார் கண்ணகியார் கோவலன் இருவரையும் ஓரிடத்தமர்த்திய பின்னர் அப்பால் தனித் தோரிடத்தில் தங்கினார்.

சமணத் தவத்தோ ராயினும் கவுந்தியடிகளின் தாய்மை உள்ளம் இருவரின் வினைப்பயனை, நினைத்து நின்றது. மதுரைக்குக் குறித்தபடிவந்தானாயினும் கோவலன் சிந்தனையில் தெளிவு காணவில்லை, கணவனுடன் வந்தாராயினும், வழி நடந்த களைப்பினால் கண்ணகியார் அயர்ந்து கண்வளர்ந்திருப்பார். ஆயினும், கண்ணகியார்க்குந் தன்னைவைத்து வரவிருக்கும் தீவினையை நினைத்து ஒடுங்கியதைப்போல் சிலம்புகள் துணியுள் அடங்கிக் கிடந்திருக்கும் என்பதும் கற்பனைக் கண்ணால் அறிதற்காகும்.

மதுரை நகர்ந்ததா?

பண்டைய மதுரைமாநகர், இன்றிருக்கும் பகுதிக்குத் தெற்கே, திருப்பரங்குன்றத்திற்குக் கிழக்கு வரையில் பரவியிருந்தது என்று வரலாற்றறிஞர் மா. இராசமாணிக்கனார் ஆய்வுரை கண்டுள்ளார், 'வையை ஆறு தண்பரங்குன்றத்துப் பக்கமாகச் சென்றது' என்ற கருத்தினைப் பாவலர்கள், பரிபாடல் தரும் வையையாற்று வருணனைகளைக் கொண்டும் பகருவர்.

இவ்விரண்டு செய்தியும் அடிப்படையில் ஒவ்வோருண்மைகளைக் கொண்டனவாயினும், இக்கருத்தினை வெளியிட்டோர் காட்டிய சான்றுகள் பொருத்தமாக இல்லை.

கி.பி. 1945-ல், தொடங்கிய எனது புகார் வரலாற்றாராய்ச்சிப் பயணம் தொடர்ந்து பதின்மூன்று ஆண்டுகளைக் கடந்த அளவில் கி.பி. 1958-59-ல் மதுரையில் முடிந்தது. அது போது, மதுரை வையை ஆகிய இரண்டு வரலாற்றுத் தடங்களின் பழைய இடச்சுவடுகளை ஆராய முற்பட்டேன்.

திருமாலிருஞ்சோலை யெனும் மோகூருக்குத் தென்நோக்கில், வையையில் திருமருதமுன்துறை அமைந்திருக்க வேண்டு மென்னும் கருத்தினைக் கொண்டு, பழைய மதுரையின் அமைப்பிடத்தினை அறிதல் வேண்டும். அந்நோக்கிற்கு

இலக்காக வையைத் தென்கரை முன்துறையும் கரையைத் தொடர்ந்து புறநகர் மருதையும் அமைகின்றன.

பழமையானதும் கோட்டை கொத்தளங்களுடன் இருந்தது மான நகர், நாயக்கமன்னர்கள் ஆட்சியில் புதியவடிவில் விரிவு செய்யப்பட்டுள்ளது.

மேல்நாட்டாரின் பீரங்கிப்படையெடுப்புக்கு இலக்கான மதுரையின், கோட்டைகள் இடிக்கப்பட்டும், அகழிகள் தூர்க்கப் பட்டும் போயின.

வெள்ளையர் ஆட்சியில் வெளியிடப்பட்ட மதுரையைப் பற்றிய செய்திக் குறிப்புப்படி, மதுரையின் அகழிகளுள் ஒன்று இன்றுள்ள மதுரைத் தலைமைப் பேருந்து நிலையத்திற்குக் கிழக்கே உள்ள சாலையின் அமைப்பில், அன்று ஆழ்நிலையில் இருந்திருப்பதனையும், அப்பகுதியில் திண்மையானதும் மிகப் பெரியதுமான மரக்கதவுகளுடன் கூடிய மேற்குக் கோட்டை வாயில் இருந்ததனையும் அறிய முடிகின்றது.

நாயக்கர்கள் ஆட்சிக்கு முன்னர் ஆட்சி செய்த முகம்மதிய அரசர்கள் பழைய மதுரையையும் பாண்டியர் கட்டடங்களையும் வேண்டுமளவு அழித்தும் மாற்றியும் வைத்தார்கள். பின்னர் வந்த நாயக்க மன்னர்கள் சிதைந்த பழமையின் மேல் புதிய கட்டங்களையும் சின்னங்களையும் தோற்றுவித்துள்ளனர்.

அடுத்து வந்த ஆங்கிலேயர் தமிழ்க்குடிகளை. மாற்றிய தோடல்லாமல், தாம் கொண்ட மதத்திற்கு ஏற்ப மதுரையின் பழமைகளை மாற்றி உரிமைசெய்துவிட்டனர்.

மதுரை அன்று முதல் இன்று வரையில் இருக்குமிடம் நெகிழாது. நாற்புறமும் மக்கள் தேவைக்கேற்ப இடவுரிமை கொண்டதாக விரிவு செய்யும் பாங்கில் பரந்துள்ளது.

மதுரையின் கோட்டைமதிலை வையயின் வெள்ளநீர் அலைத்துச் சென்றதென்றும், வையையினின்றும், கோட்டை யைச் சூழ்ந்த அகழிகட்கு நீர் நிரப்புதற் கமைந்த நிலவகட்டுச் சுருங்கைவழியொன்று இருந்ததென்றும் மதுரைக் காஞ்சி கூறும் செய்தி, மதுரை இடம்பெயரவில்லை என்பதனையும், வையை

மதுரைக்கு வடபுறத்தினின்றும் தடம் புரண்டதில்லை என்ப தனையும் ஆய்வின்முடிபாக அறிய முடிகின்றது.

ஆயினும், வையை ஆறு பரங்குன்றின் அடிவாரத்தடத் திலும் சென்றுளது என்பதைப் பரிபாடல் உணர்த்துகின்றது. பரங்குன்றிற்கு மேற்குப்புறம், தென்வடலாகத் தொடர்ந்த படர் நிலப்பாங்கில் இருந்துள்ளது இன்று தேவைகட்கேற்பச் சாலைகளாலும் விளைநிலங்களாலும் பிரிக்கப்பட்டுள்ளது. வளாக அமைப்பில் அப்பகுதியில் ஒரு தொடர்நிலை நீர்த்தடம் குளம் என்னும் பெயரால் குறிக்கப்பட்டுள்ள ஏரிகளைக் கொண்டு இன்றும் இருக்கின்றது.

வையை கால்கொண்ட பிரளயம்

திருப்பரங்குன்றின் வடபுற அடிவாரம், மதுரையின் மேற்கு, ஆகிய பகுதிகளில் நான் நேரில் ஆய்வு செய்த போது, இன்று தனித்தனியாகத் தரையில் தொடர்ந்து ஓடையாகவும் குளங் களாகவும் குழித்து நிற்கும் நீர்த்தடங்கள், ஒரு காலத்தில் தொடர்ந்து ஆறாகவே ஓடியிருக்கவேண்டுமென்பது புலனா கியது.

மதுரைக்கும், சிறப்பாக வடபாண்டிநாட்டுக்கும் உரிய பெரிய ஆறு வையையே யாகும். இவ்வாற்றைத்தவிர வேறொரு ஆறு பரங்குன்றைச் சார்ந்து ஓடியிருக்க நில அமைப்பு இல்லை.

எனவே வையையை எதிர்நோக்கிய பாங்கில் மேற்கு நோக்கிச் சென்று ஆற்றின் கரைநிலைகளையும் ஓடிவரும் பரிப்புத்தரைச்சுவட்டினையும் ஆராயலானேன்.

மதுரைக்கு மேற்கே வையை ஆறு மேற்கு நோக்கி வளர்ந்து நீண்டுகிடக்கும் நாகமலைக்கும். சிறுமலையின் தென்சரிவுப் பாறைத் தரைக்கும் இடையே ஓடிவரும் இயல் புடையதாகவுளது.

நாகமலை ஒரே கரைபோன்று இருநூறடி அளவில் உயர்ந்து மேற்கு நோக்கி நீண்டு செல்வதாயினும் இடையே செக்கானூரணி என்னும் ஊருக்கு மேற்கே மாதரை என்ற இடத்தில் தாழ்ந்து தரையினுள் பதிந்து ஒரு கல் அளவு இடை

விட்டு மறுபடியும் சிறிது சிறிதாக உயர்ந்து நீண்டு சென்று, ஆண்டிப்பட்டி மலையில் சென்று மயங்கிக் கூடுகின்றது.

மாதரைப் பகுதியில் நின்று பார்க்கும்போது அங்கு வரும் வையையாறு, ஒரு காலத்தில் மேற்குமலைப்பகுதியில், பருவ காலமிகுதியாகத் தொடர்ந்து பல நாட்கள் விடாது பெய்த பெருமழையின் போது வெள்ளப்பெருக்கினை அளவிட்டறிய வியலாத அளவில் பெற்றுக் கரையைப் பறித்துக் கால் கொண் டுள்ளது.

வையையின் மேலைப்பகுதி, இருகரையும் நெடிய மலைப் பாங்காக அமைந்ததால் கடிய வெள்ளப்பெருக்கு ஆண்டிப்பட்டி யளவில் தொடர்ந்து, ஊர்களையும், விளைவுகளையும் பறித் துப்புரட்டி அழிவு செய்து, ஊழிக்காலத்தை உணர்த்துவதாக ஓடிவரும்போது, தென்கரைப் பகுதியில் மாதரை தாழ்ந்திருந் ததால் வெள்ளம் பிரிந்து பிரளயமாகிச் சென்று, வழியிடையே ஆங்காங்குள்ள சமணர் குன்றுகளுக்கிடையே தாழ்ந்திருந்த தடத்தின் வழிப்புகுந்து, நெளிந்து பரந்து ஓடிப் பரங்குன்றின் அடிவாரந்தினை அலைத்த நிலையில் கிழக்கிட்டு ஓடியுள்ளது.

இவ்வாறு வையை மதுரைக்கு மேற்கே மாதரையில் பெரிய வெள்ளத்தால் காலிட்டு ஓடியதற்கு, அச்சப்பத்து என்னும் பகுதிக்கு மேற்கே கரைபுரண்ட வெள்ளமும் படர்ந்து குறுக்கிட்டு ஓடிக்கூடிக்கலந்து அழிவு செய்துள்ளதனை அறிய முடிகின்றது. இன்றும் அப்பகுதிகட்குச் சென்று நின்று, வளாக அமைப்பியலுடன் தொலைநோக்காக நுண்மையுடன் காணின் இது புலனாகும்.

பரிபாடல் காலத்தில் பரங்குன்றைச் சார்ந்து வையை ஓடியதோ இல்லையோ, அளவுக்கு மீறிய மழையால் உண்டான மிகப்பெரிய வெள்ளத்தினால் ஒரு காலத்தில் மதுரைக்கு மேற்கே வையை தென்புறம் காலிட்டுப் பிரிந்து நகரைச் சூழ்ந்து சென்றுளது என்பது மட்டும் உண்மையாகும்.

பிரளயம் காத்த பெருமாள்

பிரளயம் என்பது வடசொல். நீரால் உலகம் அழிக்கப் படும் இயற்கையின் இறுதிச்சீற்றமே பிரளயம் என்பதாகும்.

இதனை 'ஊழி வெள்ளம்' என்று கூறலாகும். அத்தகைய பெரு வெள்ளம் வையை ஆற்றில் வந்தபோது, கரைப்பகுதியிலுள்ள நிலங்களும் ஊர்களும் அழிவு பெற்றுள்ளன.

மதுரைக்கு மேற்கே சோழவந்தான் (சோழன்வந்தான்) என்னும் ஊரின் இடையே வையை வருகின்றது. இங்கு ஒரு காலத்தில் பிரளயம் போன்ற பெருவெள்ளம் ஆற்றில் பெருகியும் ஊரை அழிக்காது ஓடியுள்ளது. இதற்கமைந்த காரணத்தினை நேரில் ஆராய்ந்தபோது, ஊர்ப்பகுதியினைத் தொடர்ந்த மேற்குப் புறப்பரப்பு ஏற்றமாக இருப்பதுடன், மேற்குப் புறமிருந்து கிழக்கிட்ட சரிவாகவே தாழ்ந்துள்ளமை யினையும் அறியமுடிந்தது. எனவே, ஊரின் ஒரு புறமாக மேற்கி லிருந்து ஓடி.வரும் ஆற்றின் பெருவெள்ளம், சோழவந்தானைத் துழாவிய நிலையில் விரைந்தோடிக் கிழக்கிட்டுள்ளது. இதனை நிலவியற்கையானும், ஆற்றின் நெளிந்த போக்குத் தடத்தானும் அறியலாகும். மற்றும் இவ்வாறு ஏற்பட்ட ஊழிவெள்ளத்தால் தென்கரையில், ஏற்பட்ட உடைப்பினைத் தொடர்ந்து ஓடிய வெள்ளநீர்ப் பறிப்புத்தடம் 'மேலைக்கால்' என்ற பெயருடன் மாற்றம்பெற்று வையையிலிருந்து பிரிந்தோடிச் செல்வது குறிப் பிடத்தக்கதாகும்.

சோழவந்தான் ஊரில் அன்று வாழ்ந்திருந்த மக்கள் என்றும் காணாத பெருவெள்ளத்தை வையையில் கண்டு அஞ்சி, அங்குள்ள பெருமாள் கோயிலுக்குச் சென்று முறையிட்டுள்ளனர். அதனால் வெள்ளத்தால் ஊர் பாழாகவில்லை. வையைக் கரையிலிருந்த பிள்ளையார் கோயிலும் அழிவு பெறவில்லை. சோழவந்தான் ஊழி வெள்ளத்தில் இருந்து தப்பியது என்ற நம்பிக்கை மக்களிடம் ஏற்பட்டது.

பெருமாள் 'பிரளயம் காத்த பெருமாள்' ஆனார். பிள்ளை யார் 'பிரளயம் காத்த பிள்ளையார்' ஆனார். இன்றும். இப் பெயருடன் இத்தெய்வங்கள் திகழுவதைச் சோழவந்தான் வடகரைப்பகுதியில் காணலாகும்.

இவ்வாறான எனது களஆய்வுச் சான்றினால், வையையில் மக்கள் அஞ்சும் படியான ஊழிவெள்ளம் ஒருகாலத்தில் ஏற் பட்டுள்ளது என்ற உண்மை நன்கு புலனாகின்றது. சோழவந்

தானுக்கு மேற்கேயுள்ள குருவித்துறை என்னும் ஊரிலுள்ள கல்வெட்டுச் செய்திகள் வையை வெள்ளம் பற்றிய செய்திகட்குத் துணை செய்கின்றன.

எனவே, வையையில் மலைபெயர்ந்து வருவதைப்போன்று வந்த ஊழி வெள்ளம் மாதரையில் தெற்குப்புறம் மிகுந்து பிரிந்து ஓடியுளது, கால்கொண்ட அவ்வெள்ளப் பெருக்கோடு, சோழவந்தான் தென்கரையில் உடைத்துப் பறித்தோடிய வெள்ளக்காலும் கூடியுள்ளது. இவ்வாறு வையையில் ஊழி வெள்ளத்தில் பிரிந்தோடிய வெள்ளக்காலே, பரங்குன்றைத் தழுவிச் சென்றுள்ளது. கால ஆய்வு நோக்கில் கணிப்பின், இக் காலம் கி.பி. ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டில் ஏற்பட்டிருக்கவேண்டுமென்று துணியமுடிகின்றது.

பாட்டில் காட்டிய வையை

பரிபாடலில் காட்டியுள்ள வையையை ஈண்டு எடுத்துக் காட்டவில்லை. பரிபாடல் வையையின் புதுநீர் வரவினை இலக்கியத்திறம் பெற மிகுத்துக் காட்டியுள்ளது.

கடவுள் மாமுனிவர் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந் தவர். பாண்டிய நாட்டின் சிறப்பினைப் பாடிய முனிவரின் கருத்திற்கு வையை யாற்றின் கிளைப்பு இணைப்புச் செய் துள்ளது. முனிவர் பரமனையும் வையை யாற்றினையும் பாட லொன்றால் பாடலானார். இகழ்ச்சி வாராப் புகழ்ச்சியுரையாக (நிந்தாஸ் துதி) அப்பாடல் உருவாக்கம் காட்டுகின்றது. பாடல் வருமாறு:

"நாரியிடப் பாகற்கு நஞ்சளித்த பாவியென்று
வாரியிடம் போகாத வையைதான் - தேரின்
இடத்தும் வலத்தும் இருபுறமும் பாய்ந்து
நடத்துமாம் தண்பாண்டி நாடு"

இப்பாடல் தரும் செய்திகளால், வையை கடலில் சங்கமம் பெறாத (வாரியிடம் போகாத) ஆறு என்பதும், மதுரைக்கு இடப்புறமும் வலப்புறமும் வையையாறு பிரிந்து ஓடியுள்ளது என்பதும் புலனாகும்.

இதனால், வையையின் வெள்ளக்கால், பிரிந்தோடியது பரங்குன்றின் வட அடி வாரப் பகுதியென்பது குறிப்புடன் அறியலாகும்.

காலைநிகழ்ச்சி

மதுரைக்கோட்டையுள் காலை முரசம் கனைகுரல் இயம்பலாயிற்று. உறக்கம் கொள்ளாது மனம் ஒடுங்கிய கோவலன், தரையில் நடையால் வந்த தளர்வால் முடங்கிக்கிடந்த கண்ணகியாரைக் கண்டான். மனம் நெகிழ்ந்தான். எழுந்தான். தனித்திருந்த தவத்தோரிடம் சென்று ஆத்திரம் ததும்பிய குரலில் தனது இழிநிலையைக் கூறினான். உள்ளத்தில் தெளிவில்லை. அச்சம் அச்சாரமிட்டது, அரற்றிய குரலில் அடிகளிடம், என் மனைவி கண்ணகிக்கு ஏதாவது தீங்கு இங்கு வருமோ, தாயே! என்று கூறிக் கலங்கினான்.

கவுந்தியடிகள் வினைப்பயன் பெற்றாரின் வாழ்க்கை நிலைகளை எடுத்துக் கூறியதோடு அறிவுடைய மக்கள், வினையின் விளைவினைக் கண்டு செயலற்றுப்போக மாட்டார்கள். எனவே, அத்தகைய திடப்பாடுடைய நீ, மனைவியோடு பிரியா வாழ்க்கை பெற்று வந்தனை. வந்தநோக்கினைச் செயல்படுத்துமுன்னர், அகநகரில் நீங்கள் இருவரும் தங்குதற்கு ஏற்புடைய இடத்தினை முன்னதாக நீ சென்று அறிந்து இங்கு வருவாயாக. அதுவரையில் கண்ணகியார் என் பார்வையில் காப்புறுவர் என்று எடுத்துக் கூறினார்.

கோட்டை வாயில்கள் பகற்காலத்தில் தக்கபாதுகாப்புடன் திறக்கப்பெற்றுக் காவலும் கடுமையுடன் இருப்பதாகும். எனவே காலையில் திறந்த காவலர் சூழ்ந்த வாயில் வழியே, கண்ணகியாருடன் தங்கியிருந்து வாழ்க்கையை வளர்க்கும் நோக்குடன் நுழைந்த கோவலனுக்கு மதுரையின் ஆக்கங்கள் மாற்றத்தினை அமைத்துவிட்டன. பற்பலவீதிகளையும் கண்டான். சென்ற நோக்கினை வினை மறைத்தது, மறந்தான். திரும்பினான்.

அடைக்கலம் அமைந்தது

முத்து எடுக்க மூழ்கியவன், வண்ண வண்ணக் கிளிஞ்சில்களோடு மீண்டதைப் போன்று, வாழ இடமும் வணிகத்தடமும் காண மதுரைக் கோட்டைக்குள் சென்ற கோவலன் மதுரையின் வளங்களைக் கண்ட அளவில் திரும்புகின்றான்.

அது சமயம் புறஞ்சேரி வந்த இடைச்சி மாதரி என்பவள் கவுந்தியைக் கண்டு தொழுகின்றாள். இந்நிகழ்ச்சி அன்றைய மாலைக் காலத்தில் நிகழ்ந்த தெனலாம்.

கவுந்தியடிகள் கண்ணகியாரை மாதரிக்குக் காட்டி, இவள் குலத்தில் சிறந்தவள். செல்வச் செழிப்பில் வளர்ந்தவள்; ஊழ் வினையின் வயப்பட்டு உருக்குலைந்த மங்கலமடந்தை; கற்புக் கடம் பூண்ட இவள் என் கண்கண்ட தெய்வம். இவளது கணவன் கோவலன் வணிகர் குலத்தின் வான்மகன். இருவரும் மதுரையில் வணிகர் உறைவிடம் சேரும் வரையில் கண்ணகியைப் பாதுகாப்பாயாக! உன்னிடம் அடைக்கலமாக அளித்தேன் என்று அறிமுகம் செய்து அனுப்பிவைத்தார். மாதரியும் மகிழ்வுடன் அடைக்கலம் பெற்று, மதில் வாயிலைக் கடந்து கண்ணகியார் கோவலனுடன் தன் மனை அடைந்தாள். மனையின் ஒரு பகுதியில் இருவரையும் இருக்கச் செய்து ஆவன உதவினாள்.

வினைவிளைந்த காலை

காலைக் கடன்களைக் கணவற்கு ஆற்றிய கண்ணகியாரின் தன்மைக்கு வருந்திய நிலையில் துணிப்பொதியுள் தீவினையே உருவாகத் திகழ்ந்த சிலம்புகளி லொன்றை மட்டும் விற்க எடுத்துக்கொண்டான் கோவலன். அரசவீதியை அணுகினான். எதிரே வந்த அரசுப் பொற்கொல்லனிடம் சிலம்பைக்காட்டி விற்பனை கூறினான். பொற் கொல்லன் தான் கவர்ந்த அரசியின் சிலம்புக்கு ஈடாகக் கோவலனைக்குறி வைத்து வஞ்சகம் சூழ்ந்தான். கோவலன் கொல்லப்பட்டான். ஒற்றைச் சிலம்பு அரண்மனைக்கு வினையாகப் புகுந்தது. இந்நிகழ்ச்சி களே சிலப்பதிகாரம் தரும் செய்திச் சுருக்கம்.

கண்ணகியார் சென்ற ஆயர்சேரி

மதுரையில் தொடர்ந்த எனது ஆராய்ச்சியி லொன்று, கவுந்தியடிகளிடம் கண்ணகியாரை அடைக்கலம் பெற்ற ஆயர் குல மங்கை மாதரியின் ஆய்ச்சேரியேயாம். சிலம்பில் கூறப்படும் இப்பகுதி காவலும் பொறியமைப்புகளும் செறிந்திருந்ததும் நகரைச் சூழ்ந்திருந்ததுமான கோட்டைவாயில் வழியே உள்சென்ற அளவில் அமைந்திருந்த கோவலர் குடியிருப்புப் பகுதியாகும் இதனை,

"முளையிள வெண்பல் முதுக்குறை நங்கையொடு
செறிவளை ஆய்ச்சியர் கிளர்புறஞ் சூழ
மிளையும் கிடங்கும் வளைவிற் பொறியும்
ஞாயிலும் சிறந்து நாட்கொடி நுடங்கும்
வாயில் கழிந்துதன் மனைபுக் கனளால்".

என்ற அடிகளால் அறிய முடிகின்றது, ஆயர்கள் பசுக்களைக் காத்து அதன்பயன்வழி வாழ்க்கை நடத்துபவர்களாதலால், அவர்களது இருப்பிடம் அதற்கு ஏற்புடையதாக அமைந்திருக்க வேண்டும். அத்தகைய பகுதி நகரின் வடபுறம் வையை யாற்றைச் சார்ந்ததாக இருக்கவேண்டுமென்று கணித்துக்கொள்ள முடிந்தது.

காலத்தால் நிலைமாறிப்போன மதுரையில் 1959—ல், எவ்வாறு கண்ணகியார் கால் சுவடுபட்ட கோவலர் இருப்பைக் கண்டறிவது?

இராமன் வளர்ந்த அயோத்தி, பாண்டவரும் நூற்றுவரும் இருந்த அத்தினாபுரம், பதினெட்டு நாள் பெரும்போர் நடந்த குருசேத்திரம், கண்ணன் பிறந்த மதுரா சிறைச்சாலை, கண்ணன் திருவிளையாடல் புரிந்த கோகுலம் ஆகிய இதிகாச கால இடங்கள் இவைதான் என்று இன்று, தொல்பொருள் ஆய்வுக்கலைஞர்கள் துப்புத் தடங்கண்டு நாட்டுக்கு நல்லதோரறிமுகம் செய்துள்ளபோது,

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் நிகழ்ந்த வரலாற்றுச் சுவட்டிடங்களில் ஒன்றானதும் மதுரையினுள்ளதுமான, ஆய்ச்சியர் இருப்பைப் பரவலாகவாவது கண்ணோட்டத்தால் பார்த்தறியலாகுமென்ற துணிவு பிறந்தது.

திட்டப்படி அப்பகுதிக்குச் சென்று பலகால் ஆராய்ச்சி செய்தபோது, அங்கு வாழும் மக்களுள் பெரும்பான்மையினர் ஆயர்களாகவே இருப்பதனை அறிந்து வியப்படைந்தேன். இப்பகுதி பழைய கோட்டையின் வடக்கு வாயிலின் உட்புற அரங்கப்பகுதியே யாகும். பரம்பரையாகவே இப்பகுதியில் ஆயர்கள் வாழ்ந்து வருவதனையும், அவர்களின் தலைவர்கள் பாண்டியர் ஆட்சியில் சரிகை முண்டாசும், தங்கப்பூண் தடியும் பெற்றதோடு விருதுகள் பல பெற்றவர்களாகவும் இருந்ததுள்ளதனை எண்பது வயதுக்கு மேற்பட்ட முதிய ஆயர்வழிப் பெரியாரொருவரின் வாயிலாகக் கேட்டறிந்தேன்.

அவரிடம் நான் கண்ணகியாரைப் பற்றிக் கூறியபோது. அவர் சுழித்துச் சுருக்கியிருந்த கண்களை விழித்துப் பார்த்து, அந்த ஆத்தா எங்களுக்குக் குலதெய்வம். எங்கள் முன்னோர்கள் அந்த ஆத்தாளை, செல்லத்தம்மா என்று அழைத்துள்ளார்கள். செல்லத்தம்மனுக்கு அப்படியே உயிருள்ளதுபோலச் சிலைசெய்து, கோட்டை வாசல் காளிகோயிலில் வைத்திருக்கின்றார்கள் என்று அறிவித்தார். இச்செய்தியினை யான் அறிந்த காலம் 1959-ஆகும். அறிவித்தவர், அழகிய வளைவுப் பாதையாகத் தொடர்ந்த குறுஞ்சந்துச்சாலை வழியே என்னை வடக்காக அழைத்து வந்து இரும்புக் கம்பிக்கதவுள்ள பெரிய மதிள் வாயிலுக்கு முன் வந்தவுடன், இதுதான் செல்லத்தம்மா கண்ணகிகோயில் என்று காட்டியதோடு, உள்ளே ஒருபுறம் குடியிருப்புக் கொண்டிருந்த பூசாரியைக் கூப்பிட்டுக் கதவைத் திறக்கும்படிச் செய்தார் இருவரும் உள்ளே சென்றோம்.

செல்லத்தம்மன் - கண்ணகியார் சிலை

கோயில் வடபுறம் நோக்கியுள்ளது. மதுரை வடக்குப் பெருந்தெரு சிம்மக்கல் என்னும் இடம் அரசமரத்தடி பிள்ளையார் கோயிலுடன் கூடியதும் வகிடிட்டுப் பிரியும் பெருஞ் சாலைக்கு நடுவிலமைந்ததுமான இடம். பிள்ளையார் கோயில் வாயில் முன்னர் ஒரு கல் சிம்ம உருவம் அழகிய வடிவில் அமர்ந்து தென்புறம் நோக்கும் பாங்கில் அமைக்கப்பட்டுள்ளது. இச்சிம் மக்கல்லின் இருப்பினாலேயே இப் பகுதி ‘சிம்மக்கல்’ என்ற பெயரையும் பெற்றுளது.

சிம்மக்கல்லிலிருந்து சிம்மம்நோக்கும் தென்திசையில் உள்ள தெருக்கோடியில் குறுக்காகத் தெரியும் கம்பிவாயில் உள்ள இடமே செல்லத்தம்மன் கோயிலாகும்.

கோயில் பரந்த சுற்றுக்சூழலுக்கு நடுவில் அமைந்துளது. வடக்கு நோக்கிய கோயிலின் கருவறையில் பழமையான சிற்பத் திறனுட னமைந்த கொற்றவையின் திருவுருவம் அமைக்கப் பட்டுள்ளது. பாண்டியர் ஆட்சியில் கோட்டையின் வடக்கு வாயில் காவல் தெய்வமாக இவ்வம்மன் திகழ்ந்துள்ளது.

கருவறைக்கு முன்மண்டபத்தில் இறையக வாயிலுக்கு இடப் புறமாக உள்ள நீண்ட மேடையில் பெண் திருவுருவமொன்று

எண்ணெய்க் கசடேறி வெளிர்த்த சிவப்பு ஆடையால் முகம் மட்டும் தெரியுமளவில் கிழக்குநோக்கி இருந்தது.

உடன் வந்த பெரியவர், பூசாரியை அழைத்து அச்சிலைக்குக் குறையாகச் சுற்றி இருந்த ஆடையை எடுக்கச் செய்தபோது, ''இதோபாருங்கள்; எங்கள் குலதெய்வம் செல்லாத்தாளை' என்று இருகையாலும் காட்டினார்.

பருவமுள்ள குடும்பப்பெண் பாங்குடன் அமர்ந்துள்ளதைப் போன்ற வடிவமைப்பில், மங்கைப்பருவத்து வளர்ச்சியள வுள்ளதாக இருந்த சிலையைப் பார்த்த அளவில் எனக்கு மெய் சிலிர்த்தது.

நேர்வகிடிட்டுப்படிய எடுத்து இடப்பக்கம் கொண்டை முடியவிட்ட கூந்தல், கொடுங்குழை துறந்து வடிந்து தோளிற் படியும் காதுகள் மங்கல அணியன்றிப் பிறிதணி இல்லாத ஒப்பனை. இடது கையில் ஏந்திய சிலம்பு. வலதுகாலைக் குத்திட்டு இடதுகாலை மடித்தமர்ந்த மனைமகள் இருப்பு உடையதாக அச்சிலை இருந்தது.

இளங்கோவடிகள், மாதரி, அடைக்கலம் பெற்ற கண்ணகி யாரை இல்லத்திற்கு அழைத்துப்போய் ஆதரவுடன், ஆய்ச்சியர் பலரோடு,

''நறுமலர்க் கோதையை நாள்நீ ராட்டிக்
கூடல் மகளிர் கோலங் கொள்ளும்''

என்று குறித்தபடியே கூடல் கோவலர் மகளிரின் கோலமும், தீவினைச் சிமைபால் மானுட வாழ்வு நீங்கித் தெய்வவடிவில் திகழும் தோற்றமும் பெற்றிருந்ததோடு,

அணிகலன் இல்லாத தோள்ளைக் காதுகளுடனும், ஒற்றைச் சிலம்புடனும் தோற்றம் கொள்ளுமாறு சிற்பி அமைத்த கையறு நெஞ்சமுடன் வீற்றிருந்த கண்ணகியாரின் திருவுருவச் சிலையைக்கண்டு வியப்புற்றேன்.

காவிரிப்பூம்பட்டினம் முதலாகத் தொடங்கிச் சிலப்பதிகாரம் காட்டும், கண்ணகியார் மதுரைக்கு நடந்த வழித்தடங்களை இயன்ற அளவில் தேற்றமுடன் பின்பற்றி ஆய்வு செய்த

எனக்கு, இதுவரையில் கழிந்திருந்த பதினான்கு ஆண்டுகளில் கண்ணகியாருக்கமைந்த எத்தகைய சின்னமும் காணவியலா திருந்தது.

இலக்கியம் வரலாற்றிற்கு இலக்காகும் திறத்திற்குரிய சான்றாக மதுரையில் ஆயர்குடியிருப்புப்பகுதியில், பழமையான கோட்டை வாயில் காவல் தெய்வமான கொற்றவைக் கோயிலில், பாண்டியனிடம் வழக்கிட்டு வெற்றிகண்ட பத்தினித்தெய்வத்தின் திருவுருவினை வறியவன் புதையலைக் கண்டதைப் போலக் கண்டு வணங்கினேன். என்னையும் அறியாமல் ஏதோ ஒரு உணர்வால். கண்களில் நீர் வழிந்ததையும் அறியாது நின்றேன்.

கோயிலின் பழமை

கோயில் பழமைமிகுந்த கொற்றவைக்கு உரியது. செங்கல் கட்டடமாக அமைந்திருந்து இருமுறை திருப்பணி மாற்றம் கண்டதால் அதில் கருங்கல் கருவறையமைந்துள்ளது.

சுற்றுத்தடத்தில் தோற்றங்கொள்ளும் இடிபாடுகள் யாவும் பழைய காலச் செங்கல் திருப்பணியில் எஞ்சிநிற்பவை. கோயிலின் அடித்தளம் பழமையினை அழிக்காமல் அதன்மீதே கற்பணிக்கோயிலாகக் கட்டப்பட்டதோடு கண்ணகியார் சிலைக்கு நேர் வாயிலாகக் கிழக்குச் சுவரில் வாயில் அமைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கண்ணகியாரை அன்று ஆயர்சேரி மகளிர் கூடிச் செல்ல மகளாகச் சீராட்டி ஆதரவு செய்தமையால், அவர்கள் வழி வந்த ஆயர்குல மக்கள் அமைத்து வைத்த படிமத்தைக் செல்லாயி, செல்லத்தம்மா, என்று பாசவுரிமையோடு பெயரும் சூட்டி வைத்துள்ளனர்.

உள்ளே கருவறையில் காளி (கொற்றவை) முன்மண்டபத்தில் கண்ணகியார் பாண்டியனிடம் நீதியை நிலைநிறுத்திய செயலைப் பழிவாங்கியதாகப் பிற்காலம் பின்னிவிட்டது. அதன் திறத்தால் முன்னுள்ள கண்ணகியாரே செல்லத்தம்மன்; காளியாக மாறி உள்ளே அமர்ந்து கோரமாக உள்ளார்.

என்னும் கட்டுச் செய்தியைப் பூசாரி வருபவரிடம் புனைந்து விடுகின்றார்.

பொன்முடி, காப்புரைக்கும் கை, கனத்த அணிதுலங்கும் காதுகள், மார்பில் அணிகல ஒப்பனை இப்படிச் சிற்பநூல்தரும் விளக்கப்படிச் சிற்பி பெண் தெய்வங்கட்கு ஒப்பனையிட்டு உருவாக்கியமைக்கும் தோற்றத்தினின்றும் முற்றிலும் மாறு பட்ட சிலையாக,

தனித்துக் கொற்றவையின் கோயிலகத்து வந்த மானுட மங்கை, அணியில்லாத தோள்ளைக் காதுகளுடன், ஒரு கையில் சிலம்பொன்றை ஏந்திய பாங்கில், மனைக்குரிய மரியாதைக் கமைந்த கால்மடக்குடன் பெருமிதமாக அமைந்திருப்பதைப் போன்ற வடிவில் கண்ணகியாரின் சிலையைச் சிற்பி உயிர்ப் பாகவும், உயர்வாகவும் தெய்வீகப்பொலிவுடனும் உருவாக்கித் தந்துள்ள மேன்மையினைச் சிம்மக்கல் செல்லத்தம்மைகோயிலில் காணலாகும்.

சிலப்பதிகாரச் செய்திகள் காப்பிய ஒப்பனையால் வளர்ந் திருப்பினும் கண்ணகியாரின் வாழ்வியலைக் காட்டும் வரலாற்றுக்காப்புரையாகும் என்பதற்குச் சான்றாக, மதுரையில் கண்ணகியாரின் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ள பழமை நின்று உருவாக்கம் தருவதாயிற்று. எனவே, பல ஆண்டுகள் பாடுபட்டு வந்த எனக்கு நம்பிக்கையும் ஊக்கமும் தோன்ற ஆராய்ச்சி மேலும் தொடர்ந்தது.

பழங் கா நத்தம்

ஒரு கிராமத்தையோ ஊரையோ சார்ந்ததாகத் தொடர்ந்து புறத்தேயுள்ளதும், நன்செய் புன்செய் நிலங் களையும், நீரோடு கால் ஆறுஆகியவற்றைச் சார்ந்துள்ளதுமாக அமைந்த இடம் நத்தம் எனப் பெயர் பெற்றது. ஊர்மக்களின் தேவைப்புழக்கத்தினால் உருவாகி இருக்கும் பகுதி. இப்பகுதி யைச் சார்ந்து புறம்போக்கு என்ற தரிசு நிலப்பரப்பும் அமையும். இவற்றைச் சேர்ந்ததாகவும் வாய்க்கால் கரை அல்லது ஆற்றங் கரையாகவும் உள்ள இடத்தில் ஊரார் இடுகாடும் சுடுகாடும் அமைத்திருப்பது பண்டைய தமிழக வழக்கமாகும்.

இவ்வாறமைந்த ஊர்ப் புறம்போக்கு பழைய நத்தமே, மதுரையின் தென்புறம் தொடரும் நிலமாகும்.

பழமையான ஊர்களின் தென்புறத்திலேயே நத்தம் சுடு காடு அமைந்திருப்பதனைத் தமிழகத்தில் காணமுடிகின்றது. அவ்வாறமைந்த பண்டைய தமிழக நியதிப்படியே, பழைய மதுரை மாநகரின் தென்புறம் இடுகாடு அமைந்திருக்கின்றது. மதுரைக்குரிய இடுகாடு அமைந்த நத்தப்பகுதி மிகத்தொன்மை யானதால் 'பழம் காடு நத்தம்' என்ற விரிவுடன் பெயர் கூறப் பட்டுக் காலவழக்கில் பழங்காநத்தம் என்ற அளவில் ஓரளவு செப்பச் சொல்லாகவே இன்றும் வழக்கில் இருந்து வருகின்றது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

மதுரை மாநகர்ப் பகுதிகளை யான் கள ஆய்வு செய்த போது, பழங்காநத்தத்தில், ''கோவலன் பொட்டல்'' என்ற பெயரால் ஒரு தரிசிடப்பகுதி இருப்பதறிந்து, அங்குச் செல்ல வழியறிய லானேன்.

மதுரையிலிருந்து திருப்பரங்குன்றத்திற்குச் செல்லும் வழி யினிடையே கிழக்குப் புறமுள்ள இடமே 'பழங்காநத்தம்' என் பதனை அறிந்தேன். அங்குச் சென்று பழைய சின்னங்கள் உளவா என்பதை ஆய்வு செய்ய முயன்றேன்.

குண்டும் குழியும் குட்டையும் மேடுமாகப் பரவிய ஓரிடத்தி னையே கோவலன் பொட்டல் என்றும், இங்குதான் கோவலன் கொலை செய்யப்பட்டான் என்றும் கூறினர்.

அப்பகுதியைத் துருவி ஆய்வு செய்தபோது, சிறிய குட்டைக் கரையிலிருந்த ஆலமரத்தின் வேர்ச்சரிவில் முதுமக்கள் தாழி யொன்றின் வாய்விளிம்பு சிதைந்த நிலையில், மழைநீர் அரிப்புச் சுவட்டிடையே காணப்பட்டது.

அதனைக்கொண்டும், அப்பகுதியில் ஆங்காங்கே புதைந்தும் புறப்பாடுற்றும் கிடந்த மனித எலும்புகள், மிகப்பழங்கால மக்கள் ஈமச்சடங்கிற்குப் பயன்படுத்திய மண்கலயங்களின் சிதைந்த ஓடுகள் ஆகியவற்றைக் கொண்டும் ஒரு காலத்தில் அப்பகுதி மதுரையின் இடுகாடாக இருந்துள்ளதனை அறிய முடிந்தது.

மற்றும், கோவலனுடைய பெயரால் அப்பகுதி 'கோவலன் பொட்டல்' என்று இன்றும் கூறப்பெறுவதைக் கொண்டு தொலை நோக்கில் சிந்திக்கும்போது,

கோவலன் கொலைசெய்யப்பட்ட இடம் அது அன்று என்பதும், கொலை செய்யப்பட்ட கோவலனது உடல் அடக்கம் செய்யப்பட்ட இடுகாட்டுக்குரிய புறம் போக்கிடமே அது என்பதும் புலனாயின. அன்று வறிதான நிலத்தைப் பொட்டல் என்று குறித்தனர். அப்பெயரே விளக்கமாக ஊர் அல்லது நகரின் புறம்போக்கு நத்தம் என்று குறிப்பதாயிற்று.

பழங்காலத்தில் ஊரின் நத்தப்பகுதியே இடுகாட்டுப் பகுதியாக ஒதுக்கப் பட்டிருந்தது. அவ்வாறமைந்த நத்தமும் ஊரின் தென்புறத்திலேயே இருந்துள்ளது. அப்பகுதிலேயே முதுமக்களை இறுதிக்காலத்தில் பெருஞ்சாலில் வைத்துப் புதைத்து வைத்தலும், இறந்தாரின் உடலை முறைப்படி மண்சாலில் வைத்து புதைத்துப் வைத்தலுமாகிய மனிதவாழ்வின் இறுதிச் சடங்குகள் நிகழ்ந்துள்ளன. இதனை இன்றைய தொல்பொருள் துறை ஆய்வுகளாலும், பழமையான கிராம ஊரமைப்புகளினாலும் அறிய முடிகின்றது.

கோவலன் பொட்டலில் பழந்தாழிகள் உள்ளதனை நான் கட்டுரைகளில் வெளியிட்டதனை அறிந்த முதலமைச்சர் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் ஆட்சியில், மாநில தொல்பொருள் ஆய்வினர் வழியே கோவலன் பொட்டலில் அகழாய்வு செய்யப்பட்டது.

ஏறத்தாழ 40 அடிநீளம் இருபதடி அகலம் இருபதடி ஆழமாக முறைப்படி அகழ்ந்தெடுக்கப்பட்ட குழியில், தரைமட்டத்திலிருந்து மூன்றடிக்குக் கீழிருந்து, படிப்படியாக மூன்று படிவங்களில் முதுமக்கள் தாழிகள் எடுக்கப்பட்டன. அவைகளைக் கொண்டு பழமையினைக் கணித்த அறிஞர், கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இத்தாழிகள் தொடர்ந்து இடம் பெற்றுள்ளன என்று ஆராய்ந்து கூறியுள்ளனர். அகழாய்வுப் பகுதி இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

எனவே, சிலப்பதிகார நிகழ்ச்சிக்காலமென்று அறிஞர் திட்டப் படுத்தியுள்ள கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், பாண்டிய மன்னனால் கொலை செய்யப்பட்ட கோவலனது உடலும் அக்கால முறைப்படி, மண் தாழியில் அடக்கம் செய்யப் பட்ட நிலையில் இடுகாட்டில் இடம் பெற்றுள்ளது. அப்பகுதி மதுரைக்குத் தென்புறமுள்ளதாகிய நத்தப்பகுதியே ஆகும். பழைய காடு நத்தம் என்ற பெயர் பழமையாகக் குறிப்பிடப் பட்டதோடு, கோவலனது உடல் அடக்கம் செய்யப்பட்ட சிறப்பினால் 'கோவலன் பொட்டல்' என்ற காரணப் பெயரினையும் நத்த இடுகாட்டுப் பகுதி பெறலாயிற்று என்று கூறுதற்கமைகின்றது.

தென்புலம்

தமிழ்நாடு என்று சேக்கிழாரால் தனிச்சிறப்புடன் குறிக்கப் பட்ட பாண்டிய நாட்டின் தலைநகராம் கூடல் நகரிலிருந்தே பண்டைய பாவலர்கள் தமிழாய்ந்துள்ளனர். கூடலுக்குத் தென்பால் தென்கடலில் கடற்கோளால் மறைந்த தமிழரின் உறவினரை நினைவு கொள்ளும் திறத்துடனேயே, தமிழர் தமது முன்னோர்களைத் தென்புலத்தார் என்று திசைசுட்டிய இப்பெயரால் நினைவுசெய்ததோடு, அதன் சின்னமாகவே நத்தப் புறம்போக்குப் பகுதிகளை ஊரின் தென்புறத்திலேயே பெரும்பான்மையும் ஏற்படுத்தி, புரிந்தோ புரியாமலோ வழி வழியாகத் தொடர்ந்துள்ளன ரென்பதும் அறியத் தக்க தாகும்.

பத்தினியின் வஞ்சினம்

மதுரையினுள் தமது சிலம்புகளுள் ஒன்றை விற்கச் சென்ற கணவன் கோவலன், சிலம்புக் கள்வன் என்ற பழிச்சொல்லுடன் கொல்லப்பட்ட செய்தியைக் கேட்ட அளவில் சீற்றங் கொண்டெழுந்தார் கண்ணகியார்.

உலகியல் அறிவு பெறாததோடு குடிவெறியிலும் இருந்த பாண்டியனின் காவலன் ஒருவனால் வீசப்பட்ட வாள் வீச்சில் குற்றுயிராய்க் கிடந்த கணவனைக் கண்ணகியார் கண்டார். புலம்பினார். அவன் 'நீ இருக்க' என்று கூறி இருந்தான்.

கண்ணகியார் சில நாட்கள் மண்ணுலகில் இருக்கத்தான் வேண்டும். இப்பொழுது, சிலம்பு திருடிய கள்வனின் மனைவி என்ற சொல்லுக்கு இலக்காகத்தான் இருக்கின்றார். உண்மையை உலகிற்கு உணர்த்தவேண்டாமா? கோவலன் தூயவன் என்பதை உலகம் அறியவேண்டும்.

தீவேந்தன் தனைக்கண்டித் திறங்கேட்பன் யான் என்று அரற்றிக் கூறிக்கொண்டே எழுந்தார். சென்றார்; பாண்டியன் அரண்மனை வாயில்முன். வாயில் காவலனை அழைத்து,

> "வாயி லோயோ!
> இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
> கணவனை இழந்தாள் கடையக் தாளென்று
> அறிவிப்பாயே!" உன் அரசனுக்கு

என்று ஆத்திரம் பொங்கிய அவலத்துடன் கூறினார்.

அரசன் முன்சென்றார். வழக்குரைத்தார். ஒற்றைச் சிலம்பை உடைத்து உண்மையைக் காணச் செய்தார். மன்னவன் வாய்-முதற்கண் பதறிச் சொற்களைச் சிதறியது. அச்சொற்கள் "ஆ! இரத்தினப் பரல்கள்" என்பதேயாம்" "மன்னவன் வாய் முதல் தெறித்தது மணியே" அரசியின் சிலம்பில் முத்துப் பரல்கள் கண்ணகியாரின் வாழ்வில் தீவினையைச் சிலம்பில் பரல்களாக உள்ளிருந்தொலித்து வந்த இரத்தினக் கற்கள். வினையை முடித்து வெளியேறிவிட்டன. கோவலன் மீது நீதி தவறிச் சுமத்தப் பட்ட பழியும் நீங்கியது.

> "பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாகில்
> ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையையும்"

என்று, அவலமும் ஆத்திரமும் கலந்த சொற்களால் கண்ணகியார் அற்றிக் கூறினார்.

> "கோநகர் சீறினேன் குற்றமிலேன் யானென்று
> இடமுலை கையால் திருகி மதுரை
> வலமுறை மும்முறை வாரா அலமந்து
> விட்டாள் எறிந்தாள் விளங்கிழையாள்"

கொங்கை குறித்த கொற்ற நங்கைமுன், நான்குவகைச் சாதிப் பூதமும் (தலைமையாளர்கள்) மதுரையைவிட்டு முறையாக நீங்கிச் சென்றன. இரவும் சூழ்ந்தது. மதுரையும் அரண் மனையும் தீப்பற்றி எரியத் தொடங்கின. இத்தீச் செயல் பத்தினியின் கொங்கை விளைத்ததா? அன்றிக் கூடல் வாழ் வணிகரும் பிறரும் விளைவித்ததா என்பது மக்கள் வாழ்வியல் நெறியோடு அக்காலப் பாண்டியர் வாழ்வியலையும் உள்ள வாறு ஒப்பிட்டு உணர்ந்து சிந்தித்து அறிதற்காகும்.

ஒரு மார்பகம் குறைத்த திருமாபத்தினிக்கு முன்னர்த் தோன்ற அஞ்சிய மதுரைமாநகர்க் காவல்தெய்வம் அவர் பின் பக்கம் தோன்றி,

கண்ணகியார்க்கு, "உம்மை வினைவந் துருத்த காலைச் செம்மையி லோர்க்குச் செய்தவம் உதவாது" என்ற தத்துவத் திற்கமைந்த சான்றுகளைச் கூறி,

இன்றையிலிருந்து தொடர்ந்த பதினான்காம் நாள் உன் கணவனைத் தெய்வ வடிவில் கண்டு கொள்வாய் என்று கூறிச் சென்றது.

இந்த அளவில் மதுரையில் நிகழ்ந்த செய்திகளைச் சிலப்பதிகாரம் தரும் செய்திகளின் சுருக்கமாகக் கூறியுள்ளேன்.

கண்ணகியாரின் அடிச்சுவட்டில் ஆய்வு தொடர்வதற் கமைந்த முன்னுரையாகவும் இச்செய்திகள் அமையும். இனிக் கண்ணகியார் மதுரையிலிருந்து மேற்கு நோக்கிச் சென்று தெய்வமான இடத்தினைக் காணவேண்டும். காப்பியம் காட்டும் அடிச்சுவட்டில் எனது நடை ஆய்வுப்பயணம் தொடருகின்றது.

சிறந்த துணைவன்

மதுரையிலிருந்து தொடர்ந்து எனது ஆராய்ச்சி மூன்றாண்டு கால அளவினைக் கொண்டதாக இருந்தது. இக்காலத்தில் அவ்வப்போது, ஆய்வு நிகழ்த்திவிட்ட இடத்தினின்றும் தொடரும் எனது செயலுக்கும் ஆராய்ச்சிக்குங் நல்ல துணையாக அமைந்திருந்து, எனது ஆராய்ச்சியினை ஆங்காங்கே நிறைவாக நாள் செய்து குறிப்பெழுதுவதற்கு உறுதுணையாக

அப்பொழுது அமைந்திருந்தவர், எனது அருமை மாணவர், சேலம், வேலம்பாளையும் முத்து கந்தசாமி என்பவராவர். இவரது சலிப்படையாத செயலும், துணிவும் எனக்கு மேன்மேலும் புத்துணர்ச்சியினையும் ஊக்கத்தினையும் அளித்ததனாலேயே மதுரையிலிருந்து மூன்றாண்டுகள் தொடர்ந்த ஆய்வுப் பயணத்தின் பயனாகக் கண்ணகியார் சென்று தெய்வமான கண்ணகிக் கோட்டத்தினைக் கண்டுபிடித்துத் தமிழகத்திற்கு அறிமுகம் செய்யலானேன். அங்கு இவரை யான் அறிமுகம் செய்வது முதற்கண் எனது நன்றிக் கடனாயினும், காடுகளும் மலைகளும், புதர்களும் நிறைந்த பகுதிகளில் தனித்து யான் ஆராய்ச்சி நிகழ்த்துவதற் கியலாதென்று கருதுவார்க்குக் காட்டிய செய்தியேயாகும்.

வையைக்கரையில்.

மேற்கு வாயில்

மதுரை மாநகரில் கோட்டைக்குரிய மேற்குவாயில், இன்றுள்ள பேருந்து நிலையத்திற்கு முன்னர் இருந்திருக்க வேண்டும். மேற்கு அகழி தூர்க்கப்பட்டுச் சாலையாகவுள்ளது. பழைய கோட்டை வாயில் இங்குதான் இருந்திருக்கிறது என்று நான் கருதுவதற்குரிய சான்றுகளில் ஒன்று வெள்ளையர் ஆட்சியில் வெளியிடப்பட்ட (கி.பி. 1876) ''மதுரை மானுவல்' என்ற அரசு வெளியீடாகும். இப்பகுதியில், அக்காலத்தில் கோட்டை வாயில் காவல் தெய்வமாகக் கருதப்பெற்ற கொற்றவை கோயிலொன்றும் இருந்து அது நகரின் விரிவாக்கத்தில் மயங்கி மறைக்கப்பட்டோ அன்றி அழிக்கப்பட்டோ இருக்க வேண்டும்.

1800 ஆண்டுகட்கு முன்னர் மதுரையில் மேற்குவாயில் வழியே ஒரு பெண் விரித்த கூந்தலும் வெறித்த முகமுமாக வெளியே வருகின்றாள்.

அவள் முகத்தில் களை இல்லை; கவலை கவிழ்ந்துள்ளது; வெறித்த பார்வையில் வெறுப்புணர்ச்சி நிலைத்துள்ளது; மார்பகத்தை மறைத்து நிற்கும் ஆடையின் இடப்பக்கத்தில் இதயமிட்ட இலச்சினையாக இரத்தக் கசிவின் செந்நிறம் தெரிகின்றது.

கொற்றவையே மதுரையினுள் சென்று கோரவடிவோடு கோயிலுக்குத் திரும்புகின்றாளோ என்பது போல் இருந்தது அவள் தோற்றம். அவலத்தோடு ஒருசில சொற்கள் தடுமாற்றத்தோடு அவள் வாயிலிருந்து வந்தன. அவை,

''கீழ்த்திசை வாயில் கணவனொடு புகுந்தேன்
மேற்றிசை வாயில் வறுயேன் பெயர்கென''

என இளங்கோவடிகள் எடுத்துக்காட்டுகின்றார்.

கொற்றவை கோயில்

கொற்றவை, பண்டைய பாண்டியர் வணங்கிய தெய்வம். வெற்றியளித்திடும் வீரம்மாள் ஆதலின் வடக்கு நோக்கிய கொற்றவை கோயிலின் வாயிலுக்குக் காளிபோன்ற தோற்றத்தில் கண்ணகியார் வருகின்றார்.

கோயிலின் முன்னர் அமைந்த வேப்பமரங்களின் நிழலில் இருந்த பல கற்சிலைகள் பாண்டியநாட்டு வீரர்கள் தமது மன்னன் பேரில் வெற்றி பெறுவதற்காகத் தங்களை வேலாலும் வாளாலும் கொற்றவைக்குப் பலியிட்டுக் கொண்ட வடிவங்கள்; வீரமறவர்க்கு மன்னன் செய்தமைத்த வீரக்கற்கள் என்னும் நடுகற்கள்.

கோயிலின் வாயிலுக்கு முன்னர் வந்த அப்பெண் அணங்கு கோயிலில் குடி கொண்டுள்ள கொற்றவையை ஒருமுறை உற்று நோக்கினாள். எதிரே நிற்கும் வீரக்கற்களையும் சூழலையும் வெறித்துப் பார்த்தாள்.

பார்வையை, மீட்டுத் தன் கைகளில் ஆயர் சேரியில் மாதரி அணிந்த சங்கு வளையல்களை உறுத்துப்பார்த்தாள். கண்களில் நீர்பெருகி வழிந்தது. மார்பில் பெருகும் செந்நீருடன் கண்ணீரும் கலந்து வழிந்து, தொடர்ந்து வந்த செயல்புரிந்த வினையின் முத்திரையாகத் தரையில் சுவடிட்டது.

அவலக்குரலுடன் தன் இரு கைகளையும் சேர்த்து உயர்த்திக் கோயில் வாயிற் கல்லில் தன் வளையல்களை மோதி உடைத்தாள். திக்கெங்கும் சுக்கல் நூறாகத் தெறித்தன வளையல்கள். அவள் அலறலுடன் விரைந்து நடந்தாள் மேற்கு நோக்கி.

இந்நிகழ்ச்சி கற்பனையன்று. இற்றைக்கு 1800 ஆண்டு கட்கு முன்னர் மதுரைக் கோட்டை மேற்கு வாயிலுக்கு முன்னர் நிகழ்ந்த செயலாகும் இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தில் எழுதிக்காட்டும் உருக்காட்சி. கணவனை இழந்த கண்ணகியாரின் அவலச் செயல்.

மதுரைமாதெய்வம் உணர்த்தியதை நினைத்த கண்ணகியார், "கணவனைத் தெய்வவடிவில் காணும் வரையில், இருத்தலும் இல்லேன் நிற்றலும் இல்" எனக் கூறிக் கொண்டே தடுமாற்றமுடன் ஓடுகின்றார்.

அவலச் சுவடுபட்ட வையைக்கரை

புலம்பலுடன் மதுரைக்கு மேற்கே ஓடிய கண்ணகியார் மேற்கு மலையில் பெய்த மழையால் வெள்ளம் மிகுந்து ஓடும் வையைக் கரைக்கு வந்தடைந்தார். வையை என்னும் பெண்ணானவள் கண்ணகியாரைக் கண்டு நிலைகுலைந்து ஓடுவதைப்போன்று கலங்கித் தடுமாறிப் பேரிரைச்சலுடன் ஓடினாள். வையையின் ஒரு கரையாகும் தென்கரைவழியே சிந்தனை எதுவுமின்றி மேற்குநோக்கிய நிலையில் கடுகிநடந்தார் கண்ணகியார்.

எக்கரை?

வையை யாற்றுக்குரிய இருகரை வழிகளுள் எக்கரை வழியே ஏகினார் கண்ணகியார் என்பதனை அவரது அடிச்சுவட்டில் ஆராயலானேன்.

மதுரைமாநகரின் வடக்குப்புறத்தே வையை ஓடியது என்பதைச் சிலப்பதிகாரமும் மதுரைக் காஞ்சியும் தெளிவு செய்கின்றன. மதுரையின் மேற்கு வாயில் வழியாகப் புறப்பட்ட கண்ணகியார் வையையின் தென்கரை வழியிலேயே சென்றிருக்கிறார் என்பதில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கியதாக மதுரையின் வடக்கு எல்லையாக ஓடும் வையையாற்றின் வழித்தடத்தால் எளிதில் அறியலாகும். சிலம்பின் அடிகள்-

"கீழ்த்திசை வாயில் கணவனொடு புகுந்தேன்
மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கென
இரவும் பகலும் மயங்கினள் கையற்று
உரவுநீர் வையை ஒருகரைக் கொண்டாங்கு"

என்று கூறுவதைக் கொண்டு தெளியலாம். இஃதன்றி,

வையையைக் கடந்து, வடகரையேறி, வடக்கு நோக்கி நூறு கல்தொலைவு ஓடிச் சென்று, அங்குக் குறுக்கிடும் காவிரி

ஆற்றைக் கடந்து தொடர்ந்து வடமேற்கே நூறுகல் தொலைவு சென்று, திருச்செங்கோடு என்னும் கொங்குநாட்டின் நடுவி லுள்ள குன்றை அடைந்தார் கண்ணகியார் என்று கூறு வார்க்குச் சிலம்பில் உரையில்லை என்பதொன்றே காட்டுவ தோடு, நிலநூல் பயிற்சியும் கள ஆய்வும் நேர்வதன்றி வரலாற்றுச் சுவடு காணல் பிழையாம் என்பதனை ஈண்டு நினைவுசெய்தல் இன்றியமையாததாகும்.

அக்கம் பக்கம் - ஆய்வு

மதுரைக்கு மேற்கே, மேற்கு நோக்கிய நிலையில் அவலச் சூறாவளியில் அலமந்து வையையாற்றின் தென்கரைவழியே ஓட்டமும் நடையுமாகச் சென்ற கண்ணகியாரின் அடிச்சுவட்டில் எனது ஆராய்ச்சி தொடர்ந்தது.

வையைக் கரையில் சிற்றூர்கள் தொடர்ந்துள்ளன. மதுரைக்கு நான்கு கல்தொலைவில் நாகமலையின் தலைப்பு அமைந்துள்ளது. இங்கமைந்த சிற்றூர் நாகமலை புதுக்கோட்டை என்று பெயர்பெறும் சுண்ணப் பாறையின் வளத்துடன் வையைக்குத் தென்பால் நெடிதாகக் கரையிட்டதைப் போன்று இயற்கை எழுப்பித் தந்துள்ள தலைப்பில் ஏறி நின்று காட்சிக் கமைந்த சூழலைக் கணிப்பிடலானேன்.

வரலாற்று நோக்கில் ஓரிடத்தை ஆய்வு செய்வதென்றால் அதன் அக்கம் பக்கங்களையும், காட்சிக்கமைந்த இயற்கைச் சூழல்களையும் ஓரளவாவது ஆராய்ச்சி செய்வது மிக்க பயனுடையதாக அமைந்துவிடுவதை அனுபவமாகக் கண்டுள்ளேன்.

மலைக்குக் கிழக்கே தெரியும் மதுரை மாநகர், வானளாவி எழுந்து நிற்கும் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலின் அழகிய கோபுரங்கள், கூடல் அழகரின் குவிந்த விமானம், அதன் தலைப்பில் வெயிலில் பளிச்சிடும் பொற்கலசம் ஆகியவை என் இதயத்தில் இன்பம் தருவனவாகத் தெரிந்தன.

அடுத்து என் நோக்கத்திற்குத் தென்கிழக்கே திருப்பரங் குன்றம் தெளிவாகத் தெரிந்தது. மதுரைக்கும் பரங்குன்றிற்கும் இடையே பச்சைக் கம்பளத்தால் போர்த்தியதைப்போன்று

அழகிட்ட குன்றொன்று எழுந்துள்ளது. இதனையே பசுமலை என்று பெயர் சுட்டிக் கூறுகின்றனர்.

அடுத்துத் தொடர்ந்த தென்திசை நோக்கில், அண்மைக் காட்சியாகப் பல குன்றுகள் மரஞ்செடி கொடிகளின்றி மொட்டையான பாறைச் சூழல்களோடு காட்சியளித்தன. குன்றுகள் அனைத்தினையும் ஓருசேரக் கண்ணோட்ட மிட்டுப் பார்த்துச் சிந்திக்கலானேன்.

பசுமை மலை

மதுரையிலிருந்து பரங்குன்றம் செல்லும் வழியிடையே அமைந்திருப்பதுதான் பசுமலை. சிறிய குன்றாயினும் மலை என்ற பெயராலேயே அது வழக்கில் குறிக்கப் பெறுகின்றது.

மதுரைக்கும் சுந்தரேசுவரர் கோயிலுக்கும் பாண்டிய மன்னர்களை வைத்துச் சமயச் சார்பில் பெருமை சேர்ப்பது பரஞ்சோதி முனிவர் எழுதிய திருவிளையாடற் புராணமாகும்.

புராணத்தில், பசுமலை என்ற பெயருக்குக் காரணம் கூறப் பட்டுள்ளது. ஒரு காலத்தில் மதுரையில் இருந்த சைவரையும் மதுரையையும், நான் கண்ட பாறைக் குன்றுகளில் வாழ்ந்திருந்த சமணர்கள் அழிக்கத் திட்டமிட்டார்களாம். அதன் செயலாகச் சமணர் செய்த கொடிய வேள்வியிலிருந்து மிகக் கொடிய பெரிய மாயப்பசுவொன்று தோன்றிச் சமணரின் ஏவுதலால் மதுரையை அழிக்கத் தொடங்கியது. பாண்டியன் இது கண்டு பயந்து சோமசுந்தரப் பெருமானிடம் முறையிடப் பெருமான் வில்வேட னாக வந்து மாயப்பசுவை வீழ்த்தினார் என்பது புராணம் கூறும் செய்தி. பசுவீழ்ந்து மடிந்து மலையாகிக் கிடப்பதனையே மக்கள் பசுமலை என்று சுட்டினார்கள். இக்கதை சமயச் சார்பில் அமைந்தது.

பசுமலை என்ற பெயர் புராணச் செய்தியால் அமைந்தது. ஆனால், மக்கள் அந்த அளவில் நில்லாமல் பசுமலையைச் சார்ந்து பாறையும் பரலுமாக உயர்ந்துள்ள சிறுகுன்றிற்குக் காளைமலை என்ற பெயரைக் கற்பித்துள்ளனர்.

பெயர்க்காரணம்

ஆ என்றும் கோ என்றும் தமிழர் சுட்டிய பெயரிருக்கவும், புராணத்தால் பசுமலை என்ற பெயரமைந்தது ஒருபுறமிருக்க, வளாக அறிவியல் ஆய்வின் வழிப் பெயரை யறிவது சிறப்புடைய தாகும்.

மதுரையில் தென்மேற்கிலிருந்து தொடர்ந்து ஆங்காங்கே எழுந்துள்ள குன்றுகள் பலவாகும். தொலைக்காட்சிக்கமைந்த இக்குன்றுகளில், பரங்குன்றின் மேற்பகுதியில் சில மரங்களின் தலைப்புத் தோற்றம் தெரிவதைத் தவிர மற்றைய குன்றுகள் பாறைத் தோற்றமாகக் காட்சியளிக்கவும் பசுமலை ஒன்றே கோடைக்காலத்திலும் மரங்களின் பச்சைச் செழுமையால் சூழ்ந்த காட்சியாகவே தோற்றமளிக்கின்றது.

பண்டைய தமிழன் இயற்கை காட்டியுள்ள எல்லாப்பொருள் கட்கும், குறிப்புடனும் காரணத்துடனும் பெயர் குறித்துள்ளான்

யானையின் தோற்றமாக அமைந்த மலை யானைமலை, சோலைகளால் சூழ்ந்த மலை சோலைமலை. மேலே பரப்பிடங் கொண்ட மலை பரங்குன்று. சமணர்கள் வாழ்ந்திருந்த மலை சமணர்மலை. கொல்லும் நச்சுநீரும் பச்சிலையும் நிரம்பிய மலை கொல்லிமலை. பச்சைப்பசேலென்று பார்வைக்குத் தோற்றமளித்த மலை பச்சைமலை, பெருமலையாயினும் எதிரே உயர்ந்து தொடர்ந்த மேற்கு மலையை நோக்கச் சிறிதானது சிறுமலை. இப்படியெல்லாம் இயல்பும் இயற்கையும் தழுவிய நற்பெயர்களையே தமிழர் அன்று குறித்துள்ளனர். தொல்காப் பியரும் இக்குறிப்புத்துலங்க "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்று பொதுவும் சிறப்பும் புனைந்து காட்டி யுள்ளார்.

சமணர்மலைக் கல்வெட்டுகள்

சமணர் குன்று, செட்டிப் பிடவு, பேய்ச்சிப் பள்ளம் ஆகிய மலைப்பகுதிகளில் சமண முனிவர்கள் வாழ்ந்திருந்ததற்குரிய சின்னங்கள், சமணதீர்த்தங்கரர்களின் திருமேனிகள், சமணப்

பெண் தெய்வங்கள் (ஸ்ரீபத்மாவதி) கற்படுக்கைகள், தமிழ்வட்டெழுத்துக்கல்வெட்டுக்கள் ஆகியவை வரலாற்றுச் சான்றுகளாக உள்ளன.

அவற்றுள் 'சமணர் மலை' என்னும் சமணர் குன்றின் மேல் தளம் பிடவில், சமண முனிவர்கள், தங்கள் பெயராலும், தங்களின் மாணாக்கர்கள், அறவோர்கள் ஆகியவர்களின் விருப்பப்படியே அவரவர் பெயராலும், பாறை முகப்பில் வரிசையாகவும் தெய்வீகக் களையுடனும், முறையாகவும், புடைப்புச் சிற்பங்களாகச் செய்துள்ள திருமேனிகளின் கீழ், அத்திருமேனியினைச் செய்தமைத்தவரின் பெயருடன் செயலையும் பழந்தமிழ் வட்டெழுத்துக்களில் பொறித்து வைத்துள்ளனர்.

சமணர் மலையில் சமணமுனிவர்கள் வாழ்ந்துவந்த காலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து தொடர்வதாகுமென்று, சமணப்பெரியார் திரு. சீவபந்து டி.எஸ். ஸ்ரீபால் அவர்களும், கல்வெட்டு ஆராய்ச்சியாளர்களும் கருதுகின்றார்கள். தமிழ் வட்டெழுத்துக்கல்வெட்டுக்கள் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து தொடர்ந்துள்ளன என்று அறிய முடிகின்றது. இக்கல்வெட்டெழுத்துக்கள் பழந்தமிழகத்தில், தமிழின் வரிவடிவம் சிறந்த எழுத்து வடிவங்களாகவும் முறையாகவும் இலக்கண மரபு வழுவாமலும் வழக்கில் எழுதப்பெற்றுள்ள மொழித்திறம் அறிதற்கிலக்காக அமைந்துள்ளன.

சமணர் குன்றிலுள்ள தமிழ் வட்டெழுத்துக் கல்வெட்டுக்களில், சான்றிற்கு இரண்டு கல்வெட்டுக்களைத் தருகிறேன்.

கல்வெட்டு — 1

''ஸ்வஸ்திஸ்ரீ வெண்புணாட்டுக் குறண்டித்
திருக்காட்டாம் பள்ளிக் குணசேன தேவர்
மாணாக்கர் வர்தமானப் பண்டிதர் மாணாக்
கர் குணசேனப் பெரியடிகள் செய்வித்த
திருமேனி''

கல்வெட்டு — 2

"ஸ்வஸ்திஶ்ரீ வெண்புணாட்டுக் குறண்டி
அட்ட உபவாசி படாரர் மாணாக்கர்
குணசேனதேவர் மாணாக்கர் கானக
வீரப் பெரியடிகள் நாட்டாற்றுப்
புறத்து அமிர்த பராக்கிரம நல்லூ
ரான குயிற்குடி ஊரார் பேரால்
செய்வித்த திருமேனி பள்ளிளிச் சிவி
கையார் ரக்ஷை".

நாகமலை - வழி

மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிய ஆற்றுத் தடமாகவும் மதுரைக்கு வடக்குப் புறமாகவும் அமைந்துள்ள வையை ஆற்றுக்கும், மதுரைக்கு மேற்கே தொடங்கி நெடிதாக வளர்ந்து செல்லும் நாகமலைக்கும் இடைப்பட்ட பகுதியே அன்று கண்ணகியார் வையை ஒருகரை பற்றிச் சென்ற நெறியாகு மென்பதைச் சிலம்பு தரும் செய்தியினைக் கொண்டு அறியமுடிகின்றது.

அன்று வீரபத்தினி யிட்ட பாதச் சுவடுகள் பதிந்திருந்த அப்பகுதியில் எனது ஆராய்ச்சி தொடர்ந்தது. உடனாக முத்து. கந்தசாமியும் வருகின்றார்.

நாகமலை அகலத்திலும் உயரத்திலும் குறைவானதாயி னும் அது பாம்புபோல் நீண்டுத் தொடர்ந்து ஆண்டிப்பட்டி அளவிலும் நாற்பது கல்நீள அளவில் வளர்ந்துள்ள மலை யாகும்.

இம்மலையினைச் சார்ந்துள்ள வையைக் கரை ஊர்களில் மாதரை, உசிலம்பட்டி, கொட்டப்பநாயக்கனூர், ஆண்டிப் பட்டி என்பன குறிப்பிடத் தக்கனவாகும்.

பெயர்க்காரணம்

நாகமலை என்ற பெயர் நெடுங்காலமாகவே மாறாமல் வழக்கில் தொடர்ந்துள்ளது. திருவிளையாடல் புராணத்தில்,

சமணர் ஏவிய கொடிய பெரிய நாகம், சோமசுந்தரக் கடவுளால் கொல்லப்பட்டதால், அதன் வடிவம் மலையாகிக் கிடக்கின்றது என்பதும், அதன் காரணமாகவே நாகம் - மலை எனப்பெயர் கூறப்பட்டுள்ளது என்பதும் புராணவழி கூறப் படும் பெயரமைதியாகும்.

பிற்காலத்தில் ஒருசில பழைமையானதும் பழம்பெயரை உடையதுமான ஊர்கட்குப் புராணம் சுட்டிய கதையாலமைந்த பெயர்களைச் சமயநெறியாளர்கள் வைத்து வழக்கிற்கும் பதிய வைத்தார்கள் ஆயினும், தமிழகத்திலமைந்த இயற்கைச் சுவடு கட்கும், ஊர்களுக்கும் பழங்காலத்தமிழர், அவ்வவற்றின் இயற்கை நுட்பத்தினைக் கொண்டே பெயர் வைத்து உள்ளனர். அம்முறையிலேயே மிகவும் தெளிவான இயல் புடன் நாகமலை என்ற மலைப்பெயரின் உண்மையினையும் உணர்தலாகும்.

இம்மலையின் இயற்கை வளம் பெரும்பான்மையும் சுண்ணப் பாறைப் படிவங்கள் கொண்டதாகவே உள்ளது. அப்பாறைப் படிவங்களில் முதிர்ச்சியான பகுதிகள் துத்தம் என்னும் துருசு (காப்பர் சல்பைட்) தாதுக்களின் கூட்டுக் கலவையாக முதிர்வு பெற்றுள்ளது. இத்தகைய கூட்டுக் கலவையின் முதிர்ந்த படிவம் துத்தநாகம் என்ற உலோகமாக உருக்கொள்வதனை விஞ்ஞானிகள் விளக்கியுள்ளனர்.

இத்தகைய துத்தம் - சுண்ணம் ஆகிய தாதுக்களின் கனிப் பொருள் கலப்புப் பாறைகளாகும், துத்தநாக உலோகத் தாதுப்பொருள் கலவைப் படிவக் கனிப்பாறைகளாகவும் வளர்ந் துள்ள, நாக உலோகப் படிவ இயற்கை மலையாக இம்மலை உள்ளதால், பழந்தமிழர் இம்மலையின் வளத்தினை வருங் கால மக்கள் அறிந்து பயனெய்துமாறு, ‘நாகமலை’ என்று பெயர் வைத்துக் காட்டியுள்ளனர் எனலாம்.

இவ்வாறமைந்த இயற்கையோடு இயைந்த உண்மைப் பெயர்ப்பொருள் இன்றும் சென்று அறிஞர் ஆய்ந்து அறியத் தக்கதாகும். மற்றும், சித்தர் மருத்துவத்திற்கான மூலப் பொருள்களுள் கற்படிவ நிலையில் மலைகளில் கிடைக்கும் 'தாளகம்' என்ற மருந்துத் தாதுப்பொருளாகும் கற்களும், நாகமலையின் அடிவாரத்தில் கனிப்பொருளாகக் கிடைப்ப தனை அறிமுகம் செய்கின்றேன்.

நெடுவேள் குன்றத்தில் - கண்ணகி கோட்டம்.

அடிச்சுவட்டில் - தொடர்ச்சி

வையையின் ஒரு கரையாம் தென்கரை வழியே மேற்கு நோக்கி அமைந்து ஓடிய கண்ணகியாரின் நிலையைக் காண்போம்.

விரித்த கூந்தலும் ஒரு நகில் குறைத்த மார்பகமும் உள்ள கண்ணகி ''மங்கல அணியில் பிறிதணி மகிழாள்'' என்று அடிகள் அந்திமாலைச் சிறப்புச்செய் காதையில் கூறியவாறு பிறிதணி இன்றி மங்கல அணி மார்பில் அசைந்தாட அவலமுடன் ஓடுகின்றார். மதுரையில் நிகழ்ந்த கொடுமையினை நினைத்து அவர் அச்சம் மேலிட அலறிக்கொண்டு ஓடுகின்றார் என்றும் கூறலாம். அவர்தம் அடிகள் பாவித் தாவிப் படர்ந்து செல்லுகின்றன.

நிகழ்ச்சியை நெஞ்சில் உருவாக்கிப் பார்க்கின்றார் இளங்கோவடிகள். இதனைக் கட்டுரை காதையில் காட்டத் திட்டமிட்டார். அவர் நெஞ்சம் நெகிழ்ந்தது. கண்ணகியாரின் அவல நிலையை நெடிதாக விளக்கி அவரால் காட்டவியலவில்லை.

எதிர்நோக்கு

தமிழகத்தில் ஓடும் ஆறுகளையும் அவற்றின் கரைகளில் நிலைத்து வாழ்ந்த மக்கள் வளர்த்த நாகரிகங்களையும் ஆய்வு செய்தெழுதிய ஆசிரியர்கள், ஆறுகளின் தோற்றத்தில் தொடங்கி, நெடிதாக ஓடிக் கடலில் சங்கமமாகும் அளவு நிறைவு காட்டி எழுதுவார்கள்.

எனது ஆய்வு சிலப்பதிகாரம் தரும் செய்திகள் வழியே, கண்ணகியாரின் அடிச்சுவட்டில் அமைந்ததால், ஆறுகளின் போக்கொடு அமையாமல், எதிர்நோக்கொடு அமையலாயிற்று என்பதை அறிமுகப்படுத்துகிறேன். மற்றும் மலை உயர்விலிருந்து கடல் மட்டத் தாழ்விற்குரிய விளக்கம் போலாது, தாழ்ந்த கிழக்கிலிருந்து உயர்ந்த மேலை மலைவரையில் என் ஆய்வுகள் தொடர்ந்து அமைந்திருந்ததனையும் நினைவு செய்கிறேன்.

எனவேதான், தேனிக்கு முன்னர் உள்ள குன்னூர் அளவில் கண்ணகியாரின் அடிச்சுவட்டைக் காப்பியம் காட்டிய அளவில் கணக்கிட்டுத் தொடர்ந்த எனக்கு, அங்குத் திருப்பங்கொள்ளும் வையையைத் தொடர்ந்து செல்ல வழியின்றிச் சிந்திக்கலானேன். ஆற்றில் எதிர்நீச்சல் எவ்வளவு முயற்சியுடையதோ அதைவிடப் பன்மடங்கு எனது எதிர்நோக்கு ஆய்வு இப்பகுதியில் மிக்க கடினமாகவே இருந்தது.

அடிகள் காட்டிய அடிகள்

இளங்கோவடிகள் எழுத்தாணியை ஓலையில் நாட்டுகின்றார், செய்திச் சுருக்கமாக எழுத்துகள் ஓலையில் பதிவிட்டன. அவை,

"அவல என்னாள் அவலித்து இழிதலின்
மிசைய என்னாள் மிசைவைத் தேறலின்—
நெடுவேள் குன்றம் அடிவைத் தேறிப்
பூத்த வேங்கைப் பொங்கர்க் கீழோர்
தீத்தொழி லாட்டியேன் யானென் றேங்கி
எழுநா ளிரட்டி எல்லை சென்றபின்—
கோநகர் பிழைத்த கோவலன் தன்னொடு
வான வூர்தி ஏறினள் மாதோ"

என்ற அளவில் பதிவிட்டன. கண்ணகியாரின் அடிச்சுவடுகள் நெடுவேள் குன்ற மலைமேல், வேங்கை மரத்தடியில் இட்ட சுவட்டுடன் நிலைபெற்றன; நிறைவும் பெற்றன.

அடிகள் எத்துணை அளவு சுருக்கமாகக் கூறிக் கண்ணகியாரின் இறுதி நிலையைக் காட்டுகின்றார்? அடிகள் சமணத்

துறவியராதலின் இரக்கவுணர்வுக்கு இலக்காகி யுள்ளமையைச் சிலப்பதிகாரத்தில் இப்பகுதியால் அறிய முடிகிறது.

அடிகளைத் தொடர்ந்த ஆய்வு

மதுரையிலிருந்து தொடங்கிய என்னுடைய ஆராய்ச்சி, நாகமலை அளவில் படர்ந்தும் தொடர்ந்தும் அமைந்தது. மேல், அடிகள் சிலம்பில் காட்டிய வேகத்தில் எனது ஆராய்ச்சியும் அமைந்தது.

நாகமலை ஆண்டிப்பட்டிக்கு முன்னர்த் தென்புறத் திருப்பமாகத் தாழ்ந்து, ஆண்டிப்பட்டி மலையுடன் இணைந்து கரைந்து விடுகின்றது. அடுத்துள்ளது தேனி என்ற ஊருக்கு முன்னர் வையை ஆறு குன்னூர் (குன்றூர்) என்ற இடத்தில் குறுக்கே திருப்பங் கொண்டுள்ளது.

இப்பகுதியில் பழனிமலை, கொடைக்கானல் மலை ஆகியவற்றில் தோன்றி வந்து வையையில் கூடும் ஆறுகள் கற்பரல் நெறியில் அலைத்து ஒலித்துக் கலப்பது காணத் தக்கதாகும். இப்பகுதியில் மலைச்சரிவிடங்களில் யான் நிகழ்த்திய ஆய்வில், கற்கால மக்களின் கற்கருவிகளில் சிலவற்றைக் காணமுடிந்தது. தமிழக வரலாற்றின் தொன்மைக்குச் சான்றான குன்னூரிலிருந்து வையையைத் தொடர்ந்து என்னுடைய ஆராய்ச்சிப் பணி தொடர்ந்தது.

தாக்குத்தரைவளம்

குன்னூரிலிருந்து வையையைப் பின்பற்றி மேலே செல்வது எளிதல்ல. இதற்குக் காரணம் இங்குச் சிற்றாறாக ஓடிவரும் வையையும் அதில் வந்துகூடும் அருவிகளும் ஆறுகளும் இருப்பதும் எங்கும் நீர்க்கசிவும் பள்ளமும் உளையுமாகப் பரவிய தரையாக இருப்பதும், அதில் காடும், கறடும், புதரும் பரவிச் செறிந்திருப்பதுமேயாகும்.

இப்பகுதியில் ஆங்காங்கே பல சிற்றூர்கள் இருக்கின்றன. அவற்றுள் மோட்டாங்காடு, செங்குன்னூர், சுருளிப்பட்டி என்பன குறிப்பிடத்தக்கனவாகும். இவ்வூர்களில், மலையிலும்

காட்டிலும் உழைப்பால் வாழும் எளிய மக்களே வாழ்கின்றனர். இவர்களுள் மிகப்பழங்குடியினராக வாழ்பவர் பளியர் என்னும் வேட்டுவரேயாவர். இவர்கள் குடிசைகள் அமைந்துள்ள மலை அடிவாரம் 'பளியர்குடி' என்ற பெயருடன் உள்ளது. இங்குள்ள காடுகளில் யானைகள் கூட்டங்கூட்டமாக நிலைத்து வாழு கின்றன. கரடிகளும் புலிகளும் ஒருசில காலங்களில் இயங்குவ துண்டு என்ற செய்தியினையும் அங்குள்ள மக்கள் வழியே அறியலானேன்.

செங்கோடு

குன்னூர்ப் பகுதியிலிருந்து வையை ஆற்றினைச் சார்பாகக் கொண்டு பள்ளத்தாக்கில் சென்றால், எதிரே எங்கும் தரைவழி இல்லை. காடுகளோடு தொடர்ந்து எழுந்து வானளாவிச் செங்குத்ததாக உயர்ந்துள்ள முகடுகளுடன் கூடியதும், மேகப் படலங்கள் படிந்து நெகிழ்வதுமான செங்குகோட்டு உயர் அடுக்கு மலைத்தொடர்களே சூழ்ந்து நிற்கின்றன. இம்மலைச் சூழலில் ஓரிடத்தில் ஏறியே மேல் செல்ல வேண்டும்.

கண்ணகியார் இத்திருப்பத்தில் சென்று எதிரே வளைத்து நின்ற மலைச் சூழலில் ஓரிடத்தில் ஏறியுள்ளார். மலையின் பக்கம் செங்குத்தாக இருப்பதால் மேல்நோக்கி அடிவைத்து ஏறியுள்ளார்.

இக்காட்சியினையே அருமையாக அடிகள் "நெடுவேள் குன்றம் அடிவைத்து ஏறி" என்று கண்ணகியார் முயன்று வலிந்து அடியிட்டு மேன்மேல் மலையில் ஏறிய உருக்கந்தரும் நிகழ்ச்சியை எழுத்துக்காட்சியாக எடுத்துக் காட்டுகின்றார்.

மழைநாடு

கம்பம் பள்ளத்தாக்கில் தென்கிழக்குப் பருவகாலமழை நன்றாகப் பெய்வதோடு, ஆண்டு முழுவதும் தொடர்ந்து மழை பெய்வதால் தரைப்பகுதி ஈரமாகவும் சேறுள்ளதாகவும் இருக் கின்றது. எனவே, காட்டு வளமாகவும் இப்பகுதி ஏற்றம் பெற்றுள்ளது.

கம்பம் பள்ளத்தாக்கில் மழை அதிகமாகப் பெய்வதென்பது பொதுவாயினும் அதன் கிழக்கிலுள்ள ஏழுமலை, மேகமலை, ஆகிய மலைகளிலும், அதன் தாழ்வாரப் பகுதிகளிலும், தாழ் நிலச் சரிவுகளிலும் தொடர்ந்தாற்போல் பெய்யும் மழையியற்கை மிகுந்திருப்பதினால் இப்பகுதியைப் பிற்கால மக்கள் "வர்ஷ நாடு" என்று குறித்தனர் (வர்ஷம் – மழை தொடர்ந்து பொழிதல்) இது தமிழில் 'மழைநாடு' என்று பெயர் பெறும்.

கம்பம் பள்ளத்தாக்கு ஏறத்தாழ முப்புறமும் மலைகளால் சூழப்பட்ட தாக்காகவே அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க தாகும்.

கிழக்கே ஆண்டிப்பட்டி மலையுடன் தொடரும் சுருளிமலை; சுருளிமலையுடன் தொடர்ந்து உயர்ந்து மடிப்பிட்டுப்படர்ந்த ஏழுமலை; மேகமலை;

தெற்கே, சுருளிமலைக்கிளைப்புடன் மேற்கே படர்ந்த வண்ணாத்திப்பாறை, என்ற மலை முகப்பு; இவற்றிற்குத் தென்பக்கம் தாழ்ந்து பலமுகடுகளுடன் செல்லும் பேரியாற்று அயிரிமலை அடுக்குத் தொடர்ச்சி ஆகிய இத்தொடரின் கீழ்த் திசையில் இராசபாளையம் என்கிற ஊர் அமைந்துள்ளது,

மலைகூடல்

குன்னூரிலிருந்து தென்திசையில் தொலை நோக்காகக் காண்போமாயின், கிழக்குப்புறம் ஆண்டிப்பட்டி மலையை அணைத்தெழுந்து உயர்ந்து தெற்கே நீண்டு தொடர்ந்த ஏழுமலைகள், மேகமலைச்செறிவு ஆகிய அடுக்குமலைகளுடன் படர்ந்து இணைந்து மேற்கு முகமாகத் திருப்பங்கொண்டு, இருபதுகல் அளவில் நீண்டு, ஆங்கு மேற்குப் பெருமலையோடு மயங்கி நிற்கும் சுருளி மலைத்தொடர் பெருமிதத் தோற்றத் துடன் காட்சியளிக்கின்றது.

தெற்கே சுருளிமலையின் மேலைக் கோடியில் கூடும் பேரி யாற்று அயிரிமலைத் தொடரும் வண்ணாத்திப்பாறையும் இணைந்துள்ளன.

அதைத்தொடர்ந்து தென்மேற்கே மலைத்தடம் தாழ்ந்து குமுளி என்னும் ஊரிலிருந்து மேற்கிட்டுத் தொடர்வது நெடிய மேற்கு மலைத்தொடர்.

இத்தொடருடன் சேர்ந்து உயர்ந்த பாங்கில் வடக்குத் திசையில் வானளாவி நின்று பலமுகடுகளுடன் எழுந்து கிழக்கே படர்ந்து தொடர்கின்றன கொடைக்கானல் மலைத்தொடரும் பழனிமலைத்தொடரும்.

இவ்வாறாகப் பெரிய மலைகளால் வளைக்கப்பட்ட நடுவிடமாகிய பள்ளத்தாக்கே கம்பம் பள்ளத்தாக்காகும். இவையே வர்ஷநாட்டின் எல்லைகளும் இயற்கையமைப்புமாகும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க மலைத்தொடர்கள் ஒன்றோடு ஒன்று நீண்டு இணைந்து கூடித் தொடரும் சூழலினாலேயே இப்பகுதியிலுள்ள சிற்றூர்களில், 'கூடலூர்' என்ற பெயரால் இரண்டு ஊர்கள் சுட்டப்பெற்றுள்ளன என்பது அறியத்தக்கதாகும்.

மூணாறு, மலைமுக்கூடல், முக்கூடல் என்ற பெயர்களைப் போன்று, மலைகள் ஒன்றோடு ஒன்று கூடிச் செல்லுதலினால் கூடல்மலை என்ற பெயர் சுட்டப்பட்டிருக்கவேண்டும். மற்றும், இம்மலைகள் சூழ்ந்து தொடர்ந்து வந்துள்ள தோற்றத்தினைக் குதிரை இலாட வளைவு என்றும் குறிப்பிடலாகும். குன்னூரும், தேனியும் கம்பம் பள்ளத்தாக்கிற்குறுகி நுழைவாயில் போன்று இருப்பதனையும் பள்ளத்தாக்கினைச் சுற்றிவளைத்து மலைகள் சூழ்ந்த வடிவில் உயர்ந்து நீண்டு அமைந்திருப்பதனையும் நேரில் காணின், அன்று கண்ணகியார் இப்பகுதியில் சென்றவர் எதிரே உயர்ந்து நிற்கும் ஏதோவொரு பகுதியின் மலை மேல் ஏறிச்சென்றிருக்க வேண்டுமென்ற கருத்து நேர்முகக்காட்சியால் நிலைபெறும்.

குமுளி

ஏரிப்பாசனமாக வுள்ள நிலங்கட்கு, ஏரியில் நிறைந்துள்ள நீரை, ஏரியில் உட்புறத்தில் மதகுக்கால் அமைத்துக்கரைக்கு

வெளியே நீர்வருமாறு செய்துவைப்பது வழக்காகும். ஏரிக்கால் வழியே வேகமாக வரும்நீர் வெளிவாயிலில் குமிழ்த்துக்குதித்து வேகங்கொள்ளும் பாங்குடன் அமைக்கப்பெறும் கட்டட அமைப்பு கால்வாய் என்று பெயர் பெறும். அத்தகைய நிலையில் மலையின் இயற்கையான புழையிலிருந்து நீர் குமிழ்த்து வருவதால் 'குமிழி' என்று பெயர் பெற்ற மலைத்தடத்து ஊரொன்று கம்பம் பள்ளத்தாக்கின் தென்மேற்கு எல்லையினைச் சார்ந்து அமைந்துள்ளது.

மூணாறு. முக்கூடல், மலைக்கூடல் என்ற பெயர்களைப் போன்று, மலைகள் ஒன்றோடொன்று இப்பகுதியில் கூடித் தொடரும் இயல்பினால் அக்காலத்தில் 'கடன் மலை' என்ற பெயர் இப்பகுதிக்குச் சூட்டப்பட்டிருக்கவேண்டும்.

பள்ளத்தாக்கைச் சூழ்ந்துள்ள மலைத்தொடர் வளைவாக அமைந்துள்ள இயற்கைத் தோற்றத்தினை முன்னர் விளக்கியுள்ளேன்.

இப்பள்ளத்தாக்கின் தென்மேற்கு மூலையில், மலையின் தென்புறம் ஓடும் பேரியாற்று நீர், இயற்கையிட்ட தடையாகக் குறுக்கே எழுந்துநிற்கும் பெரும்பாறைகளின் இடைவெளியில் கால்கொண்டு இறங்கி ஊடுருவிச் சென்று மலையில் அகட்டில் பதிந்து கசிந்த பள்ளதாக்கில் அருவியாக வெளிப்பட்டிருந்த இயற்கையினைக் கண்டு பண்டைய தமிழன் அப்பகுதிக்குக் 'குமிழி' என்று பெயரிட்டுள்ளான். அவ்வழகிய தமிழ்ப்பெயர் இன்று 'குமிளி' எனத் திரிந்துள்ளமை அறியத்தக்கதாகும்.

நெடுவேள் குன்றம் - சுருளிமலை

கம்பம் பள்ளத்தாக்கினுள் வையையின் வழித் தடத்தைப் பின்பற்றிக் கண்ணகியாரின் காலடிச் சுவடுகள் பதிந்திருக்க வேண்டும். பள்ளத்தாக்கினுக்கு இயற்கை வளைத்தமைத்த நெடிய சுவரைப்போன்றிருக்கும் மலைத்தொடர்களில் 'நெடுவேள்' என்னும் குறிஞ்சி நிலக்கடவுளாகும் முருகனுக்குரிய குன்றம் ஒன்று இருந்ததனையும், இக்குன்றின்மீதே கண்ணகியார் அடிவைத்து ஏறினார் என்பதையும் சிலப்பதிகாரம் விளக்குகின்றது.

எனது ஆராய்ச்சி தொடர்ந்தது. பள்ளத்தாக்கின் இடது புறமுள்ள மலைப்பகுதி ஆய்வுக்கு இலக்காகியது. இம்மலைக்குச் சுருளிமலை என்று பெயர்கூறப்படுகின்றது. மலையின் சரிவில் பாறையில் மோதிய அருவிநீர் சுருண்டு எவ்வித்தாவி விழும் இயற்கைக் காட்சி இம்மலையில் மாட்சிமை பெற்றிருப்பதால் பண்டைத் தமிழர் இம்மலையைச் 'சுருளருவிமலை' என்று சுட்டியுள்ளனர். அப்பெயர் காலவழக்கில் தேய்ந்து சுருளி மலையாகியுள்ளது.

இதனை இயற்கை வளத்தால் அறிந்துகொண்ட அளவில் முருகன் இடங்கொண்ட நெடுவேள் குன்றம் எது என்பதனை ஆராயலானேன். ஆய்வுக்கு அமைந்த உண்மையாக மலை முகப்பில் உள்ள 'கைலாயப்பொடவு' என்ற இயற்கையான குகைக்கோயிலில் முருகன் சிறப்பாகக் கொண்டாடப்பெறுவதை அறிந்தேன். மற்றும் மலையின் மேல்தளத்தின் மேற்குப்பகுதியில் வேல் மட்டும் நடப்பட்டுள்ள ஒரு தாக்குத்தளம் இருப்பதையும் கண்டேன். எனவே சுருளி மலை, முருகனுக்குரிய, வேலனுக் குரிய தெய்வத்தலமாகச் சிலப்பதிகார நிகழ்ச்சிக்காலத்திலேயே இருந்திருக்கவேண்டுமென்பதனை நேரில் அறியலானேன். எனவேதான் அடிகள், இப்பகுதிக்கு வந்த கண்ணகியார், எதிரே நின்ற நெடுவேள் குன்றத்தின்மீது அடிவைத்து ஏறினார் என்று எழுதியுள்ளாரென்பதும் புலனாயிற்று.

அடிகள் நெடுவேள் குன்றம் என்று குறித்துள்ளதற் குரியதாகச் சுருளிமலை அமைந்திருக்கும் இயல்பினை அறிந்த போது, அம்மலையின் தென்கிழக்கில் மேகமலை என்ற பிரிவில் தொடங்கி அருவியாக வரும் வையை யாற்றினைத் தொடர்ந்து சூழ்ந்துவரும் மலைத் தொடர்ப் பகுதியிலேயே கண்ணகியார் அடிவைத்து ஏறி மலையின் மேல்நிலைத் தாழ்வரையில் வேங்கை மரத்தின் கீழ் நின்று தெய்வநிலை எய்தி இருக்க வேண்டும் என்ற கணிப்பு உள்ளத்தில் உருவாகியது. அதுபற்றிய செய்திகளோ சின்னங்களோ கிடைக்கக்கூடும் என்ற நோக்கில் பள்ளத்தாக்கில் உள்ள வரலாறுகொண்ட வளநாடு, சின்ன மனூர், உத்தமபாளையம், கம்பம் ஆகிய ஊர்களில் உள்ள கோயில் கல்வெட்டுகளையும், பிற பழைய இடங்களையும்

ஆய்வு செய்தேன். அவ் வூர்களில், பிற்காலப் பாண்டியர்களைப் பற்றியும், வணிகக்குழுவினரைப் பற்றியும் தெரிவிக்கும் கல் வெட்டுச்களும், அறநிவந்தங்களைக் கூறும் கல்வெட்டுக்களும் கிடைத்தனவே தவிரக் கண்ணகியாரைப் பற்றிய சின்னங்களோ தடயங்களோ கிடைக்கவில்லை.

உறுதி ஒளி

அப்பகுதியில் நான் என் மாணவர் முத்து. கந்தசாமியின் துணையுடன் ஆராய்ச்சி நிகழ்த்திய காலம், கி. பி. 1961-62 ஆகும்.

பலகாலும் சென்று ஆராய்ந்து வரும் நாட்களில் ஒருநாள் கம்பம் என்ற ஊரிலிருந்து குமுளிக்குச் செல்லும் நெடுஞ்சாலை வழியே சென்றோம். அங்குச் சாலைக்குத் தென்புறம் உள்ள படர்ந்த திடர்ப்பகுதி சிதைவுடன் ஆங்காங்கே தொடரும் சிறிய மண் சுவரால் வளைக்கப்பட்டிருந்தது. அதில் வளர்ந் தோங்கி இருந்த லேப்பமரத்தின் கீழ்ச் சிறிய மழுமழுப்பான கல் ஒன்று நடப்பட்டிருந்தது. பார்வைக்கு ஏதோ ஒரு தெய்வ வழிபாடு அமைக்கப்பட்டிருந்த தோற்றம் தெரிந்தது. அத் தெய்வத்தைப்பற்றி அவ்வழிச் செல்வாரிடம் கேட்டபோது, அவர்கள் அறிவித்த செய்தி, கண்ணகியார் அடிச்சுவட்டின் கோடிக்கு வந்துள்ள எனது ஆய்விற்குக் கலங்கரை விளக்காக அமைந்தது. அப்பகுதி 'ஆங்கூர் பாளையம்' என்ற சிற்றூரிற்கு அருகிலுள்ளதாகும். எழுச்சியுற்ற உணர்வுடன் அப்பகுதியிலுள்ள 'சாமண்டிபுரம்' என்ற சிற்றூரின் சூழலையும் ஆய்வுசெய்த நிறைவுடன் தஞ்சைக்குத் திரும்பினேன்.

படிப்புறக் கோட்டம்

வேப்பமரத்தடி தெய்வத்தைப் பற்றிக் கூறியவர் நேர் தெற்கில் தொலைக் காட்சியாகத் தெரியும் காடடர்ந்து உயர்ந்து நீண்டு செல்லும் மலையில் ஒரு அடவியினைச் சுட்டிக் காட்டி அந்த மலைமேல் பழமையான கோயில் ஒன்று புதரடைந்து இருக்கின்றது; அங்கு யானைகள் எப்பொழுதும் கூட்டம் கூட்டமாக இருக்கும்; கரடி, புலி ஆகிய விலங்குகளும் உண்டு என்றார்.

அங்கு ஆடி மாத வெள்ளிக்கிழமையும், தைமாத முதல் நாளும் மக்களும் மலைப்பகுதியில் வாழும் பளியர் என்ற குறவர் களும் சென்று பத்தினிப்பூசை நடத்தி வருவார்கள்.

விலங்குகளின் தொல்லைகட்கு அஞ்சியமக்கள் மலைமேல் சென்று வருவதற்கு இயலாமல் போகவே, அந்தத் தெய்வத்தை இங்கே இருப்பாக்கிப் பூசைகள் நடத்தி வருகின்றார்கள்; இப் பகுதி முன்னர்ப் பெரியதாக இருந்தது; இப்பொழுது வேளாண்மை விரிவாக்கத்தால் இடம் சுருக்கமடைந்துள்ளது; இந்தத்தெய்வத்தின் பெயர் பத்தினித் தெய்வமாகும்; இவ் விடத்தைப் பத்தினிக் கோட்டம் என்பார்கள் என்று தெரி வித்தார்.

இச்செய்தி என் செவிகளில் அமுதமாக நிறைந்து ஆராய்ச்சி யில் புதுவேகத்தினை அளித்தது. மலைமேல் உள்ள கோயில், கண்ணகியார் நின்று சென்று தெய்வமான இடத்தில் எழுப்பப் பட்ட கோயிலாக இருக்கலாம் என்ற எண்ணவூற்று எழுந்தது.

கண்ணுக்குத் தொலைவில் அச்சம் நிறைந்த பள்ளத்தாக்கும் பெருங்காடுகள் நிறைந்த மலைத் தொடர்களும் காணப்பட்டன. கம்பம் பள்ளத்தாக்கில் எவ்வகையில் ஆராய்ச்சி மேற்கொள்வது என்ற மனக்குழப்பம் ஏற்பட்டது. அந்த அளவில் அன்றைய ஆராய்ச்சி அளவு பெற்றது.

ஆய்வில் தொய்வு

தஞ்சைக்குத் திரும்பினேன். பல நாட்கள் சிந்தித்தேன். சிலப்பதிகாரச் செய்திகளை நன்கு ஆராய்ந்தேன். கண்ணகியார் அடிவைத்து ஏறித் தெய்வமான மலைப்பகுதி இதுவாகத்தான் இருக்கவேண்டும் என்ற உறுதி அமைந்தது. அப்பகுதிக்குரிய நிலநூல் விளக்கங்களைத் தேடினேன். ஆங்கில அரசு 1906-ல் வெளியிட்டுள்ள மதுரை மாவட்ட வளாகக் குறிப்பேட்டினைப் பெற்றுப் படித்தறிந்தேன்.

தனி மனிதன் ஆராய்ச்சி செய்ய இயலாத சூழ்நிலைகளை யும், மலை அமைப்பினையும் வளாகக் குறிப்பேடு விளக்கியது. அப்பகுதியை அறிதற்கு ஏட்டில் உள்ளவாறு தந்துள்ளேன்.

The Hilly area has been quite vividly described in Madura Gazetteer (Page 140) and the extract is reproduced below for ready reference.

Madura District Gazetteers. A.D. 1906.

By

W. FRANCIS.

"High Wavy Mountain:- The upper part of this hills consists of an undulating plateau, perhaps fifteen square miles in area which is covered with a continuous, dense, ever green forest which is a favourite haunt of elephants and runs down in long irregularly shaped masses for a considerable distance through the deep valleys on either side. Below it is a zone of bare rocky grass land and beneath that again, the lower slopes are well covered with deciduous forests. This tract all drains into the Kambam Valley and in it lie the sources of the Suruli river the beautiful fall of which is a well-known land-mark on the road to the Periyar-lake".

எப்படிச் செல்வது? எவ்வழியே செல்வது? கொடிய விலங்குகளால் துன்பம் ஏற்பட்டால் என்ன செய்வது என்ற கலக்கமும், அச்சமுமே எழுந்து நின்றன.

மனைவி மக்களை நினைத்தபோது, ஆராய்ச்சி விரைவு பெறாமல் அழுங்கியது. மனத்தில் ஊக்கம் குன்றித் தொய்வு தோன்றியது.

இதுவரையில் தமிழகத்தில் யாரும் காணாத ஒன்றைக் கண்டுபிடித்துக்கூறும் ஆசை ஒருபுறமும், அச்சம் மறுபுறமும் இழுக்கப் பெண்டு பிள்ளைகளின் பாசம் இன்னொரு புறமும் இழுத்தன. இந்த நிலையில் காடு சூழ்ந்ததும் கொடிய விலங்குகள் நிறைந்ததுமான சுருளி மலைப்பகுதியில் ஆராய்ச்சி தொடருமா? தொடராது துணிவின்றி, வழியின்றி, மனம் அழுந்தி இருந்தேன். இவ்வாறு திங்கள் பல கழிந்தன.

தூண்டலும் துலங்கலும்

கண்ணகியார் அடிச்சுவட்டில் பூம்புகார் முதல் தொடங்கிய எனது வரலாற்று ஆய்வுப் பயணம் கம்பம் பள்ளத்தாக்கில் உள்ள பத்தினிக்கோயில் வரையில் சென்று மயங்கி நின்ற போது, ஆராய்ச்சிக்கு உயிரூட்டும் நிகழ்ச்சியொன்று தஞ்சையில் அமைந்தது.

தஞ்சை சரபோசி மன்னர் கலைக்கல்லூரியில் ஆசிரியராகப் பணியேற்ற இளைஞர் திரு. இரா. கணபதிராசன் என்பவரின் தொடர்பு ஏற்பட்டது. அவர் கம்பம் பள்ளத்தாக்கின் மேலைக் கோடியிலுள்ள மேலக்கூடலூரில் வாழ்பவர். அவரிடம் எனது ஆராய்ச்சி அவாவினை யான் ஆர்வமுடன் கூறியபோது, அவர் மலைப்பகுதிகளைப் பற்றிய விவரங்களைக் கூறியதோடு, மலை மேல் சென்று வரும் அனுபவமுள்ள பெரியோர்களின் உதவி யினையும், அப்பகுதி மலைகளின் மீது துணிவுடன் எக்காலத்திலும் சென்றுவரும் உடல் உறுதி நிறைந்த சி. இராமன் என்பவரின் துணையையும் அமைத்துத் தருவதாக உறுதியளித்தார்.

அவரது சொற்கள் எனக்கு அமுத மழையாக அமைய எனது ஆராய்ச்சி தளிர்க்கத் தொடங்கியது.

கூடலூர் பெருமாள்கோயில் கல்வெட்டு

1963-ஆம் ஆண்டு, திங்கள் என்ற காலக்கணக்கில் கழிந்து வந்தது. அக் காலங்களில், மேலக்கூடலூர் பகுதிகளில் உள்ள கல்வெட்டுகள், தொல்பொருள் துறையினரால் வெளிப்படுத்தப் பட்டுள்ளனவா என்பதை ஆராயலானேன்.

பேராசிரியர். இராகவையங்கார் எழுதிய 'சேரன் செங்குட்டு வன்' என்ற நூலில் அடிக்குறிப்பாக மேலக்கூடலூர் கல்வெட்டு என்று குறிக்கப்பட் டிருந்தது.

அக்கல்வெட்டினைக் கி. பி. 1906-ல் இந்திய அரசின் கல் வெட்டுத்துறையினர் படியெடுத்து வெளியிட்டுள்ளனர்.

கல்வெட்டு கி. பி. 16 ஆம் நூற்றாண்டில் மேலக்கூடலூர் பெருமாள் கோயிலில் தனிக்கல்லில் பொறிக்கப்பட்டதாகும்.

கல்வெட்டுச் செய்திகளாகக் கம்பம் பள்ளத்தாக்கில் மேலக் கூடலூரைச் சார்ந்துள்ள கோயில்கட்குச் சேரமன்னன் நாயனார் குலசேகரப்பெருமாள் அளித்துள்ள நில நிவந்தங்கள் கூறப்பட்டிருந்தன.

அவற்றுள் சிறப்பாக, மங்கலாதேவி அம்மன் பூசைக்குச் சுருளி ஆற்றைச் சார்ந்த நிலங்களைத் தர்மசாசனம் அளிக்கப் பட்டிருந்த செய்தி ஆய்வுக்கு இலக்காக இருந்தது.

சிலப்பதிகாரத்தில், கண்ணகியை மாதரியிடம் அடைக்கலம் தந்த கவுந்தியடிகள், கண்ணகியாரை அறிமுகம் செய்யும்போது 'மங்கலமடந்தை' என்று குறிப்பிடுவதோடு, கல்வெட்டில் குறிக்கப்படும் மங்கலதேவி அம்மன் என்ற பெயரையும் ஒப் பிட்டுப்பார்க்கும்போது ஓர் உண்மை இணைவு பெற்றிருப்பதை அறியலானேன்.

எனவே, சுருளிமலைத் (நெடுவேள் குன்றம்) தொடர்ச்சியின் மேற்குப் பகுதியின்மேல் உள்ள பழைய கோயிலை ஆராய்ச்சி செய்யும் துணிவு தோன்றியது.

மலைமேல் ஆராய்ச்சி

1963 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 16-ஆம் நாள் ஐப்பசித் திங்களாதலின் விடாத மழைபெய்து கொண்டிருந்தது. திட்டப்படி மாணவர் முத்து. கந்தசாமியின் துணையுடன் தஞ்சையிலிருந்து மேலக்கூடலூருக்கு ஆய்வுக்குரிய சாதனங் களாகக் குறிப்பேடு, மூன்றுவகைப் புகைப்படக் கருவிகள், புகைப் படச் சுருள்கள் ஆறு, தொலைநோக்கிக் கருவி, திசைகாட்டி, அடி அளவை நாடா, பருமையாக்கிக் காட்டும் கண்ணாடி ஆகிய பொருள்களுடன் சென்றேன்.

இரவுக் காலத்தினை, அன்பர் இரா. கணபதிராசன் இல்லத் தில் கழித்தோம். விடாமழையுடன் சீறல் குளிர்காற்றும் தொடர்ந்திருந்தது. அப்பொழுது அவ்வூரிலிருந்த முதியவர் களிடம் மலைமேலுள்ள கோயிலைப்பற்றிக் கேட்டறிந்தபோது,

சுருளிமலைத் தொடரின் தென்மேற்குப் பகுதியில், மேலக் கூடலூருக்கு நேர் மூன்றுகல் தொலைவுக்குத் தெற்கே உள்ள உயர் அடுக்குப் பெருமலையின் தாழ் வரைப்பகுதிகளாகிய செங்குன்றுக ளொன்றன் பெயர் 'மங்கலதேவிமலை' என்று கூறியதுடன், அம்மலைமேல் அடர்ந்த காட்டினுள் 'வேங்கைக் கானல்' என்ற புதரும் வேங்கைமரங்களும் சூழ்ந்த பகுதி இருக் கின்றது; புதருள் சில கருங்கல் கட்டிடக்கோயில்கள் சிதைந்து புதரினால் அடைவுபெற்றுக் கிடக்கின்றன; அங்கு, காட்டு யானைகளும், கரடி, சிறுத்தைப்புலி ஆகிய கொடிய மிருகங்களும் அடைந்திருக்கும்; எனவே நாங்கள் யாரும் அங்குச் செல்லு வதில்லை; கூட்டமாகச் சென்றால் ஓரளவு பயமில்லை; என்னும் அரிய செய்திகளை அவர்கள் தெரிவித்தார்கள்.

இச்செய்தி, கண்ணகியார் அடிச்சுவட்டின் இறுதிச்சுவடுகள் இணைந்து பதிவிட்ட இடம் இதுவே யாகலாமென்ற எண்ணம் வலுப் பெறினும் மலைமேல் செல்லும் அச்சம் அகலவில்லை துணிந்து வந்தாயிற்று மேல் ஆராய்ச்சி உணர்வுத்தூண்டலால் துணிவுபெற்றேன். மறுநாள் 17-11-1963, வைகறையில் எழுந்து மலைமேல் ஆய்வுக்கு மாணவர் முத்து. கந்தசாமியுடன் பயணமானேன். முதல்நாள், உடன் வருவதாகச் சொன்ன பெரியவர்கள் ஏதேதோ போக்குச்சொல்லி உடன் வரவில்லை. வழிகாட்டியாக இளமையும் வலிமையும் துணிவும் பொருந்திய சி. இராமன் உடன் வந்து சேர்ந்தார். தெற்கேயுள்ள மலையை நோக்கிப் பள்ளத்தாக்கில் நடந்தோம்.

அது போது, மேலக்கூடலூர் இளைஞர்களாகிய, ஆசிரியர் இரா. கணபதி ராசன், சு. பெ. பொன்னுராமன், சிவமூர்த்தி, மு. ஐயர், கா. கணபதி, தா. இராமசாமி, தி. ஒட்டிவீரு, பெரியமாயன் ஆகியவர்கள் தனித்தும் சேர்ந்தும் வந்து வழி யிடையே சேர்ந்து கொண்டனர். கண்ணகி கோட்டம் இதுதான் என்ற எனது முடிபினை அறிந்து கொண்ட இராமசாமி, பின்னர்ச்சீரமைப்புக்குழு அமைத்துத் தனக்கு வேண்டிய முறையில் மாறுபட்ட கருத்துக்களை வெளிப்படுத்தி வருவது வேதனைக்குரியதாகும்.

இளைஞர்களின் துணை அமைந்தது. அச்சம் சற்றே விலக ஆய்வு முயற்சி வேகங்கொண்டது. ஊரிலிருந்து மலை அடி வாரம் மூன்று கல்தொலைவுள்ளது, இடையேயுள்ள புதர்கள், சேற்றுத் தரையிடையே மழையினால் பெருகி ஓடும் அருவிகள். அகலம் குறை வாயினும் ஆழமுடன் பெருகியோடும் முல்லை யாறு, காட்டாறு ஆகியவற்றையெல்லாம் கடந்து அடிவாரத் திற்கு வந்துவிட்டோம். மழை பெய்துகொண்டே இருந்தது ஆய்வுக் குறிப்பே நினைப்பாக அமைந்ததால், மழையைப் பற்றியோ, நனைவதைப் பற்றியோ பொருட்படுத்த நேர மில்லை.

சரிவு ஏற்றம்

மடிப்பாக அமைந்து மேன்மேல் உயர்ந்து செல்லும் மலை யில், கீழ்த்தாள் வரையிலிருந்து சரிவு ஏற்றம் அமைத்துள்ளது. அடிவைத்து ஏறினேன். அடுத்துள்ள மலைப்பகுதி ஓரளவு செங்குத்தாக அமைந்திருந்தது. மலைமுழுவதும் போதைப்புல் என்ற பெயருடைய மலைப்புற் புதரடைவு இருந்தது. பாதை என்பது இல்லை. மேலே செல்லவேண்டிய இடத்தை நோக்கிய பாங்கில் ஆங்காங்கே முயற்சியுடன் பாறைகளைத் தழுவியும், சூழ்ந்தும், தொற்றியும் ஏறவேண்டியதாயிற்று. குத்திட்ட சரிவு களில் காலடியை மேலிட்டுவைத்து ஏறவேண்டிய நிலை ஏற்பட்டது.

அடிகள் சிலம்பில் குறித்த சொற்களின் பொருண்மையினை அதுபோது அனுபவத்தால் அறியலானேன். அத்தொடர், நெடுவேள் குன்றத்தை அடைந்த கண்ணகியார்,

"நெடுவேள் குன்றம் அடிவைத்து ஏறி"னார் என்பதேயாம். மலைமேல் சென்றார் எற்றாலே போதும். அது இயல்பான செயலைக்குறிக்கும். மலைமேல் ஏறிச்சென்றார் என்பதால் சற்றே வலிந்த முயற்சி தோன்றுகின்றது. அடிவைத்து ஏறினார் என்பதால் - மேன்மேல் அடியைவலிந்து உயர்த்திவைத்து ஏறினார் என்ற பெருமுயற்சி புலப்பாடுறுகின்றது.

வெறியுணர்வுடன் செய்வதறியாது மலையில் செங்குத்தான சரிவுகளில் கண்ணகியார் உயர்த்தி அடிவைத்து ஏறிய பாங்கினையே அடிகள் நுட்பமாக உணர்த்தியுள்ள காப்பிய நுண்மையையும் கண்ணகியாரின் முயற்சியையும் எனது மலையேற்றப் பயணம் நன்கு புலப்படுத்தியது.

போதையும் யானையும்

மலை ஏற்றத்தின் இடையிடையே உள்ள மடிப்பிடப் பள்ளத் தாக்குகளில் 'போதைப்புல்' என்னும் மலைக் கோரைப்புதர்கள் மண்டி அடைந்து உயர்ந்திருந்தன. இப்புற்கள் பத்தடி உயரத்திற்கு மேலாகவும் வளர்வன. மனிதனைக்கண்ட அளவில் மாற்றங்கொண்ட காட்டு யானைகள் வளர்ந்த இப்போதைப் புற்புதரிடையே மறைந்திருந்து, மனிதன் அருகில் வந்தவுடன் அவனைத் துதிக்கையால் பிடித்துச் சுழற்றிக் காலின்கீழிட்டுக் கனியை நசுக்குவதைப்போல் நசுக்கிவிடுமாம்.

வழிகாட்டி இராமன் வழியிடையே ஓரிடத்துக்கு அழைத்துச் சென்று ஒருசில நாட்களுக்கு முன்னர் அவ்வாறு யானையால் நசுக்கப்பட்டுப் பாறையோடு ஒட்டிய பட்டை உருவாக இருந்த மனிதச் சுவட்டினைக் காட்டினார். கண்டேன் காகிதம்போல் நசுக்கப்பட்ட மனித உடலை. வெருண்டேன்; ஆனால் அதை வெளிக்காட்டவில்லை. போலித்துணிவினைக் காட்டி மேலும் மலைமேல் ஏறினேன்.

ஒட்டிய அட்டைகள்

மலைமேலடுக்கிடையே அமைந்த மடிப்புப் பள்ளத்தாக்கில், போதைப்புற்காட்டிடையே புகுந்து செல்லும்போது. மழைக் காலத்தில் மிகுதியாகப் பெருகிவாழும் 'அட்டை' என்ற குச்சி போன்று சிறிதாக முதலில் வடிவங்கொண்டு ஊரும் பூச்சிகள் உடலில் ஆங்காங்கே பற்றிக்கொண்டன.

அட்டைப்பூச்சிகள் மனித உடலில் பற்றிக்கொண்டு இரத்தத்தை உறிஞ்சிப் பருத்து, புளியம்பழுத்தளவு நீண்டு தொங்குவதையும் நண்பர்களின் கால்களில் கண்டேன். பிய்த்து எறிந்

தால் அவை பற்றிய இடங்களில் படும் நச்சுநீர் விடமாகி வருத்துமாம். அவற்றை உடலிலிருந்து நீக்கப் புகையிலைத் தூளாகும் மூக்குப்பொடியைப், பற்றிய முகப்பில் தூவினால், பற்றிய நிலையிலிருந்து அட்டை விட்டுப்பிரியுமாம்.

முற்பட இதுபற்றி யாரும் சொல்லவில்லை. அட்டைக் கடியால் அவதியுற்றோம். கால் விரல்களுக்கிடையே பற்றிய அட்டைகள் மெத்தென்று பருத்து நடைக்குத் தடையாகவும் அருவருப்பாகவும் இருந்தன. ஒருவரி அட்டை எனது வலது காதில் பற்றிக்கொண்டு தொங்கட்டானாக ஆடிவந்தது.

அட்டைகளால் அவதியுற்றதால் ஏற்றநடை தளரவில்லை. இதற்குக் காரணம் மேலே காண இருக்கும் புதுமைதான். யானைகளாலும் விலங்குகளாலும் தீங்கு நேராமல் இருக்க விரைந்து நடந்தோம்.

உயர் அடுக்கில் இரண்டாவது தாக்கிலிருந்து செங்குத்தான ஏற்றம். செல்லவேண்டிய பகுதியைக் குறிப்பா கவைத்துக் கொண்டு வழியை ஏற்படுத்திக்கொண்டு ஏறினோம். என் மாணவர் புகைப்படக் கருவிகளடங்கிய பையை முதுகில் வைத்துக்கட்டிக்கொண்டு, எத்தகைய அச்சமோ, தளர்ச்சியோ இல்லாமல் என்னைத் தொடர்ந்து ஏறிவந்தது எனக்கு வியப் பாகவே இருந்தது.

எதிரொலி காட்டிய கோட்டம்

இரண்டாவது மடிப்பிலிருந்து ஏற்றமாக உயரும் மலைப் பகுதியில் 'மஞ்சு' என்று பெயர் கூறப்பெறும் கருமையும் வெண்மையும் குழைந்த மேகப்படலங்கள் பாறைகளில் நுழைந்தும், தவழ்ந்தும் எங்களோடு இழைந்தும் சில்லிட்டு நெகிழ்ந்து சென்றன. எதிரே யானை வந்தாலும் தெரியாத மஞ்சுப் படலங்களின் மறைப்புக் கிடையே எப்படியோ ஏறிச் சென்றோம். மூன்றாவது மடிப்பினைக் கடந்து மலையின் உயர் மட்டத் தாழ்வரைக்கு அருகே வந்துவிட்டோம்.

எங்கும் இறுக்கமாகச் சூழ்ந்து நெகிழும் மஞ்சுப்படலங் களுக்கு இடையே வழித்தடம் தெரியாது நின்றோம்.

அப்பொழுது வழிகாட்டிவந்த இராமன் எங்களைக் கூப்பாடு போடச் சொன்னார். எல்லோரும் ஓ-வென்று கூக்குரல் செய்தோம்.

என்ன வியப்பு! எதிரே மேற்குப்புறமிருந்து இணையொலி யுடன் கூக்குரல் எதிரொலித்தது. அத்திசையைச் சுட்டிக் காட்டிய இராமன் "அதுதான் வேங்கைக்கானல் அங்கேதான் மங்கலாதேவி குடி இருக்கு, அங்கிருந்துதான் ஓசைவருது" என்று அறிவித்தார்.

அதைக்கேட்ட நான் வேங்கைக்கானல் என்று ஏன் பெயர் சொல்லுகிறீர்கள் என்று கேட்டேன். அங்கே வேங்கை மரங்கள் கூட்டமாக வளர்ந்துள்ளன என்பதால் என்று பதில் கூறினார்.

அங்கே ஒருசில கருத்துக்கள் என் உள்ளத்தில் பளிச்சிட்டன அவை,

"கண்ணகியார் நெடுவேள் குன்றம் அடிவைத்து ஏறி, மலை மேல் தாழ்வரையில் வேங்கை மரத்தின் நிழலில் நின்று தெய்வமானார். அந்நிகழ்ச்சியை மலைவாழ் குறவர்கள் கண்டார்கள். தெய்வமான மங்கலமடந்தையைத் தெய்வமாகக் கொண்டு வழிபட்டார்கள்" என்று இளங்கோவடிகள் காட்டும் நிகழ்ச்சிகளாகும்.

தேர்ந்த நம்பிக்கை

சிலப்பதிகாரக் காப்பியம் தரும் செய்திகளை அடியொற்றிக் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து கால்நடையாகவே கண்ணகியார் அடிச்சுவட்டில் தொடங்கிய எனது வரலாற்று ஆய்வுப்பயணம் 1945-ல் தொடங்கி 1963 நவம்பர்த் திங்கள் 17-ஆம் நாள் அளவில் வளர்ந்திருந்தது.

கண்ணகியார் பிறந்து வாழ்ந்த காவிரிப்பூம்பட்டினம் இருந்து அழிந்துள்ள உண்மை மதுரை செல்லத்தம்மன் கோயிலில் கண்ணகியின் படிமம்; மதுரை பழங்காநத்த-கோவலன் பொட்டல்; கம்பம் பள்ளத்தாக்கில் ஆங்கூர் பாளை யத்தில் பத்தினிக்கோட்டம்; சுருளிமலை என்னும் நெடுவேள்

குன்றம்; செங்குன்றூர்; சுருளிமலைத்தொடரில் மங்கல தேவிமலை; வேங்கைக்கானல்; அதனிடையே மங்கலாதேவி அம்மன் கோயில்; கூடலூர் பெருமாள் கோயில் மங்கலாதேவி அம்மனுக்குச் சேரமன்னன் செய்தநில தர்மசாசனக் கல்வெட்டு

ஆகிய சான்றுகள் அனைத்தையும் முறையாக வைத்துச் சிலம்பில் கூறப்படும் கண்ணகி கோவலன் வரலாற்றோடு அமைத்துப் பார்க்கும்போது, சிலப்பதிகாரச் செய்திகள் அனைத்தும் கற்பனையல்ல. கண்ணகி கோவலன் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு அக்காலத் தமிழகத்தையும் முத்தமிழின் வித்தக வளர்ச்சியினையும் அளவிட்டு அறுதியிட்டுக் காட்டும் வரலாற்றுக் காப்பியமாகவே இளங்கோவடிகள் தாம் மேற்கொண்ட சமணசமயச் சார்புடனும் பிற சமயப்பொது நோக்குடனும் தெளிந்த தமிழில், தொடர் நிலையாப்புடன் தீஞ்சுவைக் காப்பியம் செய்துள்ளாரென்னும் உண்மைகள் நிலைபெறுவன வாயின.

மங்கல வாயில்

வேட்டைக்காரரும் வழிகாட்டியுமான இராமனுடன் மேல் நோக்கி நடந்தோம். மழைபெய்து கொண்டே இருந்தது. சரிவான குறுகிய மலைத்தடத்தில் நடந்தோம். அவ்வழியில் தான் கண்ணகியாரின் அடிச்சுவடுகள் பதிந்திருக்கவேண்டும்.

அதற்கப்பால் தொலையில் மரக்கூட்டமாகத் தெரியும் வேங்கைக்கானலுக்கு முன்னர்ப் போதைப்புற்களினிடையே புதைந்து கிடந்தன மூன்று நெடிய வேலைப்பாடுடைய கருங் கற்கள். அக்கற்களைப் புரட்டிப்பார்த்தபோது அவைகள் மங்கல தேவி அம்மன் கோயிலுக்குரிய கிழக்கு எல்லையாகவும் நிறுத்தப் பட்டிருந்த மகர தோரணவாயில் என்பதை அறிந்தேன். இதனை மங்கலவாயில் என்றும் கூறுவர்.

வேங்கைக்கானல்

அங்கிருந்து தொடர்ந்து வழிநடந்து வேங்கைக்கானல் அருகே வந்துவிட்டோம். கிழக்குப்புறத்தில் உள்ளே புக இட மின்றிப் புல்லும் முட்புதருமாக அடைந்திருந்ததோடு மலை

வேங்கை, கருமருது, சந்தனம் ஆகிய வளமான மரங்கள் வளர்ந் தோங்கிப்படர்ந்து, ஒரு தனிச்சூழலகாத் தோற்றங்கொண்டிருந்தன கானல் என்பது மரங்கள் நெருங்கிச் செறிந்த சோலையாகும் சோலையின் உள்ளிருந்து புகை நெகிழ்ந்து புரண்டு வருவதைப் போன்று மஞ்சு தவழ்ந்தது. சோலையை நெருங்கியபோது இடப்புறத் தாழ்வரைப் பகுதியே நடந்துசெல்ல ஓரளவு இட முடையதாக இருந்தது.

மலை உயரம்

வேங்கைக் கானல் சுருளிமலையின் தொடர் வளர்ச்சியில் உயர்ந்த சிகரத்தின் உள்மடிப்புத் தாழ்வரையில் அமைந்த மலைவளக் காட்டுத் தொகுதியாகும்.

தமிழகத்தின் கடல் மட்ட அளவுப்படி, நான் ஏறிநின்ற வேங்கைக் கானல் 8200 அடி உயர்ந்துள்ள மலைப்பகுதியாகும்.

எனவே, மஞ்சும் மழையும் சாரலும் கூடிய வானிலை மிகுதியாக இருக்கும் இயற்கையினை அங்கு அறிய முடிந்தது.

கானலின் பின்புறம் வந்துவிட்டோம். அங்கும் போதைப்புல் புதர்களே மண்டி இருந்தன. ஒருபக்கம் மலை மூங்கில் புதர் அடைவாக எழுந்து தலைவிரித்து நின்றது.

சிறிய வாயில்

மலைப்புற்களுக்கு இடையிடையே சுமார் ஆறு அடி நீளம், மூன்றடி அகலம், மூன்றடி உயரங்கொண்டதாகச் செப்பனிடப் பட்ட கருங்கற்கள் நான்கு பதிந்துகிடந்தன. அவை கல் திருப்பணிக் குரியதாக அமைக்கப்பட்ட கற்களாகும்.

அக்கற்களுக்கு அப்பால் சுவர்போன்று தொடர்ந்திருந்த பகுதியில் சிறிய வாயில் ஒன்று புற்களிடையே காணப்பட்டது. வாயில் மூன்றடி உயரத்திற்கு மேல், 4' × 3' என்று குறிப்பிடத் தகும் உள்ளளவில் கருங்கற்சட்டங்களால் அமைக்கப்பட்டி ருந்தது. அதன் மேல் கட்டமாக ஒரு பெரிய பாறையினையே அமைத்திருந்தது காணத்தக்கதாக இருந்தது. வாயிலுக்கு

முன் நான் செல்ல, முத்து. கந்தசாமியும் பின் தொடர்ந்து வந்தார்.

கண்டேன் — கோட்டம்

உள்ளே பார்த்தபோது ஒரே போதைப்புற்காடும் அதன் இடையிடையே தலை தூக்கி நிற்கும் மரங்களும் செடிகொடிகள் சூழ்ந்து முட்டுமுட்டாக நிற்கும் புதர்களும் காணப்பட்டன.

தரையில் பல ஆண்டுகளாக மடிந்து படிந்து செறிந்து கிடக்கும் புல், செடி, கொடிகளின் மடிசலும் மழைநீர்த் தேக்கமும் இருந்தன. புல் புதர்களுக்கிடையே தெரிந்தும் மறைந்தும் இருக்கும் பழைய கருங்கற் கட்டிடவாயில் புலப்பட்டது.

உள்சூழலைப் பார்த்தபோது, ஏறத்தாழ இருநூறடிப் பக்கமாக நாற்புறச் சதுரமாக வளைக்கப்பட்டு இரண்டு வாயில் களுடன் இருந்த அமைப்பு ஒருவாறு தெரிந்தது.

மதிலிட்டு வளைக்கப்பட்ட கோயிற்பரப்பிடத்தினையே கோட்டம் என்று குறித்தல் பழைய வழக்கு. அம்முறையிலேயே வேங்கைக்கானலில் சிதைந்துள்ள கட்டிடச் சூழல் காட்சியளித்த தால், அங்கே கோயிற்கோட்டமொன்று அமைந்துள்ள காட்சி புலனாயிற்று.

ஆய்வுத்துணிவு

சிறிய வாயிலின் அடிச்சட்டத்தில் ஏறி நின்றேன். உள்ளே குதித்துச் செல்லத் துணிவு இல்லை. காந்தசாமியும் கொஞ்சம் சிந்திப்பதை அறிந்தேன்.

உள்ளே பாழடைந்த கட்டிடங்கள் தெரிகின்றன. அவற்றி னுள்ளேயும், புதர்களிலும் என்னென்ன இருக்குமோ! மலைப் பாம்பு முதலாக யானை, புலி, கரடி ஆகியவைகள் தங்குதற்கு ஏற்ற இடம் அது; எப்படி அங்கே செல்வது!

துணிந்து உள்ளே குதித்து போதைப்புற்களை விலக்கிக் கொண்டு மழைநீருடன் பதிவிட்ட தழைமடிசலை மிதித்துக்



வேங்கைக்கானலில் கண்ணகிக்கோட்டம்.

கொண்டே ஓடி நேராகத் தெரிந்த கட்டிடவாயிலை அடைந்தேன் கந்தசாமியும் இராமனும் உடன் குதித்துத் தொடர்ந்தனர்.

அச்சம் ஒருபுறமிருக்க என் ஆராய்ச்சி தொடங்கியது. அப்பொழுது பகல் மணி $11\frac{3}{4}$ ஆகியது. மூன்று கேமிராக் களையும் சுருளிட்டுச் சரிசெய்து கொண்டேன். கருத்துக்கும் பழமைக்கும் இலக்கான காட்சிகளையும் சின்னங்களையும், கட்டிடங்களையும் முறையாகப் படமெடுத்தேன். கோட்டம் முழுவதும் மஞ்சு படர்ந்து தவழ்ந்து சென்றதால் ஒளியும் இடமும் கிடைத்தபோது இயன்ற அளவில் எனது கேமிராக்கள் இயங்கின.

இயன்ற அளவில் உள்ளே சென்று பார்க்கும் படியாக இருந்த இடங்களை மட்டும் அருகில் சென்று ஆராய்ச்சி செய்தேன். வேட்டைக்காரர் இராமனும், மாணவரும், பிற நண்பர்களும் எனக்கு உறுதுணையாக இருந்தனர். எனவே விரைவுடன் ஆய்வுசெய்து குறிப்பெடுக்கலானேன். அப்பகுதியில் நான்கு சிறிய சிதைந்து புதரண்டந்து நின்ற கோயில்கள் ஆங்காங்கே இருந்தன. அவற்றுள்,

இணைந்து இருந்த கற்கோயில்கட்கு முன்புறம், முற்றம் போன்று அமைக்கப் பட்டிருந்தது. மேற்குப்புற வாயிலுடன் கூடிய கோயில் புதரடைந்து வேரும் விழுதும் சுற்றிப் படர்ந்து மூடிக்கிடந்ததால் அதன் வாயில் இருண்டு கிடந்தது கோயிலும் இருண்டிருந்தது. மழைநீர்க் கசிவு, இடிபாடுகள், திருமுற்றத்தின் புதைந்து தலையை மட்டும் வெளிக்காட்டி நின்ற பலிபீடம் ஆகியவற்றை உள்ளே துணிந்துசென்று பார்த்தோம். இரண்டடி உயரமுள்ள பெண் தெய்வச் சிலை ஒன்று சிதைந்து வீழ்ந்திருந்த பாறைகளுக்கு இடுக்கில் நொருங்கிப் பதிந்து கிடந்தது. இவ்வாறு சிதைந்திருந்த சிலையைத் தவிர நான்கு கோயில்களிலும் எத்தகைய சிலை களும் இல்லை. விநாயகரின் சிலையொன்று மட்டும் வேங்கை மரப்புதருள் இருப்பதைத் தொலைவில் இருந்து பார்க்க முடிந்தது.

தனித்துத் தென்பக்க முகப்புடனும் சுவர்ப்பிளப்புடனும் நின்ற கற்கோயிலின் வாயில்நிலைச் சட்டக்கல்லில் வரிக்கு ஐந்து அல்லது ஆறு எழுத்துக்களாக முப்பது வரி அளவில் முதல் இராசராச சோழனால் வெட்டப்பட்ட பழைய வட்டெழுத்துக் கல்வெட்டு இருந்தது. அதனைப் பார்வைப்படி எடுத்துக்கொண்டேன். திருமுற்றமொன்றின் முன்புறச் சிறுகட்டைச் சுவர்க்கல்லில் எம்மண்டலமும் கொண்ட குலசேகர பாண்டியனால் வெட்டப்பட்டிருந்த கல்வெட்டையும் படியெடுத்துக்கொண்டேன்.

கல்வெட்டிற்குக் கீழ்த்தளக்கல்லில், கோட்டத்தின் அளவு சதுரவடிவில் பொறித்துக் காட்டப்பட் டிருந்தது. அதைப் புகைப்பட மெடுத்துக் கொண்டதோடு உள்ளவாறும் வரைந்து கொண்டேன்.

சிதைந்து கிடந்த சிலையுள்ள கற்கோயிலின் மேல்தளத்தில் பெரிய வடிவுள்ள செங்கற்களாலான விமானத்தைப் பிளந்து சிதைத்து எழும்பி மேல்நோக்கி வளர்ந்திருந்த வேங்கைமரத்தைக் கோயிலுடன் படமெடுத்துக்கொண்டேன்.

நான் தனித்திருந்த கோயில் வாயிலில் நின்றபொழுது மாணவர் கந்தசாமி கோயில் சுவர்ப்பாறையில் 17—11—63 என்று வெண்சுண்ணத்தால் எழுதிக் கோயிலொடு சேர்த்து என்னைப் படமெடுத்தார். அப்பொழுது அழகிய வடிவில் மஞ்சு குறுக்கே தவழ்ந்தது.

மேலும் ஆங்காங்கே தெரிந்த மூன்று கல்வெட்டுக்களைப் பதிவு செய்தேன். ஒருபகுதியில் கற்கம்பம்போல் ஐந்தடி உயரக் கல்லொன்று இடிபாடுகளுக்கிடையே இருந்தது. அதைச்சார்ந்து தெரிந்த மதில் சுவரில் மூன்றடிச் சதுர அமைப்பில் கல் சாளரம் ஒன்று புதர்களுக்கிடையே தெரிந்தது.

கோட்டத்தின் உள்ளே மேற்கில் இருந்த சிறு கற்கோயில் முன்னர்ச் சரிவுப் பாறையில் வட்டமாகக் குழித்து நீர்நிரம்பி நிற்கும் கிணறுபோன்ற சுனையொன்று காணப்பட்டது.



புதரடைந்த நிலையில் கோயிலின் தோற்றம்

மங்கலாதேவி என்னும் கண்ணகியார் கோயிலின் முகப்பு

இந்த அளவில் எனது மங்கலாதேவிக்கோட்ட ஆய்வு நிகழ்ந்தபோது மதியம் மணி இரண்டாகியது. உடன் வந்திருந்த அன்பர் கொண்டுவந்திருந்த புளிச்சோற்றை உண்டு இராமன் கொண்டுவந்த சுனைநீரைப் பருகிச் சிறிது இளைப்பாறினேன்.

இறங்கினோம்

விடாது பெய்த மழையிலும், குளிர்காற்றிலும் புகை போன்று சூழ்ந்து செல்லும் மஞ்சுப்படலத்துக்கிடையிலும் சுருளி மலைமேல் தொடர்ந்து எனது மங்கலாதேவி அம்மன் கோயில் ஆராய்ச்சி நிகழ்ந்தது. மாலை மணி மூன்றாயிற்று. மலையிலிருந்து இறங்க எவ்வளவு விரைந்தாலும் இடையே மூன்று மணிநேரம் வேண்டுமென்பதை முன்னதாகவே யான் அறிந்திருந்ததால், நண்பர்களையும் வேட்டைக்காரர் இராமனையும் எச்சரிக்கை செய்து, மங்கலதேவிமலை, கோயில், கோட்டம் ஆகியவை பற்றியஆராய்ச்சிகளை நன்முறையில் மேற்கொண்டதுடன், தெளிவாகச் சான்றுகளையும் குறித்துக்கொண்டு மலையிலிருந்துவிரைவாக இறங்கத்தொடங்கினோம். அதுபோது யாரும் செல்லுதற்கு அஞ்சும் சூழலை உடைய மங்கலா தேவி மலைக் கோயிலில் சிதைந்து கிடந்த பெண் சிலையின் சிதைவுடன் கூடிய சிறிய தலைப்பகுதியில், கல்லின்தொன்மை, சிற்பப்பழமை, கல்லின் தரம் ஆகியவற்றை நன்முறையில் ஆராய்ந்து அறியும் முயற்சியாகச் சிறிய சிதைந்த பகுதி அமைந்தது.

அடிவாரத்திற்கு வந்தபோது சூரியன் மேலைமலையில் மறைந்து இருள் சூழத் தொடங்கியது. இரவு மேலக்கூடலூரில் தங்கியிருந்து, மறுநாள் (18—11—63) புறப்பட்டு மாணவர் முத்து. கந்தசாமியுடன் தஞ்சை வந்தடைந்தேன்.

நிறைவு

பண்டைய சேரநாட்டெல்லையில், பாண்டிநாட்டுச் சுருளி மலைத்தொடரின் மேலைப் பகுதியாகிய வண்ணாத்திப்பாறை என்னும் மங்கலதேவிமலைமேல், கண்ணகியார் சென்று தெய்வமான வேங்கைக் கானலில் நிறுவப்பட்டுள்ள மங்கலாதேவிக் கோட்டத்தினை 17—11—63-ல் கண்டுபிடித்துக் கூறியதுடன்,

சிலப்பதிாரக் காப்பியம் வரலாற்றுக் காப்பியமாக விளங்கும். உண்மையினையும் தமிழகத்திற்கு அறிமுகம் செய்யலானேன்.

தொடர் நோக்கிற்கு - ஒட்டுரை

நெடுவேள் குன்றத்தின் முகட்டுத்தாழ்வரையில் வேங்கைக் கானலில், கண்ணகியார் சென்று தெய்வமான இடத்தில், சேர மன்னனால் கட்டப்பெற்ற கோட்டத்தினையும், கோயிலினுள் சிதைந்து கிடந்த சிலைவடிவினையும், ஆராய்ச்சி முயற்சியாகக் கண்ட அளவில் இப்பகுதி அமைந்ததாகும். இதற்கு அடிப்படை யாக அமைந்தவை காப்பியம் தரும் செய்திகளேயாம்.

எனவே, தொடரும் ஆராய்ச்சிப் பகுதிக் கல்வெட்டு, தொல் பொருள் பற்றிய கள ஆய்வு முதலியவற்றால் கண்டறிந்த உண்மைகளைச் சான்றுடன் ஓரளவு திட்டமிட்டுக் கூறப்பட் டுள்ளது.

ஆய்வுக்கமைந்த களமும், இப்பகுதிக்கமைந்த மதுரை முதல் நெடுவேள் குன்றம் வரையிலான சிறந்த நல்லிடங்களும் வர லாற்று விளக்கம் காணல் என்றும் மதிப்பீட்டில் தொடரப் பெறுகின்றன.

மலைநாட்டு வஞ்சியில்

வஞ்சிவரையில்

புகார் நகரிலிருந்து தொடங்கிய கண்ணகியாரின் செவ்விய அடிச்சுவடுகளைச் சிலப்பதிகாரத்தின் வழியே கண்டு ஆய்வினைத் தொடர்ந்தேன்.

மதுரை வரையில் மானுடக் கண்ணகியாக, மங்கலமடந்தை யாகவே இருந்து கணவனுடன் வாழ்வு நடத்தும் கடமைப் பாட்டுடன் இருந்த கண்ணகியாரின் அடிச்சுவட்டினை, ஆயர்சேரிப் பகுதியில் செல்லத்தம்மன் கோயிலில் கண்டேன்.

ஊழ்வினையின் விளைவால் கணவனை இழந்த கண்ணகி யார் வீரபத்தினியாகிப் பாண்டியனிடம் வழக்குரைத்துக் கோவலன் கள்வன் அல்லன் என்பதைப் புலப்படுத்தி, வெளி யேறிய அளவில், வீராவேசத்துடன் விரைந்தும், பரந்தும், பாவுதலோடும் இட்ட அடிகளைச் சிலப்பதிகாரச் சொற்கள் வழிச் சிந்தித்துக் கண்டேன்.

மதுரைக்கு மேற்குப்புறமாக மேற்கு நோக்கிச் சென்ற கண்ணகியாரின் காலடிச் சுவடுகள் வழியினை நெடுவேள் குன்றத்திலும் (சுருளிமலை) அதன் மேல் வேங்கைக்கானலிலும், பழமையான கோயிலிலும் கண்டேன். கோட்டத்திலுள்ள ஒரு கோயிலின் உள்ளே சிதைந்த நிலையிலும் இரண்டு பாதங்கள் மட்டும் அழகுடன் எஞ்சி நின்ற தெய்வீகத் திருவடிகளாகச் சிலையில் கண்டேன்.

இதுவரையில், மானுடவடிவிலும், தெய்வீகவுணர்விலும் கண்ணகியார் இட்ட அடிச்சுவடுகளைப் புகார் முதல் நெடுவேள் குன்றத்து வேங்கைக்கானல் கோயில் அளவில் காணமுடிந்தது.

அக்காலத்தில் சேரன் செங்குட்டுவன், நெடுவேள் குன்றத்தில் கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் அமைத்து அதில் படிமமும் நிறுவி வழிபாடு செய்ததைத் தொடர்ந்து, தலைநகர் வஞ்சியிலும் கோயிலமைத்து வழிபாடு நிகழ்த்தி யுள்ளான். ஆங்கே தெய்வத்திருமேனியாக அருவுருவில் கண்ணகியாரின் காலடிகள் அமைந்துள்ளன. திருமேனியாகும் பத்தினித் தெய்வம் பகவதி அம்மனாகவும் விளங்குகின்றது.

செங்குட்டுவன் - கோயில்

சேரன் செங்குட்டுவன் மனைவி வேண்மாள்தேவி, அரச னிடம் நம் அகநாடடைந்த பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும் (காதை-25) என்று கூறினாள்.

செங்குட்டுவன் இமயத்திலிருந்து மன்னர் கனகவிசயர் தலையில் பத்தினித் தெய்வம் உருவாக்கக் கல் கொணர்ந்தான்.

அவன் பாற்படு மரபின் பத்தினிக் கடவுளைச் சிற்பியரைக் கொண்டு சிலையாக உருவாக்கினான். கோயில் கட்டக் கலைஞ ராகிய நூனெறி மாக்களைக் கொண்டு, நெடுவேள் குன்றத்து வேங்கைக்கானலில் பகுதிப்பாடுடையதாகப் பத்தினிக் கோட்டம் கட்டச் செய்தான்.

அதில் நன்னாளில் சிற்பியின் கைவினை முற்றிய பத்தினிப் படிமத்தை நிறுவினான்; வஞ்சியிலும் வழிபடு கோட்டம் அமைத் தான்; வேள்வியும் விழாவும் நாள் தோறும் நிகழச் செய்தான்.

அகநகர் வஞ்சியில் அமைந்த கோயிலிலும் கண்ணகித் தெய்வவழிபாடு நிகழ்ந்தது.

சேரர் வஞ்சி

சேரநாட்டுத் தலைநகர் வஞ்சி என்ற பெரிய நகராகும். இந்நகர் பேரியாறு என்றும் ஆன்பொருனையாறு என்றும் கூறப்படும் சேரநாட்டு ஆறு அரபிக்கடலில் கூடும் இடத்திற்குப் பத்துக்கல்லுக்கு உள்பட்ட இடத்தில் உள்ளது. அங்கே பழைய கோட்டைச் சுவர்கள் இருந்து அழிந்ததற்குரிய சுவடுகளும் ஆங்காங்கே எஞ்சிய பழமைகளும் தலைக்காட்டுகின்றன.

இளங்கோவடிகள் தங்கியிருந்த குணவாயில் கோட்டமும் இந்நகருக்கு அருகில் இருக்கின்றது.

சிலப்பதிகாரமும், சேரர் வரலாறு தரும் பதிற்றுப்பத்தும் பேரியாற்றங்கரை நகராகிய வஞ்சி மாநகரையே குறிக்கின்றன. ஆயினும், சேரன் செங்குட்டுவன் என்ற சிறந்த நூலின் ஆசிரியர் பேரறிஞர் இராகவையங்கார் அவர்கள், சோழ நாட்டின் மேற்கு எல்லையில் உள்ள கொங்குநாட்டுக் கரூர் (கருவூர்) வஞ்சிக்கரூவூராகும் என்று வலிந்து வாதாட்டம் செய்துள்ளார்.

சிலம்பில் செங்குட்டுவன் நீலகிரி மலைவழியே படையெடுத்துள்ளான் என்று கூறப்பட்டுள்ளது. காவிரிக்கரைக் கரூர் செங்குட்டுவன் தலைநகராயின் நிலவமைப்புப்படிப் பொருத்தமாக இல்லை என்பதை அறிஞர் அறிவர். சுருக்கமாகக் கூறின்;

''வில்லெழுதிய இமயத்தொடு கொல்லியாண்ட குடவர் கோவே'' என்று சிலம்பில் செங்குட்டுவன் பாராட்டப் பெறுகிறான். அக்காலத்தில் சேரர் ஆட்சி சேர நாட்டின் வடபகுதியின் வளர்ச்சியாகக் கொங்கு நாட்டிலும் பரவிக் கொல்லிமலை அளவிலும் இருந்துள்ளது.

இப்பகுதியில் உள்ளதே கரூர். பரந்துவிரிந்த நாட்டில், பக்கத்திலுள்ள சோழரையும் பாண்டியரையும் கண்காணிக்கும் அரசு நோக்குடன், சேரன் கரூரை மற்றொரு தலைநகராகக் கொண்டிருந்தான். சோழர் ஒரே காலத்தில் காவிரிப்பூம் பட்டினத்தையும் உறையூரையும் தலைநகர்களாக அமைத்துக்கொண்டதைப் போலவும், பாண்டியர் மதுரை கொற்கை ஆகிய இடங்களைத் தலைநகர்களாகக் கொண்டதைப்போலவும், சேரரும் பேரியாற்றங் கரையிலுள்ள வஞ்சி நகரையும் கரூரையும் தலைநகர்களாகக் கொண்டனர். கொங்கு நாட்டுக் கரூர் சேரராட்சியின் மற்றொரு தலைநகராகுமென்பதை அறுதியிட்டு உணர்த்தும் பெயராகவே ''வஞ்சிக்கரூர்'' என்று கொங்குக் கரூரை அடைச்சொல்லோடு பெயரிட்டுக் குறிக்கலாயினர்.

சேரராட்சியில் கொங்குக் கரூர் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டளவிலும் இருந்துள்ளதனை உறையூர் முக்கீசுவரம் கல்வெட்டுகளும், சம்பந்தர் தேவாரமும் தெளிவாகக் காட்டுகின்றன. சேரமான் பெருமாள் நாயனார் வரலாறும், சுந்தரர் வரலாறும் இதற்கு நல்ல சான்றுகளாகவும் அமையும்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னரும் காவிரிக் கரைக் 'கரூர்' சேரரின் ஆட்சிக்குரியதாக இருந்துள்ளமையினைக் கரூரிற்கு அருகிலுள்ள உறையூரில் உள்ள முக்கீசுவரத்தைப்பற்றி ஞானசம்பந்தர் பாடியுள்ள பதிகங்களினால் நன்கு அறியலாகும். அவை:

1. "தென்னன் கோழியெழில் வஞ்சியு மோங்கு
செங்கோலினான் மன்னன் முக்கீசுவரம்"
2. "சீரினா லங்கொளிர் தென்னவன் செம்பியன்
வில்லவன் சேரும் முக்கீசுவரம்"
3. "மல்லையார் மும்முடி மன்னர் முக்கீசுவரம்"

கோழியெழில் வஞ்சி —சோழனது உறையூரைப் போன்று அழகுடன் அருகில் விளங்கும் சேரர்கரூர் வஞ்சி (காவிரிக்கரைக் கரூர்).

இத்தகைய சான்றுகளால், சேரரின் பழைமையான தலை நகரம் கொடுங்கோளூர் வஞ்சியாகும். இது கடற்கரைப் பகுதியிலுள்ள பேரியாற்றங்கரை நகரமாகும் என்பது புலப்படும்.

வஞ்சிக்கரூர் என்பது, நிலைத்த தொன்மையான சேரரின் தலைநகர்ப் பெயரைச் சேர்த்துக் கொங்குநாட்டில் சேரர் அமைத்துக் கொண்ட எல்லைப்பாதுகாப்புத் தலைநகராகும்.

எனவே, சேரநாட்டு வஞ்சியிலும் அதைச்சேர்ந்த ஊர்களிலும் சேரன் செங்குட்டுவன் முதலாகத் தொடர்ந்த சேரர்கள், நாள் வழிபாட்டுக்குரிய நகர்க்கோயில்களை அமைத்து, அதில் கண்ணகித் தெய்வமாம் பத்தினிக்கடவுளைச் சிலையாகச் செய்து அமைத்து வழிபட்டு வந்துள்ளனர். அக்கோயில்களுள், கொடுங்கோளூர் பகவதி அம்மன் கோயிலும்,

கிராங்கனூர் பகவதி அம்மன் கோயிலும் பழமை உடையன வாகும்.

மலைநாட்டில் — வஞ்சி ஆராய்ச்சி

நெடுவேள் குன்றத்துக் கண்ணகி கோட்டத்தினை நான் 17—11—63-ல் கண்டுபிடித்து, ஏற்புடைய சான்றுகளுடன் அதனை வெளியிட்ட பின்னர் 1965-ல் சிலம்பு குறிக்கும் வஞ்சிக் காண்ட ஆய்வினை மேற்கொண்டேன்.

மேற்கு மலைத்தொடரும், சேரநாடாகும் மலைநாடும் என் வஞ்சி ஆராய்ச்சிக் குரியனவாக அமைந்தன. கண்ணகி கோட்டத்திற்கு மேற்கே குமுளி என்ற இடமே மலைநாட்டின் பழைய எல்லை. அடுத்துக் கோட்டயம் பகுதியில் ஓடிவரும் பேரியாற்றங் கரையில்தான் சேரன் செங்குட்டுவன் மலைவளம் காணத் தன் மனைவி வேண்மாளுடன் வந்துள்ளான். இங்குள்ள காட்டுச் சூழலும் ஆற்றுவளமும் இதனை இங்கு உறுதி செய்கின்றன. குன்றக் குறவர் மன்னனுக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்த வருடை (ஆடு) அம்மலைப்பகுதிகளில்தான் வாழ்கின்றது. குன்றக் குறவரும் பளிங்கர் என்ற சாதிப் பெயருடன் அம்மலையில் வாழ்ந்து வருவதுடன் பத்தினித் தெய்வத்தை வழிபட்டும் வருகின்றனர்.

தொடர்ந்து பேரியாற்றங்கரைவழி உள்ள பூந்தண் பொருநைப் பொறையன் தலைநகர் வஞ்சியை (காதை. 23) ஆராய்ந்தறிய முயன்றேன்.

பழைய வஞ்சி கிராங்கனூர், கொடுங்கலூர், குறும்பா என்ற பகுதிகளாகப் பிரிந்திருப்பதுடன், அவை பழமைச் சுவட்டில் இணைந்திருப்பதனைக் கண்டேன்.

குறும்பாவிலுள்ள ஒற்றை முலைச்சி அம்மன், கொடுங்கலூர் பகவதி அம்மன் ஆகிய பழமையுடைய பகவதி அம்மன் கோயில்கள் கண்ணகிக்குப் பல்வேறுபட்ட காலங்களில் நகரங் களில் மன்னரும் மக்களும் அமைத்து வழிபட்ட கோவில்களே யாகும்.

(பகவதி — என்னும் தெய்வப் பெயர்விளக்கம் தொடரும்).

வஞ்சியில் தெய்வச்சிலைகளில் பத்தினிக் கடவுளாகி இருந்து மக்களுக்கு அருள் செய்யும் கண்ணகித் தெய்வத்தின் திருப் பாதங்களைக் கோயில்களில் கண்டேன். தெய்வவுருவில் கண்ணகியார் சேரர் தலைநகராம் வஞ்சியில் மன்னரும் மக்களும் போற்றி செய்ய இட்ட அடிச்சுவட்டினை தெய்வீக அருவுருவில் கண்டு மகிழ்ந்தேன். புகார் முதல் தொடங்கிய சிலப்பதிகார அடிப்படையிட்ட என் வரலாற்றுக் களஆராய்ச்சி. சிறப்புடன் கண்ணகியார் அடிச்சுவட்டைப் பின்பற்றிய பாங்கில் சேரர் வஞ்சி நகரம் அளவில் நிகழ்ந்த சிறந்த ஆராய்ச்சியாகும், வஞ்சிநகர் ஆராய்ச்சியினை விரிவாக எழுதவேண்டியிருத்தலின், ஈண்டுக் கருத்துரை போன்று எழுதியுள்ளதனை அறிஞர் காண்பரென நம்புகிறேன்.

———

சிதைந்து கிடந்த கண்ணகியார் சிலையின் அடிப் பகுதி

தெய்வ வழிபாட்டில்

பத்தினி வழிபாடும் பெயர்களும்

தமிழகத்தில் சேரன் செங்குட்டுவன் காலம் முதலாகக் கண்ணகியைத் தெய்வமாகக் கொண்டாடும் பத்தினித் தெய்வ வழிபாடு, பல்வேறுபட்ட நிலைகளில் பல பெயர்களில் தொடர்ந்து வந்துள்ளது. அப்பெயர்களுள் சிலவற்றைத் தொகுப் பாகத் தந்துள்ளேன்.

1. மங்கல தேவி

குன்றக் குறவர்களே, வெல்வேலான் குன்றாகிய சுருளி மலைத்தொடரில் அமைந்த குன்றின் மேல் தாழ்வரையில் வேங்கைமரத்தின் கீழ் நின்று சென்ற கண்ணகியாரை இறுதி யாகக் கண்டவர்கள். இவர்கட்குக் கண்ணகியாரின் ஊரோ, பெயரோ தெரியாது. அவர்கள் மங்கல அணிபிரியாத நிலையில் மங்கலப் பெண் என்ற அடையாளத்தில் கண்ணகியைக் கண்டனர்; அவரைத் தெய்வமாக வழிபட்டனர். அவர்கள் கண்ட மங்கல மடந்தைத் தோற்றத்தினையே அவர் பெயராகக் குறித்தனர். அப்பெயரே மங்கல தேவி என்பதாகும்.

2. பத்தினித் தெய்வம்

செங்குட்டுவன் கண்ணகி இறுதியாக இருந்து சென்ற இடத்தில் அவருக்குக் கோயில் கட்டினான்; அவர் சிலை அமைத்து வழிபாடு செய்தான். அதற்குப் பத்தினித் தெய்வம் எனப்பெயரிட்டான். அக்கோயில் பத்தினிக் கோட்டமெனக் குறிக்கப்பட்டது.

3. மங்கல தேவி

சேரன் செங்குட்டுவன் பத்தினிக்கோட்டம் அமைத்து, அதனுள் பத்தினிப் படிமம் நிறுவிக் கடவுள் மங்கலம் செய்த

போது, அவ்விழாவில் அதற்கு மங்கலதேவி என்ற பெயரும் வழங்கலாயிற்று. கூடலூர்க் கல்வெட்டிலும் இப்பெயர் உள்ளது. அக்கோயில் மங்கல மடந்தைக் கோட்டம் எனப்பட்டது.

4. மாரி அம்மன்

கண்ணகியார்க்குத் தீங்கு செய்த பாண்டியநாடு, அன்று தொட்டு மழையில்லாமல் போக, அங்குக் கொடிய நோய்கள் தொடர்ந்தன. அதையறிந்த பாண்டியன் வெற்றிவேற்செழியன், பத்தினித் தெய்வத்திற்குப் பொற்கொல்லர் ஆயிரவரைப் பலியிட்டு வழிபாடு செய்ய நாடுசெழிக்க மாரிபெய்தது. மாரி வழங்கிய பத்தினித் தெய்வம் 'மாரியம்மன்' என்ற பெயரால் வழங்கப்பட்டார். மாரியம்மன் வழிபாடு தமிழகமெங்கும் பரவியது. மாரி - பருவகால மழை. இது சிலப்பதிகாரம் தரும் செய்தியோடமைந்த விளக்கமாகும்.

5. செல்லத்தம்மன், செல்லியாயி

மதுரையில், ஆயர்சேரியில் வாழ்ந்த ஆயர்குல மக்கள், தங்கள் மூதாட்டி மாதரி, கண்ணகியாரை அடைக்கலமாகப் பெற்று, அவரை மகள்போல் செல்லமாகப் பாதுகாத்த சிறப்பினையேகருதி, கண்ணகியார்க்கு வடக்கு வாயில் கொற்றவை கோயிலில், ஆயர்குல மடந்தை வடிவில், அமர்ந்த பாங்கில் கையில் சிலம்புடன் சிலையமைத்துச் 'செல்லியாயி', 'செல்லத் தம்மன்' என்ற பெயர்களிட்டு வழிபட்டனர். இது கள ஆய்வில் ண்டறிந்த வுண்மையாகும்.

6. கோனியம்மன், மாரியம்மன்

கொங்குநாட்டு அரசர் கொங்கிளங்கோசர் பத்தினித் தெய்வத்தின் மேம்பாட்டினை அறிந்து, தன் நாட்டில் கோயிலமைத்துக் கண்ணகி சிலை நிறுவி வழிபட்டான். பத்தினித் தெய்வம்-'கோனியம்மன்' என்ற பெயருடன் கோயன்புத்தூரில் விளங்குகின்றது. அங்கு மாரியம்மன் கோயில்களும் உள்ளன. கோயம்புத்தூர் நகராட்சி அலுவலகத்தின் எதிர்ப்புறமுள்ள கோனியம்மன் கோயில் - ஆராய்ச்சியிற் கண்டது.

7. பத்தினி அம்மன்

கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன் செங்குட்டுவன் நிகழ்த்திய பத்தினிக்கோட்ட மங்கல விழாவில் கலந்து கொண்டு பத்தினித் தெய்வத்தின் ஆற்றலை நேரில் அறிந்து தனது நாட்டில் பத்தினித் தெய்வ வழிபாட்டினை அமைத்தான். இலங்கையில் பத்தினித் தெய்வம், கண்ணகி அம்மன், பத்தினி அம்மன், மாரியம்மன் என்ற பெயர்களுடன் வழங்கப்பட்டு வருகின்றார். இது ஈழநாட்டு வரலாற்று நூல்களால் அறியப் பெறும் கருத்தாகும்.

8. நாச்சியாரம்மன்

கண்ணகி கோட்டச் சிறப்பினைக் கேட்ட சோழன் பெருங்கிள்ளி உறையூரில் 'பத்தினிக்கடவுள்' என்ற பெயரால் கண்ணகி தெய்வத்திற்குப் படிமம் செய்தமைத்து வழிபட்டான். அத்தெய்வம் இதுபோது நாச்சியாரம்மன் என்ற பெயரால் விளங்குகின்றது. (கண்ணகிகோட்டக் கல்வெட்டில் 'நாச்சியார்' என்று பத்தினிதெய்வம் குறிக்கப்பெறுவது குறிப்பிடலாகும்).

9. பகவதி

சமணப் பெண் துறவி கவுந்தியடிகள் கோவலன் கண்ணகி ஆகிய இருவர்தம் துன்பத்தை ஆற்றும் துணையாக அவர் களுடன் மதுரைக்குச் சென்றார். அறவொழுக்கமுடைய கவுந்தியடிகள் துணையும் அவரது அறிவுரைகளும் சமணச் சார்புள்ள கோவலன் உள்ளத்துக்கு அமைதி தரும் மருந்தாக அமைந்தன. சமயச் சார்பென்பது கொள்கைகளை மேற் கொள்ளுவதுதான்; அடிகள் இதனைச் சிலப்பதிகாரத்தில் ஆங்காங்கே கோவலனிடம் அவனுக்குக் கூறும் வாயிலாக அமைத்துக் காட்டுகின்றார். மானுடவுடம்பெடுத்து நல் லொழுக்கம், நல்லறம், தவம் ஆகியவற்றால் உயர்ந்தோரை 'பகவன்' என்று சமணம் கூறும். பகவன் என்பது ஆண்பால் பெயர். பகவதி என்பது பெண்பாற்பெயர்.

கோவலன்—பகவனாயினான், அவன் மனைவி பத்தினிக் கடவுள் - அதாவது பகவதி ஆயினார். எனவே, அவர் சமணச்

சார்பில் பகவதி என்ற தெய்வப்பெயர் வழங்கப்பட்டார். சேர நாட்டில், ஒருகாலத்தில் சமணம் சிறப்பாகப் பரவி இருந்த தற்குச் சான்றுகள் உள்ளன. கண்ணகி கோட்டக் கல்வெட் டொன்றில், கனகவீர அடிகள், சக்கரகூடம் (அறவாழிக்கூடம் பள்ளிக்கூடம்), நாட்டாசாரியன் என்ற சமணப்பெரியார்களின் பெயர்களும், பள்ளிக்கூடமும் குறிக்கப்பட்டுள்ளன இதனால் நெடுவேள் குன்றத்துக் கண்ணகி கோட்டத்தில் சமணச் சார்பும் ஒரு காலத்தில் இணைந்திருந்த வுண்மை புலப்படுகின்றது.

10. ஸ்ரீ பூரணி

கண்ணகி கோட்டத்திலுள்ள முதல் இராசராசன் கல் வெட்டில் 'ஸ்ரீ பூரணி' என்ற வடமொழிப் பெயரால் பத்தினிக் கடவுள் குறிக்கப்பெறுகின்றார். ஸ்ரீ என்பது தெய்வப்பெயர்முன் குறிக்கப்படும் மங்கலமரியாதைச் சொல்லாகும்.

பூரணி - என்பது பெண்பாற் பெயர். பூரணம்-நிறைவு பூரணி - நிறைவானவள். நிறைவுடையவள், என்றும் பொருள் தருவதாகும்.

கண்ணகியார் நிறைவுடன் இருந்தமையால் பூரணி-ஸ்ரீபூரணி என அழைக்கப்பட்டார். நைந்து உடைந்த மனமும், வழிநடந்த சோர்வும் கொண்ட கண்ணகியார் தம் கணவனுடன் வானுலகு சென்றதைக் குன்றக் குறவர் கண்டு அவரை 'மங்கலமடந்தை' என்றனர்; தெய்வமாகக் கொண்டு, மங்கலாதேவி' எனப் போற்றினர்; 'மங்கலாதேவி அம்மன்' என்று சிறப்பித்தனர்.

கண்ணகிகோயிலில் செங்குட்டுவன் காலத்திலிருந்து வழிவழி வேள்வியும் விழாவும் நாடொறும் நிகழ்த்திய அர்ச்சகராகிய வடமொழி அந்தணர் கண்ணகியாரை ஸ்ரீ பூர்ணி, ஸ்ரீ பூரணி என்ற பெயர்களால் குறித்தனர். அதுவே கல்வெட்டிலும் இடம் பெறுவதாயிற்று. மங்கலமடந்தை, மங்கலாதேவி, என்னும் பெயர்களே வடமொழியில் ஸ்ரீபூரணி என்று குறிக்கப் பட்டது.

11. வீரம்மாள் வீராயி

வீரபத்தினியாம் கண்ணகித் தெய்வத்தைப் பாண்டி நாட்டு மறவர்குல மக்கள் வீரத்தெய்வமாக ஏற்றுப்போற்றினர். வழி பாடு செய்தனர் மறவர் நாட்டில் வீரம்மாள் கோயில்களும் வீராத்தாள் கோயில்களும் தோன்றி வழிபடப்பட்டன. பாண்டிய நாட்டில் பலவூர்களில் 'வீராயி இருப்பு' என்ற பெயரால் அக் கோயில்களுடன் ஊர்கள் பல தோன்றியுள்ளன.

இவ்வாறாகப் பத்தினித் தெய்வமாகக் குன்றக்குறவரும், சேரன் செங்குட்டுவனும் ஏற்றுத் தொடங்கிய கண்ணகித் தெய்வவழிபாட்டின் நெறியே வளர்ந்து வந்த கண்ணகி தெய்வக் கோயில்களில்,

மங்கலதேவி, மங்கலதேவி அம்மன், பத்தினித்தெய்வம், மாரி அம்மன், செல்லியம்மன், கோணியம்மன், பத்தினியம்மன், நாச்சியாரம்மன். பகவதி, ஸ்ரீபூரணி (தேவி) வீராத்தாள். வீராயி ஒற்றை முலைச்சி என்ற பெயர்களால் தெய்வமாக வழிபடப்பெற்றுக் கண்ணகி வழிபாடு தமிழ்நாடெங்ஙணும் தொடர்ந்துள்ளது மேன்மையினை அறியலாகும்.

* கேரளாவில் குறும்பா கோயிலில் உள்ள பெண் தெய்வத்தை 'ஒற்றை மூலைச்சி' என்ற பெயராலேயே இன்று வழங்கி வழிபாடு செய்கின்றனர்.

கண்ணகி மங்கலமடந்தை என்று அடைக்கலக்காதையிலும், கண்ணகி கோயில் மங்கலமடந்தைக் கோட்டம் என்று வரந்தரு காதையிலும் இளங்கோவடிகளால் குறிக்கப்பட்டிருப்பது அறியத்தக்கதாகும்.

தென்பாண்டிநாட்டில், புளியங்குடியிலிருந்து கிழக்கே சங்கரநாராயணன் கோயில்' என்ற பெயரால் விளங்கி இது போது 'சங்கரங் கோயில்' என்று ஆகியுள்ள பேரூருக்குச் செல்லும் நெடிய சாலையின் இடையே 'வீரி இருப்பு' என்ற பெயரால் ஊரும் அங்குப் பத்தினியம்மன் கோயிலும் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கோயில் உரிமை வழக்கில்

கண்ணகி கோயில் - உரிமை

கண்ணகியாரின் வாழ்க்கை உரிமைப் போராட்ட வாழ்க்கையாகவே அமைந்திருந்ததைச் சிலப்பதிகாரம் தெளிவு செய்கின்றது.

17—11—1963-ல் இதுதான் கண்ணகியார் தெய்வமான இடத்தில் அமைந்த கண்ணகிக்கோட்டம் என்று நான் கண்டு பிடித்த பின்னர்க் கூடலூரில் வாழும் இளைஞர் தா. இராமசாமி அவர்களின் முயற்சியினால் கண்ணகி கோட்டச் சீரமைப்புக் குழு அமைக்கப்பட்டு, அதனால் மலைமேல் கண்ணகிகோட்டப் பகுதிகள் சீரமைப்புச் செய்யப் பெற்ற செய்திகளை நாளிதழ்கள் அறிவித்தன.

நான் கண்ணகி கோயிலைக் கண்டு பிடித்ததை 1964 முதலாக வெளியீடுகளின் வாயிலாகவும், சொற்பொழிவுகளாலும் வெளியிட்டதுடன் 1971 மே மாதம் தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் அழைப்பில் சென்று கண்ணகி கோட்டக் கண்டுபிடிப்புக்குரிய விவரங்களையும் சான்றுகளையும் அவரிடம் அளித்தேன். கலைஞரவர்கள் கேரள அரசுக்குக் கண்ணகிக்கோட்ட இடம் பற்றிக் கடிதம் எழுதியுள்ளார். தமிழக உரிமை முயற்சி தொடராத நிலையில் 1976ல் கேரள அரசு அக்கோயில் உரிமைக்கு முயற்சி செய்து, தேக்கடியிலிருந்து மங்கலதேவி கோயில் (கண்ணகி கோட்டம்) வாயில் வரையில் மலைமடிப்பில் மலையேறு வளைவுப்பாதை அமைத்துக் கோயில் உரிமையையும் தொடங்கியதைப் பத்திரிகைகள் வெளியிட்டன.

மங்கலாதேவி கோட்டச் சீரமைப்புக் குழுவும், அதன் செயலர், கூடலூர் அன்பர் திரு. தா. இராமசாமி அவர்களும் அரிய முயற்சியுடன், கோட்டம் தமிழகத்திற்கே உரிமையுடையது, அது தமிழ் நாட்டுக்கு உரிமையுள்ள இடத்தில் உள்ளது என்பதற்குரிய பழைய அரசாங்கச் சான்றுகளைக் காட்டிக் கோயில் உரிமைக்கு முயன்று வருகின்றார்கள்.

இன்றுவரையில், கேரள அரசும், தமிழக அரசும் கூடலூர் சீரமைப்புக் குழுவும், சிறப்பாகக் கூடலூர் திரு. தா இராமசாமியும் கண்ணகி கோட்ட உரிமையைத் தொடர்ந்து வருகின்றனர். மாநில அரசு (தமிழரசு) மத்திய அரசுக்குத் தன் உரிமை பற்றி வெளிப்படுத்தியுள்ளது சிறந்த முயற்சியாக அமைந்துள்ளது. விரைவில் சுருளி மலைமேல் உள்ளதும். என்னால் கண்டுபிடிக்கப்பட்டதுமான கண்ணகி கோட்டம், தமிழகத்து மக்களுக்கு உரிமையுடைய பத்தினித் தெய்வக் கோயிலாக அமைந்து சிறந்து விளங்கும்.

ஆய்வு நெறியில்

மங்கலா தேவிகோட்டம் - விளக்கம்

கோட்டம் 200 அடிப்பக்கமுள்ளதாகவும், ஓரளவு சதுரமாக வும் காணப்பட்டது. கருங்கற்களை அடுக்கிய பாங்கில் உயர்த்திய மதில் சுவரால் கோட்டம் சூழ்ந்திருந்ததனை எஞ்சி நின்ற பகுதிகள் உணர்த்தின யானைகள் உள்ளே வரவியலாமல் பின்புறச் சிறிய வாயில் அமைக்கப்பட்டிருந்தது.

செடி கொடிகளால் சூழப்பட்ட நிலையில் சிதைவுகளுடன் நான்கு கற்படைக்கோயில்கள் ஆங்காங்கே இருந்தன. இரண்டு கோயில்கள் இணைந்த பாங்கில் இருந்தன. அவற்றுள் ஒன்று மேற்குப் புறவாயிலுடையதாகவும் மற்றொன்று தெற்குப் புற வாயிலுடையதாகவும் இருந்தன. இவை இரண்டும் சிலப்பதி காரச் செய்திகட்கு இலக்காக இருப்பதனை அறிந்தேன். அவற் றைப் புகைப்படங்கள் எடுத்துக்கொண்டேன்.

கண்ணகியாரின் அடிச்சுவடுகள் அறுதியிட்டு நின்ற இடம் இதுவென்பதனைக் காட்டத் தென்பக்க வாயிலுடைய கோவிலுக்குப் பக்கமாகப் பல கிளைகளுடன் உயர்ந்துள்ள மிகப் பெரிய முதுமையான வேங்கைமரமொன்று கோட்டத்தின் ஒரு பகுதியை அடைத்துக் கொண்டு விரிந்து கவிந்து இருள் பரப்பி நின்றது.

வேங்கை மரத்தைச் சார்ந்த உள்சூழல் ஓரே முள்செடி களடர்ந்த காடாகவே இருந்தது. அங்கு ஒரு விநாயகர் சிலை இருப்பதாக இராமன் தெரிவித்தார். ஆனால் அங்குச் செல்ல வழியுமில்லை; செல்லும் துணிவு மில்லை.

கோட்டத்தின் கிழக்குப் பகுதியில் கட்டப்பட்டுள்ள அழகான படிக்கட்டுகளின் இரு பக்கமும் பாண்டியர் காலச் சிற்பத்திறனுடைய சுருள்யாளிப்புடைப்புச் சிற்பத்துடன மைந்த திரணைக் கற்கள் உள்ளன. படிகட்கு முன்னர் (கிழக்கே) அரை குறையாகக் கட்டப்பட்டு, நீண்டு உயர்ந்த நிலைச் சட்டக் கற்களுடன் நிற்கும் கிழக்குப் பெருவாயில் அதனுள் செல்ல முடியாத அளவு புதரடைந்து கிடக்கின்றது.

கோட்டத்திற்கு வெளியே உள்ள மூங்கில் புதரடை விடையே, பாறையில் வகிடாகப் பிளந்த தடத்தில் நீர் சுரந்து நிற்கும் அழகான சுனை ஒன்று உள்ளது. அச்சுனை நீர் மாவு கரைத்ததைப் போல் வெளிர்மஞ்சள் நிறத்தில் இருப்பது புதுமையாக இருந்தது.

மங்கலாதேவி அம்மன் கோயில்-கண்ணகிகோயிலே

சிலப்பதிகாரம் குறிக்கும் கண்ணகி கோயிலுக்குரிய விளக்கங்கள் அனைத்தும் மங்கலாதேவி அம்மன் கோயிலொடும் மலைச்சூழலொடும் பொருந்தியிருக்கின்றன. முருகன் இடம் கொண்டுள்ள சுருளிமலையின் ஒரு பகுதியின் மேல்தளமே மங்கலாதேவி மலை என்று குறிக்கப்படுகின்றது. சிலப்பதிகாரம், மலைமேல் ஏறி வேங்கை மரத்தின் நிழலில் நின்று கண்ணகியார் தெய்வமானார் என்கிறது. அதற்கேற்பக்கோயில் உள்ள சோலை வேங்கை மரங்கள் நிறைந்திருப்பதால் அதனை 'வேங்கைக் கானல்' என்று இன்றும் மேலக்கூடலூர் மக்கள் குறிப்பிடுகின்றார்கள். கண்ணகியை மலைமேல் கண்டவர்களும், அவர் கணவனுடன் சென்றபின் அவரைத் தெய்வமாக வழிபட்டவர்களும் அம் மலையில் வாழ்ந்த குறவர்கள் என்பது சிலம்பு தரும் செய்தி. இதற்கேற்ப அம்மலையில் வாழ்கின்ற பழங்குடி மக்களாகிய குன்றக் குறவர், பளிங்கர் என்ற சாதிப்பெயருடன் இன்றும் மலை அடிவாரத்தில் வாழ்கின்றார்கள். அவர்கள் தமது மக்களுக்குச் சிலம்பாயி, கண்ணகி என்ற பெயர்களை வழி வழியாக இட்டு வருகின்றார்கள்; ஆண்டுதோறும் தைத்திங்கள் முதல் நாள் மங்கலாதேவி அம்மனுக்குப் பூசையிட்டு வழிபாடு செய்து வருகின்றார்கள்.

மலைவளம் காணவந்த மன்னன் செங்குட்டுவனுக்கு மலைவாழ் குறவர்கள் கையுறையாக மலைவளப் பொருள் களைக் கொண்டு சென்றார்கள். அவைகளுள் 'வருடை' என்னும் மலை ஆட்டினமும் ஒன்றாகும். அத்தகைய அருமையான வருடை ஆடு அம் மலையைத்தவிரத் தமிழகத்தில் உள்ள பிற மலைகளில் இல்லை. சுருளி மலையிலேயே வருடை யாட்டினம் பெருகி வாழ்ந்து வருகின்றது. மலைப்பள்ளத் தாக்கொன்று 'வரையாட்டுப்பள்ளம்' என்று இன்றும் வழங்கப்படுகின்றது.

மங்கல மடந்தை கோட்டத்தருகில் சுனையொன்று இருந்ததைச் சிலப்பதிகாரம் குறிக்கின்றது. மங்கலாதேவி கோயிலின் கிழக்கு வாயிலுக்கு முன் இன்றும் சுனை யொன்று இருக்கின்றது.

மங்கலமடந்தை, மங்கலமடந்தைக்கோட்டம் - என்று சிலப் பதிகாரத்தில் இரண்டிடங்களில் குறிக்கப்பட்டுள்ள பெயர்களுக்கு, உரையாசிரியர்கள் முறையே, மங்கலாதேவி, மங்கலாதேவி கோயில் என்றே உரைவிளக்கம் தந்துள்ளனர்.

தமிழ்ப்பேரறிஞர் உ. வே. சாமிநாத ஐயர், 'மங்கலாதேவி யென்றது கண்ணகியை' என்று அரும்பதவுரையாசிரியர் கருத் துக்கு விளக்கம் தந்துள்ளார். பேரறிஞர். ந. மு. வேங்கடசாமி நாட்டாரும் மங்கலாதேவி என்பதற்குக் கண்ணகி என்று பெயர் விளக்கம் தந்துள்ளார் (சிலப்பதிகாரம் பக். 642 அடிக்குறிப்பு).

வரந்தருகாதை—உரைப்பாட்டு மடையில், கண்ணகியின் — "காவற்பெண்டும் அடித்தோழியும்—தேவந்தியும் உடன்கூடி, (தெய்வமான) சேயிழையைக் (கண்ணகியை) காண்டும் என்று,

மதுரைமாநகர் புகுந்து, முதிரா முலைப்பூசல்கேட்டு, ஆங்கு அடைக்கலம் இழந்து உயிரிழந்த இடைக்குல மகளிடம் எய்தி, ஐயை யவளோடும்,

வையையொரு வழிக்கொண்டு, மாமலை மீமிசையேறிக் கோமகள்தன் கோயில்புக்கனர்" என்று கூறப்பட்டுள்ளது, கட்டுரைகாதையில், மதுரையின் மேற்கு வாயில் வழியாகப்

புறப்பட்ட கண்ணகியார் சென்றதாகக் கூறப்படும் வழியும் சென்றடைந்த இடமும் இதனொடு ஒத்துள்ளன.

நான் ஆய்வுவழிச் சென்று நேரில் கண்ட மலைமேலுள்ள கோயிலும் அதன் பழமையும், வேங்கைமரக்கானலும் சிலப்பதிகாரச் செய்திகளோடு பொருந்தியவையாகவே உள்ளன.

இத்தகைய இயற்கைச் சின்னங்களும் இலக்கியச் சான்றுகளும் ஒத்து அமைந்திருக்கும் உண்மையினால், மங்கலாதேவியே கண்ணகி என்பதும், மங்கல மடந்தை கோட்டமே நான் பதினேழு வருடம் சிலப்பதிகார வரலாற்று ஆய்வுப் பயணத்தின் பயனாகக் கண்டுபிடித்த 'கண்ணகிகோட்டம்' என்பதும் உறுதி பெறும்.

அடிச்சுவட்டின் நிறைவு

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து மானுடவாழ்க்கை நெறியில் கணவனுடன் நடந்த கண்ணகியாரின் அடிச்சுவடுகளை ஆய்வு வழித்தொடர்ந்த முயற்சியின் நிறைவாகச் சுருளி மலைத் தொடரிலுள்ள வண்ணாத்திப்பாறை என்ற குன்றின் உச்சியில் கண்ணகியார் இட்ட அடிச்சுவட்டில் எழுந்து நிற்கும், மங்கலாதேவி கோயிலெனும் கண்ணகி கோயிலைக் கண்டுபிடித்த அளவில் எனது பதினேழு ஆண்டு (17) வரலாற்று ஆய்வுப் பயணம் நிறைவுற்றது.

மங்கலதேவி - பெயர் விளக்கம்

வெல்வேலான் குன்றின்மேல், வேங்கை மரத்தடியில் கண்ணகியார் நின்றார்; அவரை அங்கு மலைவாழ் குறவர்கள் கண்டார்கள். இதனை அடிகள்,

> "குன்றவரும் கண்டு நிற்பக்
> கொழுநனொடு கொண்டு போயினார்"

என்ற குன்றக் குரவைப்பகுதியால் காட்டுவர். குன்றக்குறவர் கண்ட கண்ணகியாரின் தோற்றத்தினை, அவரைப் பற்றிப் புகார்க்காண்டம் முதலாக மதுரைக்காண்டம் இறுதிவரை

ஆசிரியர் அமைத்துக்காட்டும் வடிவ நிலையினை முறையாகக் காணல் வேண்டும்.

கணவனைப் பிரிந்திருந்தபோது, ''மங்கலவணியிற் பிறி தணி மகிழாள்'' என்று ஆசிரியர் அறிமுகம் செய்யும் நிலையில் கண்ணகி காதணிகளையும் களைந்து வெற்றுத்தொளைக் காதுகளுடன் (வடிந்து வீழ்காதுகள்) இருந்துள்ளார்.

புகாரிலிருந்து கணவனுடன் வழிநடந்த சோர்வினால் கண்ணகியார் நிலை குலைந்த தோற்றம் உடையவராக இருந் தார். கண்ணகியாரின் உண்மைத்தோற்றம் **மங்கலமுடையது** என்று கவுந்தியடிகள் மாதரிக்குக் கூறுகின்றார்; மங்கலமடந்தை என்று கண்ணகியைக் குறிப்பிடுகின்றார். ''மங்கல மடந் தையை நன்னீராட்டி'' — என்பதால் இதனை அறியலாம்.

கணவனை மதுரையில் இழந்த ஆற்றொணாத் துன்பத் தில் உடல் நலிந்து மன்னனிடம் வழக்கிட்டுவென்று, மார்பில் ஏற்பட்ட நிணப்புண் உள்ள தோற்றத்துடன் மதுரையை விட்டு வெளியேறிச் சென்று நெடுவேள் குன்றத்தின் மீது உயிர் நடுக் கத்துடன் நிற்கின்றார் கண்ணகி.

மதுரையில் கணவனை இழப்பினும், மங்கல அணியாம் தாலியில்லா வாழ்வை விரும்பாத வீரபத்தினியாகலின் கண்ணகி மங்கல அணியாம் தாலியுடன் நின்றார். அந்தத் தோற்றத் தையே குன்றக்குறவர் கண்டனர். அவரது ஊரோ பெயரோ குறவருக்குத் தெரியாது.

குன்றக்குறவர் கண்ணகியாரைத் தெய்வமாகக் கொண்ட போது, தாங்கள் கண்ட மங்கலத்தோடு இருந்த தோற்றக் குறிப்புடன் பெண்ணிற்காகும் சிறப்புப் பெயரையும் சேர்த்து 'மங்கல மடந்தை' என்று குறித்துக் கண்ணகியைப் போற்றினர். கண்ணகிக்குக் கோயில் அமைத்தபோது மங்கலதேவி என்ற பெயர் பிறந்தது. கால வழக்கில் அது 'மங்கலதேவி அம்மன்' எனத் தெய்வத் திறம் குறிக்கும் பெயராக ஆகியது. கண்ணகி கோயிலும் மங்கலாதேவி அம்மன் கோயிலெனக் குறிக்கப் பட்டது. கோயிலமைந்த மலையும் மங்கலா தேவி மலை என்று சுட்டப்பட்டது.

கல்வெட்டில் பெயர்கள்

மங்கலதேவி எனும் கண்ணகி கோட்டத்திலுள்ள கல் வெட்டுக்களில் முதல் இராசராசனுடைய வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் இரண்டு உள்ளன. அவை, கி.பி. 989-ல் இராச ராசன் சேரநாட்டைவென்று மேலை மலையைக் கடந்து வெற்றிப் படையுடன் வரும் வழியிடையே வெல்வேலான் குன்றின் மீதிருந்த கண்ணகி கோயிலுக்குச் சென்று பத்தினித் தெய்வத்தை வழிபட்டுக் கோயில் படிப்புறமாக அறநிபந்தங்கள் செய்துள்ளமையைக் குறிக்கின்றன.

அக்கல்வெட்டில் கண்ணகித் தெய்வம் 'ஸ்ரீபூரணி' என்று குறிக்கப்பட்டுள்ளது. இராசராசன் மலைமேல் உள்ள கோயி லுக்குச் சென்று கண்ணகி தெய்வச்சிலையை வழிபட்டபோது, அங்கு வழிபாடு நிகழ்த்தி வந்தவர் பிராமணராக இருந்துள் ளார். வடமொழி பயிலும் அர்ச்சகர்கள் இறைவன் இறைவி பெயர்கள் தமிழில் அழகியதாக இருப்பினும், அவற்றை வட மொழிப் பெயர்களாக மாற்றி வழங்குவது தொடர்ந்த வழக் காக உள்ளது அறிந்ததேயாம்.

அங்கயற்கண்ணியை மீனாட்சி என்றும், அழகரைச் சுந்தரர், சௌந்தரேசுவர் என்றும் குறிக்கப்பெறும் மாற்று மொழி வழக்குப் பல்லவர் காலம் முதலாகக் தமிழகத்தில் தொடர்ந் துள்ளது.

இதே முறையில் கண்ணகித் தெய்வமாகிய மங்கலதேவியை அர்ச்சக பிராமணர் இராசராசனுக்கு 'ஸ்ரீபூரணி', 'ஸ்ரீபூர்ணி' என்று அறிமுகம் செய்தது கல்வெட்டிலும் இடம் பெறுவ தாயிற்று. இதில்,

மொழிமாற்றம் உள்ளதே தவிரப் பொருள் மாற்றம் இல்லை.

ஸ்ரீ — தெய்வப் பெயர்களைக் குறிப்பதற்கு முன்னிணைப் பாக வடமொழியில் சேர்க்கும் எழுத்து. அது திரு, அருள்மிகு என்பதற்கு ஒப்பான ஓரெழுத்தொருமொழியாகும்.

பூரணம் — நிறைவு -- மங்கல நிறைவு, பண்புச்சொல்,

பூரணி — மங்கலம் நிறைந்தவள்; பெண்பாற் சிறப்புப் பெயர்.

மங்கல நிறைவு, (அதாவது மங்கல அணியைத்துறக்காது இருந்தநிலை) மங்கல அணி நெகிழாத நிலையில் மலைமேல் வேங்கைக்கானலில் இருந்து, மங்கல தேவி ஆனவர் கண்ணகியார்.

மங்கலம் — மனைவாழ்க்கை மங்கையரின் அருங்கலப் பொலிவுத் தோற்றம்; மங்கல அணியொன்றால் மகளிர் பெறும் தகுதி. மங்கலப் பெண்டிர் என்னும் தகுதி அதனால் வருவதாகும்.

கண்ணகிக்கு மாமுது பார்ப்பான் மறைவழித் திருமணச் சடங்கினை நிகழ்த்தியுள்ளான். திருமணச்சடங்கில் சிறந்து நிற்பது மங்கைக்கு மணமகன் மங்கலநாண்பூட்டுதல் ஆகும். இது வைதிக நெறிவந்த வழக்கிட்ட சட்டம். மங்கல அணி உடைய மகள் — மங்கல மடந்தை. அது இல்லாதவள் பெறும் பெயர் வேறாகும்.

எனவே, மங்கலமடந்தை என்று சிலப்பதிகாரத்தில் இரண்டிடங்களில் குறித்துள்ள பெயர்களும், நான் ஆராய்ச்சிவழியிற் கண்ட மங்கலதேவி அம்மனும், மங்கலாதேவி கோயில் கல்வெட்டு குறிக்கும் ஸ்ரீபூரணியும் — கண்ணகியாகிய மங்கல மடந்தையாரையே மயக்கமின்றிக் குறிக்கும் பெயர்களாகு மென்பது தேற்றமாகும். பண்டைத் தமிழ்மகள் தாலியணியும் வழக்கு அகநானூற்றிலும் (பாடல். 54) அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீபூரணிகிரி

கண்ணகி கோட்டத்தின் கிழக்குப்பகுதிப் பெருவாயிலுக்கு உட்புறமாகப் பிற்காலப் பாண்டியருள் ஒருவனான ஸ்ரீகுலசேகர பாண்டியனின் 29 ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று உள்ளது. அக்கல்வெட்டில்

1. "ஸ்ரீபூரணகிரி ஆளுடைய
2. நாச்சியார்"

எனக் கோயிலுள்ள மலை, மங்கலதேவி மலை என்பதினின்றும் மொழிநிலையில் மாற்றம் பெற்று "ஸ்ரீபூரணிகிரி" என்றும் கண்ணகித் தெய்வம் நாச்சியார் என்றும் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கனவாம்.

1. "மாசாத்துவ
2. ஸிமந்தம்"

என்ற தொடர் காணப்படுகின்றது. இப்பெயர் கோவலனின் தந்தைபெயரை நினைவு செய்கின்றது.

சமணர் சார்பு

ஒரு கல்வெட்டில், கனகவீர....என்பவர் சக்கர கூடத்தில் மேல் மாடத்தைச் செய்தமைத்த செய்தி பொறிக்கப்பட்டிருப் பதுடன், மற்றோரிடத்தில் 'நாட்டாசாரியன்' என்ற பெயரும் காணப்படுகின்றது.

இவற்றைக் கொண்டு, மதுரையை அடுத்துள்ள சமணர் குன்றுக் கல்வெட்டுச் செய்திகளை ஒப்பிட்டுப்பார்க்கும்போது

'கனகவீர' (அடிகள்) 'நாட்டாசாரியன்' ஆகிய சமண சமயத் துறவியும், ஆசாரியரும் மங்கலதேவிக் கோட்டத்திலோ, அன்றி அருகிலுள்ள பாழியிலோ வாழ்ந்திருக்க வேண்டுமென்ற குறிப்பும் புலனாகின்றது. ஆய்வு செய்யின் இவ்வுண்மை புல னாகும்.

கட்டடக்கலையில் - கண்ணகிகோட்டம்

மங்கலாதேவி கோயில் என்னும் கண்ணகி கோட்டத் தினை நான் நேரில் சென்று பார்த்தபோது, அங்குள்ள கோயில் களின் அமைப்பினைத் தமிழகக் கட்டடக் கலை நோக்கில் ஆய்வுசெய்தேன்.

பலகோயில்கள் உள்ளடங்கச் சுற்றிலும் எல்லை கோலி வ்ளைக்கப்பட்ட தெய்வத்தடப்பரப்பு 'கோட்டம்' என்று பெயர் பெறும். கண்ணகிகோட்டம் 200 அடி பக்கச் சதுரமாக

வளைக்கப்பட்டுள்ளது. அது ஓரளவு செப்பம் செய்யப்பட்ட பெரிய நீண்ட கற்பாறைகளைச் சுவர்போல் அடுக்கிய மதிலால் வளைக்கப்பட்டுச் சிதைந்து கிடக்கின்றது.

கோட்டத்திற்கு இரண்டே வாயில்கள் உள்ளன. கிழக்கு மதிலில் உள்ள வாயில் பெரியது. அது முற்றுப்பெறாத நிலையில் பெரியதும் உயர்ந்ததுமான நிலைச்சட்டக் கற்களுடன் திறந்த வாயிலாக இருக்கின்றது. இவ்வாயிலின் அமைப்பு கி.பி. 10 ஆம் நூற்றாண்டினைச் சார்ந்ததாகும்.

மற்றொரு வாயில் மேற்குப்புறமுள்ள சிறு வாயிலாகும். மதிலில் மூன்றடி உயர அளவில் அமைக்கப்பட்டுள்ள இவ்வாயில் மதில் அமைத்தபோதே அமைக்கப்பட்டதாக இருக்க வேண்டும். இதன் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு எனலாம்.

உள்ளே உள்ள கோயில்களில் எனது ஆய்வுக்குத் தெரிந்தவை நான்காகும். அவற்றுள் சிறிய கல் திருமுற்றமும் பலிபீடமும் உள்ள கோயிலே பழமையானதாகும்.

கோயில்கள் யாவும் பெரும்பான்மையும் சதுரவடிவில் அமைக்கப்பட்டுள்ளன. அதன் அளவு இருபதடி சதுரம் எனக் கூறலாகும் (கண்ணோட்டத்தில் கணக்கிட்டது).

பலிபீடக் கோயிலின் மேல்மட்ட உயரம் ஒன்பதடியேயாகும். சதுரமாகக் கருங்கற்களைக் கொண்டு அடுக்கிக் கட்டப்பட்ட கோயில் சுவர்களில் எத்தகைய சிற்ப வேலைப்பாடுகளும் இல்லை. அக்கற்களும் ஓரளவே செப்பம் செய்யப்பட்டுள்ளன. சதுரமான அறைபோல் உள்ள இக்கோயிலுக்கு மேற்கு நோக்கிய சிறுவாயில் ஒன்றுதான் உள்ளது. உள்ளே குறுக்காகத் திறந்த வாயில்களுடன் கூடிய இரண்டு சுவர்த் தடுப்புகள் உள்ளன. இதனால் இதன் உள்ளிடம் மூன்று பகுதிகள் ஆகின்றது. கோயிலின் முதல் வாயிலைச் சார்ந்த பகுதி முன்னறையாகவும் அடுத்தது முகவறையாகவும் அதனுள் உள்ளது கருவறையாகவும் இருக்கலாம்.

உயரமில்லாத வடிவில் கருங்கல்லால் கட்டப்பட்ட கோயிலின் மேல் கூரைப்பரப்பு, நீண்ட பெரிய ஓரளவுசெப்பம் செய்யப்

பெற்ற கருங்கல் அடைப்பாகவே செய்யப்பட்டுள்ளது. கூரைத் தளத்தின் பிற்பகுதியின் மேல் அமைந்த பெரிய வடிவிலான செங்கற்கள், சிதைந்து கிடக்கின்றன. சிறிய வடிவில் கருங்கற்களால் அமைக்கப்பட்ட ஏழடி உயர விமானம், இன்று மரம் முளைத்து, வெடித்துப் பிளந்து சிதறிப்புதரடைந்து கிடக்கின்றது.

இக்கோயில் தமிழகக் கருங்கற் கோயில் கட்டடக்கலையின் முதல் தோற்றமாகக் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமைக்கப்பட்டிருக்கின்றது என்பதற்கு ஏற்ற நிலையில் இதன் அமைப்பு இருக்கின்றது.

மக்கள் வாழ்விடங்களுக்கு நெடுந்தொலையில் உள்ள மிக உயர்ந்த மலைமேல் உள்ள கொடிய விலங்குகள் வாழும் காடுகட்கிடையே கோயில்கட்ட வேண்டியிருந்ததால், அங்குள்ள மலைப்பாறைகளை உடைத்து, அக்காலச் சிற்பக்கலை வளர்ச்சிக் கேற்ப அவற்றைச் செப்பம் செய்து சுண்ணாம்பு ஒட்டு இன்றி, அடுக்குத் தொழில் முறையால் சதுர அறையாக அதனைக் கட்டியுள்ளனர்.

அரசனின் விருப்பப்படிச் சிற்பியரின் புதிய முயற்சியின் ஆக்கமாக அக்காலக் கருங்கல் கட்டடம் உருப்பெற்றுள்ளது.

இக்கோயிலையும், இதற்கு முன்னர்த் தெற்கு நோக்கி நிற்கும் இதைப்போன்ற கருங்கற் சுவர்க் கோயிலையும் ஒரே காலத்தில் கட்டியிருப்பர் என்பதற்குரிய தோற்ற ஒற்றுமை இவற்றிடையே காணப்படுகின்றது.

பலிபீடக் கோயிலுடன் இணைந்தபாங்கில் தெற்கு நோக்கி அமைந்த வாயில், திருமுற்றம், திருமுற்றக் கீழ்ப்புறம் சுருள் யாளிப்படி ஆகிய கருங்கற்பணியால் உருவாக்கப்பட்டிருக்கும் கோயில், உள் அறைத்தடுப்பு முறையிலும் சதுரமான அமைப்பிலும் பழைய கோயிலைப் போல் காணப்படுகின்றது, சிற்ப வேலைப்பாட்டில் வளர்ச்சி பெற்றுள்ள நிலையில் உள்ளதாலும், பாண்டியர் காலச் சிற்பச் சுவடுகளாகிய வரிநிலை, படிச்சுருள்யாளம், கபோதக்கட்டுத்தொங்கல் ஆகிய

சிற்பமுறைகளின் தோற்றத்திற்குரிய மூலச் சுவடுகள் உள்ளதாலும் இக்கோயில் கி. பி. பத்தாம் நூற்றாண்டில் பாண்டிய மன்னனொருவனால் கற்றளியாக மாற்றப்பட்டதாகவோ, புதிதாக இணைந்த பாங்கில் உருவாக்கப்பட்டதாகவோ இருக்கவேண்டுமென்று தெரிகின்றது. அப்பாண்டியனே நிறைவு பெறாமல் அரைகுறையாக இருக்கும் கீழ்வாயிலின் திறப்புப் பணியைச் செய்திருக்க வேண்டும்.

கோட்டத்தின் மேற்கே தனித்துள்ள சிறிய கருங்கற் கோயில் சிறிய அறையளவாகவே உள்ளது. இக்கோயில் கிழக்கு நோக்கி உள்ளது. இதன் முன், தென்புறம் சிறிய வட்டமான சுனை உள்ளது. இக்கோயிலும், பலிபீடக் கோயிலும் தமிழகக் கருங்கற் கோயில் கட்டடக்கலைக்குத் தோற்றமும் தொடக்கமுமான தொழிற்பாடுகளுடன் இருக்கின்றன.

சிலைகள்: திருமேனி

கோயில்களின் உள்ளறைகளில் (கருவறை) இப்பொழுது சிலைகள் இல்லை. பலிபீடக்கோயிலின் கருவறைப்பகுதியில், மேல்கூரைக்கற்கள் சிதைந்து விழுந்திருந்த இடிபாடுகளுக்கிடையே, சிதைந்த உருவில் ஒரு பெண்சிலை மட்டும் சிக்கிக் கொண்டிருந்தது.

அதன் கூடிய உயரம் இரண்டடிக்குள்ளாகும். அச்சிலைக் கல்-வெண்மை மஞ்சள் இரேகை உடையதாகும். சிலையில் இருந்த தேய்மானம் நீண்டகாலம் வழிபாடு செய்யப் பெற்றதால் உண்டானதாகும். கி.பி 16-ஆம் நூற்றாண்டிலும், மங்கலாதேவிக்கு வழிபாடு நிகழ்ந்து வந்ததைக் கூடலூர்க் கல்வெட்டால் அறியமுடிகின்றது.

பெண் தெய்வச்சிலைக்குத் தலையில் மகுடமோ முடியோ இல்லை. அதற்கு இரண்டே கைகளும், அதன் தொளைக்காதில் அணிந்த பெரும் பொற்பூக்களும், கழுத்தில் மூன்று அணியாரங்களும் உள்ளன. இடதுகாலை இருக்கையில் மடக்கி வலதுகாலைக் கீழே ஊன்றி அமர்ந்த நிலையில் அச்சிலை உள்ளது.

திருமுற்றப் பலிபீடம்

இப்பீடம் மிகுந்த வேலைப்பாட்டுடன் இல்லை. சிறிய கல்லொன்றில் குறித்த வடிவினைச் சிற்பி உளியால் செதுக்கியமைத்த தோற்றம் உடையதாக இது உள்ளது.

இவ்வாறமைந்த சிலையையும், பலிபீடத்தையும் அவற்றின் பழமை, கல் தரம், தேய்வுநிலை, சிற்ப அமைதி, வடிவமைப்பு ஆகியவற்றுடன் சிந்தித்து ஆய்வுடன் நோக்க, இற்றைக்கு 1800 ஆண்டுகட்கு முற்பட்ட பழமையினை அவற்றில் காணமுடிகின்றது.

எனவே செங்குட்டுவன் இமயக்கல்லில் செய்தமைத்த பத்தினிக்கடவுளின் படிமமாக இச்சிலை உள்ளது என்பதற்கு ஏற்புடையதாகவே சிதைந்து கிடக்கும் பெண் தெய்வச்சிலையின் பழமைத் தோற்றம் அமைந்துள்ளது.

இவற்றை யெல்லாம் ஒப்ப நோக்கிச் சிலப்பதிகாரச் செய்திகளையும் இணைத்து ஆராய்வோமானால், கண்ணகி சேரன் செங்குட்டுவன் காலத்தில் அவன் முயற்சியால் உருவாக்கப்பட்ட கண்ணகி கோயிற் கருங்கற் கட்டடக்கலையும் பத்தாம் நூற்றாண்டில் பாண்டியர் காலத்தில் கருங்கற்சிற்பப் பணிகள் உள்ள கட்டடங்களும், வாயிலும், மண்டபமும் (சிதைந்து கிடக்கின்றன) தூண்களும் (இடிபாடுகளின் நடுவே நிற்பன) படிக்கட்டுகளும், சிற்பங்களும், கல்சாளரமும் (வடபுறமாகச் சிதைந்து கிடக்கும் மதிலில் மண்டிய புதர்களுக்கிடையே எஞ்சி நிற்கும் மதிலில் இருப்பது) கோட்டத்தின் பொதுத் தோற்றமும் கி. பி. இரண்டாம் நூற்றில் தோன்றிய கருங்கல் கோயில் கட்டடக் கலை யமைப்புடன் பத்தாம் நூற்றாண்டில் பாண்டியர் வளர்த்திருந்த சிற்பக் கலை முறைகளையும் தொடர்ந்து காட்டும் சிறந்த சான்றுகளாகவே உள்ளன.

இவ்வாறாகக் கண்ணகி கோட்டக் கட்டடக் கலையின் பழமையினையும் நுட்பத்தினையும் எனது அனுபவத் திறத்தொடு உரைத்துள்ளே னாயினும், கலையறிஞர் நேரிற் சென்று காணின் மேலும் வரலாற்றுப் பழமைகள் பல கிடைப்பதற்குக் கண்ணகி கோட்டம் இடமாகும்.

தொடர்ந்த கால ஆய்வாளர்கள்:

அ. எனது, 17—11—63 கண்ணகிகோட்டக் கண்டு பிடிப் பினைத் தக்க சான்றுகளுடன் 1964-ல் தமிழ்ப் பொழில் இதழில் வெளியிட்டேன்.

ஆ. கோவையிலிருந்து வெளிவரும் 'கலைக்கதிர்' இதழில் 1965-பிப்ரவரி மலர்-17 இதழிலிருந்து மூன்று இதழ் களில் எனது கண்ணகி கோட்டக் கண்டுபிடிப்பு, 'பத்தினிக்கோட்டம்' என்ற தலைப்பில் வெளிவந்தது.

இ. கோவை, பி. எஸ். ஜி கலைக்கல்லூரி உரிமையாளர் திரு நாயுடு அவர்களின் அழைப்பின்பேரில் கோவை நன்னெறிக்கழகத்தில் மதிப்புக்குரிய ம. பொ. சிவ. ஞானசிராமணியார் தலைமையில் கண்ணகி கோட்டக் கண்டுபிடிப்பினை விரிவாகப் பேசினேன்.

இவ்வாறாகத் தமிழகத்தில் எனது கண்ணகி கோட்டக் கண்டுபிடிப்பு, செய்திகளாகப் பரவிய அளவில் கண்ணகி கோட்டத்தினைக் கண்டு ஆய்வு செய்யப் பலர் முன்வந்தனர்.

பின்னர்த்தோன்றிய கண்ணகி கோட்டச் சீரமைப்புக் குழுவும், தமிழக மக்கள் கண்ணகிக் கோட்டத்திற்குச் சென்று வணங்கிவருவதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டு பணி யாற்றியது.

1. 1966-ஆம் ஆண்டு, மைசூரில் இந்தியத் தொல்பொருள் துறை அதிகாரியாக இருந்த திரு. கே.ஜி. கிருட்டிணன் அவர்கள் தஞ்சையில் என் இல்லத்திற்குத் தனது உதவியாளருடன் வந்து, கண்ணகிகோட்டக் கல்வெட்டுக்களைத் தாம் ஆராய்ச்சி செய்ய நான் துணைவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

அவருக்குத் துணையாகச் செல்ல என்னால் இயலவில்லை; ஆகலின் கூடலூர் வேட்டைக்காரர் இராமன் துணையினைக் கொள்ளுமாறு அவர்க்குத் தெரிவித்தேன். அவர் இராமனுடன் சென்று எட்டுக் கல்வெட்டுக்களைப் படியெடுத்து வந்து - ஏ.ஆர். எண். 277-284 ஆப் 1966 என்ற கல்வெட்டுத்துறைக் குரிய பதிவு எண்ணில் கட்டுரையாக வெளியிட்டார்.

மேலும், திரு. கே. ஜி. கிருட்டிணன் அவர்கள் துறைக்கல் வெட்டு அறிக்கையில் "மங்கலாதேவி கோயில், அதன் சூழ்நிலை, கல்வெட்டுச்செய்திகள் ஆகியவை சிலப்பதிகாரம் குறிக்கும் கண்ணிகோட்டக் கருத்திற்கு ஏற்புடைய ஆதாரங்களாகவே உள்ளன" என்ற கருத்தை வெளியிட்டார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

அவர் 12—1—1972 இந்து நாளிதழில் கண்ணகிகோட்டம் பற்றி ஒரு கடிதமும் எழுதினார். அதில் முன்னோடிக் கண்டுபிடிப் பாளனாகிய என் பெயர் குறிப்பிடப்பெறாமை வரலாற்றுச் செய்திக்குரிய குறையாகவே இருந்தது.

2. 1975 அளவில், ஈரோடு, புலவர். திரு. செ. இராசு, கண்ணகி கோட்டச் சீரமைப்புத் தொடர்புவழிச் சென்று மங்கலதேவிக் கோயிலைக் கண்டு வந்து, மைசூரில் கல்வெட்டுத் துறையிலிருந்த எட்டுக் கல்வெட்டுகளையும் பிரதி செய்து சிறு ஆய்வுரைப் புத்தகமாக அமையும் அளவில் இ.ப.த.க. மன்றத்தின் எட்டாவது (29—5—76ல் நிகழ்ந்த) கருத்தரங்கில் கட்டுரை ஒன்றைப் படித்தார். (இ.ப.த.க- இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் கருத்தரங்கு)

அரசுக்கு அறிமுகம்

1. மாண்புமிகு டாக்டர். கலைஞர் அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்தபோது, 1971-ல் பிரான்மலையில் நிகழ்ந்த பாரி விழாவில் என்னுடைய கண்ணகி கோட்டக் கண்டுபிடிப்பினைப் பற்றிக் கேள்விப்பட்டு 17—5—1971-ல் என்னைச் சென்னைக்கு அழைத்தார். கண்ணகி கோட்டச் சான்றுகளையும், புகைப்படங்களையும் கலைஞரவர்களிடம் கொடுத்ததோடு, எனது கண்டு பிடிப்பினைப் பற்றிச் சுமார் மூன்று மணி நேரம் அவரிடம் விளக்கமாகச் சொன்னதைக் கேட்டு மகிழ்ந்து பாராட்டினார்கள். அதுபோது, மதிப்புக் குரிய அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், மதிப்புக்குரிய அமைச்சர் ப. உ. சண்முகம், செயலர் திரவியம் ஆகியோர் உடன் இருந்தார்கள்.

டாக்டர். கலைஞர் அவர்கள், 29—4—1973-ல் நிகழ்ந்த இளங்கோவடிகள் விழாவில், என்னைப் பற்றியும் எனது கண்ணகி கோட்டக் கண்டுபிடிப்பினைப் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

அவ்வுரை, "மேடையில் வீசிய மெல்லிய பூங்காற்று" என்ற டாக்டர் கலைஞரவர்களின் உரைத்தொகுப்பு நூலில், பக். 123-124-ல் வெளிவந்துள்ளது.

2. அமைச்சரவர்கள் உத்தரவுப்படிக் 'கண்ணகி கோட்டம்' என்ற தலைப்பில் உரிய சான்றுகள் படங்கள் ஆகியவற்றுடன் விரிவாகவும் விளக்கமாகவும் எனது கண்ணகி கோட்டக் கண்டு பிடிப்புக் கட்டுரை.

16—11—71, 1—8—72, 1—9—72 ஆகிய நாள்களில் தமிழக அரசின் இதழில் தொடர்ந்து வெளிவந்துள்ளது.

நாட்டுக்கு அறிமுகம்

1. 7—4—65-ல் தூத்துக்குடி வ. உ. சி. கலைக்கல்லூரி ஆண்டு விழாவில் கண்ணகி கோட்டக் கண்டுபிடிப்புப் பற்றி விரிவுரை யாற்றினேன்.

2. 21—5—66-ல், திருச்செங்கோடு கண்ணகிவிழாவில், திரு காளியண்ணன் தலைமையில் உரையாற்றினேன்.

3. 1968-ல் சென்னைப் பல்கலைக்கழகக் கட்டடத்தில் நிகழ்ந்த இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் கண்ணகி கோட்டக் கண்டுபிடிப்பினை, "FLASH OF LIGHT ON A HIDDEN FACT" என்ற தலைப்பில் ஆங்கிலச் சிறு நூலாக வெளியிட்டேன்.

4. 10—6—71-ல் 'மாலைமுரசு' பொங்கல் மலரில் படங்களுடன் நான்கு பக்க அளவில் என் கட்டுரை வெளிவந்துள்ளது.

5. 27—2—72-ல் ஆனந்தவிகடனில் என் படத்துடன் சிறப்புக் கட்டுரை ஒன்று வெளிவந்துள்ளது.

6. 3—11—72-ல் 'மாலைமுரசு' ஆசிரியரின் சிறப்புக் கட்டுரையாக வெளிவந்தது.

7. 2—2—73-ல் இந்து நாளிதழில்—குறிப்பு வெளிவந்தது.

8. 15—5—83-ல் 'இதயம்' இதழில் சிறப்புக்கட்டுரை, கண்டுபிடிப்பாளர் சி. கோ.—நேர்முக உரையாகப் படத்துடன் வெளிவந்துள்ளது.

9. 24—6—83—ல் 'மாலைமுரசில்' கண்ணகிகோட்ட உரிமை பற்றிய தமிழரசு—கேரள அரசு பற்றிய விளக்கம் வெளிவந்துள்ளது.

10. டாக்டர் ம. ரா. போ. குருசாமி அவர்கள் தமது சிலப்பதிகார ஆய்வு நூல்களில் எனது கண்ணகிகோட்டக் கண்டுபிடிப்பினை ஏற்ற இடங்களில் சான்றாக எடுத்துக் காட்டியுள்ளார்.

இவ்வாறாகக் கி. பி. 1945-ல் பூம்புகாரில் தொடங்கித் தொடர்ந்து பதினேழு ஆண்டினைக் கடந்த நிலையில் 1963 நவம்பர் 17-ஆம் நாள் சிலப்பதிகார அடிப்படை வரலாற்று ஆய்வுப்பயணம் கண்ணகி கோட்டக் கண்டுபிடிப்பு அளவில் அமைந்தது. மேலும், கண்ணகியார் அடிச்சுவட்டில் மலைநாட்டுத் தலைநகர் வஞ்சியிலும் என் ஆராய்ச்சி தொடர்ந்தது; வரலாற்று ஆய்வுப் பயணமும் நிறைவு பெற்றது.

சிலப்பதிகாரச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு 17-ஆண்டுகள் தொடர்ந்த வரலாற்று ஆய்வுப் பயணத்தின் வழியே நான் கண்ட சின்னங்களையும் செய்திகளையும். ஏற்றவிடத்தில் விளக்கமாகவும், பிறவிடங்களில் சுருக்கமாகவும் எழுதியுள்ளமை அறியத்தக்கதாகும்.

—X—